ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி (தேம்பே) ஸ்வாமிகள்

# குரு சரித்திரம்

(அற்புதங்களும் உபதேசங்களும்)

மராத்தி மூலம்

**தத்த மஹாராஜ் கவிஷ்வர்**

ஆங்கிலத்தில்

**ஸ்ரீ கீர் சாகர்**

**ஸ்ரீ வாசுதேவ தேஷ்பாண்டே**

தமிழில்

**திருமதி ரமா சுப்ரமணியன்**




நூல் வெளியீடு :

**ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்**

**சாயிநாதனின் சரணாலயம்**

கொட்டாஞ்சேனை

கொழும்பு, இலங்கை

NOT FOR SALE

Title : **Shri. Vasu Devanand Saraswathi (Thembe) Swami Guru Charlthram**

Author : **Shri. Datha maharaj Kavishwar (In Marati)**
**Shri. Geer Sagar (In Englsh)**
**Shri. Vasudav Desh Pande (In English)**

**Smt. Rama Subramanian (In Tamil)**
**C4, Baba Nagar, Jeswanth Nagar Extn.**
**Mogapair West, Chennai - 600 037.**
**Ph : 0 81449 28666**
**No. 120, Balaji Nagar, 28th Steet,**
**Puzhdivakkam, Chennai - 600 091.**

Publishers : **Shree Varatharaja Vinayagar Aalayam**
**Sainathanin Saranalayam,**
**Kothahena**
**Colombo, Srilanka**

Edition : **First 2018 - 1500 Copies**
**Maha Samadhi Day (13.07.2018)**

**Second 2023 - 1500 Copies**
**Maha Samadhi Day (19.06.2023)**

Printed By : **Sri Saibaba Enterprise,**
**Triplicane, Chennai-5.**

Book Released At : **Sainathanin Saranalayam,**
**Kothahena**
**Colombu, Srilanka**

# நூல் இலவசம் - விற்பனைக்கு அல்ல!

© Copyright : **Dwarkamai Athma Gyaniar maiyam - Puzudivakkam, Ch-91**

NOT FOR SALE

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி (தேம்பே) ஸ்வாமிகள் குரு சரித்திரம்

(அற்புதங்களும் உபதேசங்களும்)

மராத்தி மூலம்

**தத்த மஹாராஜ் கவிஷ்வர்**

ஆங்கிலத்தில்

**ஸ்ரீ கீர் சாகர்**

**ஸ்ரீ வாசுதேவ தேஷ்பாண்டே**

தமிழில்

**திருமதி ரமா சுப்ரமணியன்**

வெளியீடு :

**ஸ்ரீ கஜானன் மகராஜ் சமஸ்தானம்**

ஷேக்காவ், புல்தானா மாவட்டம் – 444203

**Ph : 07265 - 252018/ 252251**

**0 9881 388 331**

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

| | | |
|---|---|---|
| Title | : | **Shri. Vasu Devanand Saraswathi (Thembe) Swami Guru Charlthram** |
| Author | : | **Shri. Datha maharaj Kavishwar (In Marati)**<br>**Shri. Geer Sagar (In Englsh)**<br>**Shri. Vasudav Desh Pande (In English)** |
| | | **Smt. Rama Subramanian (In Tamil)**<br>**C4, Baba Nagar, Jeswanth Nagar Extn.**<br>**Mogapair West, Chennai - 600 037.**<br>**Ph : 0 81449 28666**<br>**E-mail : abacus06@hotmail.com** |
| Puhilshers | : | **Shree Gajanan Maharaj (Sansthan) Trust**<br>**Shegaon, Maharashtra.**<br>**Buldhana District - 444203**<br>**Ph : 07265-252018 / 252251** |
| Edition | : | **2018 - 1500 Copies** |
| Date | : | **Maha Samadhi Day (13.07.2018)** |
| Printed By | : | **Digital Printers, Chennai-5.** |
| Book Released At | : | **Shri Vasudev Niwas**<br>**Erandwane,**<br>**Pune - 411004, Maharashtra.** |
| Price | : | **Rs. 65.00** |


NOT FOR SALE

**© Copyright : Sri Gajanan Maharaj (Sansthan) Trust
Shegaon, Maharashtra.**

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஜெய் வாசுதேவ்

# சமர்ப்பணம்

## ஸ்ரீ கணேஷ்வராய நம:
## ஸ்ரீ சரஸ்வதி தேவியே நம:
## ஸ்ரீ குருப்யோ நம:

*என் குலதெய்வத்திற்கும், முன்னோர்களுக்கும் நமஸ்காரங்கள்.*

**ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரியும்,** *மகாயோகீஸ்வரரும் இன்றளவும் அநேக அற்புதங்களைப்புரிந்து கொண்டிருப்பவருமான* **ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள்** *என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும்* **ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமி***களின் திவ்ய சரித்திரத்தை தமிழாக்கம் செய்யுமாறு என்னை பணித்து, ஒவ்வொரு அத்தியாயத்தையும் கருணையோடு என் விரல் பிடித்து எழுத வைத்த என் சத்குரு சமர்த்த* **ஸ்ரீ சாய்நாத் மகராஜ்** *அவர்களுக்கும் இப்புண்ணிய தேசத்தில் அவதரித்த மகான்கள் அனைவரின் பாதங்களிலும் படர்ந்த புழுதிப் படலத்திற்கும் என் சிரம் தாழ்த்தி வணங்கி இந்நூலை சமர்ப்பிக்கின்றேன்.*

*- ஜெய் வாசுதேவ் -*

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ குருப்யோ நம :

## முன்னுரை

ஸ்ரீ தத்தாத்ரேய அவதார புருஷர்களின் திவ்ய சரித்திரங்களை பாராயணம் செய்யும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது. ஸ்ரீ தத்தரின் அவதாரமான ஷேக்காவ் ஸ்ரீ கஜானன் மகராஜ் அவர்களின் குரு சரித்திரத்தை, தமிழாக்கம் செய்யும் பாக்யத்தை அடியேன் பெற்றேன். சத்குருவின் கருணையால் **ஸ்ரீ கஜானன் மகராஜ்** அவர்களின் **குருசரித்திரம்,** தமிழகம் மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் நிறைந்துள்ள, புலம் பெயர்ந்த தமிழர்களின் வாழ்க்கையில், பல்வேறு அற்புதங்களை, இன்றளவும் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது.

ஸ்ரீ தத்தரின் இரண்டாவது வழித் தோன்றலான **ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதியின்** அடுத்த அவதாரமே **ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள்** ஆவார். அவர் ஆதி சங்கராச்சார்யாரின் வழி நின்று பக்தி நெறியை பரவச் செய்து தமது பக்தர்களை தீய சக்திகளிடம் இருந்து இன்றளவும் காத்து இரட்சித்துக் கொண்டிருக்கிறார்.

**ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள்,** தமது பக்தர்களின் வாழ்க்கையில், நாம் கற்பனை கூட செய்து பார்க்க இயலாத அற்புதங்களை இன்றளவும் நிகழ்த்திக் கொண்டு இருக்கிறார். தம்மை நாடி வரும் பக்தர்களின் வறுமை, வ்யாதிகள் மற்றும் செய்வினை, ஏவல் முதலிய மாந்த்ரீக கோளாறுகளையும் நீக்கி, தீவினைகள் நம்மை நெருங்காதவாறு காத்து இரட்சிக்கின்றார். தந்திர சித்தி, மந்திர சித்தி, இயந்திரசித்தி முதலிய அனைத்தும் இவருக்கு கட்டுப்படும். அஷ்டமகா சித்திகளையும் கைவரப் பெற்றவர்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

*ஸ்ரீதத்தாத்ரேயரின் முதல் அவதாரமான,* **ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர்** *அவதரித்த,* **பிதாபுரம்** *என்ற புண்ணிய க்ஷேத்திரத்தை முதன்முதலாக இந்த உலகிற்கு அறிவித்தவரே,* **ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள்** *ஆவார்.*

*இத்திவ்ய சரித்திரத்தை, எழுதிக் கொண்டிருக்கும் பொழுதே பல்வேறு அற்புதங்களை மகராஜ் அவர்கள் நிகழ்த்தினார்.*

*அடியேனின் வலது கை அசைக்கவே இயலாத நிலை ஏற்பட்டு, எவ்வாறு எழுதி முடிப்பது, என்று மனம் வருந்தி ப்ராத்தனை செய்தேன். என்ன அற்புதம்! அப்பொழுது திடீரென்று விழுப்புரத்திலிருந்து, அறிமுகமே இல்லாத ஒரு பெண்மணி (உமா) அடியேனை தொலைபேசியில் அழைத்து மகராஜ் அவர்கள், அடியேனுக்கு சேவை செய்ய பணித்திருப்ப தாகவும், தாம் எந்தவகையில் சேவை செய்ய வேண்டும் என்றும் கேட்டபொழுது மகராஜ் அவர்களின் கருணையை முழுமையாக உணர்ந்து கொண்டேன். இன்று வரை மகராஜ் அவர்கள் அடியேனின் வலது கரமாக மற்றொருவரை செயல் படவைத்து இத்திருப்பணியை முடித்து வைத்திருக்கிறார்.*

NOT FOR SALE

*இதே போன்று, இத்திவ்ய சரித்திரம் எழுதிக் கொண் டிருக்கும் வேளையில், மகராஜ் நம் தமிழ் நாட்டில்,* **தஞ்சாவூரில்,** *தமது* **17வது சாதுர்மாஸ்ய விரதம்** *என்று சொல்லக்கூடிய, நான்குமாத விரதத்தை துவங்கினார் என்பதை அறிந்தேன்!*

*தினமும் புதிதாக சமைத்த உணவை, இறைவனுக்கும் பஞ்ச பூதங்களுக்கும், காக்கை, பசு முதலிய உயிரினங்களுக்கும் சமர்ப்பிக்கும் இல்லத்தவரிடம் மட்டுமே யாசகம் பெறுவார் என்பதை அறிந்தேன். அடியேன் மகராஜ் அவர்களிடம், "ஸ்வாமி இத்தகைய சம்ப்ரதாயங்களை, சில சமயங்களில் செயல்படுத்த முடியவில்லை! அப்படியானால் அடியேனின் இல்லத்திலும் தாங்கள் உணவு உபசாரத்தை ஏற்றுக்கொள்வீர்களா! என்ற கேள்வியை முன் வைத்தேன்!*

*என்ன அற்புதம்! அன்று மாலையே, ஒருவர் அடியேனின் இல்லத்திற்கு வருகைதந்தார். அவர் தம்முடைய பெயர் வாசுதேவர் என்றும், தஞ்சாவூரில் ஸ்ரீ வாசுதேவானந்த ஸ்வாமிகளுக்கு தொடர்ந்து 100 வருடங்களாக ஆராதனை*

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விழா நடத்திக் கொண்டிருப்பதாகவும், ஆராதனை விழாவிற்காக அடியேனை அழைப்பதற்காகவே தாம் சென்னைக்கு வந்திருப்பதாகக் கூறினார். இச்செய்தியின் மூலம், மகான்கள் அனைவருமே பக்தர்களின் தூய்மையான அன்பிற்கு கட்டுப்பட்டவர்கள் என்பதை நம்மால் உணர இயலும். அத்தகைய மாபெரும் **யோகீஸ்வரரான ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள்** இன்றளவும் சூட்சும ரூபத்தில் நம்மை வழி நடத்திக் கொண்டிருப்பதை, இத்திவ்ய சரித்திரத்தை படிக்கும் அனைவரும் அறிந்து கொள்ள இயலும்.

ஸ்ரீ தத்த அவதாரிகளான **ஸ்ரீ கஜானன் மகராஜ்** அவர்களும், **ஸ்ரீ சமர்த்த சத்குரு ஷீரடி சாய் பாபாவும் ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளை** அன்புடன் தமது சகோதரர் என்று அனைவருக்கும் அறிவித் துள்ளனர். **ஸ்ரீ தத்தாத்ரேயரே,** ஆறு வயது குழந்தையின் உருவத்தில் பாலதத்தராக, **ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளின்** மடியில் அமர்ந்து கொண்டிருந்ததை நரசோபாவாடியில் பக்தர்கள் கண்டு அதிசயித்துள்ளனர்.

**ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளின்** திவ்ய சரித்திரத்தை தமிழாக்கம் செய்யுமாறு பணித்த அவருடைய சமஸ்தானக் குழுவினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பூனாவில் அமைந்த ஸ்ரீ வாசுதேவரின் சமஸ்தானம், இத்திவ்ய சரித் திரத்தை, ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளின் **ஆராதனை விழா (மஹா சமாதி தினத்தின் போது) 13th ஜுலை** (13th July) அன்று வெளியிடுவதற்காக ஏற்பாடுகளை செய்து கொடுத்தனர்.

இத்திவ்ய சரித்திரத்தை எழுதும் செய்தியை அறிந்த ஸ்ரீ கஜானன் மகராஜ் சமஸ்தானம் (ஷேக்காவ்) தாமே இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதாக வாக்களித்தனர். ஸ்ரீ கஜானன் மகராஜ் சமஸ்தானத்திற்கு அடியேனின் சிரம் தாழ்ந்த நமஸ்காரங்களும், நன்றியையும், தெரிவித்துக் கொள்கிறேன்!

அடியேனின் குரு **திரு. பிரேமா சாய்ராம்** அவர்களுக்கு நமஸ்காரங்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள் கிறேன். இத்திவ்ய சரித்திரத்தை எழுத என்னை ஊக்கப் படுத்திய ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபரின் குரு சரித்திரத்தை தமிழாக்கம் செய்த ஸ்ரீ சந்தானம் அவர்களுக்கும் என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளின் திவ்ய

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

*சரித்திரம் எழுதத்துவங்குவதற்கு முன்பாகவே, நம் தமிழக மக்களுக்கு இத்தகவலை அறிவித்து, மகான்களுக்கு தொடாந்து சேவை செய்து வரும் "சாயி என் வாழ்க்கை உன்னோடுதான்" பத்திரிகை ஆசிரியர் திரு. சிவநேசன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இந்நூலில் பிழைகளைத் திருத்தி அளித்த எனது அன்னையார் திருமதி. உமா பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது நமஸ்காரங் களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீ தத்த அவதாரிகளின் திவ்ய சரித்திர நூல்களை பக்தர்களுக்கு அறிமுகப்படுத்தி, எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி அனை வருக்கும் கொண்டு சேர்க்கும் சேவையில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அக்கல்கோட் மகராஜ் அவர்களின் சரித்திரத்தை தமிழில் எழுதிய திரு. சாய் சுதன் அவர்களுக்கும், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் திருமதி. நங்கை, சென்னையைச் சேர்ந்த திருவாளர். ஜோஷி, திரு. சுந்தர் சீனிவாசன், குருவின் திருவருள் வேண்டி திரு. அசோக்குமார், திரு. ராமமூர்த்தி, நாமக்கல்லைச் சேர்ந்த திரு. ராஜசேகர் இவர்கள் அனைவருக்கும் அடியேனின் பணிவான நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இந்நூலை லாப நோக்கத்துடன் பார்க்காமல், சேவை மனப்பான்மையோடு அச்சிட்டு அளித்த ஷீரடி சாய் பாபா வின் பக்தர் திருவாளர் சங்கர் அவர்களுக்கு அடியேனின் நமஸ்காரங்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள் கிறேன்! இத்திவ்ய சரித்திரத்தை படிக்கும் அனைவருக்கும் ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளின் அருளும் ஆசிர்வாதமும் பரிபூரண மாக கிடைக்க சத்குருவை ப்ராத்தனை செய்து, இந்நூலை தமிழுலகிற்கு சமர்ப்பிக்ன்றேன்!*

**- திருமதி ரமா சுப்ரமணியன்**
முகப்பேர் மேற்கு,
சென்னை - ***600 037.***

- ஜெய் வாசுதேவ் -

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பொருடளக்கம்


*1.* *ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளின் அவதாரச்சிறப்பு* ... 10
*ப்ரம்ச்சர்ய வாழ்க்கை*
*அபார ஞானம்,*
*அற்புதங்களின் துவக்கம்*

*2.* *திருமண வாழ்வில் விதியின் விளையாட்டு* ... 21
*(க்ருஹஸ்தாச்ரமம்)*
*(முதன் முதலாக ஸ்ரீ குரு சரித்திரம்*
*சமஸ்கிருத மொழியில் பதினான்கு*
*நாட்களின் இயற்றிய அற்புதம்)*

*3.* *சந்யாச வாழ்க்கையின்* ... 51
*துவக்கமும், புரிந்த அற்புதங்களும்.*

*4.* *முதலாவது சாதுர்மாஸ்ய விரதம்* ... 73
*உஜ்ஜயினி, மத்தியபிரதேசம் - 1891*

*5.* *இரண்டாவது சாதுர்மாஸ்ய விரதம்* ... 84
*ப்ரம்மவ்ரத், உத்திரபிரதேசம் - 1892*

*6.* *மூன்றாவது சாதுர்மாஸ்ய விரதம்* ... 87
*ஹரித்வார், உத்தர்காண்ட் - 1893*

*7.* *நான்கு, ஐந்து சாதுர்மாஸ்ய விரதம்* ... 92
*இமயமலை (ஹிமாலய பர்வதம்) 1894 - 1895*

*8.* *ஆறாவது சாதுர்மாஸ்ய விரதம்* ... 97
*ஜாலவன், உத்தர்காண்ட் - 1896*

*9.* *ஏழாவது சாதுர்மாஸ்ய விரதம்* ... 119
*பெதாலத் - இந்தூர் - 1897*

*10.* *எட்டாவது சாதுர்மாஸ்ய விரதம்* ... 125
*திலக்வாடா, குஜராத் - 1898*

*11.* *ஒன்பதாவது சாதுர்மாஸ்ய விரதம்* ... 153
*துவாரகை, குஜராத் - 1899*

*12.* *பத்தாவது சாதுர்மாஸ்ய விரதம்* ... 156
*சிக்கலதா, ராஜஸ்தான் - 1900*


NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

13. பதினோராவது சாதுர்மாஸ்ய விரதம் ... 163
மகத்பூர், மேற்குவங்காளம் - 1901

14. பனிரெண்டு, பதிமூன்று, ... 167
பதினான்காவது சாதுர்மாஸ்ய விரதம் 176
ப்ரம்மவிரத், உத்திரபிரதேசம் - 1902,1903,1904 180

15. பதினைந்தாவது சாதுர்மாஸ்யவிரதம் ... 185
நர்ஸி, நரசோபாவாடி,மகாராஷ்டிரா - 1905

16. பதினாறாவது சாதுர்மாஸ்ய விரதம் ... 199
பதவை, சட்டீஸ்கர் - 1906

17. பதினேழாவது சாதுர்மாஸ்ய விரதம் ... 227
சந்தியா மண்டபம் - தஞ்சாவூர் 1907

18. பதினெட்டாவது சாதுர்மாஸ்ய விரதம் ... 235
முக்தியாலயா (முக்தேஷ்வரர்), 1908

19. பத்தொன்பதாவது சாதுர்மாஸ்ய விரதம் ... 239
பவானி - நாக்பூர் - 1909

20. இருபதாவது சாதுர்மாஸ்ய விரதம் ... 253
ஹவானூர், கர்நாடகா - 1910

21. இருபத்தியோராவது சாதுர்மாஸ்ய விரதம் ... 257
குருகட்டி - குருவாபூர், கர்நாடகா - 1911

22. இருபத்தி இரண்டாவது சாதுர்மாஸ்ய விரதம் ... 269
சிக்கலதா, ராஜஸ்தான் - 1912

23. இருபத்தி மூன்றாவது சாதுர்மாஸ்ய விரதம் ... 272
கருடேஷ்வர் - பரோடா - 1913 - 1914

ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி (தேம்பே)
ஸ்வாமிகள், மகாசமாதி
அடைந்த பின்னரும் நிகழ்த்திய அற்புதம்.

- ஜெய் வாசுதேவ் -

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# அத்யாயம் – 1

நம் பாரத தேசத்தில் எத்தனையோ மகான்களும், யோகீஸ்வரர்களும், சித்தர்களும், ஞானிகளும் காலத்தின் தேவைக்கேற்ப இறைவனால் அவதாரம் செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகைய ஆற்றல் பெற்ற மகான்கள், இன்றளவும் நம்மிடையே சூட்சுமரூபத்தில் வாழ்ந்துகொண்டு, நம்மை வழிநடத்திக்கொண்டிருக்கின்றனர். மகாராஷ்டிர மாநிலம் நம் தமிழ்நாட்டைப் போலவே, மிகவும் புண்ணியம் வாய்ந்த பிரதேசமாகும். இங்கு அவதரித்த மகான்கள், நம் தேசத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம், பஞ்சபூதங்களின் ரூபத்தில் நுழைந்து சென்று, இன்றளவும் பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டு வருகிறார்கள். நம் தமிழகத்து சித்தர்களைப் போன்றே, இவர்களும் வெவ்வேறு இடங்களில் ஒரே சமயத்தில் காட்சி அளித்து, பல அற்புதங்களை நிகழ்த்தி தமது பக்தர்களை காப்பாற்றி வருகின்றனர்.

நமது தேசத்தில் அவதரித்த, அற்புதசக்தி வாய்ந்த அனைத்து யோகீஸ்வரர்களும், தர்மத்தை நிலைநாட்டியும், நல்லவர்களை, தீய சக்திகளிடம் இருந்து காத்து, இரட்சித்தும் வருகின்றனர். இத்தகைய மகத்துவம் வாய்ந்த மகான்களின் வரிசையில், குரு பரம்பரையைத் தோற்றுவித்து, குருவின் தேவையை சாமான்ய மானுடர்களுக்கு உணர்த்திய, ஸ்ரீ தத்தாத்ரேயரின் வழித்தோன்றலான, ஸ்ரீ தேம்பே மகராஜ் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும், ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின், குரு சரித்திரம் என்னும் திவ்யவரலாற்றை அடியேன், குருவைப் போற்றி வணங்கும் அடியவர்கள், அனைவருடைய பாதங்களிலும் சமர்ப்பிக்கின்றேன்!

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மகான்களின் திவ்ய சரித்திரத்தை படிப்பவர்களும், கேட்பவர்களும், பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்தவர்கள். இன்று இத்திவ்ய சரித்திரத்தை, பாராயணம் செய்யும், நாம் அனைவருமே புண்ணியம் பெறும் பாக்யத்தை, ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் குரு சரித்திரம் நமக்கு வழங்கவிருக்கின்றது.

ஸ்ரீ தத்தாத்ரேயரின் இரண்டாவது அவதாரமான, ஸ்ரீ குரு என்று அனைவராலும் போற்றி வணங்கப்படும், மந்திர மூர்த்தி, சர்வேஸ்வரரின் அம்சமான, கானகாபூரிலும், நரசோபாவாடியிலும், தம்மை நாடி வந்து தரிசிக்கும், அனைவருடைய பாவங்களையும் பொசுக்கி, நம் தலைவிதியையே மாற்றும் ஆற்றலை உடைய, ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி என்ற மகா யோகீஸ்வரரின் அவதாரமே, ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் ஆவார்.

ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் என்று அழைக்கப்படும், ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம் முழுவதுமே அற்புதங்கள் நிறைந்தவை. அவர் தமது சத்குருவும், இறைவனுமான ஸ்ரீ தத்தாத்ரேயரின் கட்டளையை ஏற்று, தம் வாழ்நாள் முழுவதும், இந்திய தேசம் முழுவதும் பாதயாத்திரையாகவே சென்றார்.

தனது புனித யாத்திரையில், அனைவருக்கும் பக்தி மார்க்கத்தையும், அதன் வழிமுறைகளையும், அதன் அவசியத்தையும், தனி மனித ஒழுக்கத்தையும், கடமை தவறாது தினமும் மேற்கொள்ளும், பூஜா விதிமுறைகளையும் அனைவருக்கும் போதித்தார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அஷ்டமகா சித்திகளையும், கைவரப் பெற்றிருந்தாலும் அவற்றை ஒரு போதும் சுயநலத்திற்காக உபயோகிக்கவில்லை. இவர் மகா சமாதி அடைந்து. (**100**) நூறு வருடங்களுக்கு மேலாகியும், இன்றளவும் தமது பக்தர்களின் வாழ்க்கையில், பல்வேறு அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள், தமக்கு முன்னால் வந்து நிற்கும் எவருடைய மன ஓட்டத்தையும், மிகத் துல்லியமாக உணரும் வல்லமை பெற்றவர். ஆகையால் இவரிடம், எவரும் பொய்யுரைக்க முடியாது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பால்ய பருவத்தில், முறையாக கல்வி பயில வாய்ப்பு இல்லாத பொழுதும், ஸ்ரீ தத்தரின் வழித் தோன்றியதால், தமது தெய்வீக ஆற்றலால், சமஸ்கிருதம், கன்னடம், ஹிந்தி மற்றும் மேல்நாட்டு பாஷைகளான அரபிக் (Arabic) முதலிய வற்றிலும், எழுதவும், உரையாற்றவும், ஆற்றல் பெற்றிருந்தார். வானசாஸ்திரம், ஜோதிடம், கணிதம், கவிதைபுனையும் ஆற்றல், அறிவியல் முதலிய சகல கலைகளிலும் விற்பன்ன ராக இருந்தார்.

ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள், நம் அனைவருக்கும் பக்தி நெறியை, கர்ம யோகத்தை பின்பற்றி, இறைவனின் கருணையை, மிக எளிதாக அடைய இயலும் என்பதை, தாம் வாழ்ந்து நிரூபித்து காட்டியுள்ளார்.

இத்தகைய மாபெரும் யோகீஸ்வரரான, ஸ்ரீ தேம்பே மகராஜ் அவர்களின் திவ்ய சரித்திரத்தை, அறிந்து கொள்ள, நாம் "மான்காவ்" என்று அழைக்கப்படும் சிறிய, அழகிய கிராமத்திற்கு செல்வோம்! வாருங்கள்!

மகராஷ்டிராவின் தெற்குப் பகுதியில், சாவந்த்வாடி என்ற நகரில் அமைந்த ஒரு சிறிய கிராமமே, மான்காவ் என்பதாகும். தற்பொழுது உலகம் முழுவதும் போற்றப்படும் ஸ்ரீ தத்த அவதாரியான, ஸ்ரீ வாசுதேவர் அவதரித்த ஸ்தல மாகும். மகாராஷ்டிராவில், ரத்னகிரி என்ற மாவட்டத்தில், சாவந்த்வாடி என்ற தாலுகாவில் இருந்து, சுமார் 7 மைல் தொலைவில் அமைந்தது தான் "மான்காவ்" என்ற கிராம மாகும். மான்காவ் கிராமத்தில் "நிர்மலா" என்ற பெயருடைய அழகிய நதி, சுமார் ஒன்றரை மைல் நீளத்தில், ஜீவநதியாக, அங்குள்ளோரின் தாகத்தை தணித்து அனைவரையும் வாழ வைத்துக் கொண்டிருந்தது.

மான்காவ் கிராமத்தில் யக்ஷிணி என்ற காவல் தெய்வம், போற்றப்பட்டு வந்தது. அக்கிராம தேவதைக்கு, ஒரு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு, முறையாக வழிபாடுகள் செய்யப்பட்டு வந்தன. அப்பொழுது சுமார் மூவாயிரம் குடும்பங்கள் மட்டுமே அக்கிராமத்தில் வாழ்ந்து வந்தன! அவற்றில் இருபது அந்தண குடும்பங்களே வசித்து வந்தன. அவர்கள் வைதீக காரியங்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

களும், பூஜை, யாகங்கள், உபன்யாசம், சத்சங்கம் இவற்றின் மூலமாக மான்காவ் கிராமவாசிகளை பக்தி நெற்றியில் வழி நடத்தி வந்தனர்.

சுமார் **150** வருடங்களுக்கு முன்னர், ஸ்ரீ ஹரி பட்டாஜி தேம்பே என்ற மிகச்சிறந்த பண்டிதர், சாவந்த்வாடியில் வாழ்ந்து வந்தார். அவர் "ரிக்" வேதத்தின், ஒரு பகுதி "அத்ரி" என்ற கோத்திரத்தை சேர்ந்தவர். ஸ்ரீ ஹரி பட்டாஜி தேம்பே அவர்கள், ஸ்ரீ தத்த அவதாரியான, ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி எழுந்தருளிய கானகாபூரில், பல வருடங்கள் தொடர்ந்து சேவை செய்து வந்தார். ஸ்ரீ ஹரி பட்டாஜியின் இத்தகைய பக்தியும், இறை உணர்வும், சேவை மனப்பான்மையும் அவருடைய புத்திரரான ஸ்ரீ கணேஷ் பட்டாஜி தேம்பே அவர்களிடமும் சிறு பருவத்திலேயே இருந்து வந்தது.

ஸ்ரீ கணேஷ் பட்டாஜி தேம்பே, ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகளின் மேல் கொண்ட தீவிர பக்தியால், திருமணம் செய்து கொண்ட பின்னரும், தன் மனைவியுடன், இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல், அவரையும் அழைத்துக் கொண்டு இறைசேவை செய்வதற்காக கானகாபூருக்கு வந்துவிட்டார்.

இத்தம்பதியினர் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக, ஸ்ரீ குருவிற்கு சேவை செய்த காரணத்தால், மகிழ்ந்த ஸ்ரீதத்தர், ஒருநாள் அவர்களுக்கு காட்சி அளித்தார். ஸ்ரீ தத்தர், ஸ்ரீ கணேஷ் பட்டாஜி அவர்களிடம், "நீ உன் மனைவியுடன் எனக்கு பல ஆண்டுகள் சேவை செய்துவிட்டாய்! ஆகையால் உன் மனைவியை அழைத்துக் கொண்டு, விரைந்து உன் ஊருக்கு திரும்புவாயாக!" என்று கட்டளையிட்டார். அப் போது ஸ்ரீ கணேஷ் பட்டாஜி ஸ்வாமிகளிடம், "ஸ்ரீ தத்த மகா ப்ரபோ! நாங்கள், தங்களை நீங்கி எவ்வாறு இருக்க இயலும்? என்று கண்ணீருடன் கேட்ட பொழுது, ஸ்ரீ தத்தர் கவலை வேண்டாம்! நானே எனது அவதாரமாக, தங்களுடைய புத்திர ராக, உன் மனைவியின் கருவில் உதிப்பேன்! அப்புத்திரன் ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியாரின் வழி நின்று, பாரத தேசம் முழுவதி லும் பக்தி நெறியை பரவச் செய்வார்!" என்று வாக்களித்தார்.

இதை கேட்டு மன வருத்தம் நீங்கி, ஸ்ரீ கணேஷ் பட்டாஜியும், அவரது மனைவியும் மான்காவ் கிராமத்திற்கு

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வந்துவிட்டார்கள், ஸ்ரீ தத்தரின் வாக்கிற்கேற்ப, அவர்களுடைய முதல் புத்திரராக அவதரித்தவரே ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் ஆவார்.

ஷ்ராவன் என்று சொல்லப்படும் மழைக்காலத்தில் ஆவணி மாதத்தில் 1854 வது ஆண்டில் அவதரித்தார். ஸ்ரீ வாசுதேவரின் குடும்பமே, ஸ்ரீ தத்த பக்தியில் திளைத்திருந்தது. மகான்களின் அவதாரம் சாதாரண மனிதர்களிடம், நிகழ முடியாது. அந்நிகழ்விற்கு அவரது குடும்பம் முழுவதும், ஸ்ரீ தத்தரிடம் கொண்ட தீவிர பக்தியும், அன்பும், எத்தகைய துயரங்களையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் கொண்ட காரணத்தினாலேயே, ஸ்ரீ வாசுதேவரை அங்கே அவதரிக்கச் செய்தது. ஸ்ரீ ஸ்வாமிகளின் தந்தையான, ஸ்ரீ கணேஷ் பட்டாஜி, தம் வாழ்நாளில் பெரும்பகுதியை ஸ்ரீ தத்தாத்ரேய அவதாரியான, ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதியின் புனித ஸ்தலமான, கானாகாபூரிலேயே கழித்து வந்தார்.

NOT FOR SALE

ஸ்ரீ தத்தாத்ரேயரின் வாக்கிற்கேற்ப, ஒரு புண்ணிய தினத்தில் அவதரித்த, ஸ்ரீ வாசுதேவஸ்வாமிக்கு போதுமான உணவளிக்கக்கூட, அவர்களின் பெற்றோர்கள் வருமானமும், வசதியும் அற்றவர்களாக இருந்தனர். வறுமையில் வாடிய போதும், தர்ம நெறிகளை தவறாது பின்பற்றி, வழிபாடுகளையும் எக்குறையுமின்றி செய்து வந்தனர். இத்தகைய பெற்றோரிடத்தில் தான் ஸ்ரீ தத்தருக்கு அன்பும், கருணையும் மிகுந்திருக்கும்.

ஸ்ரீ தத்த அவதாரியான, ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர், ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதியின் பெற்றோரும் இத்தகைய நிலையைப் பெற்றவர்களே ஆவார்கள். வறுமை அவர்களை பயமுறுத்திய போதும், அதைக்கண்டு அஞ்சாமல் பக்தி நெறியிலும், வழிபாட்டு முறைகளிலும் எக்குறையும் இல்லாமல் பணியாற்றியதால் தான் ஸ்ரீ தத்தர் மனம் மகிழ்ந்து அவர்களின் இல்லங்களில் தாமே அவதாரம் செய்தார். அத்தகைய முறையில், ஸ்ரீ வாசுதேவ மகராஜ், மான்காவ் கிராமத்தில் அவதரித்து நிகழ்த்திய பல்வேறு அற்புதங்களையும், உபதேசங்களையும் ஆனந்தமாக கேட்டு நம்முடைய வாழ்க்கையிலும், அத்தகைய அற்புதங்கள்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நிகழ, ஶ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை ப்ரார்த்தனை செய்வோம்! இனிவரும் அத்தியாயங்களில், நாம் மான்காவ் கிராமத்தில் நிகழ்ந்த ஶ்ரீ தத்த அவதாரியான, இந்த மஹாபுருஷரின் மகிமைகளை காண்போம்!

ஶ்ரீ வாசுதேவ மகராஜ் அவர்களுக்கு, ஆரம்ப கல்வி அளிப்பதற்காக மூன்று வயதிலேயே, அந்த கிராமத்தில் அமைந்த யக்ஷிணி தேவதையின், ஆலயத்திற்கு அருகில் இருந்த, ஆரம்பப்பள்ளியில் கல்வி போதிக்க ஏற்பாடுகள் நடந்தன. மூன்றே வயதான ஶ்ரீ வாசுதேவ மகராஜ், தன் பிஞ்சுக்கரங் களால், மண்ணில் எழுதிப்பழக வேண்டும் என்பதுதான் அப்பள்ளியின் விதிமுறை. மும்மூர்த்திகளின் அம்சமான ஶ்ரீ வாசுதேவ மகராஜ், அப்பொழுதிலிருந்தே வலியையும், வேதனைகளையும் தாங்கப் பழகிக் கொண்டார். அங்கு துவங் கிய ஆரம்ப கல்வியோடு, அவர், பள்ளிக்கு செல்வது தடைப் பட்டுவிட்டது.

தம் வாழ்நாளில் நான்கு அல்லது ஐந்து வயது வரை மட்டுமே பள்ளிக்குச் சென்றார். அதன் பின்னர், தனது தாத்தாவான ஶ்ரீ ஹரிபட்டாஜியிடம், வேதங்களை, பாராயணம் செய்யும் முறையிலும், தேர்ச்சி பெற்றார். ஶ்ரீ வாசுதேவ ஸ்வாமி கள் தமது தெய்வீகத்தன்மையால், மிகச்சிறந்த நினைவாற்றல் கொண்டிருந்ததார் பால்ய வயதிலேயே சமஸ்கிருதத்தின் இலக் கணத்தையும், கவிதை புனையும் ஆற்றலையும் பெற்றிருந்தார். அந்தண குலத்தின் வழக்கத்தின்படி, ஶ்ரீ வாசுதேவருக்கு பூணூல் இடும் சடங்குமுறையை, நிறைவேற்ற அவரது தாத்தா ஏற்பாடுகளை செய்தார். ஶ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் தமது 8 ஆவது வயதில் பூணூல் இட்டு, நால்வகை ஆஷ்ரம விதிகளில், முதலாவதான ப்ரம்மச்சரியம் என்ற நிலையில், தமது பயணத்தை துவங்கினார். ஆகமவிதிகளின்படி, பூணூல் என்ற சடங்கின் மூலம், காயத்ரி மந்திரத்தை முறையாக, நிலையான பக்தியோடு உச்சாடனம் செய்ய வேண்டும். ப்ரம்மச்சரியம் என்ற முதல் நிலையானது, பாலகர்கள், வேதபாடங்களை முறையாக பயில வலியுறுத்துகிறது. ஶ்ரீ வாசுதேவர், ஶ்ரீ தத்தரின் அவதாரம் ஆதலால் சிறிதும் சோர்வுறாமல், தினந்தோறும் ஆயிரம் முறை காயத்ரி மந்திர உச்சாடனம்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செய்வதை தமது எட்டு வயது முதல் வழக்கமாக கொண்டிருந்தார். அச்சிறுவயதில் அவருக்கு இருந்த வைராக்கியத்தையும், பக்தியையும் கண்டு அனைவரும் வியந்தனர்.

இதைத் தவிர, தினமும் ஸ்ரீ குரு சரித்திரத்தை பாராயணம் செய்தும். குருவின் வழிபாட்டையும் நிறைவேற்றிவந்தார். ஸ்ரீ தத்த பரம்பரைக்கேற்றவாறு, தம் வாழ்நாளில், ஸ்ரீ வாசுதேவ மகராஜ், (2.4) இரண்டு கோடியே நான்கு லட்ச முறைகள் முறை, காயத்ரி மந்திரத்தை உருவேற்றினார். இது மனிதர்கள் எவராலும் செய்ய இயலாத சாதனையாகும். ஆகமவிதிகள் காட்டிய வழியை, மிகவும் கண்டிப்பாக பின்பற்றினார். குருவானவர் தாம் மற்றவருக்கு போதித்ததை, தாமே முதலில் பின்பற்றி, பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளுக்கு, வேதங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் முறையாக போதிக்க, ஸ்ரீ தாத்யா பட்டாஜி என்பவர் ஆசானாக நியமிக்கப்பட்டார். ஸ்ரீ வாசுதேவர் சிறு வயதிலேயே, அதிகாலையில் எழுந்து நீராடி, வேதபாடங்களை பயிலத்துவங்கினார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், சாத்வீக உணவையே உண்டார். புதிதாக தயாரிக்கப்பட்ட தாவர உணவை, தன் அன்னையின் மூலமாக அல்லது, தன் கைகளால் சமைத்தும் உண்டார். இவ்வாறு புதிதாக தயாரிக்கப்பட்ட உணவை, வைஸ்வதேவரான அக்னி தேவருக்கும், கோமாதா வான பசுவிற்கும், பித்ருக்களுக்கு, மோட்சத்தை வழங்கும் அதிகாரம் படைத்த காகங்களுக்கும், அளித்துவிட்டு, இறுதியாக தாம் உண்பதை வழக்கமாக கொண்டிருந்தார். உணவு தயாரிக் கப்பட்டு வெகுநேரம் ஆகியிருந்தாலோ, அல்லது உணவை உட்கொள்ளும் வேளையில், அந்த இடத்தில் ஏதாவது அமங்கல நிகழ்வோ, அல்லது சிறு பூச்சிகள் போன்ற பிராணிகள் உயிரிழந்தாலும், வேறு அபசகுண நிகழ்வுகள் நடந்தாலும், உடனடியாக உண்பதை விடுத்து, பட்டினிகிடப்பார். அதற் காக யாரையும் கடிந்து, கோபித்துக் கொண்டதும் கிடையாது. எவர் மனதும் புண்படுமாறு பேசவும்மாட்டார்.

பதினான்கு நாட்களுக்கு ஒருமுறை வரும் ஏகாதசி நாளன்று தண்ணீர் அருந்தாமல், பகலிலும், இரவிலும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உறங்காமல், முழுமையாக விரதத்தை அனுசரித்தார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் இத்தகைய கடினமான பயிற்சிகளாலும், தீவிரமான முயற்சிகளாலும், மிகச்சிறந்த ஆற்றலாலும், பால்ய பருவத்திலேயே, சகல சாஸ்திர வித்தைகளையும் கற்று அவற்றை போதிக்கும் ஞானத்தையும் பெற்றார்.

ஸ்ரீ வாசுதேவர், ஜோதிட சாஸ்திர ஆராய்ச்சியில், ஆர்வம் கொண்ட ஸ்ரீ சாதலே சாஸ்திரி என்பவரிடம், முறையாக ஜோதிடம் பயின்றார். தன்னுடைய தெய்வீகத்தன்மையாலும், கடின முயற்சியாலும் ஜோதிட சாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்றார், கோள்களின் இயக்கத்தின் கணக்குகளை மிக துல்லியமாக கணித்து தமது ஆசிரியரான, ஸ்ரீ சம்புசாதலே சாஸ்திரியை வியப்பில் ஆழ்த்தினார். தம் சிஷ்யரின் தெய்வீக ஆற்றலைக்கண்டு வியந்தார்.

ஸ்ரீவாசுதேவருக்கு இனியும் போதிக்க தம்மிடம் எதுவும் இல்லை என்பதையும், தாம் கற்பித்ததை விட, ஜோதிட சாஸ்திரத்தில், மிகச்சிறந்த ஆற்றலை பெற்றுவிட்டதால், ஸ்ரீ வாசுதேவருக்கு தாம் ஆசானாக இருக்க அவசியமும் தகுதியும் இல்லை என்று கூறிச் சென்றுவிட்டார். இது மட்டுமல்லாமல், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் சமஸ்கிருதத்தில் இறைவனைதுதித்து கவிதை புனையும் ஆற்றலையும் பெற்று இருந்தார்.

NOT FOR SALE

## மந்திர சித்தி

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தம் கடின சாதகத்தாலும், தெய்வீக ஆற்றலாலும், பல்வேறு மந்திரசித்திகளை கைவரப் பெற்றிருந்தார். ஆனால் அம்மந்திரங்களை தமக்காக ஒருமுறை கூட பிரயோகம் செய்ததில்லை. சமூக நலனுக்காகவே பயன் படுத்தினார். தம் வாழ்நாளில் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் எண்ணற்ற அற்புதங்களை புரிந்திருக்கின்றார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளுக்கு, வேதங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் முறையாக போதிக்க ஸ்ரீ தாத்யா பட்டாஜி என்பவர் ஆசானாக நியமிக்கப்பட்டார்.

ஒருநாள் ஸ்ரீ வாசுதேவ மகராஜ், தமது மான்காவ் கிராமத்திலிருந்து பக்கத்து கிராமத்திற்கு செல்லும் பொருட்டு, தன்னுடன்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு பண்டிதரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

மான்காவ் கிராமத்திலிருந்து, அடுத்த கிராமம் செல்லும் வழியில், நடுவில் அடர்ந்த காட்டுப்பிரதேசம் இருந்தது. அக்காட்டைத் தாண்டியே அவர்கள் இருவரும், அடுத்த கிராமத்திற்கு செல்ல இயலும். ஆகையால் அக்காட்டின் வழியே இருவரும் நடந்து கொண்டிருந்தனர். ஸ்ரீ வாசுதேவர் ஒருபோதும் பாத அணிகளை அணியமாட்டார். வெறும் கால்களின் மூலம் பல ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் பாதயாத்திரை சென்றவர். அந்த அடர்ந்த கானகத்தில் அவர்கள் செல்லும் திசையில், திடீரென்று பெரிய நாகம் ஒன்று சீறிக்கொண்டே வந்தது.

சீறிவரும் நாகத்தைக் கண்டு பயந்து நடுங்கிய, அப்பண்டிதர் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளிடம், தனது மந்திர சக்தியைக் கொண்டு, அந்நாகத்தை அடக்க வேண்டினார். அச்செயலைப் புரிய ஸ்ரீ வாசுதேவர் முதலில் மறுத்துவிட்டார். பின்னர் அப்பண்டிதரின் அச்சம் கண்டு மனம் இரங்கிய, ஸ்ரீ வாசுதேவர், தரையில் இருந்து மண்ணை தம் கையில் எடுத்து, நாகத்தை அடக்கும் மந்திர உச்சாடனத்தைக்கூறி, அம் மண்ணை நாகத்தைச் சுற்றி நாலுபுறங்களிலும் ஒரு வட்டமாக தூவினார்.

அந்நாகம் படமெடுத்து சீறிப்பாய்ந்தாலும், நாலா புறங்களிலும் அமைந்த அந்த வட்டத்தைத்தாண்டி, அதனால் ஒரு அடி கூட நகர இயலவில்லை. அவ்வட்டத்தையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. ஸ்ரீ வாசுதேவரும், அப்பண்டிதரும் அடுத்த கிராமத்தில், தாம் ஆற்ற வேண்டிய பணியை முடித்து மான்காவ், திரும்பிய ஸ்வாமிகள், அந்நாகத்தின் நினைவு ஏற்பட்டவுடன், உடனடியாக அதனைத் தேடி ஓடி வந்தார். அந்த இடத்தில், அந்நாகம் அதுவரையில் அவ்வட்டத்தை விட்டு வெளியேறவில்லை. என்ன ஆச்சர்யம்! அவருடைய மந்திரத்திற்கு கட்டுப்பட்டு, அந்த நாகம் அவ்வட்டத்தையே சுற்றி சுற்றி வந்து சோர்ந்துவிட்டது. ஸ்ரீ வாசுதேவர் மீண்டும் தரையில் இருந்த மண்ணை எடுத்து, பாதுகாப்பு வளையத்தை உடைக்கும் மந்திரத்தை ஜெபித்து, அம்மண்ணை, அவ்வட்டம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இருந்த இடங்களில் எல்லாம் தூவியவுடன், அந்நாகம் விரைந்து சென்று புதரில் ஒளிந்து கொண்டது. இந்நிகழ்ச்சி ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை மிகவும் பாதித்தது. அவர் ஸ்ரீ தத்தரிடம் மன்னிப்பு வேண்டினார்.

மற்றொரு முறை, ஸ்ரீ வாசுதேவர் தமது சகோதரியின் கிராமத்திற்கு சென்றார். அங்கு அவரது சகோதரி, தமது பசுமாடு மிகவும் முரண்டு செய்து தமக்கும் மற்றவருக்கும் துன்பம் தருவதாகக் கூறி, ஸ்ரீ வாசுதேவரை உதவி செய்ய பணித்தார். சகோதரியின் வார்த்தையை தட்ட முடியாமல், அப்பசுவை தன் மந்திர சக்தியின் மூலம் சாதுவாக, அன்பான பசுவாக மாற்றினார். இச்செய்தி அந்த கிராமம் முழுவதும் பரவியது.

மக்கள் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை தரிசிக்க, திரளாக வந்து கொண்டிருந்தனர். ஆனால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் மனம் வேதனையுற்றது. அவர் அன்று முதல், தமது மந்திர சக்தியை, எந்த உயிரினத்தையும், கட்டுபடுத்த பிரயோகம் செய்ய மாட்டேன்! என்ற உறுதி மொழி எடுத்துக் கொண்டார். கருணா மூர்த்தியான ஸ்ரீ தத்தாத்ரேயின் வழி வந்தவரே நமது ஸ்வாமிகள் ஆவார்!

ஸ்ரீ தத்தாத்ரேயரைச் சூழ்ந்த பசுக்கள், ஆடுகள், நாய்கள் மற்றும் நாகங்கள் இவை போன்ற அனைத்து உயிரினங்களும் ஸ்வாமிகளை சுற்றி ஆனந்தமாக உலவுவதை, அங்குள்ள அனைவரும் கண்டிருக்கிறார்கள்.

ஒருமுறை, ஸ்ரீ வாசுதேவனாந்த ஸ்வாமிகளை, தரிசிக்க வந்த அந்த கிராம காவல்துறை கண்காணிப்பாளர், அவரிடம் அக்கிராமத்தில் குற்றவாளிகளின் குழு ஒன்று மக்களுக்கு மிகுந்த துன்பத்தைத் தருவதாகவும், அக்ககுழுவை, தமக்கு அடையாளம் காட்டுமாறு வேண்டினார். ஸ்ரீ வாசுதேவர் சமூக நலனை முன்னிட்டு, அக்குற்றவாளிகள் இருக்குமிடத்தை சரியாக கூறினார். காவல்துறையும் அப்பகுதிக்கு சென்றவுடன், அக்குற்றவாளிகள் அங்கிருப்பதைக் கண்டு அவர்களை கைது செய்தனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ வாசுதேவரிடம் பெரும்பாலும், உடல் நலம் குன்றியவர்கள், பெரும் வியாதிகள், செய்வினை, ஏவல் இவற்றால் துன்பமடைந்தவர்கள் முதலியோர் மன்றாடி, தங்களைக் காப்பாற்றுமாறு வேண்டினர். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தம்மைத் தேடி வருத்தத்துடன் எவர் வந்தாலும், அவர்களின் உடல் நலத்தை சீராக்கி, பல்வேறு வியாதிகளையும், அதன் காரணம் அறிந்து கொண்டு அவற்றை நீங்குவதற்கான பரிகாரங்களையும் வழங்கி தம் பக்தர்களைக் காப்பாற்றினார். மான்காவ் மட்டுமல்லாது, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் தரிசனம் பெற, சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலிருந்தும் மக்கள் வெள்ளம் போல வரத்துவங்கினர். மக்கள் அனைவரும் “சாஸ்திரிஜி”, என்றே அன்புடன் அழைத்தனர்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தன்னுடைய மந்திர ஆற்றலின் மூலம் தமக்கென்று எதையுமே சாதித்துக் கொள்ளவில்லை தம் வாழ்நாள் முழுவதும் பிக்ஷை எடுத்தே வாழ்ந்து வந்தார்.

இத்தகைய மகானின் பாதங்களை நமஸ்கரித்து, அவருடைய அற்புத லீலைகளை தொடர்ந்து அடுத்து அத்தியாயங்களில் நாம் காண்போம்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## அத்தியாயம் – 2

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின், வாழ்கை முழுவதுமே எதிர்பாராத திருப்பங்களும், வேதனைகளும், சோதனைகளும் நிறைந்ததாகவே அமைந்தன. ஆனால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமி கள் இவற்றை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. இத்தகைய சோதனைகள் யாவும், இறைவனிடம் தாம் மிகவும் நெருங்கிச் செல்வதற்கும், தமது சன்யாச வாழ்க்கைக்கும் துணை புரிவதாகவே நினைத்தார்.

மான்காவ் கிராமத்தின் பக்கத்து கிராமமான, ரஞ்ஜன்கட் என்ற கிராமத்தில், காவல்துறையின் வேலை பார்க்கும், திரு. பட்டாஜி பந்த் என்பவர், ஸ்ரீ வாசுதேவரின் ஆசானாக விளங்கிய தாத்யா பட்டாஜியின் நண்பராவார். அவர், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளுக்கு, தன்னுடைய மகளை மண முடிக்க வேண்டும் என்று கோரிக்கையை தமது நண்பரிடம் வைத்தார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் ஆசானாக விளங்கிய, திரு. தாத்யா பட்டாஜியும், தன் சிஷ்யர் ஸ்ரீ வாசுதேவன், தன் சொல்லைத் தட்டமாட்டார் என்று கூறி, ஸ்ரீ வாசுதேவருக்கும், அவருடைய அன்னையாருக்குமே தெரியாமல், வாக்களித்து விட்டார். அத்துடன் நிறுத்தாமல், தாம்பூலமும் மாற்றிக் கொண்டு, ஸ்ரீ வாசுதேவரின் திருமணத்தை, திரு. பட்டாஜி பந்த்தின் மகளுடன் நிச்சயித்து விட்டார். அதற்கு பின்னரே இத்தகவல் ஸ்ரீ வாசுதேவருக்கும், அவருடைய அன்னைக்கும் தெரிய வந்தது. ஸ்ரீ வாசுதேவரின் அன்னையர், திருமதி. ரமா பாய், மிகவும் மனமுடைந்து போனார். காரணம், தன்னைக் கலந்து ஆலோசிக்காமல், இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதுமட்டுமல்லாமல் நிச்சயிக்கப்பட்ட அப்பெண்ணிற்கு, ஒரு கால் ஊனமாகி இருந்தது.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அப்போது, ஸ்ரீ வாசுதேவருக்கு 20 வயதே ஆகியிருந்தது. அவருடைய ஆசானாகிய திரு. தாத்யா பட்டாஜி, ஸ்ரீ வாசு தேவரிடம், தம் உத்தரவை ஏற்று, திரு. பாபாஜி பந்த்தின் மகளை, திருமணம் செய்துகொள்ள வற்புறுத்தினார். ஸ்ரீ வாசுதேவர், தம்முடைய விருப்பத்திற்கும், தமது அன்னையின் விருப்பத்திற் கும் சிறிதளவும் மதிப்பளிக்காமல் தாமே நேரடியாக திருமணத்தை நிச்சயித்து விட்டு, தம்மிடம் அப்பெண்ணை, திருமணம் செய்துகொள்ள தமது ஆசான், உத்தரவிட்டதற்காக, சிறிதளவும் வருந்தவில்லை! மாறாக, வேதங்களை தமக்குக் கற்று கொடுத்த, ஆச்சார்யாவின் வாக்கை, தெய்வ வாக்காக ஏற்று, ஊனமுற்ற அப்பெண்ணை, திருமணம் செய்து கொள்ள சம்மதித்தார். இதுவல்லவே குரு பக்தி! ஸ்ரீ வாசுதேவருக்கு, திருமணம் செய்து கொள்வதிலும், இல்லறவாழ்க்கையிலும், சிறிதும் ஈடுபாடு இருக்கவில்லை.

ஆனால் விதி, ஸ்ரீ வாசுதேவரின் திருமண வாழ்கையில், கோரத் தாண்டவம் ஆடியது. தன் உத்தரவின்றி தமது மகன், அப்பெண்ணையே திருமணம் செய்து கொண்டதால், தன் மருமகளை, ஸ்ரீ வாசுதேவரின் அன்னையார், வெறுக்கத் துவங்கினார். அன்னபூர்ணா என்று பெயரிட்டு அழைத்த தம் மருமகளுக்கு, அன்னமும், நீரும் அளிக்காது கொடுஞ்சொற் களால், அவள் மனதை புண்படுத்த ஆரம்பித்துவிட்டார்.

அவ்வூர் மக்களின் வழக்கப்படி, தம் கணவரின் இல்லத் தில் திருமணமாகி நுழையும் பெண்ணிற்கு, பிறந்த வீட்டில் வைத்த பெயரையே மாற்றி, வேறு புது நாமம் ஒன்றை சூட்டுவார்கள். அதனால், "பாயோ" (Bayo) என்ற அப் பெண்ணின் பெயரை, ஸ்ரீ வாசுதேவரின் அன்னையார், அன்னபூர்ணா என்று மாற்றினார்.

ஒரு பெண் மணமாகி, தன் கணவரின் இல்லத்திற்கு வரும்போது, அந்த இல்லத்தையே தனதாக்கி, வாழும் வாழ்க்கை யில், தம்மை அர்ப்பணித்து, தமக்கு பிறந்த வீட்டில் வைத்த பெயரைக்கூட மாற்றி அமைத்துக் கொள்வது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது.

திருமணச் சடங்குகள் நிறைவேறியதும், அக்னி தேவருக்கு செய்யும் யாகங்களை செய்து, **"காயத்ரி புருஷசரண்"** என்று

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சொல்லப்படும், ஸ்ரீ காயத்ரி மந்திரத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், இலட்சக்கணக்கில் உச்சாடனம் செய்தார்.

திருமணம் முடிந்தவுடன், அவர் இல்லற வாழ்வில் ஈடுபட வில்லை. ஜோதிட சாஸ்திரத்தில், மேலும் சில விவரங்களைக் கற்க கோவா சென்றார். அங்கு ஸ்ரீ நீல்கந்த் என்ற மிகப்புகழ் பெற்ற வல்லுநரிடம், தம் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டார். ஸ்ரீ வாசுதேவரின் ஞானத்தைக் கண்ட ஸ்ரீ நீல்கந்த் மிகவும் வியந்து, அவரிடத்தில் உள்ள தெய்வீகத்தன்மையை, தம் ஞானத்தால் உணர்ந்து கொண்டார். இச்சமயத்தில், ஸ்ரீ வாசுதேவரின் தந்தையார், ஸ்ரீ கணேஷ் பட்டாஜியின், உடல் நிலை சீர்கேடானதால், அவர் உடனே மான்காவ் திரும்ப வேண்டியதாயிற்று. ஸ்ரீ நீல்கந்த், ஸ்ரீ வாசுதேவரின் பிரிவை நினைத்து, மிகவும் வேதனையுற்றார். அவர் ஸ்ரீ வாசுதேவரின் உடைகளை பத்திரப்படுத்தி, வைத்திருந்தார். என்றேனும் ஒருநாள், தம்மை சந்திக்க ஸ்ரீ வாசுதேவர் வருவார் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்.

ஆனால் இறுதிவரை, அவர் ஸ்ரீ வாசுதேவரை சந்திப் பதற்கு வாய்ப்பே அமையவில்லை. மான்காவ் கிராமத்திற்கு திரும்பிய ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தனது நோய்வாய்ப்பட்ட தந்தைக்கு அருகில் இருந்து, ப்ரார்த்தனை செய்தார். அவருக்கு தம் தந்தையின் முடிவு நன்றாகவே தெரியும். அதே போன்று, அவருடைய தந்தையான ஸ்ரீ கணேஷ் பட்டாஜியும் தமது முடிவு நெருங்குவதை உணர்ந்து கொண்டார். அவர் ஸ்ரீ தத்தரின் தீவிர பக்தர், மற்றும் தூய்மையான உள்ளம் கொண்டவர். 1877 இல் அவரது தந்தை திரு கணேஷ் பட்டாஜி, ஸ்ரீ தத்தரின் திருவடி களை சென்று சேர்ந்தார். ஸ்ரீ கணேஷ் பட்டாஜியின் உயிர் பிரிந்தபோது, அவருக்கு 55 வயதே ஆகியிருந்தது. ஸ்ரீ வாசு தேவர், தன் திருமண வாழ்க்கையைத் துவங்க இருந்த நேரத்தில், தன் தந்தையை இழந்துவிட்டார்.

ஸ்ரீ ஸ்வாமிகள், வேதசாசாஸ்திர விதிகளின்படி, அன்னையை தெய்வமாக பூஜித்ததால், அவர் தன் மனைவியி டம் விரோதமாக நடந்துகொள்வதை சுட்டிக்காட்ட விரும்ப வில்லை. தம் கணவரைப் பறிகொடுத்த அன்னையின், மன அமைதிக்காக, ப்ரார்த்தனை செய்தார். தன் மனைவி

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அன்னபூர்ணா, மனம் வருந்திய போதெல்லாம், தாம் பட்டினி கிடந்து, அத்தண்டனையை தமக்கே வழங்கிக் கொண்டார். ஸ்ரீ வாசுதேவரின் தர்மபத்னி அன்னபூர்ணாவும், தாம் இல்லற வாழ்வை, நல்ல நேரத்தில் துவங்க இயலாத காரணத்தால், இல்லத்தில் நடைபெற்ற, மதச்சடங்குகள் மற்றும் ஹோமங்கள் இவற்றில் பங்கெடுக்க இயலவில்லை. மனைவியின்றி கணவரும், அல்லது கணவரின் துணையின்றி மனைவியும் செய்யப்படும் மதச்சடங்குகள், ஹோமங்கள் சாஸ்திரங்களால் அங்கிகரிக்கப்படவில்லை.

ஆனால், ஸ்ரீ வாசுதேவரின் மனம், பரம்பொருளைத் தேடுவதில் மட்டுமே இருந்தது. ஆதலால் எவரிடமும் உரைக்காமல், வீட்டை விட்டு வெளியேறிவிட்டார் அவர் சாவந்தவாடி என்ற நகருக்கு வந்தார். அங்கு ஒரு யாகத்தில் பங்கெடுத்தார். அங்கிருந்த ஸ்ரீ விஷ்ணுபந்த் ஆனவ்கர் என்ற பண்டிதருக்கு, அவருடைய முன்ஜென்ம வினையால் தீடிரென்று, ஒரு ஆவி, அவர் உடலுக்குள் நுழைந்து ஸ்வாமிகளிடம் "வாசுதேவா உனக்கு மான்காவில் ஆற்ற வேண்டிய புண்ணிய காரியங்கள், நிறைய உள்ளன! உடனே மான்காவ் கிராமத்திற்கு, திரும்புவாயாக! என்று ஆணை பிறப்பித்ததும், ஸ்ரீ வாசுதேவர், இக்கட்டளையை ஸ்ரீ தத்தரின் ஆணையாகவே ஏற்று தம் கிராமத்திற்கு திரும்பினார்.

ஸ்ரீ வாசுதேவருக்கு உத்திரவிட்ட ஸ்ரீ விஷ்ணுபந்த் ஆனவ்கர், தம்முடைய இச்சையால், இந்த ஆவியை கைவரப்பெற்றார். மிகச் சிறந்த பண்டிதரான ஆனவ்கர், இவ்வாறு சில சமயம், பிரம்ம பிசாசு பிடித்தவர் போல, சிலருக்கு அருள்வாக்கு சொல்வார். இதற்குக் காரணம், அவருடைய பூர்வ ஜென்மத்தில், அவர் தமது தோட்டத்தில் நுழைந்த ஒரு பசுவை விரட்ட, முயற்சிக்கும் போது, அவர் எறிந்த தேங்காய் ஒன்று, அப்பசுவின் உயிரைக் குடித்துவிட்டது. இறந்த அப்பசுவிற்கு, நிறைவேற்ற வேண்டிய காரியங்களையும் பிராயசித்தங்களை அவர் ஆற்றவில்லை. இத்தகவலை, அவர் யாரிடமும் தெரிவிக்கவும் இல்லை. அவருடைய விதியும் முடிந்தது. பசுவைக் கொன்றவருக்கு, எந்தப் புண்ணியம் செய்தாலும் அதற்கு பலன் இல்லை என்று சாஸ்திரங்கள் உரைக்கின்றன.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆகையால் அவர் இந்த ஜென்மத்தில், பிரம்ம பிசாசு பிடித்தவராக பிறந்தாக வேண்டும் என்று அவருக்கு விதிக்கப்பட்டுவிட்டது. ஸ்ரீ ஆனவ்கர், தமக்கு பிரம்ம பிசாசு பிடித்திருக்கும், மனித உருவமே போதுமானது, என்றும் இந்த ரூபத்திலும், தாம், பிறருக்கு நன்மைகளை மட்டுமே, செய்ய வேண்டும் என்றும் மன்றாடிக் கேட்டுக் கொண்டதால், அவருக்கு இந்த ஜென்மத்தில், இத்தகைய நிலை ஏற்பட்டது.

சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்த்தில் இருக்கும், மிகச்சிறந்த பண்டிதர், திடீரென்று ஆவி பிடித்து அலறுவதும், சிலரைத் தேடிச் சென்று, அவர்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங் களைக் கூறி, இனி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், என்ற உபதேசமும் அளித்தும் வந்ததால், அங்குள்ள அனைவரும் அவரை விநோதமாக உணர்ந்தனர். இதற்கு காரணமும் அவரே ஆவார். தம்மிடம் உள்ள இந்த சக்தியால், அவர் பல முறை ஸ்ரீ வாசுதேவருக்கு அருள்வாக்கு அளித்து, அவருடைய சந்தேகங்களைத் தீர்த்து வைத்து உதவினார்.

ஒருநாள் ஸ்ரீ வாசுதேவருக்கு, ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி யின் பீடமான நரசோபாவடிக்கு செல்ல உத்தரவு கிடைத்தது.

ஸ்ரீ நிருசிம்ம சரஸ்வதி ஸ்ரீ தத்தரின் இரண்டாவது அவதாரம் ஆவார். கலியுகத்தில் கிருஷ்ணா மற்றும் பஞ்ச கங்கா நதிகளின் சங்கமத்தில், பீமா மற்றும் அமரஜ நதிக்கரையில், ஸ்ரீ தத்தாத்ரேயர் அவதரித்து, தர்மத்தை நிலை நாட்டினார். அவர் தத்த அவதாரியாதலால், மக்கள் அவரை ஸ்ரீ நிருசிம்ம சரஸ்வதி என்று அழைப்பதில்லை, ஸ்ரீ தத்தராகவே அவரை வழிபடுகின்றனர். ஸ்ரீ தத்தர், இவ்விடத்தில் திருபாதுகைகளின் உருவத்தில், தமது வழிபாட்டை ஏற்றுக் கொள்கிறார். ஸ்ரீ தத்தரின், திருபாதுகைகளின் உருவம் செதுக்கப்பட்ட புனித கல்லானது, இங்கு (ஔதும்பர்) அத்தி மரத்தின் அடியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளுக்கு, தாம் நரசோபாவாடிக்கு செல்வதற்கு, தமது அன்னை உடன்பாடுவார்களா! மனைவி என்ன சொல்வாள்? இவ்வாறெல்லாம் சிந்தித்துவிட்டு, உறங்கி யவரின் கனவில், ஸ்ரீ தத்தர், "வாசுதேவா நரசோபாவாடிக்கு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செல்வதற்கு, உத்தரவு கிடைத்தபின், ஏன் தயங்குகிறாய்? உன் அன்னையும், மனைவியும் நிச்சயமாக சம்மதிப்பார்கள்! அங்கு செல்வதற்கு, உனக்கு துணையும் சன்மானமும் கிடைக்கும்! சீக்கிரம் புறப்படு! என்று உத்தரவிட்டதும் அவர் தம் அன்னை யிடம் அனுமதி வேண்டினார். அவருடைய மனைவியும் மறுப்பு தெரிவிக்கவில்லை.

அவருடைய மந்திரங்களால் பயனடைந்த ஒருவர், அதி காலையில் வாசுதேவரிடம், ஒருபெரிய தொகையை அளித்து, நரசோபாவாடிக்கு, அவரோடு தாமும் வருவதாக கூறினார். ஸ்ரீ வாசுதேவருக்கு கனவில் ஒலித்த, இரண்டு கூற்றுகளும் நிறைவேறின. அவர் ஆலய வாசலுக்கு செல்வதற்க்கு முன்னால், அவருக்கு மற்றொரு இறைவாக்கும் கிடைத்தது. அவர் ஆலயத்தில், ஸ்ரீ கோவிந்த சாஸ்திரிகளின் மூலம், **“தன்னை அறிதல்”** என்ற நிலை, ஏற்படும், என்ற அசரீரி வாக்கால், ஸ்ரீ வாசுதேவர் ஆனந்தமடைந்தார்.

ஸ்ரீ வாசுதேவர் நரசோபாவாடியில், தமது பாதங்களை பதித்தவுடன் உணர்வுகள் அற்ற ஒரு நிலையை அடைந்தார். ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதியின், ஆலயத்திற்கு செல்வதற்கு முன்னர், அங்குள்ள கிருஷ்ணா நதியில் நீராடி, பக்தியோடு ஆற்றின் கரையோரம் அமைந்த, அந்த ஆலயத்தின் வாசற் படியில், தம் கால்களை பதித்தார். அடுத்த கணம், அவருக்கு இனம்புரியாத ஒரு உணர்வு ஏற்பட்டது. படியேறி வந்து, ஸ்ரீ தத்தாத்ரேயரின் திருப்பாதுகைகளை கண்டார்.

உணர்ச்சிப் பெருக்கில் செய்வதறியாத நிலையில், கண்களில் கண்ணீர் பெருக, பரவச நிலையை அடைந்தார். அப்புனித ஸ்தலத்தில் தான், அவருடைய தந்தைக்கு, ஸ்ரீ தத்தர் காட்சி அளித்து அவருடைய புதல்வராக அவதரிப்பதாக வாக்களித்ததை. நாம் முன்னரே கண்டோம். ஸ்ரீ தத்தர், அவ் வாக்கினை நினைவூட்டும் விதமாக, ஸ்ரீ வாசுதேவரின் முன் காட்சி அளித்து, அவரை பரவச நிலையை அடையச் செய்தார்.

அதே நேரத்தில், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தமக்கு அமையும் குருவான ஸ்ரீ கோவிந்த ஸ்வாமியைத் தேடினார். இறைவாக்கு எவ்வாறு பொய்க்கும்? திடீரென்று,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ வாசுதேவரின் எதிரே ஸ்ரீ கோவிந்த சரஸ்வதி ஸ்வாமிகள் தோன்றினார். ஆச்சர்யமாக அவர், ஸ்ரீ வாசுதேவரை நோக்கி, "வரவேண்டும் வாசுதேவா, நீ எப்போது வந்தாய்? என்று கேட்டவுடன் ஸ்ரீ வாசுதேவர் அதிர்ச்சி அடைந்தார். இதுவரை தாம் கண்டிராத ஒருவர், தாம் காண வேண்டும் என்று விழைந்த குருவானவர், தன் முன்னர் தோன்றி, நீண்டநாள் பழகியதைப் போல, தம்மைக்குறித்து விசாரிப்பதைக் கண்டதும் இதுவும், ஸ்ரீ தத்தருடைய லீலையே என்று உணர்ந்தார்.

ஸ்ரீ கோவிந்த சாஸ்திரி, ஸ்ரீ வாசுதேவர் தங்குவதற்காக ஏற்பாட்டை, ப்ரம்மானந்த மடத்தைச் சேர்ந்தவரிடம் ஒப்படைத்தார்.

அடுத்த நாள் அதிகாலையில் எழுந்த ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள், புனித கிருஷ்ணா நதியில் நீராடி, அங்கிருந்த ஒரு சுத்தமான பாத்திரத்தில் நதி நீரை நிரப்பி, ஸ்ரீ தத்தரின் பாதுகைகளுக்கு, அபிஷேகம் செய்வதற்காக எடுத்துக் கொண்டு சென்றார். ஆனால் அங்கிருந்த பண்டிதர்கள், ஸ்ரீ ஸ்வாமிகளின் தோற்றத்தைக் கண்டதும், "இவர் ஒரு அந்தணராக இருக்கவே இயலாது! ஆகையால் இவரை பாதுகா அபிஷேகம் செய்ய அனுமதிக்க முடியாது! என்ற தீர்மானத்துடன், ஸ்ரீ வாசுதேவரை, அங்கிருந்து வெளியேறச் செய்தனர்.

மனமுடைந்த ஸ்ரீ வாசுதேவர், ஸ்ரீ தத்தரின் நாமம் சொல்லிக் கொண்டே, படியிறங்கி கீழே நதிகரைக்கு வந்துவிட்டார். தம் குழந்தையின் மனம் வேதனையுறுவதை, ஸ்ரீ தத்தர் எவ்வாறு தாங்குவார்? ஸ்ரீ தத்தரின் கட்டளையை ஏற்று, ஸ்ரீ கோவிந்த சாஸ்திரி அங்கு விரைந்து வந்தார். படித்துறையில் நின்று கொண்டிருந்த, ஸ்ரீ வாசுதேவரின் அருகில் வந்தார். அவர் "சாஸ்திரிஜி ஆலயத்தில் இருக்கும் பண்டிதர்கள், தங்களுக்கு அபிஷேகம் செய்ய அனுமதிக்கவில்லையா! என்னுடன் வாருங்கள்! என்று கூறி ஸ்ரீ வாசுதேவரை அழைத்துச் சென்று, அவர் கைகளில் புனித தண்டத்தை அளித்தார்.

சன்யாசிகள், எப்போதும் கைகளில் வைத்திருக்கும் புனித தண்டத்தை, ஸ்ரீ வாசுதேவரின் கைகளில் ஒப்படைத்து, அவரை அடுத்த நிலைக்கு தயாராகும்படி செய்தார். நம் ஸ்வமிகள்,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இதுவும், ஸ்ரீ தத்தருடைய லீலையே, என்று தீர்மானித்தார். ஸ்ரீ தத்தரின் ஆணைப்படி, தன் குருவால் அளிக்கப்பட்ட அப் புனித தண்டத்தை, கையில் ஏந்தியபடி, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், மற்றொரு கரத்தில் நீர் நிரம்பிய பாத்திரத்துடன், கம்பீரமாக படியேறி ஆலயத்திற்கு சென்றார். அங்கு அவரைக் கண்டதும், மற்ற பண்டிதர்கள். "இவர் ஒரு சாது, இவரிடம் நாம் தகாத முறையில் நடந்து கொள்ளலாகாது என்று தீர்மானித்து, ஸ்ரீ தத்தரின் திருப்பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்ய, அனைவரும் தங்கள் முழு சம்மதத்தையும் தெரிவித்தனர்.

ஸ்ரீ வாசுதேவர் பேரானந்த நிலையில், ஸ்ரீ தத்தருக்கு நன்றி கூறி, அவர் திருப்பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்தார். அக்காட்சியை அங்குள்ள அனைவரும் மெய்மறந்து, இரசித்து கொண்டிருந்தனர். நாமும் அங்குள்ளவர்களோடு இணைந்து, இத்திருக்காட்சியைக் கண்டு, பரவசமடைந்து அந்த தெய்வீக அனுபவத்தை பெறுவோமாக!

ஸ்ரீ வாசுதேவர், அந்த கணமே தன்னுடைய குருவானவர், ஸ்ரீ தத்தரால் அளிக்கப்பட்ட, ஸ்ரீ கோவிந்த சாஸ்திரியே ஆவார்! என்பதை முழுமையாக உணர்ந்தார்.

ஒரு நாள் இரவுப் பொழுதில், ஸ்ரீ வாசுதேவர் நதிக் கரையில், தமது பாதங்களைக் கழுவிக்கொண்டு அவ்வால யத்தை ப்ரக்ஷணமாக, சுற்றி வரத்துவங்கினார். அவர் அவ் வாறு சுற்றிவரும் வழியில், உயரமான ஒரு மனிதர், மிகப்பிரகாச மான கண்களையும், தேஜஸ்தான முகத்தையும் கொண்டிருந் தார். அவர் ஸ்ரீ வாசுதேவரை வழி மறித்து, "வாசுதேவா இரவுப்பொழுதில் பூஜை முடிந்தவுடன், ஆலயத்தை வலம் வரக்கூடாது என்பது உனக்குத்தெரியாதா? என்று கேட்டார். உடனே, ஸ்ரீ வாசுதேவர், அம்மனிதரிடம், தலைவணங்கி மன்னிப்பு கேட்டார். மடத்திற்கு திரும்பியதும், ஸ்ரீ வாசுதேவர் தாம் கண்ட அம்மனிதரைப்பற்றி, ஸ்ரீ கோவிந்த சாஸ்திரியிடம் கூறினார்! அதற்கு அவர் ஆனந்தமாக, ஸ்ரீ வாசுதேவரிடம், "நீங்கள் கண்ட அம்மனிதர் வேறுயாருமல்ல! சாட்சாத் ஸ்ரீ தத்த அவதாரி, ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி மகராஜ் அவர்களே ஆவார்! என்றார். இதைக் கேள்வியுற்ற, ஸ்ரீ வாசுதேவர் பேரானந்தம் அடைந்தார். என்பதை நாம் கூறவும் வேண்டுமா?

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ கோவிந்த சாஸ்திரி, ஸ்ரீ தத்த பாதுகைகளை அபிஷேகம் செய்து மட்டுமல்லாமல், அதற்கு பூஜை செய்யும் விதிமுறைகளையும் துவக்கி வைத்து, ஸ்ரீ வாசுதேவர் ஸ்வாமிகளின் மூலம் அம்முறைகள், அனைவரையும் சென்றடைய வழிவகுத்தார். **"பஞ்சயதன்"** என்று அழைக்கப்படும் பூஜை முறை இன்றளவும் மிகப்பெரிய குருமார்களால் செய்யப்பட்டு வருகின்றது.

"பஞ்சயதன்" என்பது, ஐந்து முக்கிய கடவுள்களை சதுர வடிவில் வைத்து, மேலிருந்து ஓரத்தில் ஈஸ்வரரும், இடது ஓரத்தில் துர்கா தேவியையும், கீழே வலதுப்பக்கத்தில் மகா விஷ்ணுவையும், இடப்பக்கத்தில் சூரிய தேவரையும், இவை நான்கு தெய்வங்களுக்கு நடுவில், விநாயகரையும் வைத்து வழிபடும் பூஜை முறையே, "பஞ்சயதன் பூஜை"என்று அழைக்கப்படும் என்பதாகும். இந்த பூஜை வழிபாட்டு முறை, ஸ்ரீ கோவிந்த சாஸ்திரிகளால், ஸ்ரீ தத்தரின் கட்டளையை ஏற்று பின்பற்றப்பட்டவிதி முறையாகும். ஸ்ரீ வாசுதேவர் தமது குருவின் ஆணையை ஏற்று, இவை அனைத்து விதிமுறைகளையும் முறையாகப் பின்பற்றினார்.

ஸ்ரீ குரு சரித்திரத்தை (சப்தாஹம்) அதாவது ஏழுநாட்களில், பாராயணம் செய்யப்படும், பூஜையையும் தொடர்ந்து செய்து வந்தார். அவருடன் அம்மடத்தில் வசித்த, அனைவரும் வயதில் மிகப்பெரியவர்கள். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தற்பொழுது தான் புதிதாக திருமணம் செய்துகொண்ட ஒரு இளைஞர், என்பதையும் தம் இல்லத்தையும், இல்லறவாழ்வையும் பற்றி சிறிதும் சிந்தனையின்றி, சுகங்களைத் துறந்து, அதிகாலை முதல், பொழுது சாயும் வேளை வரையிலும், அனைத்து வழிபாடுகளையும் செய்து கொண்டிருந்த மனவலிமையைப் பெற்றதற்காக, அவர்கள் ஸ்ரீ வாசுதேவரை வியந்து வாழ்த்தினார்கள்.

ஸ்ரீ வாசுதேவரின் இல்லத்திலிருந்து அழைப்பு வந்ததால், அவர் மான்காவிற்கு திரும்பினார். அதுவரை அரைகுறையாக கட்டப்பட்டு,இருந்த அவருடைய இல்லத்தை, அவரது சகோதரர், ஸ்ரீ ஹரி பட்டாஜியின் உதவியோடு, பழுதுபார்க்கப்பட்டு, புதியதாக்கப்பட்டது. சாஸ்திர விதிகளின் படி, இல்லத்தை புனர்நிர்மாணம் செய்தால், வாஸ்து சாஸ்திர ஹோமங்கள், முதலியவை நிகழ்த்தப்பட வேண்டும். ஆகையால் புதிய

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இல்லத்தில், அச்சடங்கு முறை நிகழ்த்த வேண்டி, அவருக்கு அழைப்புவிடுக்கப்பட்டது. ஸ்ரீ வாசுதேவரும், அதற்கான ஆயத்த பணிகளை செய்வதற்கு, பூஜைப் பொருட்களுடன் தயாராகி இருந்தார்.

ஆனால் விதி மிகவும் வலியது என்பதை அவ்வப்போது அவருக்கு உணர்த்திக் கொண்டே இருந்தது. அச்சடங்கு நிகழ்த்தப்பட வேண்டிய புனிதமான நேரத்தில், அவர் மனைவி வராதகாரணத்தால், அப்பூஜை நிறுத்தப்பட்டுவிட்டது அவர். ஒருவேளை, அப்பூஜை முடிவடைந்ததும், வழக்கம் போல, நம் கணவர், எங்கேயாவது சென்று விடுவாரோ, என்ற அச்சத்தில் அவர் மனைவி அச்சடங்கு நேரத்தில் அங்கு வரவில்லை! இல்லாள் இன்றி துவங்கப்படும், யாகம் பூர்த்தி அடைய இயலாது என தர்ம சாஸ்திரங்கள் உரைக்கின்றன! ஸ்ரீ வாசுதேவர், தாமும் யாகம் செய்யாமல் "இது தர்மசத்திரமாகவே இருக்கட்டும்! என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். இதுபோன்ற நிகழ்வுகள், ஸ்ரீ வாசுதேவரின் துறவற வாழ்க்கையை உறுதியாக வெளிப்படுத்தின.

ஸ்ரீ வாசுதேவர் தம் மனதின், சஞ்சலங்களையும், சந்தேகங்களையும், நீக்க, கடுமையான **சந்த்ராயன் விரதம்** இருக்க நினைத்து, அதற்கான ஏற்பாடுகளை துவங்கினார். சந்த்ராயன் விரதம் என்பது சாமான்ய மனிதர்களால் கடைபிடிக்க இயலாது. அமாவாசை தினத்தன்று துவங்கும் இவ்விரதம் அன்று முழுவதும், தண்ணீர் கூட அருந்தாமல், இரவும், பகலும் உறங்காமலும் விரதம் இருக்க வேண்டும். அதற்கு அடுத்த நாள், ஒரே ஒரு சிறிய எலுமிச்சைஅளவு, உணவை மட்டுமே உட்கொள்ள வேண்டும். தொடரும் நாட்களில், ஒவ்வொரு சிறிய உருண்டையாக, அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும்.

முழுநிலவு பிரகாசிக்கும் பௌர்ணமி தினத்தன்று 15 சிறிய எலுமிச்சை அளவு உருண்டை, உணவை மட்டுமே உட்கொள்ள வேண்டும். இதன்பின்னர், அந்த எண்ணிக்கையை ஒவ்வொன்றாக ஒவ்வொரு நாளும், குறைத்துக் கொண்டே வரவேண்டும். மீண்டும் அமாவாசை தினத்தன்று, முழுமை

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

யாக பட்டினி இருக்கவேண்டும். இந்த விரதமுறை, மிகவும் கடுமையானது. அதுமட்டுமின்றி, இவ்விரத நாட்களில் கூட, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தினமும் மூன்று முறை நீராடி, இரண்டு முறை (சந்த்யாவந்தனம்) காயத்ரி மந்திர உச்சாடனம் செய்து, மற்ற பாராயணங்களையும், பூஜைகளையும், ஒரு குறையின்றி முழுமையாக செய்து வந்தார்.

அவர் தன்னுடைய குடும்பத்தினரிடம், தாம் உண்ணா விரதம் இருக்கும் வேளையில், தனது நினைவை இழக்க நேர்ந்தாலும், அருந்துவதற்கு நீர் கூட எவரும் அளிக்கக்கூடாது! என்று கட்டளையிட்டார். ஒரு வேளை, தாம் மரணம் அடைய நேர்ந்தாலும்கூட, இந்த விரத முறையை நிறைவேற்ற வேண்டும்! என்று கூறிவிட்டார்! ஸ்ரீ ஸ்வாமிகள், உடல் தளர்ந்துவிட்டார். அவரால் நடந்து செல்லக்கூட இயலவில்லை. அவருடைய இக்கடுமையான விரதத்தை கண்டு, அடியவர்கள் அனைவரும், இவரே நம்மை காக்க வந்த ஸ்ரீ தத்தர்! என்று நமஸ்கரித்தனர். ஸ்ரீ தத்தரின் பிறந்த நாள் வைபவ பூஜையைக் காண, தன் அன்னையாருடன் நரசோபாவாடிக்கு சென்று தரிசனம் செய்தார். இம்முறை நரசோபா வாடியில் நான்கு மாதங்கள் இருக்க நேர்ந்தது.

அன்று இரவு ஸ்ரீ வாசுதேவரின் கனவில், ஸ்ரீ தத்தர் தோன்றி மந்திர உபதேசம் செய்தார். நம் ஸ்வாமிகள் ஸ்ரீ தத்தரிடம், மந்திர உபதேசம் நேரடியாக பெற்றவர். இத்தகைய பெறும்பேறு எவருக்கு கிட்டும்! இறைவனால் உபதேசிக்கப்பட்ட அம்மந்திரத்தை, மனதில் நிறுத்திய ஸ்வாமிகள் ஒருநாள் தம் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் முன்னர், ஆச்சர்யமாக அவ்விடத்தில் ஸ்ரீ கோவிந்த சாஸ்திரி தோன்றினார். “என்ன வாசுதேவரே, மந்திர உபதேசம் கிடைத்ததா? என்றார். ஸ்ரீ வாசுதேவருக்கு, நிகழ்வது அனைத்தும் ஸ்ரீ தத்தாத்ரேயரின் லீலைகளாகவே தோன்றியது. மேலும் “நாளை காலை இம்மந்திரத்தை பின்பற்றும் முறைகளை விளக்குகிறேன்! என்று சொல்லிவிட்டு தமது அறைக்கு சென்றுவிட்டார்.

ஸ்ரீ வாசுதேவர் அடுத்த நாள், அவருடைய குருவின் அறிவுரையை ஏற்று, உபநிஷத்துக்களின் விளக்கங்களை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தெளிவாகக் கூறும் ஸ்ரீ சங்கராச்சார்யாவின் (பாஷ்யத்தை) விளக்கவுரையை, ஏட்டுச்சுவடிகளின் மூலம் கற்றார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், இக்காலகட்டத்தில் தாம், முற்றிலும் துறவற வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும், என்பது இறைவனின் சங்கல்பம் என்று நினைத்தார். ஆனால் அவருடன் கூட இருந்த **மௌனி ஸ்வாமி** இருக்கருத்தை ஏற்க வில்லை. மௌனிஸ்வாமி என்ற சாது, ஷோலாப்பூரைச் சேர்ந்தவர் இவர் குழந்தைப்பருவத்திலேயே வீட்டைத்துறந்து விட்டார். மௌனி ஸ்வாமி, காசி முதல் இராமேஸ்வரம் வரை, உள்ள எல்லா புனிதஸ்தலங்களுக்கும், பலமுறை கால்நடை யாகவே சென்று வந்திருக்கிறார். கடுமையான பூஜை விதி முறைகளை மேற்கொண்ட அவர், வேப்பமரத்தின் இலைகளை மட்டுமே நீரில் இட்டு, பல வருடங்கள் உணவாக உட் கொண்டு வந்தார். அவருக்கு 25 வயது ஆனவுடன், அவருடைய குருவான ஸ்ரீ ப்ரத்யும்னா சரஸ்வதி ஸ்வாமிகள், மௌன ஸ்வாமிகளுக்கு சந்யாசதீக்ஷை அளித்து, யோகபட்டா என்ற நாமத்தையும் சூட்டினார். பல வருடங்களாக மௌன விரதத்தை கடைபிடித்ததால், அவரை அனைவரும் மௌன ஸ்வாமி என்றே அழைத்தனர். மௌன ஸ்வாமியின் சிந்தனை முழுவதும், பிரம்மத்தை உணர்ந்த நிலையிலேயே இருந்தது. அதனால், அவருடைய மன நிலையும், நடவடிக்கைகளும் அவ்வப்போது குழந்தைத்தனமாக இருக்கும். அவர் ஞானிகள், யோகிகள், மற்றும் அனைவரின் அன்பையும், மதிப்பையும் பெற்றவர் ஆவார்.

ஸ்ரீ தத்தார்ரேயரே, இவர் சொல்லுக்கு சில சமயம் கட்டுப்பட்டிருக்கிறார். மௌன ஸ்வாமி, நரசோபாவாடியில் மகாசமாதி அடைந்தார். அவருக்கு ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் மீது, அளவுகடந்த அன்பும், மரியாதையும் உண்டு.

ஒருநாள் ஸ்ரீ வாசுதேவரை, நரசோபாவாடியைவிட்டு நீங்குவதற்கு, ஸ்ரீ தத்தர் உத்தரவிட்டார். ஸ்வாமிகள் மான்காவ் சென்று அங்கு 7 வருடங்கள் வசிக்க வேண்டும் என்ற ஆணையை ஸ்ரீ வாசுதேவர் ஏற்று, உடனடியாக நீங்கி, மான்காவ் புறப்பட ஆயத்தமானார். ஸ்ரீ வாசுதேவரைப்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பொறுத்தமட்டில் ஸ்ரீ தத்தரின் வாக்கு ஒன்றே, பிரம்மத்தின் ஆணைப்பத்திரமாகும். அவர் தம்முடன் மான்காவில், ஸ்ரீ தத்தர் உருவமாகவும் நிலைபெற வேண்டும் என்றும் விரும்பினார். அதற்காக, ஸ்ரீ தத்தரின் மூர்த்தி ஒன்றை, ப்ரதிஷ்டை செய்து ஸ்ரீ தத்த வழிபாட்டை பின்பற்றும் முறைகளை மான்காவ் மக்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் நினைத்தார்.

ஆனால் ஸ்ரீ ஸ்வாமிகள், தமக்கென்று ஒரு கோவணத்தை தவிர, வேறு எதையும் சேமித்து வைத்துக்கொள்ளாதவர். இதல் லாம் எவ்வாறு நடைமுறையில் சாத்தியமாகும் என்று நினைத்துக்கொண்டே, தம் பயணத்தை துவங்கினார். சந்யாசி கள், பொதுவாக சில நாட்களுக்கு மேல், ஒரே இடத்தில் தங்க இயலாது. அதற்கு காரணம், நீண்ட காலம் ஒரு இடத்தில் வசிக்கும் போது, அங்குள்ளவர்களின் தொடர்பால், பாச பந்தங்களில் சிக்கிவிடுவது வழக்கம்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், சந்யாசம் ஏற்றுக் கொள்வதற்கு முன்பே, அந்நிலையைப் பெற்றுவிட்டார். அவர் மான்காவ் வரும்வழியில், கோலாப்பூர் சென்று, ஸ்ரீ மஹாலட்சுமி தாயாரின், பீடத்தில் நமஸ்கரித்தார். கோலாப்பூரில் இருந்து காகல் என்ற நகரின் வழியாக, மான்காவ் கிராமத்தை வந்தடைய வேண்டும். அங்கு ஒரு அற்புதம் நடந்தது!

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், போன்ற மகான்கள் நினைத் ததை, ஸ்ரீ தத்தாத்ரேயர் உடனடியாக நிறைவேற்றுவார். காகல் நகரின் தெருவீதிகளில், ஸ்ரீ வாசுதேவர், ஸ்ரீ தத்தரின் திருவுருவை மனதில் நிறுத்தி, நடந்து சென்று கொண்டிருந்த போது அந்த அற்புதம் நிகழ்ந்தது. காகல் நகர கடைவீதியில், ஒரு சிற்பி, அற்புதமாக தெய்வங்களின் சிலையை, வடித்துக் கொண்டிருந் தான். நம் ஸ்வாமிகளுக்கு, ஸ்ரீ தத்தரின் சிலைபற்றிய நினைவு வந்தது. அடுத்த விநாடி என்ன ஆச்சர்யம்! அந்த சிற்பி, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை, நோக்கி நடந்து வந்தான். அவன் அவரிடம், “ஸ்வாமி, தாங்கள் நினைத்த ஸ்ரீ தத்தரின், சிலைக்கு தேவையான, அங்க அடையாளங்களை எனக்கு தெரிவியுங்கள்! நான், தமக்கு அதிசுந்தர ரூபமாக, ஸ்ரீ தத்தரின் மூர்த்தியை, உருவாக்கித் தருகிறேன்! தாம் விலையைப்பற்றி கவலை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொள்ள வேண்டியதில்லை! என்றான். அந்த சிற்பியின் வார்த்தைகளால், மிகவும் பரவசமடைந்த, ஸ்ரீ வாசுதேவர், அந்த இடத்திலேயே சில நாட்கள் தங்கி இருந்து, சிலைவடிக்க தேவையான அம்சங்களை, வடிவமைத்து கொடுத்தார். ஏழு நாட்களில், அற்புதமாக ஸ்ரீ தத்தாத்ரேயரின் திருவுருவச் சிலையை, அச்சிற்பி உருவாக்கினான். தத்ரூபமாக இறைவனே, நேரில் வந்து நிற்பதைப் போன்ற, அச்சிலையைக் கண்டு, அங்குள்ள அனைவரும் வியந்தனர். இது ஸ்ரீ வாசுதேவர் என்ற மகானுக்கு, தெய்வம் அளித்த, காணிக்கையாகவே அனைவரும் உணர்ந்தனர். அச்சிற்பிக்கு ஸ்ரீ வாசுதேவர் தம் கையில் இருந்த ஒரு ரூபாயை எடுத்து கொடுத்தார். அச்சிற்பி, நம் ஸ்வாமியை அதற்குமேல் எதுவும் கேட்காமல் சிலையை கொடுத்துவிட்டான். அங்குள்ள ஸ்ரீ தத்த பக்தர்கள் அனைவரும் சிலைவடிக்க தேவையான தொகையை வசூல் செய்து கொடுத்துவிட்டனர். ஸ்ரீ வாசுதேவரின் கனவை நினைவாக்கிய, ஸ்ரீ தத்தரின் திவ்ய ரூபம் ஏழு விரல்கடை அளவிற்கு உயரமானதும், சித்தரைப் போன்று அமர்ந்த நிலையில், இரண்டு கைகளில், ஒன்று வரமளிக்கும் கரமாகவும், மற்றொன்று காக்கும் அபயக்கரமாகவும், தெய்வீக காட்சி அளித்தது. அச்சிலையை விட்டு தம் கண்களை அகல மறுத்த ஸ்ரீ வாசுதேவர், ஸ்ரீ தத்தரின் திவ்ய ரூபத்தை தாம் நினைத்தவாறே வடித்துக்கொடுத்த, அந்த சிற்பிக்கும் நன்றி கூறி, அச்சிலையுடன் மான்காவ் புறப்பட்டார்.

ஸ்ரீ வாசுதேவர் மான்காவில் கிராமத்தில், தம் இல்லத்தை அடைந்ததும், இச்சிலையை எங்கு ப்ரதிஷ்டை செய்வது, என்ற சிந்தனை அவருக்கு உதித்தது. அவருடைய இல்லத்திற்கு அருகில், ஒரு ஓரத்தில், அமைந்த ஒரு நிலப்பகுதி அவரை மிகவும் கவர்ந்தது. அந்த இடம், ஸ்ரீ தத்தர் அமர்வதற்கு ஏற்ற இடம் என்று அவர் மனம் கூறியது.

ஆனால் அந்த இடத்தின் உரிமையாளரை எவ்வாறு கேட்பது? அவர் இதற்கு சம்மதிப்பாரா? மேலும், அவ்விடத்தை விலைகொடுத்து வாங்கும் அளவிற்கு, தம்மிடம் வசதியும் இல்லை! இவ்வாறெல்லாம் சிந்தித்த ஸ்ரீ வாசுதேவர், அச்சிலையை தன்வீட்டில் வைத்துவிட்டார், ஆனால் அவர் நினைத்த அற்புதம் நிகழ்ந்துவிட்டது!

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ வாசுதேவர் நினைத்த அந்த இடத்தின், உரிமையாள ரான அம்மையார் ஒரு விதவைப் பெண் ஆவார். அவருடைய கனவில் ஸ்ரீ தத்தர் தோன்றி, "அந்த நிலத்தை ஒரு பிராமணருக்கு தானமாக வழங்குவாயாக" என்று ஆணையிட்டார். மறுநாள் அந்த அம்மையார் ஸ்ரீ வாசுதேவரின் அன்னையாரிடம், இது குறித்து ஆலோசனை கேட்டார். ஸ்ரீ வாசுதேவரின் அன்னை யும் அவ்விடத்தை ஸ்ரீ தத்தரின் ஆலயத்திற்கு அளித்துவிடு" என்றார். அவர் தன் புதல்வனிடமும் அந்த ஸ்தலத்தில் ஸ்ரீ தத்தரை, ப்ரதிஷ்டை செய்வாயாக! என்று கூறியதும் ஸ்ரீ வாசுதேவர் தாம் நினைத்ததை, நினைத்தவாரே நடத்திக் கொண்டிருக்கும், ஸ்ரீ தத்தருக்கு நன்றி கூறினார். ஸ்ரீ தத்தரின் ஆலயம் அமைக்க நிலமும் கிடைத்துவிட்டது. ஸ்ரீ தத்தரின் சிலையும் கிடைத்துவிட்டது. வேறு என்ன வேண்டும்? இனி மேல் கட்டுமானப்பணி துவங்க வேண்டும் என்று, அதற்கு சுபமுகூர்த்த நாளை குறித்துவிட்டார். மான்காவ் கிராமமக்கள் அனைவரும் ஸ்ரீ வாசுதேவருக்கு தம்மால் இயன்ற கட்டுமானப் பொருட்களை அளித்து, இப்புனிதப்பணியில் தம்மையும் இணைத்துக் கொண்டனர். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் தம்முடைய கையாலேயே, செங்கலைச் சுமந்து பணியைத் துவங்கினார். அந்த ஆலயம் 7 நாட்களில், மிக அற்புதமாக நிறைவடைந்தது. ஆலயத்தின் முகப்புவாசல், ஸ்ரீ வாசுதேவரின் கணிப்பிற்கு ஏற்ப, கிழக்கு முகமாக அமைந்தது. முன்று நாட்களில், ஒரு கிணறும் தோண்டப்பட்டது. ஸ்ரீ வாசுதேவர், மான்காவ் கிராமவாசிகளோடு இணைந்து தாமும் இரவு, பகல் பாராது, அச்சிறிய அழகிய ஆலயத்தை நிறைவடையச் செய் தார். இன்றளவும் மான்காவ் கிராமத்தில் ஸ்ரீ வாசுதேவரால் கட்டப்பட்ட ஆலயக் கூடத்தை பாதுகாத்து, பராமரித்து வரு கின்றனர்! ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் இல்லத்தில் வைக்கப் பட்ட, ஸ்ரீ தத்தாத்ரேயரின் மூர்த்தியை கொண்டு வரச்செய்து, அதை ஆலயத்தில் 1883 ம் வருடம் வைகாசி மாதத்தில் 5வது நாளில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.

ஸ்ரீ வாசுதேவர், தம்முடன் ஸ்ரீ தத்தரும் வந்து தங்க வேண்டும் என்ற விருப்பத்தை, ஸ்ரீதத்தர் பூர்த்தி செய்து விட்டார் என்பதற்கு மான்காவ் மக்களே சாட்சியாகும். மான்காவ்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கிராமவாசிகளின், மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும், பாது காப்பிற்கும், அந்த ஆலயம் வழிவகுத்தது.

ஸ்ரீ தத்தரின் வருகையாலும், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் தெய்வீகத்தன்மையாலும், அந்த ஆலயத்தை சுற்றியுள்ள அனைத்து கிராமங்களில் இருந்தும், மக்கள் திரண்டு வந்து ஸ்ரீ தத்தரை தரிசித்து, ஸ்ரீ வாசுதேவரிடம் தங்கள் குறைகளை கூறி நிவர்த்தி செய்து கொண்டனர். ஒவ்வொரு சனிக்கிழமை யும் பல்லக்கு ஊர்வலம் நடத்தப்பட்டு, ஸ்ரீ தத்தரின் சிறிய உருவச்சிலை, அழகிய பல்லக்கின் மூலம், ஆலயத்தை மூன்று முறை வலம் வரும். அப்போது ஸ்ரீ தத்தரின் நாமஸ்மரணையும், பஜனைப்பாடல்களும், வாத்தியக்கருவிகளின் ஒலியோடு சேர்ந்து மனதிற்கு மிகவும் இனிமையான உணர்வைத் தோற்று வித்தது, பக்தர்கள் அன்புடன் அளித்த அனைத்தும், அவர் களுக்கே ப்ரஸாதமாக வழங்கப்பட்டது. ஸ்ரீ தத்தாத்ரேயரின் பிறந்த நாள் வைபவத்தை, அக்கம் பக்கத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் (10,000) பேர் இணைந்து, மிகச்சிறப்பாக கொண்டானர். அச்சமயத்திலும் மற்றும் பல்லக்கு ஊர்வலம் வரும் நேரங்களிலும் பேய், பிசாசு பிடித்தவர்களை கூட்டிக் கொண்டு வந்து, அங்கே அமரச் செய்வர். அவர்களில் பலரும் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் கருணையால், பிடித்திருந்த பிசாசு நீங்கி புத்துயிர் பெற்றனர். ஸ்ரீ வாசுதேவரின் ஆணையை, ஆவி மற்றும் மோகினிபிசாசுகளும் ஏற்றதால். அவர்கள் விரைவில் குணமடைந்தனர். மக்கள் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை, தம்மை காக்க வந்த ஸ்ரீ தத்தரே என்று நம்பிக்கையோடு, வணங்கி போற்றினர்.

ஆனால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தாம் அமைத்த ஆலயத்தை, நரசோபாவாடியில் அமைந்த, தத்தரின் ஆலயத் தின் ஒரு கிளையாகவே நினைத்தார். இங்கு உள்ள அனைத்து சக்திகளும், ஆற்றலும் நரசோபாவாடியில் இருந்து பெறப் பட்டவையே, என்ற கருத்தில் உறுதியாக இருந்தார். ஆகையால் ரொக்கமாக அளிக்கப்பட்ட நன்கொடையில் தமது ஆலயத் திற்கு ஒரு பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு, மீதி அனைத் தையும் நரசோபாவாடியில், ஸ்ரீ தத்தரின் ஆலயத்திற்கு, அனுப்பி வைத்துவிடுவார். அவ்வூர் மக்கள், தமக்களித்த ரொக்கத்தையும், அவர் ஆலயத்திற்கு தந்துவிட்டார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் ஆலயத்தில் நன்கொடையாக பெறப்பட்ட தொகையின் ஒரு பகுதியை மட்டும், ஆலயத்திற்கு வைத்துவிட்டு, மற்ற அனைத்தையும் நரசோபாவாடிக்கு அனுப்பும் செயலை மான்காவ் கிராமத்தினர் விரும்பவில்லை. ஒருமுறை அவர்கள், தத்த ஜெயந்தி விழா அன்று, இது குறித்து ஸ்ரீ ஸ்வாமிகளிடம் பேசி, இன்றே ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும் என்று நினைத்தனர். அதனால் ப்ரஸாதம் இலையில் இடப்பட்டு, உணவருந்தாமல் அப்படியே அனைவரும் அமர்ந்து கொண்டிருந்தனர். ஸ்ரீ ஸ்வாமிகள், எந்த பிரச்சினையாக இருந்தாலும், யாருடனும் வாக்கு வாதம் செய்யமாட்டார்.

மாறாக, தமது தத்தரிடம் சென்று வேண்டுவார். அன்றும், அவ்வாறே, ஸ்ரீ தத்தரிடம் சென்று "தேவா, இந்த இக்கட்டான சூழ்நிலையில், தக்க தீர்மானத்தை தாமே வழங்க வேண்டும்! என்று வேண்டினார். அவர் அவ்வாறு ப்ராத்தனை செய்து கொண்டிருக்கும்போதே, சாவந்த்வாடியைச் சேர்ந்த, அரசாங்க உயர் அதிகாரிகள், அங்கு வருகை தந்து, மான்காவ் மக்களிடம், அம்மக்களுடைய நலனுக்காக வேண்டியே இச்செயல் நிகழ்த்தப்படுவதால், இவற்றை குறை கூறி, நாம் இறைவனின் கோபத்திற்கு ஆளாக வேண்டாம், என்று எடுத்துக்கூறி, அம்மக்களை சமாதானமாக அனுப்பி வைத்துவிட்டனர். பூஜை அறையில், ப்ரார்த்தனை முடிந்து வெளியே வந்த ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அங்கு ஒருவரையும் காணாமல், நடந்த உண்மைகளை அறிந்து கொண்டு ஸ்ரீ தத்தரிடம் தமது நன்றியைத் தெரிவித்தார்.

ஸ்ரீ வாசுதேவர், ஆலயத்தில் மட்டுமே உறங்குவார். ஆலயத்தில் தங்குவதற்கு, அவருக்கு மட்டுமே அனுமதி இருந்தது. பக்தர்கள் அனைவருக்கும் ப்ரஸாதம் அளித்தவுடன், அவர்கள் அனைவரும் உண்டபின், தாம் ஆலயத்தின் ஒரு பகுதியில் தனியாக சமையல் செய்து, நைவேத்தியம் செய்துவிட்டு, அங்குள்ள எல்லா உயிரினங்களுக்கும் அளித்துவிட்டு உண்டார். அவர் அந்த ஆலயத்தின் குருக்கள் என்பதால், ஸ்ரீ தத்தருக்கு செய்யும் சேவையிலும், எந்த பங்கமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில், மிகுந்த கவனத்துடன் இருந்தார். சடங்குகளையும், பூஜைவிதி முறைகளையும், ஆசாரத்தையும் மிக தீவிரமாக

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கடைபிடித்தார். சிலசமயம் விரதங்களினால், தன் உடல் நிலை சீர்கேடு ஆனபோதும், ஸ்ரீ வாசுதேவர் ஆசார அனுஷ்டானங் களை கைவிடவில்லை. அந்த ஆலயத்தில் சில பசுக்களும், நிறைய நாய்களும், நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, வேளை தவறாமல், அவற்றிற்கும் உணவளிக்கப்பட்டது.

ஸ்ரீ தத்தருக்கு மிகவும் ப்ரியமான அத்திமரம் ஒன்று அங்கு தானாகவே வளர்ந்தது. அம்மரம் பெரியதானவுடன் அதன் கீழ் ஒரு மேடை அமைக்கப்பட்டு, ஸ்ரீ தத்தரின் பாதுகைகள் அங்கே ப்ரதிஷ்டை செய்யப்பட்டன.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் பல முறை, ஸ்ரீ தத்தரின் குரல் தமக்குள் ஒலித்ததைக் கேட்டு, அவருடைய உத்தரவின் படி அங்கு விதிமுறைகளை நிகழ்த்தினார். சில சமயங்களில், பக்தர் கள் ஸ்ரீ தத்தரின் உத்தரவிற்கு கீழ்படியாமல், உதாசீனம் செய்த தால் அதற்கான தண்டனையும், அவர்கள் அனுபவிக்க நேர்ந் தது. தண்டனை என்பதே நமக்கு அளிக்கப்படும் (பரீட்சை) சோதனைகள் ஆகும். ஆகவே அச்சோதனைகளில், தேர்ச்சி அடைந்தால் மட்டுமே, நம்முள் இருக்கும் தீய சிந்தனைகள், நீங்கி, நாம் பரித்தமாக்கப்படுவோம் என்ற கருத்தை, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் உறுதியாக ஏற்றுக்கொண்டதோடு, பிறரையும் அவ்வழியில் பின்பற்றச் செய்தார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அங்கு அனைவருக்கும் வழி காட்டியாகத் திகழ்ந்ததால், மக்கள் அவரை அன்புடன், புவா என்று அழைக்கத் தொடங்கினர். சூரிய உதயத்திற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்னால் எழுந்து, நீராடி யோகக்கலையை தன்னுடைய செய்து முடித்து, ப்ராத்தனைகளை செய்து, பின்னர் ஆலயத்திற்கு வந்து, அங்கு செய்ய வேண்டிய பூஜையை முறையுடன் செய்து, பின்னர் சாஸ்திர விதிமுறை களைப் பின்பற்றும் வீடுகளில் யாகசம் கேட்பார். ஆலயத்திற்கு தேவையான சாமான்களையும், தாமே தம் தோள்களில் சுமந்து வருவார்.

ஆலயத்திற்கு வந்தவுடன், அங்கு சமையல் செய்து, அக்னி தேவருக்கும், பசுக்களுக்கும், (அதிதி) விருந்தினருக்கும், காக்கை களுக்கும் அளித்தபிறகே தாம் உண்பார். அவர் தமது

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உணவாக, சிறிதளவு அரிசிச்சாதமும், பாசிப்பருப்பும், பச்சைபயிறும் மட்டுமே, சிறிய அளவிலேயே உண்டுவந்தார்.

மத்யான நேரத்தில், ஸ்ரீ வாசுதேவர் மாணவர்களுக்கு வேத பாடமும், இலக்கணமும், கவிதை புனையும் ஆற்றலையும் கற்பித்தார். அதன் பின்னர், வாழ்க்கையில் பல துன்பங்களை அடைந்தவர்கள், அத்தொல்லைகளில் இருந்து நீங்க வேண்டி, ஸ்ரீ ஸ்வாமிகளை தேடிவந்தனர். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை, தமது மந்திர சக்தியின் மூலமாகவும், பரிகாரங்கள் மூலமாகவும் ப்ராத்தனையின் மூலமாகவும் நிறைவேற்றி வைத்தார்.

ஸ்ரீ ஸ்வாமிகள், நமது வாழ்க்கையில் நடக்கும் எதிர்பாராத விபத்துகள், சோதனைகள், துன்பங்கள் இவை அனைத்திற்கும், நம்மை பிடித்திருக்கும் தீய ஆவிகளே காரணம் என்பதிலும், அவை முன்ஜென்ம வினையால் என்பதில் மிக உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

சாயங்கால வேளைகளில், பக்தி நெறியைக்குறித்து உரையாற்றினார். ஆதவன் அஸ்தமனமாகும் வேளையில், ஆரத்தி, மந்திரபுஷ்பாஞ்சலி போன்ற சடங்குகளை கடைப்பிடித்தார். இரவு படுக்கைக்குப் போகும் முன்னர், ஆன்மீகம் சார்ந்த சமஸ்கிருத நூல்களை படித்தார். உறங்கப்போகும் முன், தன் மனைவியிடத்தில் இரண்டு வார்த்தைகள் பேசுவார். அதற்கு கூட சில சமயங்களில் அவருக்கு அவகாசம் இருக்காது. ஸ்ரீ வாசுதேவர் தன் வாழ்க்கையை ஸ்ரீ தத்த சேவைக்காக சமர்ப்பணம் செய்தார்.

## ஸ்ரீ குரு சரித்திரம்:

*1888*இல் ஸ்ரீ தத்தாத்ரேயர் ஸ்வாமிகளிடம், ஸ்ரீ குரு சரித்திரத்தை சமஸ்கிருதத்தில் எழுதுமாறு பணித்தார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் ஆற்றிய இப்பணி சாமான்ய செயலன்று. ஸ்ரீ குரு சரித்திரத்தை சமஸ்கிருதத்தில் எழுத, அசாத்திய ஞானமும், தெய்வீக தன்மையும், கடும் முயற்சியும் தேவை என்பதால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளுக்கு மட்டுமே அச்செயல் சாத்தியமாகும். ஆகையால் ஸ்ரீ தத்தர், அந்த உத்தம காரியத்தை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவரிடம் ஒப்படைத்தார். ஆனால் நமது ஸ்வாமிகளின் அபார சமஸ்கிருத ஞானத்தாலும், ஸ்ரீ தத்தரின் தெய்வீக கருணையாலும், மிக கடினமான இந்தப் பணியை, இரண்டு வாரங்களில் முடித்துவிட்டார். என்ன அற்புதம்! ஸ்ரீ குரு சரித்திரத்தை நம்முடைய பாஷையில் நாம் படித்து, ஒரு வாரத்தில் பாராயணம் செய்வதே, மிகப்பெரிய சாதனையாகும். ஆனால் இரண்டு வாரங்களில் அதுவும் சமஸ்கிருத பாஷையில், ஸ்ரீ குரு சரித்திரத்தை எழுதி முடிக்க, ஒரு தத்த அவதாரியானதால் மட்டுமே சாத்தியானது என்று அனைவரும் ஒரு மனதாகக் கூறினர்.

இப்பணி நிகழ்ந்து முடிந்த போது, மற்றொரு அற்புதம் நடந்தது! ஸ்ரீ வாசுதேவரிடம் ஸ்ரீ தத்தர் கனவில் தோன்றி, இத்திவ்ய சரித்திரத்தில் 2000 செய்யுள்கள் உள்ளன என்றார். ஸ்ரீ வாசுதேவர் தாம் எழுதியவற்றை எண்ணிப்பார்த்தார். ஆனால் இரண்டாயிரத்திற்கும் குறைவாகவே இருந்தது. பின்னர் தான், அவர் நினைவிற்கு ஒரு கருத்து புலப்பட்டது.

சமஸ்கிருதத்தில், எந்த ஒரு ஸ்லோகத்தையும் எழுதுவதற்கு முன், சப்தசதி என்று சொல்லக்கூடிய துர்கை முதலிய தேவதைகளை துதி செய்யும், மந்திரங்களும் முதலில் இடம்பெற வேண்டும். ஸ்ரீ வாசுதேவர் அவற்றையும் கணக்கில் எடுத்து பார்க்கும்போது, மிகச்சரியாக 2000 செய்யுள்கள் வந்தன. ஸ்ரீ தத்தரின் இந்த அற்புதத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர். ஸ்ரீ ஸ்வாமிகள் தாம் எழுதிய முதல் நூலே, சமஸ்கிருத பாஷையில் எழுதிய ஸ்ரீ குருசரித்திரம் என்ற உலகமே வியந்து போற்றக்கூடிய நூலாகும்.

“புவா இரண்டே வாரங்களில் இப்பணி எவ்வாறு தங்களுக்கு சாத்தியமாயிற்று?” என்று அவருடைய பக்தர்கள், கேட்டதற்கு, ஸ்ரீ வாசுதேவர் கூறிய பதில் “இவற்றை நான் எழுதவில்லை! என் கண்களில் முன்னர் ஸ்ரீ தத்தர் தோன்றி ஒரு காட்சியை காண்பித்தார். அதை அப்படியே காகிதத்தில் வரைந்தேன், அவ்வளவுதான்! என்றார். “எப்போதுமே உண்மையான ஞானிகள், தாம் சாதித்த செயலுக்குரிய புகழையும், கௌரவத்தையும் தாமே எடுத்துக் கொள்ளமாட்டார்கள். அதற்கு நம் ஸ்வாமிகளும் ஒரு சான்றாகும்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒருமுறை ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், மத்யான ஆரத்தி எடுத்துக்கொண்டிருந்த போது, அவர் வாயிலிருந்து தீடிரென ஒரு மந்திரம் கவிதையாக வெளிப்பட்டது. அக்கவிதை என்ன வென்பதை முதலில் அறியாத அங்குள்ளவர்கள், பின்னர் அதுவே வேதாசாரத்தின் தத்துவமான, மகாவாகியம் என்று சொல்லப்படும் நான்கு கவிதைகளாகும். அவை நான்கும், ஒரு குரு தன்னுடைய சிஷ்யருக்கு, அவர் சந்யாச நிலையை பெற்றுக் கொள்ளும் போது, கூறும் நான்கு மகாவாக்கியங்களாகும். இவை ஸ்ரீ வாசுதேவரின் வாக்கில் வருவதற்கான காரணத்தை ஸ்ரீ தத்தரே அறிவார்.

**யோகாப்யாசம் :**

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் தினமும், முறையாக யோகப் பயிற்சிகளை, செய்யக்கூடியவர். ஆதிகுருவின் யோக சூத்திரத் தின் படி, நமது தேசத்தின் ஆதிகால அறிவியல், கணிதம், இயற்பியல் முதலிய அனைத்துமே இறைத்தன்மையோடு பிணைக்கப்பட்டிருந்தது.

முதன்முதலாக யோக சூத்திர விதிகளில், சரீர ஒழுக்கம் அது தொடர்பான நடவடிக்கைகள், முத்திரைகள், குணாதிசயங் கள், நாடியை சுத்தப்படுத்தும் முறைகள், மற்றும் பிராணயாமம் என்று சொல்லக்கூடிய, பிராணநாடியை கட்டுப்படுத்தி, நம்வசம் கொண்டுவருதல், இவை எல்லாவற்றின் மூலம் மனம் ஒரு நிலைப்படுவதும், அதனால் ஒரு யோகி பரவசநிலையை அடைதலும் பற்றிய முக்கிய கூறுகளாக தரப்பட்டுள்ளன. தன் மனம் ஒருநிலைப்படுவதால், அது தன்னை அறிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டு, அதன்மூலம் கவலைகள் அனைத்தையும் விட் டொழித்து, மெய் ஞானத்தை அடைய வழிவகுக்கும். பல வருடங் களாக ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், மான்காவில் அமைந்த ஒரு குகைப்பகுதியில், யோகாப்யாசம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார். பின்னர் ஸ்ரீ தத்தர், அந்தப்பயிற்சியை ஆலயத்திலேயே செய்து கொள்ளலாம் என்றார்.

யோக பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்ட, ஸ்ரீ வாசுதேவ மகராஜ் ஒரு முறை, அவருடைய விரத நியதிகளால் சில நரம்பு களால் சரீரத்தில் வலி ஏற்பட்டு, அதனால் மிகவும்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவஸ்தைக்குள்ளானார். அப்பொழுது ஸ்ரீ தத்தர், அவரிடம் அப்பகுதியில் வாழ்ந்த ஒரு யோகியான காவஷி, என்பவரிடம் செல்லுமாறு பணித்தார். ஆனால் வாசுதேவர் காவஷியை அணுகிய போது, அவர் மகராஜ் அவர்களுக்கு உதவ மறுத்து விட்டார். அதற்குக்காரணம், அவர் நம் வாசுதேவ ஸ்வாமிகள், ஸ்ரீ தத்தரின் அவதாரம் மற்றும் தெய்வீக ஆற்றலையுடையவர் என்பதை அறியவில்லை. மேலும் நமது பாரம்பரிய கலையான யோகக்கலையை, எவருக்கும் முழுமையாக பயிற்சி அளிக்கு முன்னர் அதற்கு அவர் தகுதி உடையவரா என்று சிந்தித்து பயிற்சி அளிக்கவேண்டும். அவ்வாறு இல்லையெனில், அதை கற்றுக்கொண்டவரும் கற்றுக்கொடுத்தவரும் பாதிக்கப்படு வார்கள். ஆரம்பகட்ட பயிற்சிகளை எல்லோரும் செய்ய இயலும்.

ஆனால் உயர்நிலைப்பயிற்சியை மேற்கொள்ளவதற்கான சரீர பலமும், ஆன்ம பலமும் மிக அவசியம். இத்தகைய காரணங்களால், அந்த அதிகாரி, ஸ்ரீ வாசுதேவருக்கு உதவ மறுத்து விட்டார். உயர்நிலைப்பயிற்சியை, தவறான சிந்தனையுள்ளவர்களிடம் சென்றுவிட்டால், அவர்களால் இச்சமூகம் பாதிக்கப்படும். ஸ்ரீ வாசுதேவர், இக்கருத்தை நன்கு உணர்ந்ததால், அவர் பணிவுடன், அந்த அதிகாரியை அணுகி, தம்மை ஸ்ரீ தத்தாத்ரேயரே இங்கு அனுப்பி வைத்ததாகக்கூறினர்.

ஆகையால் அவரிடம் இருந்து, அந்த கல்வியை பெறாமல், தாம் அவ்விடத்தை விட்டு செல்லப்போவதில்லை என்று கூறி விட்டு, அவர் வீட்டுவாயிலில் அமர்ந்துவிட்டார். இறுதியாக ஸ்ரீ தத்தரே அந்த யோகிக்கு காட்சி அளித்து, ஸ்ரீ வாசுதேவர் தம்முடைய அவதாரம் என்பதால், அவருக்கு உதவி செய்யவும் கட்டளையிட்டார்.

அதனால் அந்த யோகி, ஸ்ரீ வாசுதேவருக்கு அவருக்கு நேர்ந்த வலியின் காரணத்தையும், வலியை போக்கும் நிவராணத்தையும், எடுத்துரைக்கும் மிக முக்கியத்துவம் பெற்ற ஒரு புராதன ஓலைச்சுவடியை அன்புடன் அளித்தார். அந்த ஓலைச்சுவடியில் ஸ்ரீ கபீர் தாஸர் அவர்களுக்கும் ஸ்ரீ தர்மதாஸ் என்பருக்கும் இடையே நடந்த வலி நிவாரண சிகிச்சை மற்றும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வைத்திய முறைகள் குறித்த உரையாடல் வரையப்பட்டிருந்தது. அச்சுவடி, ஸ்ரீ வாசுதேவருக்கு தாம் மேற்கொண்ட ஆராய்ச்சிக்கு மிகவும் உபயோகமானதாக இருந்ததால், மிக்க மகிழ்ச்சி அடைந்தார். இந்த உதவியை தமக்குச் செய்வதற் காகவே, ஸ்ரீ தத்தர் தம்மை ஒரு நாடகம் ஆடி இங்கு அழைத்து வந்தார் என்பதை ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் புரிந்து கொண்டார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தன்னுடைய இடைவிடாத முயற்சியாலும், தெய்வீக தன்மையாலும், ஸ்ரீ தத்தரின் கருணையாலும் விரைவில் யோக சாஸ்திரத்தின் அரசரானார். அவருக்கு எல்லா சித்திகளும் கைவரப்பெற்றன அவர் தம் முன் எவர் வந்து நின்றலும், அவரைக்குறித்த நிகழ்வுகள் இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல, கடந்த ஜென்மத்தைக் குறித்தும், தெளிவாக உணரும் ஆற்றலைப்பெற்றவர் அவருடைய இத்தகைய அபார சக்திகளைக்கண்ட மக்கள், நாலாபுறங் களிலும் வெள்ளம் போல திரண்டு வந்து, தங்கள் கோரிக்கை களை நிறைவேற்றிக் கொண்டனர். ஒருவருட காலத்திற்குப் பிறகு, ஸ்ரீ தத்தரின் கட்டளையை ஏற்று, சில சக்திகளை ப்ரயோகம் செய்வதை தவிர்த்தார்.

நம் சமுகத்தில் சுயநலம் விடுத்து, அனைவருக்கும் நன்மை களை செய்ய வேண்டும் என்று நினைப்பவர் மிகவும் அரிது. அவ்வாறு நினைப்பவர்கள், நிச்சயம் மகான்களாகத்தான் இருக்க இயலும். அத்தகைய மகான்களைக் கூட துன்புறுத்தி, மகிழ்வதில் சிலருக்கு ஆனந்தமளித்தது. அத்தகைய குரூர குண முடைய சிலர், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் சகல சக்திகளையும், சித்திகளையும் அடைந்து, அதன்மூலம் மக்களிடத்தில் எதையும் எதிர்பார்க்காமல், அவர்களின் குறைகளை தீர்த்து வைப்பதைக் கண்டு அவர் மீது மிகவும் பொறாமை கொண்டார்.

அத்தகையவர்கள், ஸ்ரீ வாசுதேவருக்கு எதிராக தாமும் ஸ்ரீ தத்தரின் ஆலயங்களை கட்டினார்கள். ஆனால் அவர்களின் தவறான செயல்களால், விரைவிலேயே அந்த ஆலயங்களை மக்கள் முடிவிட்டனர். இதனால் தீவிரமான கோபம் கொண்டு, ஸ்ரீ வாசுதேவரின் சிகிச்சை முறை பலனளிக்காமல் இருப்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பதற்கு, (அவ்வூரில் சில தீய மந்திரவாதிகள்) பக்தர்களிடம் தீய சக்திகளை அனுப்பி, அவர்களை சோதனைக்குள்ளாக்கினார்.

ஸ்ரீ வாசுதேவர் பொறுமையாக, ஸ்ரீ தத்தரிடம் வேண்டி அத்தீயசக்திகளிடமிருந்து பக்தர்களை விடுவித்தார். இம்முறை அந்தப்பாவிகள், ஸ்ரீ வாசுதேவருக்கே துன்பத்தை விளைவிக்கும் செய்வினைகளை செய்து வைத்தார்கள். இத்தீய வினைகளின் விளைவுகள், மிகவும் விபரீதமாக இருந்தது. இந்த துர்ச்செயலால், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளுக்கு தீவிரமான வயிற்றுப் போக்கு ஏற்பட்டு, அவர் நிலை மிகவும் சீர் கேடானது. ஆனால் கருணைக்கடலான ஸ்ரீ வாசுதேவர், இதுவும் ஸ்ரீ தத்தரின் லீலையே என்று இத்துன்பத்தையும் மனதார ஏற்றுக் கொண்டார்.

அவருடைய அடியவர்கள் அவரிடம், "ஸ்வாமி இத்தீயச் செயலச் செய்த பாவிகளை, தங்களின் மந்திர சக்தியால் கட்டிப்போடுங்கள்! என்றனர். ஆனால் ஸ்ரீ வாசுதேவர், தாம் எந்த உயிருக்கும் தீங்கு செய்ய இயலாது என்று மறுத்துவிட்டார். அதுமட்டுமல்லாமல், அவரின் உடல் நிலையைக்கண்டு வருந்திய பக்தர்கள் "ஸ்வாமி தாங்கள் நினைத்தால், தங்களுக்கு செய்த இந்த தீயவினையை, அழித்துவிட முடியும்! மேலும் தாங்கள் ஸ்ரீ தத்தரின் அவதாரம், ஆதலால் தயைகூர்ந்து இத் தீவினையிலிருந்து வெளியே வாருங்கள்! உங்களை நம்பியே நாங்கள் அனைவரும் உள்ளோம்! என்று வேதனையோடு கூறினார்.

ஆனால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், "நான் இத்தீவினையை அழிக்கவோ, மாற்றவோ நேரிட்டால், இதை செய்தவர்கள் அழிந்துவிடுவார்கள்! ஆகையால் நான் இக்காரியத்தை செய்ய இயலாது! இத்துன்பத்தை நான் மனதார ஏற்றுக்கொள்கிறேன்! என்றார். அவ்வூரில் சில மாந்திரிக சக்திகளை பிரயோகித்து தீய வழியில் மக்களை துன்புறுத்திக்கொண்டிருந்தனர். அவர்களுடைய பிடியில் சிக்கி தவிக்கும் மக்களை, பாதுகாப்பு கவசம் போட்டு, ஸ்வாமிகள் காப்பாற்றிக் கொண்டு வந்தார். இதைக் கவனித்தவர்கள், ஆத்திரம் கொண்டு ஸ்வாமிகளுக்கே இத்தகைய துர்ச்செயலை செய்துவிட்டனர் மகராஜ்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தமக்கு கிடைத்த சாபத்தையும் வரமாக ஏற்றுக்கொண்டார். அன்றிலிருந்து ஸ்ரீ வாசுதேவர், தம் வாழ்நாள் முழுவதும் (மகா சமாதி அடையும் வரை) கடுமையான வயிற்றுவலியையும், வயிற்றுப்போக்கையும் அனுபவித்தார். அந்நிலையிலும் அவர் தம் கடமைகளையும், பூஜை விதிமுறைகளையும், ஒரு நாள் கூட தவறியதில்லை.

ஸ்ரீ வாசுதேவருக்கு தற்சமயம், ஸ்ரீ தத்தர் இல்லற வாழ்க்கையை பற்றி சிந்திக்கச்செய்தார். நீண்டகாலமாக இல்லாமல் இருந்த, அவருடைய இல்லறவாழ்க்கையை ஆரம்பிக்குமாறு, ஸ்ரீ தத்தர் உத்தரவிட்டார். அவருடைய உற்றார் உறவினர்கள், மனைவியின் வேண்டுகோளையும் மற்றும் ஸ்ரீ தத்தரின் கட்டளையையும் ஏற்று இல்லற வாழ்க்கையை துவங்கினார்.

விரைவில் அவர் மனைவி அன்னபூர்ணா, கருவுற்ற செய்தி கேட்டு அவருடைய அவர் குடும்பத்தினரும் மிகவும் மகிழ்ந்தனர். தமது திருமண வாழ்க்கையில் சுமார் ஒரு மாத காலமே இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட அவர், ஸ்ரீ தத்தரிடம் மன்றாடி, தமக்கு சந்யாச நிலையை தருமாறு வேண்டிக்கொண்டிருந்தார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், ஆலயத்தில் சமைக்கப்பட்ட ப்ரஸாதத்தை மட்டுமே உண்பார். அவர் மனைவி, ஸ்ரீமதி அன்னபூர்ணா, தன் இல்லத்திற்குச் சென்று, ஆற்ற வேண்டிய கடமைகள் அனைத்தையும் செய்து முடித்து, அன்னையாருக்கு உணவளித்துவிட்டு ஆலயத்திற்கு வருவது வழக்கம்.

ஒருநாள் இரவுநேரம், ஸ்ரீமதி அன்னபூர்ணா தன் கடமைகளை முடித்துவிட்டு, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிக்காக காத்திருந்தார். ஆனால் வெகுநேரம் வரை ஸ்வாமிகள், அறைக்கு வராததால், ஆலயத்திற்கு வந்தார். அங்கு ஸ்வாமிகள், ஏதோ ஒரு நூலை, ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். அவருடைய பணியை முடித்து விட்டு வரும் வரை, ஆலய வாசலில் அமர்ந்திருந்தார்.

பெண்கள் எவரும் ஆலயக்கருவறைக்குள்ளும், ஸ்வாமிகளின் அறைக்குள்ளும் பிரவேசிக்க அனுமதி கிடையாது. இந்த

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விதி முறைகள், அவருடைய மனைவிக்கும் பொருந்தும் என்ப தால், அந்த அம்மையார் தன் ஸ்வாமிகளின் அறைக்குள், பிரவேசிக்காமல், ஆலய வாயிலில் அமர்ந்திருந்தார்.

வெகுநேரம் கழித்து, ஸ்ரீ ஸ்வாமிகள் ஆலய வாசலுக்கு வந்து பார்த்தபோது, அங்கே அந்த அற்புதக்காட்சியைக் கண்டார், அவர் மனைவி, தன் கண்களை மூடி, த்யானிக்க துவங்கியவர், யோக நிஷ்டையில் ஆழ்ந்து, தன்னிலை மறந்து தியானத்தில் இருந்தார். அவர் மனம் பரவச நிலையை அடைந் திருந்தது. ஸ்வாமிகள் "அன்னபூர்ணா" என்று பலமுறை அழைத்தும் கவனிக்காமல் இருந்ததால், அவர் தன் மனைவியை தம்கைகளால் அசைத்துப்பார்த்தார். அப்பொழுது அவர் கண்களை திறக்கவில்லை. இறுதியாக அவர் மனைவி நிரந்தரமாக யோக நிஷ்டையில் ஆழ்ந்து விடுவாள் என்பதால், மந்திரங்களைப்பிரயோகித்து, அவரை எழுப்பினார்.

அப்போது கண்களை திறந்த அவருடைய மனைவி அவரிடம், "ஏன் என்னை எழுப்பினீர்கள்? நான் ஆனந்தமய மாக, யோக நிஷ்டையில் பரவச நிலையை அடைந்திருந்தேன்! என்றார். ஸ்ரீ மதி அன்னபூர்ணா அடைந்த பரவச நிலை மிக உயர்ந்த நிலையாகும். யோகக்கலையை முறையாக கற்றவர் களால் மட்டுமே சாத்தியமாகும். இதுவே ஸ்ரீ தத்தரின் கருணை யாகும். அதுவரை ஸ்ரீ மதி அன்னபூர்ணா, எந்த யோகக் கலையும் கற்கவில்லை. எந்தப்பயிற்சியும் மேற்கொள்ள வில்லை. எவ்வகை தியான நிலையைக்குறித்தும் அறியாதவர், இறைவனின் கருணை இருந்தால், எத்தகைய ஞானமும் இல்லாதவர் கூட பரவச நிலையை அடைய முடியும்! என்பதற்கு ஸ்ரீமதி அன்னபூர்ணாவே சாட்சியாகும்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் துணைவியார், கர்பம் தரித்தது முதல், இல்லத்து கடமைகளை சரிவர ஆற்ற இயலாத காரணத்தால் ஸ்ரீ வாசுதேவரின் அன்னையார், ஸ்ரீமதி அன்னபூர்ணாவின் மனதை காயப்படுத்தும் வகையில் கடுஞ் சொற்களை கூறினார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தன் வாரிசு உருவாகும் நிலையில், தன் மனைவி இவ்வாறு வேதனை யுறுவதைக் கண்டு, தனது ப்ரார்த்தனைகளை ஸ்ரீ த;ததரிடம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வைத்தார். ஒரு நாள் காலை ஆரத்தி நிறைவடைந்ததும், ஸ்ரீ தத்தர், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளிடம், "இன்று நாம் மான்காவ் விட்டு நீங்கும் வேளைவந்துவிட்டது! என்றார். நமது ஸ்வாமிகள் ஸ்ரீ தத்தரிடம், "தேவா தாம் கூறிய, ஏழு வருடங்கள் இன்னும் நிறைவடையவில்லையே" என்றார். ஸ்ரீ தத்தர் முன்னரே அவரிடம் ஏழுவருடங்கள் மான்காவில் வசிக்க உத்தரவிட்டிருந்தார் என்பதைக் கண்டோம்.

ஸ்ரீ தத்தர் "சந்த்ராயன் பஞ்சாங்கத்தின் படி இன்றோடு ஏழு வருடங்கள் பூர்த்தியாகின்றன. "என்னுடைய திருவுரு வத்தையும், உன் மனைவியையும் அழைத்துக்கொண்டு புறப் படு!" என்று உத்தரவிட்டார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் உடனடியாக புறப்படுவதற்கு ஆயத்தமானார். தன் அன்னையி டம் இது பற்றி தெரிவித்தபோது, அவர் முதலில் மறுத்தார். பின்னர் சம்மதித்தார்.

ஸ்வாமிகள் தன் மனைவியிடம் "நீ, அவள், என்னுடன் வருவதற்கு சம்மதமா! என்று கேட்டார். அவரும், உடனே தன் சம்மதத்தை தெரிவித்து, இரண்டு மாற்றுத்துணிகள் மட்டுமே, எடுத்துக்கொண்டு புறப்பட்டார் புறப்படுவதற்கு முன், தம் அன்னையார், நண்பர்கள், உறவினர்கள், மான்காவ் கிராம மக்கள், அனைவரிடமும் ஆலயத்தில் வழிபாடுகளை, முறை யாக பின்பற்றுமாறு வேண்டினார்.

அவர் மனைவியும் அவருடன் புறப்படுவதற்கு வீட்டு வாயிலில் வந்து நின்றபோது, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் அவரி டம் "அன்னபூர்ணா உனது சரீரத்தில் உள்ள தங்க ஆபரணங் கள்! மங்கல சூத்திரத்தை தவிர (திருமாங்கல்யம்) தவிர வேறு எதுவாயினும், அதை கழற்றி வைத்து விட்டு, என்னுடன் வரவும்! நாம் போகும் பாதைக்கு, தங்கமும், வைரமும் நமக்கு துணைவராது! என்றார்.

திருமதி அன்னபூர்ணாவும் காதுகளில் அணிந்துள்ள தோடுகள், கைவளையைகள், மூக்குத்தி, கொலுசு முதலிய அனைத்தையும், கழற்றி வைத்துவிட்டு புறப்பட்டார். காகல் நகரத்தில் சிற்பியால் செதுக்கப்பட்ட, ஸ்ரீ தத்தரின் சிலையை எடுத்துக் கொண்டு, ஒரு துணியில் சுற்றியபோது ஸ்ரீ வாசுதேவ

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்வாமிகள் கண்ணீர் மல்க "ஹே தத்த தேவா! இதுவரை உன் திருவுருவிற்கு செய்த வழிபாட்டு முறைகளை, நான் இனியும் செய்ய இயலாதே! என் செய்வேன், ப்ரபோ!" என்றார். உடனே அந்த திருவுருவத்திலிருந்து கணீரென்று ஒரு குரல் வெளிப் பட்டது.

"நீ, நீராடுவது போல, என்னையும் குளிர்ந்த நீரில் நீராட்டி, ஒரு கைப்பிடி விபூதியை, அபிஷேகம் செய்தாலே போது மானது! என்ற குரலால் மனமகிழ்ந்த ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், உடனே அங்கிருந்து புறப்பட்டார். அவர்கள் சாவந்த வாடியை நோக்கி சென்றனர். ஸ்ரீ ஸ்வாமிகள், தம்முடன் தினப்படி பூஜை செய்வதற்கான சிலையையும், விபூதி, குங்குமம், மட்டுமே வைத்திருந்தார்.

அவர் தம்மை வழியனுப்ப வந்த உறவினர்களிடம், தமக்கு இதைவிட மான்காவ் கிராமத்தில், சொந்தமாக வேறு எதுவுமே இல்லை என்றார். மேலும் தாம் திரும்பவும் தத்தரின் உத்தரவு டன் மான்காவ் வருவதாகவும் வாக்களித்துவிட்டு புறப் பட்டார். சாவந்தவாடியில் தமது நண்பரான நரோபந்த் அவர்களின் இல்லத்தில், திருமதி அன்னபூர்ணாவிற்கு உணவளித்தனர். ஆனால் நம் ஸ்வாமிகள், வீடுகளுக்குச் சென்று யாசகம் பெற்று, அரிசியையும், காய்கறிகளையும் வைத்து தாமே உணவு சமைத்து, நைவேத்யம் செய்துவிட்டு உண்டார். அவரது நண்பர், அவர்கள் செல்லும் வழிக்கு தேவைப்படும் சில முக்கிய பொருட்களையும், துணிமணி களையும் அளித்து நன்முறையில் அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

அவர்கள் இருவரும் நரசோபாவாடியை நோக்கி சென்ற னர். அங்கு ஸ்ரீ தத்தரின் பாதுகையை வழிபட்டு, தனது குருவான ஸ்ரீ கோவிந்த சாஸ்திரி மற்றும் ஸ்ரீ மௌன ஸ்வாமிகளையும் வணங்கினார். ஸ்ரீ கோவிந்த சாஸ்திரி அவர்கள் "நீங்கள் நரசோபாவாடியில் தங்க வேண்டும், என்பது ஸ்ரீ தத்தரின் தீர் மானம் ஆகும்." என்றார். அத்தம்பதிகள் அங்குள்ள தர்மசத்தி ரத்தில் தங்கினர். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் வழக்கம் போல, யாசகத்திற்கு சென்று பொருட்களை பெற்றுவந்து, தன்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மனைவியிடம் அளித்தார். அந்த உணவை சமைத்து அங்குள்ள மற்றவருக்கும் பகிர்ந்தளித்து, அவர்களும் உண்டனர்.

ஸ்ரீமதி அன்னபூர்ணா, தன் ஸ்வாமிகளுக்கு பணி செய்வதையே, தமது கடமையாக கொண்டிருந்தார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், இரவு நேரத்தில், எச்சமயத்தில் இல்லத்திற்கு வருவார் என்பது தெரியாது. சில சமயங்களில், ஆலயத்திலேயே இருந்து விடுவார். ஆகையால் தனது ஸ்வாமி, இல்லத்திற்கு வரும் சமயத்தை, எதிர்நோக்கி காத்திருந்து, அவருக்கு வேண்டிய பணிவிடைகளை செய்த பின்னரே உறங்கச்செல்வார்.

ஆகையால் தனது உடல் நிலையை கவனிக்க மறந்தார். மேலும் ஸ்ரீ வாசுதேவர், தாமே மனமுவந்து ஏற்றுக் கொண்ட சில செய்வினைக் கோளாறுகள் அவருடைய வைராக்கியத்தை மேலும் அசைக்க முயன்றன. அன்று பொழுது புலர்ந்ததும் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், வழக்கம் போல ஆற்றில் நீராடச் சென்றுவிட்டார். இச்சமயத்தில் ஸ்ரீமதி அன்னபூர்ணாவிற்கு பிரசவவலி எடுக்க ஆரம்பித்து விட்டது.

அக்கிராமத்தில் வசித்த பெண்கள் அனைவரும், ஸ்ரீமதி அன்னபூர்ணாவை தமது அன்னையாகவே கருதி வந்ததால், அவர்கள் அனைவருமே அவருக்கு உதவி செய்தனர். அப்பொழுதுதன் அந்தப் பரிதாபமான சம்பவம் அங்கு நடைபெற்றது!

ஆற்றில் நீராடச் சென்ற ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அங்கு நீராடிவிட்டு, விரைந்து வராமல் வழக்கத்திற்கு மாறாக, ஆற்றின் கரையிலேயே சிறிது நேரம் நின்று கொண்டிருந்தார். இச்சமயத்தில் அவரது மனைவிக்கு பிரசவ சமயத்தில் உதவிய, ஒரு பெண் ஆற்றங்கரைக்கு விரைந்து ஓடி வந்தார். அப்பெண் ஸ்வாமிகளிடம் “ஸ்வாமி, இச்செய்தியை தங்களிடம் கூறுவதற்காக தாம் என்னை மன்னிக்க வேண்டும்! “தங்களுக்கு பிறந்த ஆண் குழந்தை, இறந்தே பிறந்தது!” என்றாள். ஒருவருடைய வாழ்க்கையில், இதைக் காட்டிலும் வேதனையளிக்க கூடிய நிகழ்வு வேறு என்ன இருக்க முடியும்? என்றாள்.

இச்செய்தியை கேள்வியுற்ற ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் சிறிது நேரம் மௌனமாக நின்றார். பின்னர் விரைந்து சென்று

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நதியில் இறங்கி "ஜெய் குருதேவ தத்தா" என்று உரக்கக்கூறி தன்வாரிசு இறந்துவிட்டதால், மூன்று முறை தலை மூழ்கி எழுந்தார், இதுவும் ஸ்ரீ தத்தரின் லீலையே என்று அனை வரிடமும் உரைத்துவிட்டு, அன்று யாசகம் பெறாமல் பட்டினி யாகவே இருந்தார்.

ஸ்வாமிகள் அனைவரிடமும், "நம் மனோவலிமையை உடைத்துப் பார்க்க, இறைவன் எத்தனை சோதனைகளை வைத்தாலும், நாம் சிறிதும் தளரக்கூடாது! அனைவருக்கும் இந்த வைராக்கிய நிலை வரவேண்டும்!" என்று போதித்தார். அவர் தமது ஆசானின் கட்டாயத்தால் திருமணம் செய்து கொண்டார். உறவினர்களின் கட்டாயத்தால் தந்தையாகும் நிலைக்கு ஆளானார். ஆனால், நடந்த நிகழ்வுகள் அனைத்துமே ஸ்ரீ தத்தருடைய லீலைகளே ஆகும், இனி நடப்பவையும் ஸ்ரீ தத்தரே தீர்மானிக்கட்டும்!" என்று தன்னிலையில் சிறிதும் மனம் தளராமல், பணியை செய்து கொண்டிருந்தார்.

இந்த அதிர்ச்சியைத் தொடர்ந்து இரண்டே நாட்களில் அவரது தர்மபத்னி அன்னபூர்ணாவும், இறைவனடி சேர்ந்து விட்டார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் தன் மனைவியின் உடலை தகனம் செய்வதற்கு ஏற்பாடு செய்தார். அப்பொழுது, தாம் சன்யாசத்தை ஏற்றுக்கொள்ள ஸ்ரீ தத்தர் ஏற்படுத்திய நிகழ்வே இது என்று சிறிதும் சலனமின்றி அனைவரிடமும் கூறினார்.

எவருக்கு சந்யாசம் நெருங்குகிறதோ, எவரிடம் இறைவன் நிரந்தரமாக வாசம் செய்ய விருபுகிறாரோ, அவர் அறியா மலேயே அவருடைய உறவுகள், தாமாகவே அவரை விட்டு விலகும். எவ்வாறு வெள்ளரிப்பழம் கொடியில், பழுத்து முற்றியவுடன், அதைத் தாங்கியுள்ள கொடி தாமாகவே (அப் பழத்தின் உறவைத்) துண்டித்துக் கொள்ளுமோ, அதைப் போலவே ஸ்ரீ வாசுதேவரின் இல்லற வாழ்க்கையும் அமைந் திருந்தது. ஆனால் அவர் நடப்பது அனைத்தும், தமது குருவும், தெய்வமுமான ஸ்ரீ தத்தாத்ரேயருடைய சங்கல்பமே ஆகும். ஆகையால் தமக்கு எச்சோதனை ஏற்பட்டாலும், அதை எதிர்நோக்கும் தைரியத்தை தமக்கு ஸ்ரீ தத்தர் வழங்குவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# அத்தியாயம் – 3

ஸ்ரீ தத்தரின் ஆலயத்தை தூய்மையாக வைத்துக் கொள் வதற்காக, கிராமவாசிகள் அனைவருடனும் ஒத்துழைத்து பணி யாற்றினார். ஒரு நாள் பூஜை முடிந்தபிறகு, ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு, ஆலயத்தில் அசரீரியாக ஒரு குரல் கேட்டது. ஸ்ரீ தத்தர் ஸ்வாமிகளிடம், "அந்த நூலை தூர எறிந்துவிடு! என்பதை கேட்டவுடன், ஸ்வாமிகள் விரைந்து, ஸ்ரீ தத்தரின் திருவுருவச் சிலையில் இடப்பட்ட, மாலைகளை சோதித்துப்பார்த்தார். அப்பூமாலையில், கயிற்றோடு சேர்த்து, ஒரு மந்திரிக்கப்பட்ட கயிறும் கட்டப்பட்டிருந்தது.

அவற்றை களைந்து தூர எறிந்தார். அக் கயிற்றை தூற எரிந்தவுடன் அது உடனடியாக பற்றிக் கொண்டு எரிந்து சாம்பலானது. உடனடியாக அந்த திருவுருவத்தை புனித மாக்கும், மந்திர உச்சாடனங்கள் செய்து அபிஷேகம் செய்தார்.

முதன்முதலாக குரு பூர்ணிமா தினத்தில், மான்காவ் ஆலயத்தில், ப்ரசாதம் உண்பதற்காக, ஏராளமானோர் குழுமி யிருந்தனர். அதே நேரத்தில், மேகங்கள் இடி முழங்க, வலுவான மழை பெய்யத் துவங்கியது. அங்குள்ள கிராமவாசிகள், ஸ்ரீ ஸ்வாமிகளிடம் மழையைத்தடுத்து நிறுத்துமாறு வேண்டி னார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் சிரித்துக்கொண்டே, "இன்று வருணதேவர், ப்ரசாதம் உண்ண வந்துள்ளார்! ஆகையால் அனைவரும் ஒரு பெரிய பாத்திரத்தில், உணவை நிரப்பி, மழைக்கடவுளுக்கு சமர்ப்பித்து வேண்டுங்கள்! என்றார்.

அவர் கூறியவாறு, வருணதேவருக்கு உணவு படைக்கப் பட்டவுடன், என்ன அற்புதம்! திடீரென மழை நின்றது. ஒரு சிறு தூரல்கூட இல்லை. ஆனால் அவர்கள் இருந்த இடத்தைச்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சுற்றியுள்ள பகுதியில், கனத்த மழை பெய்தது. ஸ்ரீ ஸ்வாமிகள் பஞ்ச பூதங்களின் மேல் கட்டுப்பாட்டை உடையவர்.

நரோபந்த் உக்கிடவே என்ற அரசாங்க அதிகாரி சாவந்த் வாடியில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவருக்கு இறைவன் மீது நம்பிக்கை இல்லை.

மான்காவில் நடந்த இந்நிகழ்வுகளைக் கண்டு திரு. நரோ பந்த் அவர்களுக்கு நம்பிக்கை பிறந்தது. அவருக்கு மேலும் நம்பிக்கையை வரவழைக்க ஒரு அற்புதத்தையும் ஸ்ரீ தத்தர் அங்கு நிகழ்த்தினார். ஒவ்வொரு சனிக்கிழமையும், பல்லக்கு ஊர்வலத்தில், திரு. நரோபந்த் கலந்து கொண்டு ஊர்வலத்தை துவக்கிவைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அன்றைய தினம், சனிக்கிழமை ஆதலால், அனைவரும் பல்லக்கு ஊர் வலத்திற்கு ஆயத்தமானார்கள். நரோபந்த், அவர்களின் வருகைக்காக காத்துக்கொண்டிருந்தனர். ஸ்ரீ ஸ்வாமிகள், அவர்களிடம், திரு. நரோபந்த், இன்று பல்லக்கு ஊர்வலத்தில், கலந்து கொள்ள போவதில்லை என்று கூறினார். அதனால் மற்றவர்களை, பல்லக்கு ஊர்வலத்தை நடத்துமாறு கூறினார். அவர் கூறியவாறே திரு. நரோபந்த், அன்று வரவில்லை. மறுநாள் திரு. நரோபந்த், ஸ்ரீ ஸ்வாமிகளிடம், தாம் பல்லக்கு ஊர்வலத்தில், பங்கு கொள்ள இயலாதவாறு ஏதோ ஒரு தடை ஏற்பட்டதாகவும், அதனால் அவர் வீட்டைவிட்டு வெளியேற வில்லை என்றும் கூறினார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் நரோபந்த்திடம், சனிக்கிழமை நீங்கள் வரும் வழியின், இடையில் இருந்த வனத்தில், காட்டுப் புலி ஒன்று அனைவரையும் துன்புறுத்தியது, அப்புலியால் உங்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால், ஸ்ரீ தத்தர் உம்மை, மான்காவ் வரவழைக்கவில்லை! என்று கூறியவுடன், திரு. நரோபந்த் பெரும் வியப்பில் ஆழ்ந்தார். காரணம், ஸ்வாமி கள் கூறியது முற்றிலும் உண்மையே! ஸ்ரீ தத்தரின் மேல் தமக்கு முழுமையான பக்தியும், ஈடுபாடும் இல்லாதபோது, கருணை யின் திருவுருவாகி, ஸ்ரீ தத்தாத்ரேயர் தம்மைக்காத்து இரட்சித் ததை எண்ணி, திரு. நரோபந்த் அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இதேபோல் மற்றொரு சமயம், அவர் இந்தூருக்கு ஒரு வேலை நிமித்தம், செல்ல வேண்டியிருந்தது. அப்பொழுது, அவர் ஶ்ரீ தத்தரிடம் வணங்கி, உத்தரவு பெறாமல் சென்றதால், பலவித துயரங்களுக்கு ஆளாக நேர்ந்தது. திரு. நரோபந்த் மன்னிப்பு வேண்டியபின், திரும்பவும் மான்காவ் வந்தடைந் தார். நமது இல்லத்திலிருந்து நாம், எங்கு சென்றாலும், இறை வனை ப்ராத்தனை செய்து, சென்று வரும்வரை, வழியில் நம்மை காத்துஇரட்சிக்குமாறு, வேண்டும் பொழுது, நமது பயணம் வெற்றிகரமாக அமைகின்றது.

அன்று சனிக்கிழமையாதலால், பல்லக்கு ஊர்வலம் நடத்த ஏற்பாடுகள் தயாராகிக்கொண்டிருந்தன. இந்தூர் செல்ல இயலாத திரு. நரோபந்த், திரும்பவும் மான்காவ் ஆலயத்திற்கு வந்தவர், ஆச்சரியத்தில், செயலிழந்து வியந்து நின்றார். காரணம் அங்கு பல்லக்கு ஊர்வலத்தை துவக்கி வைக்க, திரு. நரோபந்த் சற்று நேரத்தில் வந்துவிடுவார் என்று ஶ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் கூறியதால், அனைவரும் திரு. நரோபந்த்திற்காக காத்துக்கொண்டிருந்னர். என்ன அற்புதம்! ஏதோ ஒரு ஊருக்கு செல்ல வேண்டிய திரு. நரோபந்த், அங்கு செல்ல இயலாமல் பாதி வழியில் திரும்ப மான்காவ் வந்ததை, ஶ்ரீ ஸ்வாமிகள் துல்லியமாக கணக்கிட்டு, கூறிய அற் புதத்தைக்கண்டு அனைவரும் வியந்தனர். திரு. நரோபந்த்திற்கு, ஶ்ரீ தத்தரின் மீது முழுமையாக நம்பிக்கை ஏற்பட்டது.

ஒருமுறை திரு. நரோபந்த் ஶ்ரீ தத்தருக்கு, நைவேத்யம் செய்வதற்காக, பால் அளிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவர் ஒரு பாத்திரம் நிறைய, அப்போதுதான் கறந்த பாலை எடுத்து வந்தார். ஆனால் ஆலயத்தில் கூட்டம் அதிகமானதால், அவரால் ஶ்ரீ தத்தரின் திருவுருவச்சிலைக்கு அருகில் செல்ல இயலவில்லை.

அவர் ஏமாற்றத்துடன், பால் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்துவிட்டார். ஶ்ரீதத்தருக்கு நைவேத்தி யம் செய்ய வேண்டிய வேளையில், தான் அந்த அற்புதம் நடந்தது! ஶ்ரீதத்தர், ஶ்ரீஸ்வாமிகளிடம், தமக்கு நைவேத்தியம் செய்வதற்காக, திரு. நரோபந்த் பால் கொண்டு வந்திருப்பதா கவும், அதையே நைவேத்யம் செய்யவும்! எனவும் கட்டளை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

யிட்டார் உடனடியாக, ஆலய வாசலில் இருந்த திரு. நரோபந்த் உள்ளே வரவழைக்கப்பட்டார். அவர் கொண்டு வந்திருந்த பாலை, ஸ்ரீஸ்வாமிகள் நைவேத்யம் செய்தார்.

மற்றொருமுறை திரு. நரோபந்த், ஸ்ரீதத்த ஸ்வாமிக்காக, ஒரு சிறிய சந்தனத்தால் ஆன கட்டிலைச் செய்து எடுத்து வந்தார். அச்சந்தனக் கட்டில், அழகிய வேலைப்பாடுகளுடன் மிகச்சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அக்கட்டிலைக் கண்ட பக்தர்கள், அனைவரும் மகிழ்ந்து, அதனுடைய விலையைப்பற்றி விசாரித்தனர். திரு. நரோபந்த் தான் இதுவரை அக்கணக்கை சரிப்பார்க்கவில்லை என்றும் அதனால் சரிப்பார்த்த பின்னரே கூற இயலும் என்றார். ஆனால் நம் வாசுதேவ ஸ்வாமிகள் உடனே, இக்கட்டில் செய்ய மிகச்சரியாக 25 ரூபாயும் 12 அணாக்களும் (அக்காலத்தில் நாணயத்தை அணா என்று அழைப்பது வழக்கம்).

செலவு செய்யப்பட்டிருப்பதாக கூறி, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். ஆனால் திரு. நரோபந்த், அக்கட்டிலின் செலவு கணக்கை சரிபார்த்த போது, ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள் கூறிய தொகையிலிருந்து, 8 அணாக்கள் குறைவாகவே இருந்தன. இது எவ்வாறு சாத்தியமாகும்? என்று மீண்டும் செலவுக் கணக்கை சரிபார்த்த போதுதான், தன்னுடைய நண்பரிடம் அக்கட்டிலின் மேல், விரிப்பு வஸ்த்திரத்தை, வாங்கி வருவதற்காக, ஒரு தொகையை அளித்திருந்தார். அத்தொகையே சரியாக 8 அணாக்கள், என்பதும் தெரிய வந்து மிகவும் வியந்தார்.

ஒரு சமயத்தில், நரசோபாவாடியில் ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளுக்கு எதிராக, சில பண்டிதர்கள் சேர்ந்து ஒரு சதித் திட்டம் தீட்டினார். ஸ்ரீ ஸ்வாமிகள், மான்காவ் கிராமத்தில் இருந்து, அடிக்கடி நரசோபாடிக்கு வந்து ஸ்ரீதத்தரின் பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார்.

இச்செயலை எவ்வாராவது தடுக்க வேண்டும் என்று நரசோபாவாடியில் உள்ள பண்டிதர்கள், யோசித்து ஒரு திட்டம் தீட்டினார். அதிகாலையிலேயே ஸ்ரீதத்தரின் பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்து, அலங்கரித்து, பூஜை செய்து முடித்து விட்டால், அதன் பிறகு ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளால் அபிஷேகம் செய்ய இயலாது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆகையால் இவ்வாறு அதிகாலைப் பொழுதில், பாதுகை களுக்கு பூஜை செய்து விடுவோம் என்ற தீர்மானத்துடன், மறுநாள் அதிகாலைப் பொழுதில் பண்டிதர்கள் ஆலயத்திற்குள் நுழைந்து, பூஜைக்கான ஏற்பாடுகளை செய்யத் துவங்கினர். அன்று ஸ்ரீவாசுதேவர் மான்காவ் கிராமத்திலிருந்து நரசோபா வாடி ஆலயத்திற்கு வருவார் என்பதை அனைவரும் அறிந்திருந்தனர்.

இதற்கிடையில் ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளின் தியானத்தில் ஸ்ரீதத்தர் தோன்றி, உடனே ஆலயத்திற்கு சென்று தம் பாதுகை களுக்கு அபிஷேகம் செய்யுமாறு ஆணைபிறப்பித்தார். இறைவனுடைய திட்டங்களும், செயல்பாடுகளும் மனிதர் களின் கற்பனைத் திறனுக்கும் அப்பாற்பட்டவை என்பதை பண்டிதர்கள் உணரவில்லை.

என்ன அற்புதம்! பூஜைக்கான ஏற்பாடுகளை துவங்கு வதற்கு முன்னரே, கைகளில் நதி நீர் ஏந்தி, அபிஷேகம் செய்வதற்காக ஸ்ரீஸ்வாமிகள் ஆலயத்திற்குள் நுழைந்து விட்டார். ஸ்ரீஸ்வாமிகளை அந்த சமயத்தில், கண்ட பண்டிதர் கள் மிகவும் அதிர்ச்சி அடைந்தனர். இது எவ்வாறு சாத்தியம்? நாம் இத்திட்டத்தைப் பற்றி ஒருவருக்கும் தெரிவிக்கவில்லையே! அவ்வாறு இருக்க ஸ்ரீவாசுதேவர், இந்த அதிகாலைப் பொழுதில் அபிஷேகம் செய்வதற்கு எவ்வாறு இவ்விடம் வந்தார்? என்று மனகுழப்பத்தில் ஆழ்ந்தனர்.

ஸ்ரீவாசுதேவர் ஆனந்தமாக, மிகுந்த பக்தியுடனும், பணிவுடனும் ஸ்ரீதத்தரின் பாதுகைகளுக்கு, முதன் முதலில் அபிஷேகம் செய்து விட்டார். அபிஷேகம் செய்த பிறகு ஸ்ரீவாசு தேவ ஸ்வாமிகளிடம், அப்பண்டிதர்கள் அவர் இத்தனை சீக்கிரம் ஆலயத்திற்கு வந்ததற்கான, காரணத்தை விசாரித்தனர். ஸ்ரீஸ்வாமிகள் பொறுமையுடன் அப்பண்டிதர்களிடம், ஸ்ரீதத்தரின் ஆணையை ஏற்று தாம் வந்ததாக கூறினார்.

அப்பொழுதுதான் தங்களுடைய தவறு யாது என்பதை அப்பண்டிதர்கள் புரிந்துக் கொண்டனர். அது மட்டு மல்லாமல், அவர்கள் ஸ்ரீவாசுதேவரிடம் உண்மையை எடுத் துரைத்து மன்னிப்பு வேண்டினர். ஸ்ரீவாசுதேவரோ இதுவும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீதத்தரின் லீலையே என்று கூறி சென்று விட்டார். அவரை அடித்தவர்க்கும் அவர் கருணை காட்டினார். அவரை பாராட்டினாலும், புகழ்ந்தாலும் எல்லாம் ஸ்ரீதத்தரின் செயல் என்று சொல்லி சென்று விடுவார்.

இறைவனிடம் தம்மை உண்மையாக அர்பணித்துக் கொண்டவர்கள், தம்முடன் வசிக்கும் மனிதர்கள் தம்மை குறித்து எதைக் கூறினாலும், தமக்கு எத்தீங்கு செய்தாலும், அதன் மூலம் சிறிதும் பாதிக்கப் பட மாட்டார்கள். இத்தகைய சமர்பணத்தையே ஸ்ரீதத்தாத்ரேயர் தன் பக்தர்களிடம் காண விரும்புகிறார்.

ஒருமுறை ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளும், அவருடைய குரு ஸ்ரீகோவிந்த ஸ்வாமிகளும், அவருடைய நண்பரான திரு. சிவராம அஷ்டேகரும், காலை கடனை கழிப்பதற்காக வயல் வெளியை நோக்கி சென்று கொண்டிருந்தனர். அதன் பின்னர் நதியில் நீராட, ஆலயத்திற்கு வருவதை வழக்கமாக கொண்டிருந்தனர்! செல்லும் வழியில், சில குழந்தைகள் அவர்களை மறித்தனர். அவர்கள், தாங்கள் ஸ்ரீதத்த பூஜை செய்ததாகவும், அதனால், ப்ரஸாதம் பெற்று உண்ணுமாறு வேண்டினர்.

ஸ்ரீஸ்வாமிகளும், அவருடைய குருவும் முதலில் மறுத்தாலும், பின்னர் இறைவனே குழந்தைகளின் ரூபத்தில் வந்ததாகத் தோன்றியதால், அவர்கள் இருவரும் அப்பிரஸாதத்தை பெற்று உண்டனர். இவர்களின் நண்பரான திரு. சிவராம் அந்த பிரஸாதத்தை ஏற்கவில்லை ஆனால் அவருக்கு சில நிமிடங்களில் கடுமையான ஜூரம் ஏற்பட்டு, செயலற்று போனார். அதே சமயத்தில், அவருடைய மனைவியின் கனவில் தோன்றிய ஸ்ரீதத்தர், அவளிடம் நடந்ததை எடுத்துரைத்ததால், அவர் மனைவி ஸ்ரீதத்தரிடம் மன்னிப்பு வேண்டிக் கொண்டார்.

என்ன அற்புதம்! அச்சமயத்தில் வேறு ஒரு இடத்தில் இருந்த அவர் மனைவி, இவ்வாறு வேண்டிக் கொண்டதும், ஸ்ரீ ஸ்வாமிகளுடன் இருந்த திரு. சிவராம் அவர்களுக்கு உடனடியாக உடல் நிலை தேறி, அவர் புத்துணர்ச்சி அடைந்தார். ப்ரஸாதம் அளிப்பதும், பெறுவதும் மிகவும் மகத்துவ

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மானது. அதை ஒருபோதும் அவமதிக்கக் கூடாது என்ற உண்மையை ஸ்ரீதத்தர் இந்நிகழ்வின் மூலம் தம் பக்தர்களுக்கு உணர்த்துகிறார்.

ஸ்ரீ தத்தர், ஸ்ரீஸ்வாமிகளிடம் எண்ணற்ற லீலைகள் புரிந்துள்ளார். அவை ஒவ்வொன்றும் மிகவும் மகத்துவம் வாய்ந்தவை! ஒரு முறை திரு. நரோபந்த் என்ற அதிகாரி, மும்பையிலிருந்து நல்ல மாம்பழங்களை, ஸ்ரீ தத்தருக்கு நைவேத்யம் செய்வதற்காக, வாங்கி வந்தார். தாம் விலை உயர்ந்த பழங்களை சமர்பிக்கிறோம், என்ற பெருமையுடன் அவர் இருந்தார். ஆனால் அங்கு நடந்த அற்புதத்தை, வார்த்தை களால் வர்ணிக்க இயலாது. ஸ்ரீவாசுதேவர் அப்பழங்களை ஸ்ரீதத்தரின் முன்னால் வைத்து நைவேத்யம் செய்தார். அப்போது ஸ்ரீதத்தர் ஸ்ரீவாசுதேவரிடம் "மிகவும் புளிப்பான மாம்பழங்களை ஏன் எனக்கு சமர்பிக்கிறாய்" ?! என்று வினவினார், இறைவன் மொழிந்ததை, ஸ்ரீவாசுதேவர் அவ்வாறே திரு. நரோபந்த்திடம் கூறினார்.

ஆனால் ஆனால் திரு.நரோபந்த் அக்கூற்றை நம்பவில்லை. அவர் ஸ்ரீஸ்வாமிகளிடம், "இது எவ்வாறு சாத்தியமாகும்? "இப்பழங்கள் மிகுந்த சுவை கொண்டவை!" என்றார். பின்னர் அவற்றை ருசி பார்த்த பின்னரே, அவருக்கு அப்பழங்கள் மிக புளிப்பானவை என்பதும், தாம் சந்தேகம் கொண்டதற்காகவும் தம்முடைய அகம்பாவத்தை வெளிகாட்டியதாலும், மன்னிப்பு வேண்டினார். ஸ்ரீவாசுதேவ சரஸ்வதி ஸ்வாமிகள் தாம் நிகழ்த்திய அனைத்து அற்புதங்களையும், ஸ்ரீதத்தாத்ரேயரால் மட்டுமே நிகழ்த்தப்பட்டதாக, உறுதியான தீர்மானம் கொண் டிருந்தார். பொதுவாக இறைவனின் திருவருளால் சிலர் அற்புதங்களை, நிகழ்த்தும் வல்லமை பெற்றவர்களாக இருப்பார்கள்.

ஆனால் அவர்கள் காலப்போக்கில் இறைவனையே மறந்து, அந்த அற்புதங்கள் யாவும் தம்மால் நிகழ்த்தப்பட்டவை என்று பறை சாற்றிக் கொள்வதும் உண்டு! ஸ்ரீ வாசு தேவானந்த் ஸ்வாமிகள், தாம் கற்ற ஞானத்தையும், தமக்கு கிடைத்த இறை அருளையும், சமூக நலனுக்காக மட்டுமே பயன் படுத்தி னார். தன்னுடைய ஞானத்தால் ஒரு போதும் அவர்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கர்வம் கொண்டதில்லை! எவரையும் மனம் புன்படும்படி ஒரு வார்த்தை கூட அவர் பேசியதில்லை! தமக்கு தீமை விளைவிக்க எண்ணியவருக்கும் நன்மையே செய்தார்! இத்தகைய உயர்ந்த பண்புகள் யாவும் சிறந்த மகான்களிடம் மட்டுமே அமைந் திருக்க இயலும்!

ஒரு முறை நரசோபாவாடியிலிருந்து, ஒரு பண்டிதர் மான்காவ் வந்தார். அவர் ஸ்ரீ வாசுதேவரிடம் அவர் ஏன் யோக கலையை பயிலவேண்டும்? என்றும் அதனால் என்ன பலன்? எற்படப் போகிறது என்றும் சாஸ்திரங்களை முறையாகக் கற்பது தான் சரியென்றும் வாதாடினார். ஸ்ரீவாசுதேவர் எவருடனும் விவாதிப்பதை விரும்பாதவர். அவர் அந்த பண்டி தரிடம், “தம்மிடம் விவாதிக்கும் அளவிற்கு, சாஸ்திர ஞானம் எனக்கு இல்லை,” என்று தன்னடக்கத்துடன் கூறிவிட்டார். அப்பண்டிதர் மிகவும் பெருமையோடு, அடுத்த ஊருக்கு சென்றார். அங்கு அவரை சந்திக்க, ஒரு பிரம்மச்சாரி (திருமணம் ஆகாதவர்) வந்திருந்தார்.

அவர் அப்பண்டிதரிடம், யோகக் கலையை பயில்வதால், ஏற்படும் நன்மைகளை, பட்டியல் போட்டு கூறினார். யோக கலையின் மகத்துவத்தை, சாஸ்திர விதிகளில், கூறியுள்ளதை மேற்கோள் காட்டி கூறியவுடன், அப்பண்டிதர் யோகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தார். அவர் உடனே மான்காவ் வந்து சேர்ந்தார். ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள் தியானத்தில் இருந்து எழுந்தவுடன், அவருடன் உரையாட விரும்புவதாக அப் பண்டிதர் விரும்பினார்.

அவர் ஸ்ரீவாசுதேவரிடம் தம்மிடம் வந்த பிரம்மச்சாரியை குறித்தும், அவர் கூறியவற்றையும் எடுத்துரைத்தார் மற்றும் அந்தப் பிரம்மசாரியாராக இருக்க இயலும்? என்று கேள்வியையும் கேட்டார். ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள், அந்த பிரம்மச்சாரி, வேறு யாருமல்ல, ஸ்ரீதத்தாத்ரேயரே ஆவார், என்றும் அவரின் அங்க அடையாளங்களையும் கூறினார். அப் பண்டிதர், இறைவனிடம் பூரண சரணாகதி அடையாததால், இறைவனின் ரூபத்தை அவரால் அறிந்து கொள்ள இயல வில்லை! என்பதை அவர் புரிந்து கொள்ளுமாறு உணர்த்தி

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

னார். மேலும் அகம்பாவம் காரணமாக, அப்பண்டிதர் பெரும் தவறிழைத்ததாகவும் கூறினார். தம் தவறை உணர்ந்த அப்பண்டிதர் மிகவும் வருந்தி மன்னிப்பு வேண்டினார்.

மான்காவ் கிராமத்தின், மேற்குப் பகுதியில் ஓடிக் கொண்டிருக்கும் அழகிய நதிக்கு நிர்மலா என்று பெயர். அப்பெயரை சூட்டியவரே ஸ்ரீவாசுதேவானந்த ஸ்வாமிகள் ஆவார். அவர் ஒரு முறை, பக்கத்து ஊருக்கு சென்று விட்டு, மான்காவ் வரும் வழியில் அந்நதிக்கரையோரம், நடந்து வந்து கொண்டிருந்தார். திடீரென்று ஒரு சலசலப்புடன், அந்நதியில் இருந்து, ஒரு மங்கை தோன்றினாள். அவர் ஸ்ரீவாசுதேவரிடம் தமக்கு, ஒரு பெயரை சூட்டுமாறு வேண்டினார். ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள் பளிங்கு போன்று நிர்மலமாக அதாவது பவித்ரமாக (புனிதம்) இருந்த காரணத்தால் அந்நதிக்கு "நிர்மலா" என்று பெயர் சூட்டினார்.

அந்நதி தேவதை மகிழ்ந்து, மீண்டும் நதிக்குள் சென்றதை, கிராமவாசிகள், வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். இக்காட்சியைப் பற்றி கேள்வியுற்று பெருவாரியான மக்கள் திரண்டு வந்தனர். நிர்மலா என்ற அந்நதி தேவதைக்கு பூஜை கள் செய்தவுடன், நம் ஸ்வாமிகளை மான்காவ் அழைத்துக் கொண்டு சென்றனர்.

ஒரு முறை திரு. சங்கர்பட்டாஜி என்பவர், ஏதோ ஒரு கோபத்தில், தம் வீட்டை விட்டு சென்று விட்டார். அவருடைய தாயாரும், மனைவியும் எங்கு தேடியும், அவரை குறித்து விவரம் எதுவுமே அறியமுடியவில்லை. ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளை நமஸ்கரித்து, தன் மகனை தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கு மாறு, அவருடைய அன்னை மன்றாடினாள். ஸ்ரீவாசுதேவர் "அரச மரத்தை சுற்றி உன் மருமகள், ஒரு லட்சம் தடவை பிரதக்ஷிணமாக வலம் வரவேண்டும் ! இவ்வாறு செய்தால், உன் மகன் நிச்சயமாக வீடு திரும்புவார்!" என்று வாக்குறுதி அளித்தார். ஸ்ரீஸ்வாமிகள் கூறியவாறு, திரு. சங்கர்பட் டாஜியின் மனைவி, அரச மரத்தை சுற்ற ஆரம்பித்தார். நம்பிக்கையுடன் சுற்ற ஆரம்பித்த, சில நாட்களிலேயே அவள் கணவன் வீடு திரும்பினான். அவர்கள் அனைவரும் ஸ்ரீவாசு தேவ ஸ்வாமிகளுக்கு தம் நன்றியை தெரிவித்தனர்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஜாதகபலன்கள் என்றுமே சத்தியமானவை. ஆனால் அவற்றை கணித்து, கூறும் சில ஜோதிடர்கள், பூரணமாக ஜோதிட கலையை பயிலாத காரணத்தாலும், பணத்திற்க்கு ஆசைப்பட்டு, மக்களை ஏமாற்றுவதாலும் மக்களுக்கு ஜோதிடர்களின் மேல் நம்பிக்கை குறைய ஆரம்பித்து விட்டது.

ஆனால் மிகச்சிறந்த நிபுணத்துவம் கொண்டவர்கள், இறைவனின் அருளை, கைவர பெற்றவர்களாகவே இருக்க இயலும். அப்போதுதான், அவர்களின் கணிப்பு பொய்க்காது. ஆன்மீகத்துடன் இணையாத துறை, எதுவாக இருந்தாலும் அது பூரணத்துவம் பெற இயலாது.

ஸ்ரீவாசுதேவர், ஜோதிட கலையிலும் கிரகங்களின் சுழற்சி மற்றும் இயக்கங்களை குறித்து, சகல ஞானத்தையும் பெற்று இருந்தார். அவர் தம்மை நாடி, குறையோடு வருபவர்க்கு, ஜாதக பலனை கூறியதோடு மட்டுமல்லாமல், அதன் குறைகளை நிவர்த்தி செய்ய, பரிகாரங்களையும் கூறி துன்பங்களிலிருந்து விடுபட செய்தார். அதற்காக எவரிடமிருந்தும், எதையுமே அவர் அன்பளிப்பாக பெற்றுக் கொண்டதில்லை.

மான்காவ் கிராமத்தின் பக்கத்து ஊரில், ஒரு அந்தண குடும்பம் வசித்து வந்தது. அவர்களது, குடும்பமே, ஒரு தீய ஆவியால் பீடிக்கப்பட்டு, செயல் இழந்து நின்றது. அவர்கள் ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளை, மான்காவிக்கு வருகைதந்து தமக்கு உதவுமாறு வேண்டினர். ஸ்ரீவாசுதேவர், “இது முன் ஜென்ம கர்ம வினை, இதை தீர்க்க தினமும் இறைவனுக்கு நைவேத்யம் செய்த பிறதே உணவு உட்கொள்ள வேண்டும்! தொடர்ந்து விஷ்ணு சஹஸ்ரநாமத்தை ஆயிரத்து இருநூறு முறை ஜெபிக்க வேண்டும்!” என்னும் பரிகாரம் கூறினார்.

ஸ்ரீஸ்வாமிகளின் உத்தரவின் படி நடந்ததால், அக்குடும்பத்தை பீடித்திருந்த அந்த தீய ஆவி, அவர்களை விட்டு விலகியதை அவர்கள் கண்கூடாக உணர்ந்தனர். ஆனால் அதன் பிறகு, அவர்கள் பக்தி நெறியை முழுவதும் மறந்து விட்டனர். இதனால் மீண்டும் அவர்களுக்கு துன்பம் ஏற்பட்டது. துன்பங்களும், துயரங்களும் நம்மை அணுகும்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நேரம் இறைவனை நினைக்கிறோம்! ஆனால் அத்துன்பங்கள் நம்மைவிட்டு நீங்கியவுடன் இறைவனை மறந்துவிடுகிறோம்! இதுவே மனிதர்களுடைய இயல்பாக ஆகிவிட்டது.

ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள், இன்றளவும், தம்மை தியானிப்பவர்க்கு ஓடோடி வந்து, உதவி செய்கிறார். நம் நாட்டில் மட்டுமல்ல, இவருடைய அற்புதங்கள் தொலைதூர தேசங்களிலும் நிறைய நடந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய மகான்கள் அவதரித்த, இப்புண்ணிய பூமியில் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே நமக்கு கிடைத்த அரிய வரமாகும்.

திரு. ஆதிமாராம்பந்த் என்பவர் ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளின் மீது மிகுந்த பொறாமை கொண்டு, அவருக்கு போட்டியாக தாமும் ஒரு ஆலயம் அமைத்து அங்கு ஸ்ரீதத்தரை பிரதிஷ்டை செய்தார். ஆனால் அவருடைய மருமகள் பிரசவத்தின் போது தீராத வேதனையை அனுபவித்தாள்! மருத்துவர்கள், தங்களால் இயன்ற சிகிச்சையை, அளிப்பதாகவும் கூறினர். அப்போது ஆதிமாராம்பந்த் அவர்கள், தாம் செய்த தவறே இதற்கு காரணம் என்று உணர்ந்து கொண்டார்.

அவர் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளிடம், மன்னிப்பு வேண்டி, அவரை அழைத்து வந்து பரிகாரம் செய்வதற்காக அவருடைய இல்லத்திற்கு சென்றார். ஸ்ரீ ஸ்வாமிகள் பாராபட்சமற்றவர்! அவர் எல்லோருக்கும் உதவி செய்வதைப்போல, ஆதிமாராமிற்கும் உதவ அவருடைய இல்லத்திற்கு சென்றார். ஆனால் அவர் செல்லும் வழியில் ஸ்ரீதத்தர், அவர் காட்சியில் தோன்றி, ஸ்ரீஸ்வாமிகள் உடனே வீடு திரும்ப வேண்டுமென்றும் அவர் அங்கு சென்று ஒன்றும் செய்ய இயலாது என்று உத்தரவிட்டார்.

இச்செய்தியை திரு. ஆதிமாராமிற்கு கூறியவுடன், ஸ்வாமிகளின் கட்டளையை ஏற்று தமது இல்லம் திரும்பினார். அவர் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த, திரு. ஆத்மாராம் தன் இல்லம் சென்ற போதுதான், தன் மருமகள் இறந்துவிட்டாள் என்ற செய்தி அவருக்கு கிடைத்தது. ஆதிமாராம் தமது ஆணவத்தை அழிப்பதற்காக அளிக்கப்பட்ட தண்டனையே என்று உணர்ந்து ஸ்ரீதத்தரிடம் மன்னிப்பு வேண்டினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு சமயம் ஸ்ரீதத்தரின் ஆலயத்தில், ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. ஸ்ரீதத்தரின் பூஜை முடிந்து, அவருக்கு நைவேத்யம் செய்வதற்காக, அனைவரும் வழங்கிய பாலை ஒரு பானையில் ஊற்றி, அதில் வாழைப்பழங்களையும் நறுக்கி, சர்க்கரையோடு கலந்து, ஸ்ரீஸ்வாமிகளிடம் அளித்தனர். ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளும் அப்பானையைப் பெற்றுக் கொண்டு, நைவேத்தியம் செய்யத்துவங்கினார். அதற்குள் ஸ்ரீதத்தரின் திருவுருவசிலையிலிருந்து, ஒரு குரல் கணீரென்று அவர் காதுகளில் ஒலித்தது. ஸ்ரீதத்தர் அவரிடம், "என்ன பண்டிதரே! அப்பானையை நன்றாகக் கவனித்தீரா? வாழைப் பழங்களுடன், தேங்காய் ஒட்டையும் சேர்த்து நான் எவ்வாறு உண்ண இயலும் என்றார். ஸ்ரீவாசுதேவர் அமைதியாக அப்பானையை, கிராமவாசிகளிடம் அளித்து, அதில் உள்ள தேங்காய் ஒட்டை நீக்கி விடச் சொன்னார்.

ஆனால் அப்பானைக்குள், தேடிய எவருக்கும், தேங்காய் ஒடு கிடைக்கவில்லை. ஸ்ரீஸ்வாமிகள், அப்பாலை வேறு பானைக்கு மாற்றச் செய்தார். அப்போது அப்பானைக்கு அடியில் ஒரு தேங்காய் ஓடு கண்டு அனைவரும் அதிசயித் தனர். ஸ்ரீ ஸ்வாமிகளின் பார்வையில் இருந்து, தவறு செய்த வர் எவரும் தப்பிக்க இயலாது என்பதை நன்கு உணர்ந்தனர்.

ஒரு சமயம் ஸ்ரீஸ்வாமிகளின் அன்னையார் மஹா சிவராத்ரியை முன்னிட்டு, "கோகர்ணம்" செல்ல விரும்பி னார். அவர் தம்முடைய மற்ற புதல்வர்களிடம், தம் இச்சையைக் கூறி, தம்முடன் துணைக்கு வருமாறு பணித்தார். ஆனால் ஒருவரும் அவர் சொல்லுக்கு செவி சாய்க்கவில்லை. இறுதி யாக அவர் ஸ்ரீஸ்வாமிகளிடம் சென்று தம் விருப்பத்தை தெரிவித்தார்.

"ஸ்வாமிகள் ஸ்ரீதத்தர் "கோகர்ணம்" செல்ல உத்தரவு அளித்த பின்னரே தாம் வர இயலும்!" என்று கூறிவிட்டார். இதனால் மனமுடைந்த அவர் அன்னையார், ஸ்ரீவாசுதேவரி டம் "அன்னையின் விருப்பத்தை நிறைவேற்றுவது ஒரு புதல்வனின் கடமை! ஆனால் நீ, அக்கடமையை செய்யத் தவறிவிட்டாய்! என்று கூறினார். ஸ்ரீஸ்வாமிகள், தன் மாதா

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இவ்வாறு மனம் வருந்துவதை விரும்பவில்லை. வேறு வழியின்றி அவரும் சம்மதித்தார். அவர்கள் முதலில் சாவந்த் வாடியை நோக்கிச் சென்றனர்.

ஆனால் ஸ்ரீதத்தர் உத்தரவு வழங்காததால், செல்லும் வழியில், அந்தி வேளையில், ஒரு விஷநாகம் ஸ்ரீஸ்வாமிகளின் பாதத்தில் தீண்டிவிட்டது. பொழுது சாயும் வேளையானதால், விஷக்கடி இருந்த இடத்தை சரியாக அடையாளம் காண இயலவில்லை. ஸ்ரீஸ்வாமிகளின் கால்கள் பெரிதாக வீங்கத் துவங்கின! இத்தகைய துன்பங்களை நாம் எதிர் கொள்வோம்! என்பதை நன்றாக அறிந்தவர். ஆயினும், தம் அன்னையின் மனம் புண்படக்கூடாது, என்ற ஒரே காரணத்தினால் அத்துன்பங்களை பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார்.

அவர்கள் சாவந்தவாடியில் உள்ள திரு. நரோபந்த்தின் ஸ்ரீதத்த ஆலயத்திற்கு சென்று வலியோடு ஓய்வு எடுத்தனர். ஸ்ரீஸ்வாமிகள் நடக்க இயலாமல், ஒற்றைக்காலில் நடந்தார். சில மணிநேரங்களில் கால்கள் இன்னும் பெரிதாகிவிடவே அவர் தொடர்ந்து தியானத்தில் அமர்ந்தார். தியானத்தில் இருந்த போது, குறைந்த வலி, மீண்டும் தியானம் கலைந்தவுடன் அதிகமானது.

திரு. நரோபந்த், அங்குள்ள மருத்துவர்களை அழைத்து வந்தார். ஆனால், அவர்கள் அளித்த மருந்தை தமது தம் சரீரத்தில், பூசிக் கொள்ள இயலாது, என்று பலமுறை கூறியும் அவர்கள் எல்லோரும் அவரை வற்புறுத்தி, அம்மருந்துகளை அவர் கால்களில் பூசிவிட்டனர். ஆனால் அம்மருந்துகள் பூசப்பட்டவு டன், அடுத்த கணம் ஸ்ரீஸ்வாமிகள் கடுமையான ஜூரத்தால் பாதிக்கப்பட்டார். நிலைமையை உணர்ந்த அவரது பக்தர்கள், அவர் கால்களில் அம்மருந்துகளை துடைத்து எடுத்துவிட்டனர்.

என்ன அற்புதம்! மருந்துகளை வெளியில் எடுத்த பின் வீக்கம் குறைய ஆரம்பித்தது! அவரின் அன்னையாருக்கு தாம் இழைத்த தவறுக்காக, தம் புதல்வனுக்கு நேர்ந்த துன்பத்தைக் கண்டவுடன் "நாம் மான்காவ் திரும்பிச் செல்வோம்" என்று கூறிவிட்டார். ஸ்ரீவாசுதேவரும் மகிழ்ச்சியோடு இதுவும் ஸ்ரீதத்தரின் லீலையே என்று சொல்லி, மானகாவ் வந்தடைந் தனர். அன்று இரவு ஸ்ரீதத்தர் அந்த அற்புதத்தை நிகழ்த்தினார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விஷநாகம் தம்மைத் தீண்டியது முதல், ஸ்ரீஸ்வாமிகள் தம்மை அத்துன்பத்திலிருந்து விடுவித்துக் கொள்ள, மருந்துகளையோ, மந்திர சக்திகளின் உதவியையோ நாடவில்லை அவர் ஸ்ரீதத்தரின் மேல் உறுதியான நம்பிக்கை கொண்டதால், ஸ்ரீதத்தரே தம்மை காப்பாற்றுவார் என்று கூறி வலியோடு உறங்கச் சென்றார்.

அன்று இரவு, ஸ்ரீ தத்தர், ஸ்ரீஸ்வாமிகள் உறங்கும் வேளையில், அவர் பாதத்தில் இருந்து விஷ நாகத்தின் கொடுக்கை பிடுங்கி எறிந்தார். ஸ்வாமிகளின் படுக்கையறையிலிருந்து ஒரு நாகம் வெளியேறியதை அனைவரும் கண்டனர். மறுநாள் காலையில் எழுந்த ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள், தம் கால்கள் பாரமின்றி மிகவும் இலேசாக இருப்பதையும், வலியும், வீக்கமும் முற்றிலும் நீக்கப்பட்டதையும் உணர்ந்தார். அவர் ஸ்ரீதத்தருடைய லீலையே இது, என்பதை அனைவருக்கும் உணர்த்தினார்! அவர் அமைதியாக, ஸ்ரீ தத்தருக்கு அதிகாலை பூஜைகளை துவங்குவதற்காக, ஒன்றுமே நடவாததைப் போல எழுந்து நீராடி ஆலயம் சென்றுவிட்டார்.

ஸ்ரீ வாசுதேவரின் ஸ்ரீதத்த ஆலயத்தில், மனிதர்களுடன் மிருகங்களும், ஆனந்தமாக, ஸ்ரீதத்தரை தரிசனம் செய்தன. நிறைய நாய்களும், மாடுகளும், அங்கு சுதந்திரமாக உலவின. அவற்றிற்கும், ஒவ்வொரு வேளையும், தவறாமல் ஸ்வாமிகள், உணவளித்து வந்தார். ஒரு எலி, ப்ரஸாதம் நைவேத்தியம் செய்து முடிந்தவுடன், அங்கு ஸ்வாமிகளால் வைக்கப்பட்ட, உணவை உட்கொண்டு சென்று விடும்.

வேறு எவராது அங்கு இருந்தால் அந்த எலி அங்கு வராது! ஸ்ரீஸ்வாமிகள் அதற்கும் சிறிது உணவை வைத்தபின், அன்புடன் வந்து உணவருந்தும். ஒரு பெரிய நாகம் அந்த ஆலயத்தின் வாசலில் இரண்டு மாதங்களாக தினமும் காவல் காத்து வருவதை அனைவரும் கவனித்து வியந்தனர். அந்நாகம் சுமார் பத்து அடி நீளமும் கொண்ட இராஜ நாகமாகும். அது ஆனந்தமாக ஆலய வாசலில் தலையை வைத்து இரவு முழுவதும் படுத்துக் கொண்டிருக்கும்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆனால் அந்நாகம் ஒருவரைக் கூட துன்புறுத்தவில்லை. மக்கள் பீதி அடைந்ததால், ஸ்ரீவாசுதேவர் அந்நாகத்தை சிறிதளவும் துன்புறுத்தாமல், பத்திரமாக எடுத்துச் சென்று மலையில் விட்டுவிடச் சொன்னார். அங்குள்ள கிரமவாசிகள் மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் பக்தர்கள், அனைவருக்கும், ஆச்சரியமூட்டிய விஷயம் என்னவென்றால், இத்தகைய நாகங்கள் உலவிவரும் இந்த ஆலையத்தில், சிறிதும் அச்சமின்றி, ஸ்வாமிகளால் எவ்வாறு அமைதியாக உறங்க முடிகிறது! என்பதுதான்.

ஒரு முறை ஒரு பெரிய நாகம், ஸ்ரீதத்தரின் தரிசனம் காண்பதற்காக, இரவு நேரத்தில் அந்த ஆலயத்திற்குள் நுழைந்தது. அப்பொழுது ஸ்ரீவாசுதேவ மகராஜ் அவர்களின் உத்தரவிற்கு கட்டப்பட்டு, அது தரிசனம் செய்து விட்டு திரும்ப ச் சென்று விட்டது. அன்று முதல் ஸ்ரீவாசுதேவ மகராஜ் அவர்களின் உத்தரவை ஏற்று, நாகங்கள் ஆலயத்திற்க்குள் நுழைந்தால் பக்தர்கள் கையில் விளக்குகளை ஏந்தியபடி அந்நாகங்களை மெதுவாக திசை திருப்பி, பாதுகாப்பாக வெளியேற்றினார்கள். அனைவரும் நாகங்களை துன்புறுத்துவதை கைவிட்டனர்.

இதே போன்று ஒரு முறை ஷீரடியில் நாகங்கள் கொல்லப் பட வேண்டுமா என்ற சர்ச்சை எழுந்த போது அமர்ந்த சத்குரு ஸ்ரீ சாய் பாபா, “இறைவனுடைய கட்டளையின்றி, அவை எவரையும் தீண்டாது! எனவும் நாகங்களின் ஆத்மாவிலும் இறைவன் உள்ளார்! என்றும் தனது பக்தர்களுக்கு அறிவுறுத்தினார். பொதுவாக மகான்களின் போதனைகள், மனிதர்கள் உட்பட எந்த ஜீவராசிகளையும், நாம் துன்புறுத்த கூடாது என்பதேயாகும். ஆகையால் தான் மகான்கள் எல்லா உயிர்களிலும் இறைவன் இருப்பதாக கூறுகின்றனர்.

ஸ்ரீ வாசுதேவ மகராஜ், ஸ்ரீதத்தரின் ப்ரஸாதமாக, யார் உணவளித்தாலும், அதில் நெய் இல்லாமல் இருந்தால் நைவேத்தியம் செய்ய மாட்டார்! ஏனெனில் இது ஸ்ரீதத்தரின் கட்டளை என்பது அவருக்கு நன்றாக தெரியும். ஆனால் ஒரு முறை, ஒருவர் நைவேத்தியம் செய்வதற்காக, தமது இல்லத்தில் தயாரித்த வந்த உணவில் அவருடைய அன்னையார் அவர் நெய்யிடவில்லை.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர் ப்ராஸாதத்தை மூடி வைத்துவிட்டார் முதலில் ஸ்ரீ வாசுதேவ மகராஜ் அவர்கள்அதை கவனிக்கவில்லை. ஆனால் என்ன அற்புதம் மகராஜ் அந்த உணவை நைவேத்தி யம் செய்வதற்காக தயாரானார். ஆனால் அடுத்த கணம், அவருடைய முதுகை, எவரோ பலமாக தட்டுவதை உணர்ந் தார்! யார் இவ்வளவு வேகமாக, அழுத்தமாக என்னை தீண்டியது? என்று திரும்பிப் பார்த்தார்.

அங்கே அவருக்கு பின்னால் ஒருவரும் இல்லை. ஸ்ரீஸ்வாமிகளை, அவ்வாறு தீண்டும் தைரியம், அங்கு எவருக்கும் இல்லை! ஸ்ரீவாசுதேவர் இது ஸ்ரீ தத்தரின் எச்சரிக் கையே! என்பதை நன்றாக உணர்ந்து கொண்டார். உடனே ஸ்ரீ தத்தரின் கோபத்திற்கு அஞ்சி, உரத்த குரலில் உடனே நெய்யை கொண்டு வர சொன்னார். நெய் வந்தவுடன் அதை ப்ராஸாதத்தில் கலந்த பின் நைவேத்தியம் செய்தார்.

ஒரு சமயம் ஒரு பக்தர், ஸ்ரீதத்தருக்கு ப்ரஸாதமாக ஒரு சூரணத்தை கொண்டு வந்தார். அது நைவேத்தியம் செய்யப் பட்டு, அங்குள்ள சில குழந்தைகளுக்கு, ப்ரஸாதமாக அளிக்கப் பட்டது. ஆனால் அதை உண்ட குழந்தைகள் உடனடியாக தங்களின் தொண்டையில், ஒரு அரிப்பு ஏற்பட்டு அனைவரும் தவித்தனர். இதை கண்ட அக்குழந்தைகளின் பெற்றோர் பயந்துவிட்டனர்.

ஆனால் கருணையே உருவான ஸ்ரீவாசுதேவ மகராஜ், பாத்திரத்தில் மீதமுள்ள அப்பிரஸாதம், அனைத்தையும் தனது வாயில் போட்டுக் கொண்டார். உடனே அவருடைய தொண்டை அரிக்க ஆரம்பித்து விட்டது சில மணி நேரங் களுக்கு அந்த அரிப்பை, அக்குழந்தைகளுக்கு பதிலாக தாமே விரும்பி ஏற்றுக்கொண்டார். இதுவே மகான்களின் உயர்ந்த பண்பாகும்.

ஒரு சமயம் கிரஹணம் ஏற்படும் தினத்தன்று ஸ்ரீவாசு தேவர் பிக்ஷை பெறுவதற்காகச் சென்றார். அதற்கு காரணம் அன்று கிரஹணம் தெரியாது என்று அவ்வூரின் சாஸ்திர வல்லுநர்கள் அனைவரும் கணக்கிட்டு கூறியிருந்தனர். அதனால் மக்களும் கிரஹணத்தை முன்னிட்டு செய்யும்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

காரியங்களை, செய்யாமல் வழக்கம் போல, தங்கள் பணிகளை தொடர்ந்தனர். ஆகையால் ஸ்ரீவாசுதேவரும், பிக்ஷை எடுப்பதற்காக, வீடுகளுக்கு சென்று கொண்டிருந்தார்.

ஆனால் அவரை ஸ்ரீதத்தர் வழிமறித்து, அசரீரியாக பிக்ஷை எடுப்பதை விட்டுவிட்டு, உடனே வீட்டிற்கு திரும்பிச் செல்! என்று உத்தரவிட்டார்! ஸ்ரீவாசுதேவருக்கு காரணம் என்ன வென்று புரியவில்லை! ஆனாலும், ஸ்ரீதத்தர் கூறியதை வேதவாக்காக ஏற்றுக்கொண்டு வீடு திரும்பினார். அப்போது ஸ்ரீதத்தர் ஸ்ரீவாசுதேவரிடம் "இன்று முழுவீச்சில் கிரஹணம் தோன்றும்! ஆதலால் உணவை ஏற்க வேண்டாம்! என்று அசரீரியாக உரைத்துவிட்டார்.

ஸ்ரீவாசுதேவர் பிக்ஷை பெறாமல் வீடு திரும்பியதை பார்த்து, அனைத்து அந்தணர்களும் காரணம் கேட்டனர். அவரும், ஸ்ரீதத்தர் தம்மிடம், கிரஹணம் முழுவீச்சில் தெரிய போவதாக கூறிவிட்டார்! என்றார்.

இதைக் கேட்ட அவ்வூர் மக்கள் பலர் அவரை, கேலி செய்தனர். "ஸ்ரீவாசுதேவர் நம் எல்லோரையும் முட்டாளாக்கு கிறார்! என்று கூறினர். ஆனால் என்ன அற்புதம்!!! அன்று மாலை அனைவரும் வியக்கும் வண்ணம் கிரஹணம் தோன்றி யது. அதைக்கண்ட அனைவரும் ஸ்ரீவாசுதேவ மகராஜ் அவர் களிடம் மன்னிப்பு வேண்டினர்.

ஒரு முறை ஸ்ரீவாசுதேவரின் ஆசானாக இருந்த திரு. நரோபந்த் என்பவர், ஸ்ரீவாசுதேவரிடம், தமது கால் மூட்டு களில் ஏற்பட்ட, தீர்க்க இயலாத கடுமையான வலியைக் குறித்துக் கூறினார். அதற்கு ஸ்ரீவாசுதேவ மகராஜ் உடனடியாக திரு. நரோபந்த் அவர்களை நோக்கி, "தாம் எப்போதாவது ஸ்ரீதத்தரின் திருவுருவச் சிலையை, கால் முட்டியால், இடித்திருக் கிறாரா! என்று கேட்டார்.

என்ன ஆச்சரியம்! திரு. நரோபந்த்தும் தெரியாமல் நடந்த அந்த உண்மையை, ஒப்புக்கொண்டார்! ஸ்ரீவாசுதேவ மகராஜ் அவரிடம், ஸ்ரீதத்தரின் திருவுருவ சிலைக்கு வழிபா செய்யும் போது, நெய்யால், ஸ்ரீதத்தரின் கால்களில் அபிஷேகம் செய்யுங்கள்!" என்று கூறினார். மகராஜ் அவர்கள் கூறிவாறு

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

திரு. நரோபந்த், ஸ்ரீதத்தரின் கால்களின் முட்டிப்பகுதியிலிருந்து, பாதங்கள் வரை நெய்யினால் அபிஷேகம் செய்தார்! என்ன அற்புதம்! அவருடைய கால் முட்டியின் வலி காணாமல் போய்விட்டது.

ஸ்ரீவாசுதேவ மகராஜ், ஸ்ரீதத்தாத்ரேயரின் அவதாரமாக திகழ்ந்தாலும், அவர் ஒரு போதும் தம்மை எவரிடமும் முன்னிறுத்திக் கொள்ளவில்லை. தாம் புரிந்த இத்தகைய அற்புதங்களால், அவர் பெருமை கொள்ளவில்லை. அந்த அற்புத ஆற்றல் ஸ்ரீதத்தருக்கே உள்ளது என்றார். ஆதலால், ஸ்ரீதத்தரே இந்த பாராட்டுக்குரியவர் என்பதை நன்கு உணர்ந்திருந்தார்.

ஸ்ரீவாசுதேவ் மகராஜ் எங்கு செல்ல நேர்ந்தாலும், தமது தினசரி வழிபாட்டு முறைகளை அனுசரிக்காமல் இருக்க மாட்டார். ஒரு முறை, பக்கத்து ஊருக்கு சென்று கொண்டிருக்கும் போது, சாயங்கால வேளை வந்தவுடன் "சந்த்யா வந்தனம்" என்ற சொல்லப்படும், சாயங்கால காயத்ரி ஜெபம் செய்வதற்காக, தாம் செல்லும் வழியில் ஓடிய நதியில் குளித்து, அந்நதிக் கரையில் தமது வழிபாட்டை, நிறைவு செய்த பின்னரே, பயணத்தை தொடர்ந்தார்.

வைதீக காரியங்களை நிறைவேற்ற, மான்காவ் மற்றும் அதைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும், தலைசிறந்த பண்டிதக் குடும்பத்தை சேர்ந்த, ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளையே, அழைப்பது வழக்கமாக இருந்தது. அவ்வாறு தொலை தூரத்தில் உள்ள கிராமத்திற்கு செல்ல வேண்டி இருந்தாலும் ,எவருடைய இல்லத்திலும் உணவு உட்கொள்ள மாட்டார்.

எவரிடமும் கோபித்ததும், கூக்குரலிட்டதும் இல்லை. தகாத செய்திகளை எவராவது கூறினால், அந்த இடத்திலிருந்து எழுந்து அமைதியாக சென்றுவிடுவார். தாம் பட்டினியாக கிடந்தபோதும், பிறர் குறைகளோடு வந்தால் அவர் மனம் பொறுக்காது அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற, ஸ்ரீதத்தரிடம், மனதார ப்ராத்தனை செய்து, நிறைவேற்றுவார். சகலவியாதிகளுக்கான நிவாரணமும், பரிகாரமும் அறிந்தவர் ஸ்ரீவாசுதேவ மகராஜ் அவர்களை சில சமயங்களில் அவரை சோதிப்பதற்காக, மாதவிலக்கான பெண்கள், அவர் முன் வந்து

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நின்றாலும், அவர் அன்று முழுவதும் பட்டினியாக, தண்ணீர் கூட அருந்தாமல் இருப்பார்.

இத்தகைய கடின வைராக்கியத்தைப் பெற்றிருந்த ஸ்ரீவாசுதேவர், சரீரத்தை ஒரு பொருட்டாக நினைக்காமல், எப்போதும் ஆத்மாவில் ஸ்ரீதத்தரையே நிலைநிறுத்தி, அவர் கட்டளைகளை நிறைவேற்றுவதையே தம் வாழ்நாளின் குறிக்கோளாக கொண்டிருந்தார்.

ஒரு முறை, மான்காவ் கிராமத்தைச் சேர்ந்த, ஒருவருடைய மனைவிக்கு மோகினிப் பிசாசு பிடித்து அவரை பூமியிலிருந்து உயரத்தில் கொண்டு சென்று பின்னர் கீழே தள்ளிவிட்டது. இதே போல பலமுறை அவளை துன்புறுத்தியதால், அவள் ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளிடம், தம்மை பிடித்திருக்கும் அப் பிசாசைப் போக்க வேண்டினார்.

கருணையே உருவான நம் ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள், அப்பிசாசு தமக்கு மிகவும் இன்னல் விளைவிக்கும் என்பதை நன்கு அறிந்தும், இரக்கம் கெண்டு மந்திர உச்சாடனத்தை ஒரு பத்திரத்தில் எழுதி, அதை அப்பெண்ணின் கழுத்தில் கட்டச் செய்தார். அந்த மோகினி பிசாசு, தன் வலிமையை இழந்து, அப்பெண்ணை விட்டு விலகியது. ஆனால் அப்பிசாசு, ஆக்ரோஷத்தோடு ஸ்ரீவாசுதேவரின் இல்லத்தை தேடி வந்தது. அவரையும் துன்புறுத்த தொடங்கியது.

அவருடைய அன்னையையும் அப்பிசாசு விடவில்லை. பின்னர் ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள் தமது அன்னையிடம் ஒரு கை நிறைய அரிசியை எடுக்கச் சொல்லி, அந்த அரிசியில், தமது மந்திர உச்சாடனங்களை உருவேற்றி, அவற்றை நாலா புறங்களிலும் தூவச் செய்தார் உடனடியாக அப்பிசாசு, அவ் விடத்தை விட்டு விலகியது. ஸ்ரீவாசுதேவர் தமது பாதுகாப்பிற் காக, எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை ஸ்ரீ தத்தாத்ரேயா மட்டும் தம்மை பாதுகாப்பார் என்ற நம்பிக்கை உடையவர்.

ஒருமுறை தமது பக்தரின் அழைப்பை ஏற்று, பக்கத்து கிராமத்திற்கு சென்ற ஸ்ரீ வாசுதேவர், அங்கு அவருடைய இல்லத்தில், இரவு உறங்கும் போது நிறைய அழுகைக் குரல்கள்,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கேட்பதை உணர்ந்தார். அவருடைய சகோதரி தாம் ஆறுமாத மாக, இது போன்ற அழுகைக் குரல்களை, தினமும் இரவில் கேட்டுக் கொண்டிருப்பதாக கூறினார். ஸ்ரீ வாசுதேவர் உடனே மந்திர உச்சாடனத்தை ஆரம்பித்தார். மந்திர ஒலியைக் கேட்ட அடுத்த கணம் அழுகைக் குரல் கேட்பது அடியோடு நின்றுவிட்டது.

இப்போது மான்காவில் அமைந்துள்ள ஸ்ரீ வாசுதேவரின் இல்லம், இந்தூர் மகாராணி ஸ்ரீமதி இந்திரா பாய் அவர்களால், பெரிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு, அங்கு பூஜைவிதி முறைகள், அவர் கூறியதற்கேற்ப மகாராணியின் வாரிசுகளால் இன்றளவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

ஒரு முறை ஒய்வு பெற்ற அரசாங்க அதிகாரியான, மான்காவைச் சேர்ந்த சபனிஷ் என்பவரின் குடும்பத்தை, கொடிய பிசாசுகளிடமிருந்து ஸ்ரீ ஸ்வாமிகள், காப்பாற்றிய தால் அவர் அந்த ஆலயத்தின் நிர்வாகப் பணிகளை, முழுவதும் கவனித்துக் கொண்டார். ஆனால் ஒருமுறை சபனிஷ் நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் போது, ஏதோ ஒரு தவறு ஏற்பட்ட காரணத்தால், ஆலயப்பொறுப்பிலிருந்து, அவர் சிலரால் நீக்கப்பட்டார். தூய்மையாக உள்ளம் கொண்ட சபனிஷ், மனம் வேதனையுற்றார். ஸ்ரீ ஸ்வாமிகளிடம் இதைப் பற்றி எடுத்துரைத்தார். ஸ்ரீ ஸ்வாமிகள், சபனீஷ் அவர்களை, யோகினி மந்திரத்தை 82 எண்பத்தி இரண்டு நாட்கள், தொடர்ந்து ஜபம் செய்ய கூறினார். ஸ்ரீ ஸ்வாமிகள் கூறியவாறு அந்த அற்புதம் நிகழ்ந்தது. எவர் சபனிஷை, ஆலயத்திலிருந்து நீங்குமாறு கூறினாரோ, அந்த நபரே மீண்டும் சபனிஷை, ஆலயப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். **மந்திர உச்சாடனங்கன் மிகவும் மகத்துவம் வாய்ந்தது. ஆனால் அவற்றை சுய நலத்திற்காகவும், பணம், பதவி, பெண், மண் இவற்றை தாமே அடையவும் பலர் பிரயோகிப்பதால், மந்திர உச்சாடனங்கள் உடனடியாக பலனளிப்பதில்லை.**

ஸ்ரீ தத்த ஆலயத்தில் தத்த ஜெயந்தி (குருதுவாதசிமி) என்று சொல்லப்படும், ஸ்ரீ தத்தரின் பிறந்தநாள் வைபவத்தில், சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட பேய், பிசாசு, பிடித்தவர்கள், அங்கு அழைத்து வரப்படுவார்கள். அவர்களால் ஆலயத்தில்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

ப்ரஸாதம் வழங்குவதிலும், உண்பதிலும் மிகுந்த தொல்லைகள் ஏற்பட்டது. பிசாசு பிடித்தவர்கள், தாமும் உண்ண மாட்டார்கள், பிறறையும் உண்ணவிடமாட்டார்கள்.

அச்சமயத்தில், அச்செய்தியை ஸ்ரீ தத்தர், ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அசரீரியாகத் தெரிவித்தார். ஸ்ரீ ஸ்வாமிகளும் உடனடியாக, அங்கு சென்று குறைகளை, நிவர்த்தி செய்தார். தத்த அவதாரமாக, ஸ்ரீ நிருசிம்ம சரஸ்வதி அமர்ந்து, அருள் பாலித்த இடங்களான நரசோபாவாடி மற்றும் கானகாபூர் ஆலயங்களில் பேய், பிசாசு பிடித்தவர்களுக்காகவே, விசேஷ தூண்கள் வைக்கப்பட்டிருக்கும், குரு பூர்ணிமா தினத்தன்றும் ஸ்ரீ தத்த ஜெயந்தி அன்றும் ஒரு நாள் முழுவதும், அத்தகைய தீய ஆவியால் பிடிக்கப்பட்டவர்கள், அத்தூண்களில் அருகில் நிற்க வைக்கப்படுவார்கள். மறுநாள் நம் கண்களால் நம்பவே இயலாத அற்புதங்களை, ஸ்ரீ நிருசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகள் நிகழ்த்துவார்.

தங்கள் உடலைச் சுற்றும் வஸ்திரத்தைக் கூட, அணியத் தெரியாமல், கையில் எடுத்துக் கொண்டு வருபவர்கள், மறுநாள் ஸ்ரீ தத்தரின் அவதாரமான, ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகளின் அருளால், பூரணமாக குணமாக்கப்பட்டு, அமைதியாக வீடு திரும்பும் அதிசயங்களை இன்றளவும் நாம் அங்கு காண இயலும்!

ஸ்ரீ ஸ்வாமிகள் காகல் நகரின் நகரிலிருந்து, கொண்டு வந்த ஸ்ரீ தத்தரின் திருவுருவம், ஆலயத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. மற்றொரு சிறிய மூர்த்தி, சாவந்த்வாடியில் செய்யப்பட்டது. அத்திருவுருவம், பல்லக்கு ஊர்வத்திற்காக செய்யப்பட்ட சிலையாகும். ஆனால் அச்சிலை உலையிலிருந்து வெளியே வரும்போது உடைந்ததால், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் மனக்கலக்கமடைந்து, ஸ்ரீ தத்தரிடம் இம்முறை மிகச்சிறந்த லட்சணங்களோடு கூடிய, ஒரு மூர்த்தியை வேண்டினார் அவர் வேண்டியவாறே, ஸ்ரீ தத்தரும் சர்வ லட்சணங்களுடன் கூடிய ஒரு அழகிய சிலையை, அந்த உலையின் உள்ளிருந்து தாமாகவே வெளியே வர செய்தார். அனைவரும் அத்திருவுருவை கண்டு மகிழ்ந்தனர்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அத்திருவுருவத்திற்கு முதன் முறையாக பூஜைகள் செய்து, பல்லக்கில் அமர்த்த வேண்டும் என்பதால் அனைத்து பண்டிதர்களும், முக்கிய பிரமுகர்களும், அங்கு வந்து கூடி யிருந்தனர். அப்போது இங்கு ஸ்ரீ தத்தர் “புது சிலைக்கு பூஜை செய்ய வேண்டிய அவசியம் இல்லை! என்றார். அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். அதற்கு அவர், “இந்த ஆலயத்தில் ஏற்கனவே உள்ள சிலை, சாஸ்திர விதிகளின்படி அமைக்கப் பட்டதாகும்.

அச்சிலைக்குரிய பூஜை வழிபாட்டு முறைகள், முறை யாக எவ்வித குறையுமின்றி, பின்பற்றப்படுவதால், அங்கு ஸ்ரீ தத்தாத்ரேயர் எழுந்தருளி இருப்பதால், புதிதாக வடிவமைக் கப் பட்ட சிலையை, பழைய சிலையின் (ஸ்பரிசம்) தீண்டுதல் பெறச் செய்தாலே போதுமானது, புதிய சிலைக்கு சக்திகள் யாவும் வந்துவிடும். அதற்கென்று விசேஷ பூஜைகள் அவசிய மில்லை, என்ற ஸ்ரீ தத்தரின் வாக்கினை தெரிவித்தபோது உண்மையை உணர்ந்து கொண்டனர்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தம் தினசரி வழிபாட்டில் அதிகாலை பூஜையும், தொடர்ந்து ருத்ர மந்திரமும், பல மணி நேரம் ஜெபித்துக் கொண்டிருப்பார். அவருக்கு பலவித வேலைகள் இருந்ததால், அவர் மந்திரம் உச்சாடனம் செய்வதில் சிரமப்படக்கூடாது என்ற எண்ணத்தில் கருணையோடு, ஒரு நாள் ஸ்ரீ தத்தர் அவர்முன் தோன்றி, இருமுறை ருத்திர மந்திரமும், ஒருமுறை புருஷ சுக்தமும் கூறினால் போதும் என்று சொல்லி, ஸ்ரீ ஸ்வாமிகளை ஆச்சரியப்பட வைத்தார். தம் பக்தனின் கஷ்டங்களை ஒருபோதும் ஸ்ரீ தத்தர் சகித்துக் கொள்ள மாட்டார். என்பதற்கு இந்த நிகழ்வே சாட்சியாகும்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# முதலாவது சாதுர்மாஸ்ய விரதம், உஜ்ஜயினி – 1891

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தமது முதலாவது சாதுர்மாஸ்ய விரதத்தை துவங்கியபோது, **தண்டம்** (DAND) என்று சொல்லப் படும் முறையாக சந்நியாச மேற்கொண்டவர்கள், மந்திர தீக்ஷை பெற்றவர்கள் எடுத்துக் கொள்ளும், தண்டத்தை கைகளில் ஏற்றுக்கொண்டார். அந்த புனிதமான தண்டத்தை அவரிடம், முதன் முதலாக வழங்கி, சன்யாச தர்மத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டியவர், ஸ்ரீ நாராயண சரஸ்வதி ஸ்வாமிகள் ஆவார். ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள், முதன் முதலாக தமது கையில், தண்டத்தை ஏற்றுக் கொண்ட ஸ்தலமே புனித க்ஷேத்திரமான உஜ்ஜயினி ஆகும். சர்வேஸ்வரரின் 12 ஜோதிர்லிங்களில் ஒன்றாக விளங்கும் ஸ்ரீ மகா காளேஸ்வரர் எழுந்தருளிய உஜ்ஜயினியில், புனித தண்டத்தை, ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் ஏற்றுக் கொண்டார்.

தமது கைகளில் தண்டத்தை ஏந்தியவுடன், என்ன ஆச்சர் யம்! ஸ்ரீ தத்தர் அவர் முன் ப்ரத்யட்சமாக தோன்றி, பரதகண்டம் முழுவதும், புனித யாத்திரையை, மேற்கொள்ளுமாறு உத்தர விட்டார். அவ்வாறு மேற்கொள்ளும் புனித யாத்திரை, வெறும் கால்நடை பயணமாக மட்டுமே இருக்க வேண்டும் என்றும், பக்தி நெறிமுறைகளை, அனைவருக்கும் உபதேசிப்பதற்காக மட்டுமே இருக்க வேண்டும் என்றும், ஸ்ரீ தத்தாத்ரேயர் தமக்கு அளித்த உத்தரவு என்று கூறினார்.

அவர் பரத கண்டம் முழுவதும், பாத யாத்திரையாகவே சென்றார். தமது பாதங்கள் முழுவதும் வெடித்து, கொப்புளங் கள் ஏற்பட்டு, அவை சீழ் கட்டிகளாகி, மிகுந்த துன்பத்தை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அனுபவித்தார் . அப்பொழுது கூட நம் வாசுதேவ ஸ்வாமிகள், ஸ்ரீ தத்தரின் உத்தரவை ஏற்று, தொடர்ந்து தம்முடைய பயணத்தை மேற்கொண்டார். அவர் தன்னிடம் இருந்த ஏராள மான சக்திகளை, தமக்கு சாதகமான ஒருபோதும் ப்ரயோகிக்க வில்லை.

உஜ்ஜயினியில் நான்கு மாதங்கள், மிகக் கடுமையாக வ்ரதம் மேற்கொண்டு, சாஸ்திர சம்பரதாய முறைப்படி, வழி பாடுகளை செய்தார். தினமும் அதிகாலை நீராடி, **"தண்ட்தர்ப் பன் ப்ரணவ ஜபம்"** என்று சொல்லக்கூடிய ப்ரணவ ஜபத்தை தொடங்குவார். ஸ்ரீ தத்தரின் திருவுருவ சிலைக்கு, பூஜைகள் செய்வார்.

இவ்வாறு ஒரு நாளைக்கு மூன்று முறை நீராடி, ஜபம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின், சமகாலத்தைச் சேர்ந்த, மிகப்பெரிய சாதுக்கள் பலரும், ஸ்வாமிகளின் வைராக்கியத்தையும், மனோபலத்தை யும் கண்டு அதிசயித்துள்ளனர். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், சில நாட்கள் தாம் பூஜை செல்வதற்கு, மலர்கள் கிடைக்காமல் போனாலும் புனித உதியான, விபூதியைக் கொண்டு, ஸ்ரீ தத்தர் திருவுருவிற்கு அபிஷேகம் செய்தார்.

மத்யானம் அவர் நீராடிய பிறகு, பிக்ஷை எடுக்கச் செல்வார். இறையுணர்வும், நேர்மையும், ஒழுக்கமும் நிறைந் தவர்களின் இல்லங்களுக்கு செல்வார். மத்யான வேளையில், எவராவது நம் இல்லத்தின் வாயிலில் நின்று, யாசகம் வேண்டி னால், உடனடியாக நம்மிடம் இருக்கும் உணவை, விசாரிக் காமல் அளித்துவிட வேண்டும் என்று கூறுவார்!

எல்லா சமயங்களிலும், தானம் அளிப்பது, புண்ணியச் செயல் என்றாலும், மத்யான வேளையில் நாம் எவருக்காவது உணவு அளிக்கும் போது, அது நேரிடையாக மகான்களைச் சென்ற சேர்கின்றது என்பது மகான்களின் வாக்கு.

சாயங்கால வேளையில், மற்றொரு முறை நீராடிவிட்டு, புராணங்களைப்பற்றி அனைவருக்கும் எடுத்துரைப்பார். ஸ்வாமிகள் தம்மிடம், வைத்திருந்த பொருட்கள் கையில் ஒரு தண்டம், மற்றொரு கையில் கமண்டலம், இடையில் சுற்றிக்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொள்வதற்கு இரண்டு வேஷ்டிகள். "தாவாளி" என்று சொல்லக்கூடிய, ஒருவகை நார்ப்பகுதியில் இருந்து செய்யப் படும் புனிதத்துணி (மடித்துணி என்றும் சொல்வது வழக்கம்) இத்துணி, தீய சக்திகளிடம் இருந்து நாம் செய்யும் பவித்ரமான பூஜைகளுக்கு ஆபத்து வராமல் காப்பாற்றும் மற்றும் உபநிஷத்துக்கள் அடங்கிய ஒரு நூல், இவைதவிர நான்கு கோவணங்கள் (மூன்று முறை நீராடி துவைத்து காயவைத்து பின்னர் உடுத்திக் கொள்வார்).

இவற்றை மட்டுமே தம்மிடம் வைத்திருந்தார். இவை தவிர தாம் அன்றாடம் பஞ்சயதன் என்ற ஸ்ரீ தத்த பூஜை செய்வதற்காக இரண்டு ஸ்ரீ தத்தரின் திருவுருவங்கள் அபிஷேகம் செய்ய நீர் எடுத்துவர, ஒரு சிறிய பானையையும் வைத்திருந்தார். ஸ்ரீ வாசு தேவ ஸ்வாமிகளின் மகிமைகளை கேள்வியுற்று அனைவரும், அவருக்கு தங்குவதற்கும், உண்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்க முன் வந்தார்கள்.

ஆனால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அவர்களிடம் இருந்து உதவியை பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். தம்மை ஸ்ரீ தத்தாத்ரேயர், பார்த்து கொள்வார் என்று அனைவரிடமும் கூறிவிட்டார். ஒவ்வொரு முறையும் அவர் தாமாகவே ஏற்றுக் கொண்ட கொடிய வியாதியான, சீதள வயிற்றுப்போக்கால், ஒவ்வொரு நாளும் பலமுறைபடும் அவஸ்தைகளை குறித்து, ஸ்ரீ தத்தரிடம் எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை. அஷ்டமகா சித்திகளும் கைவரப் பெற்றவராக இருந்தாலும், அவற்றை தமக்காக பயன்படுத்திக் கொள்ளவில்லை.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், ஆச்சார அனுஷ்டானங்களை தீவிரமாக கடைபிடித்ததால், ஒவ்வொரு முறை வயிற்றுப்போக் கின் போதும், உடனடியாக நீராடிவிட்டு வந்து பூஜை செய் வார். இவ்வாறே, ஒவ்வொரு நாளும் பலமுறை நீராடுவார். தமது வாழ்க்கையில் நேர்ந்த இத்தகைய கொடுமையான சித்ரவதையை, அவர் இலட்சியம் செய்யவே இல்லை.

இவ்வாறாக, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் முதலாவது சாதுர்மாஸ்ய விரதம், நான்கு மாதங்களில் முடிவடைந்ததும் அவர் உஜ்ஜனியை விட்டு, மகத்பூருக்கு புறப்பட்டார். தமது

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பயண வேளையில் தினமும், கிட்டத்தட்ட ஐம்பது **50** மைல்கல் தொலைவு நடந்தே சென்றாலும், இடையில் எங்கேயும் உணவும், நீரும் அருந்தவோ மாட்டார். இத்தகைய வைராக்கியத்தை வேறு எவரிடமும் காண இயலாது.

சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, எந்த இடத்திலும், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், மூன்று நாட்களுக்கு மேல் தங்கமாட்டார். ஒரு வேளை அந்த ஊர் மக்கள், நம் ஸ்வாமிகளை, வற்புறுத்தி அவர்கள் பகுதியிலேயே வசிக்குமாறு, வேண்டிக் கொண்டால், அவர்களின் அன்பிற்கு இணங்கி இரண்டு நாட்கள் தங்குவார்.

மகத்பூருக்கு, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், வருகை தந்ததும், அந்த ஊரில் உள்ளவர்கள், ஒருவரை, கற்களால் அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர் உடனே அங்கு சென்று அனைவரிடமும், "இவர் நீங்கள் நினைப்பது போல, இவர் பைத்தியக்காரர் அல்ல! இவர் ஒரு சித்த புருஷர்! மகான்! யோகிஸ்வரான்! இவரை இகழ்ந்து பேசினாலோ, துன்புறுத்தினாலோ உங்கள் தலைமுறையும் துன்பத்திற்கு ஆளாகும்! என்று எச்சரித்தார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், சித்த புருஷன் என்று கூறிய அந்த யோகியை, அதுவரை அக்கிராமத்து மக்கள், சித்தம் கலங்கியவர் என்றே நினைத்துக் கொண்டிருந்தனர். அவருடைய பெயர் கலுமியா என்பதாகும். அவர் ஒரு காளி உபாசகர். பல வருடங்கள் காளி மாதவை நோக்கி தவம் செய்த யோகீஸ்வரர் கலுமியா ஆவார்.

ஒருமுறை குவாலியர் பகுதியைச் சேர்ந்த, ஷிண்டே சர்கார் என்பவர், ஷ்ராவன் எனப்படும் மழைக்காலத்தில், ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் செய்தார். அப்பொழுது அந்த அன்னதானத்தில் கலந்து கொண்டவர்கள், உண்ட எச்சில் இலையில், மீதமுள்ள உணவை கலுமியா சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவருடைய இச்செயலைப் பார்த்து, அனைவரும் அவரை கேலி செய்தனர்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அவர் ஒரு சித்த புருஷன் என்றும், அவரை கேலி செய்தால், தலைமுறைக்கும் பாவம் என்றும், அனைவருக்கும் எச்சரிக்கை விடுத்தார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அன்று முதல் அக்கிராமவாசிகள், அனைவரும் கலுமியா என்ற சித்தபுருஷருக்கு தக்க மரியாதை செய்து வணங்கி வந்தனர். அவரைப்பற்றி கேள்வியுற்றதும், அவ்வூரில் வசித்து வந்த, ராம்ஜி என்ற ஒரு அந்தணர், கலுமியாவிற்கு பணிவிடை செய ஆரம்பித்தார். சித்த புருஷர்களுக்கு சேவை செய்வது என்பது, அவ்வளவு சாதாரண செயலன்று; அவருடைய மனநிலை ஒருவருக்குமே தெரியாது!

ஆனால் ராம்ஜி, அவருடைய மன நிலைக்கு ஏற்றவாறு மிகவும் பொறுமையுடனும், அன்புடனும், பணிவிடை செய்து வந்தார். ஒருநாள் ஸ்ரீ வாசுதேவர், குறிப்பிட்ட அந்த சித்த புருஷரின் ஆற்றலை, அந்த ஊர் மக்கள் முழுமையாக உணர்ந்து கொண்டார்.

ராம்ஜி அந்த சித்தரை, தெய்வமாகவே நினைத்து, தினந் தோறும் எல்லா சேவைகளையும், செய்து வந்தார். சிறிதளவும் அருவெறுப்பின்றி, சித்தபுருஷரின் உடலை சுத்தம் செய்து, நீராட்டி அவருக்கு உணவு படைத்து வந்தார். ஒருநாள் ராம்ஜியின் குரு, அவரைக் காண்பதற்காக, அக்கிராமத்திற்கு வந்திருந்தார். தன்னுடைய சிஷ்யரைக்காணும் பொருட்டு வந்த அவர், அங்கே தாம் கண்ட காட்சியால், பயந்து, நடுங்கி அந்த ஊரை விட்டு ஓடிச்சென்றுவிட்டார்.

அதற்குக் காரணம், அவர் தனது சிஷ்யரைக் காணும் வேளையில், அவர் பணிவிடை செய்து கொண்டிருந்த கலுமியா என்ற சித்தர் ராம்ஜியை, ஒரு பெரிய பிரம்பால், நன்றாக அடித்து புடைத்துக் கொண்டிருந்தார். தமது சிஷ்யர், இவ்வாறு ஒரு மனநிலை சரியில்லாதவரிடம், அடி வாங்குவதை, தாங்க இயலாமல், இன்றும் சிறிது நேரம் அங்கே நின்று கொண்டிருந்தால், தமக்கும், அதே மரியாதைதான் கிடைக்கும், என்பதை உணர்ந்து ஓடிவிட்டார்.

சித்தர்களிடம், அடி, உதை வாங்குவதற்கும், நாம் பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்! அந்தப் புண்ணியம், அன்று ராம்ஜிக்கு கிடைத்திருப்பதை, அவர் அறிய வில்லை. அது மட்டுமல்லாமல், அவர் அவ்வூர் மக்களிடமும் இதுபற்றி தெரிவித்துவிட்டதால், அனைவரும் ராம்ஜிக்கு என்ன ஆபத்து நேருமோ என்று பயந்து கொண்டிருந்தனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆனால் அங்கு நடந்ததுவேறாக இருந்தது. ராம்ஜியை மாறிமாறி அடித்துக் கொண்டிருந்த சித்தர். தமது கையில் இருந்த பிரம்பு உடைந்து நொறுங்கிவிட்டதால், அவற்றையும், ராம்ஜியின் மேல் தூக்கி எறிந்துவிட்டு, சென்றுவிட்டார். ஆனால் ராம்ஜி சிரித்துக்கொண்டே, அனைவரிடமும் எவரும் அஞ்ச வேண்டாம்! இந்த சித்தபுருஷர்! எனது கர்மாவை நீக்கவே இவ்வாறு ஒரு அற்புதம் செய்திருக்கிறார்! பருமனான இப் பிரம்பு உடையும் அளவிற்கு, நான் அடிகள் வாங்கிய போதும், எனது உடலில் ஒரு காயமும் இல்லை! உடலில் ஒரு வலியும் இல்லை! அவர் எனக்களித்த ஒவ்வொரு அடியும், எனது உடலிலும், ஆத்மாவிலும், ஆனந்தத்தை உண்டாக்கி யது! நான் முன்பு இருந்ததைக் காட்டிலும், தற்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன்! இதற்குக் காரணம், அடியேன்! இந்த சித்த புருஷரிடம் வாங்கிய அடிகளும், உதைகளும் மட்டுமே ஆகும்! என்று கூறி அந்த சித்தபுருஷர் சென்ற திசையை, நோக்கி நமஸ்காரம் செய்து வணங்கினார். இதைப் பார்த்துக் கொண் டிருந்த அனைவரும் ஆச்சர்யம் அடைந்தனர். ஸ்ரீ வாசு தேவானந்த ஸ்வாமிகள், அச் சித்தரை அடையாளம் காட்டி யதற்காக அனைவரும் அவருக்கு நன்றி தெரிவித்தனர்.

ஒரு நாள் அக்கிராமத்தில் வசித்த கேசவராவ் என்பவர், நம் வாசுதேவ ஸ்வாமிகளைத் தேடி வந்தார். அப்பொழுது நம் வாசுதேவ ஸ்வாமிகள், ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். கேசவ ராவ் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை, தமது இல்லத்தில், உணவருந்துவதற்காக அழைத்தார்.ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் முக்காலமும் உணர்ந்தவர். அவர் கேசவராவ் எப்படிப் பட்டவர் என்பதை நன்கு அறிவார்.

ஆகையால் அவருடைய இல்லத்திற்கு செல்ல மறுத்து விட்டார். அவ்வூர்க்காரர்கள், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை தரிசிக்க செல்வதை, கேசவராவ் தரக்குறைவாகவும், பரிகாசம் செய்வதும் வருவதை, நம் ஸ்வாமிகள் நன்கு அறிவார். ஆனால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், இக்காரணத்தைப் பற்றி இலட்சியம் செய்யவில்லை. மகான்களுக்கு, அவமானம் என்பதே கிடை யாது அவர்களுடைய உடல், மனம் இவற்றை எவருமே காயப் படுத்த இயலாது கேசவராவ், பூர்வீகத்தில் சாஸ்திரோத்தமான,

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அந்தண குடும்பத்தை சேர்ந்தவர். இந்த உண்மை கேசவராவ் தவிர, அங்கிருந்த வேறு எவருக்குமே தெரியாது. அந்தண குலத்தில் அவதரித்து விட்டு, முறையான வழிபாடுகளை, செய்யத்தவறினார்.

தினமும் அதிகாலையில் நீராடி, பூஜைகள் செய்வதை விட்டுவிட்டார்! அதுமட்டுமல்லாமல், தினமும் உணவு சமைத்ததும் அவ்வுணவை, இறைவனுக்கு "நைவேத்யம்" செய்ய வேண்டும் என்பதைக்கூட மறந்துவிட்டார். முதலில் இறைவனுக்கு சமர்ப்பித்துவிட்டு, பின்னர் வைஸ்வதேவம் என்று சொல்லக்கூடிய சமர்ப்பணத்தையும் கூட முறையாகச் செய்ததில்லை. "வைஸ்வதேவம்" செய்யும்போது சமைத்த உணவும் புனிதமடைந்து, அது இறைவனுடைய, ப்ரஸாதமாகி விடுகின்றது. ஒரு அந்தண குலத்தில் அவதரித்து, செய்ய வேண்டிய விதிமுறைகளை, அனுசரிக்காமல் என்னை மட்டும் என் உனது இல்லத்திற்கு அழைக்கின்றாய்! என்றார்.

எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கும் யோகீஸ்வரனான ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின், இத்தகைய சொற்களைக் கேட்டு, கேசவராவ் ஆச்சர்யமடைந்தார். காரணம், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தம்மைக் குறித்துக் கூறிய அனைத்தும் உண்மையே தாம் பூனாவைச் சேர்ந்த, "கராடா" (Karadha) என்ற அந்தண குலத்தைச் சேர்ந்தவர், ஆனாலும் சாஸ்திர விதிமுறைகளை, பின்பற்றாமல் வாழ்ந்து வருபவர்.

தினமும் காலையில் நீராடி, பூஜை செய்யும் வழக்கமும் அவரிடம் இல்லை. சமைத்த உணவை இறைவனுக்கும், அக்னி தேவதைக்கும் மற்ற உயிர்களுக்கும், அளித்து உண்ணும், வழக்கமும் அவரிடம் இல்லை. அவருடைய அன்னை, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் தம்முடைய இல்லத்திற்கு, வருகை தந்து, உணவு உபசரிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்! என்று மிகவும் விரும்பிய ஒரே காரணத்தால், கேசவராவ் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளைக் காண வந்திருந்தார்.

ஆனால் அங்கு தாம் ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசித்தவுடன், தமது நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டதை உணர்ந்தார். ஆயினும் அதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் அனைவரின் முன்னிலையிலும், தமது கோரிக்கையை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நிராகரித்துவிட்டார் என்பதை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அவர் கோபத்துடன் அங்கிருந்து மிக விரைவாக வெளியேறி, தமது இல்லத்திற்கு சென்றுவிட்டார்.

கேசவராவ் சென்ற வேகத்தை பார்த்ததும், அங்கிருந்தவர்கள், அவன் இனிமேல் இந்த பக்கமே தலைவைத்துக் கூட உறங்கமாட்டான் என்று பேசிக்கொண்டனர். ஆனால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே, "உங்களுடைய கணிப்பு தவறானது! இன்னும் ஒரு மணிநேரத்தில் கேசவராவ் மீண்டும் இங்கே வருவார்!" என்று கூறிவிட்டார்.

என்ன ஆச்சரியம்! ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் குறிப்பிட்டவாறே, கேசவராவ் திரும்ப வந்துவிட்டார். அதற்கு காரணம், அவருடைய அன்னையார் ஆவார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், தம்மை எல்லோர் முன்னிலையிலும், அவமானப் படுத்தியதாக, தமது அன்னையிடம் தெரிவித்தார். அவர் கூறியது அனைத்தையும், மிகவும் பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த அவரது அன்னை, இறுதியாக கேசவராவிடம் "கேசவா இது உன்னுடைய தவறே ஆகும்! "இதற்காக நீ வருந்தி, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளிடம், மன்னிப்புக் கோருவது மட்டுமல்ல அவரை எப்படியாவது, நமது இல்லத்திற்கும் அழைத்து வா "நான் எனது கைகளால், அவருக்கு உணவு பறிமாற வேண்டும்! "இச்செயலையும் நீ மட்டுமே, ஆற்ற வேண்டும்!" என்று கட்டளையிட்டு விட்டார்.

இப்பொழுது கேசவராவ் வேறு வழியின்றி, மீண்டும் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை காண ஓடிவந்தார். இப்பொழுது அவர் மனத்தில், சஞ்சலமோ, சலனமோ இல்லை மனம் பக்குவம் அடைந்திருந்தார். அவர் நேரடியாக, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின், பாதங்களில் விழ்ந்து நமஸ்காரம் செய்தார். "ஸ்வாமி தாம் கூறியது, முற்றிலும் உண்மையே! ஆனால் நான் எனது கர்மவினை பயனின் காரணமாக, உங்களை புரிந்து கொள்ளும் ஆற்றலை இழந்திருந்தேன்! தங்களுடைய கருணையால், தாம் எனது தவறுகளை மன்னித்து, என் வாழ்க்கையில் தாங்கள் என்னை வழிநடத்தி செல்ல வேண்டுகிறேன்! என்று கண்ணீர் மல்க, மனம் உருகி ப்ராத்தனை செய்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நடந்த இந்நிகழ்வுகள், அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த அவ்வூர் மக்கள், அனைவரும் அதிசயித்தனர். இம் மகானை தரிசிக்க வரும் நம்மை, பல தடவைகள் இகழ்ந்து பேசிய கேசவராவ், இப்பொழுது இவர் முன்னர், மண்டியிட்டு கைகள் தொழுது, ப்ரார்த்தனை செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, இம்மகான் நம்முடைய கிராமத்திற்கு விஜயம் செய்தது, நாம் செய்த பாக்கியமே என்பதை உணர்ந்து கொண்டனர்.

கேசவராவின் அன்னையார், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளிடம், தமது புத்திரருக்கு **"ப்ரம்மகர்மா"** என்ற நியம நிஷ்டைகளை, கற்றுக் கொடுக்குமாறு வேண்டினார். அது மட்டுமல்லாமல், தமது வீட்டிற்கு வந்து, ஒருவேளை உணவை உண்டு, தம்மையும் தமது புத்திரரையும் ஆசிர்வதிக்கும்படி வேண்டினார்.

மகராஜ், கேசவராவிற்கு சந்த்யா வந்தனம், பூஜை வழிபாட்டு விதி அளிக்கும் முறைகளையும் கற்றுக் கொடுத்தார். அன்று முதல் கேசவராவ், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் கூறிய முறையான நியமநிஷ்டைகளை கடைபிடித்தார். அதைக் கண்டு மகிழ்ந்த நம் ஸ்வாமிகள், அதன் பிறகே அவருடைய இல்லத்திற்கு, அவர் அன்னை அழைத்தவாறே சென்று விருந்து உபசாரத்தை ஏற்றுக் கொண்டு, அவர்களை ஆசிர்வதித்தார்.

ஒருமுறை கோவிந்தராவ் என்பவர் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளிடம், அவர் பூஜை செய்து கொண்டிருக்கும் இரண்டு விக்கிரங்களில், பெரியதாக இருந்த மூர்த்தியை, தன்னுடைய ஆலயத்தில் ப்ரதிஷ்டை செய்வதற்காக, வேண்டினார். ஆனால் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அவருடைய கோரிக்கையை நிராகரித்துவிட்டார்.

கோவிந்தராவின் ஆலயத்திற்கு, வேறு புதிதாக தயாரித்த மூர்த்தியை, பெற்றுக் கொள்ளுமாறு கூறிவிட்டார். ஆனால் கோவிந்தராஜ் பிடிவாதமாக, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் வைத்திருக்கும் மூர்த்தியை மட்டுமே வேண்டினார். ஸ்வாமிகள் பூஜை செய்த விக்ரஹத்தை, தமது ஆலயத்தில் ப்ரதிஷ்டை செய்தால், தமக்கும் மற்ற அனைவருக்கும், நன்மை அளிக்கும் என்று உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆகையால் கோவிந்தராவ், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளிடம் எவ்வாறாவது, அந்த மூர்த்தியை தமக்கு தருமாறு வேண்டினார். ஸ்ரீ வாசுதேவ மகராஜ், அவர்கள் முக்காலமும் உணர்ந்தவர், அவர் மிகவும் அமைதியாகவும், பொறுமையாகவும், கோவிந்தராவிடம், "கோவிந்தா நான் சொல்வதை பொறுமையாகக் கேள்"! இந்த மூர்த்தி, உனக்கு எவ்வித நன்மையும் தராது என்பதை நான் நன்கு அறிவேன்! இதே திருவுருவச்சிலையை, நான் வேறொரு இடத்தில் ஸ்தாபிக்க, ஸ்ரீ தத்தரிடம் உத்தரவு வேண்டினேன்! ஆனால் ஸ்ரீ தத்தர், இந்த மூர்த்தி எனது கைகளை விட்டு, வேறு கிராமத்திற்கோ, அல்லது ஆலயத்திற்கோ சென்றால் அந்த கிராமமே அழிந்துவிடும்! என்று எச்சரிக்கை விடுத்தார்! ஸ்ரீ தத்தர், இத்திருவுருவத்தை எங்கு ப்ரதிஷ்டை செய்ய வேண்டுமோ, அந்த ஸ்தலத்தை அவரே காண்பிக்கும் வரை, பொறுமையாக இருக்கவேண்டும். இறைவனுடைய உத்தரவை ஏற்று, உனது ஆலயத்தில், வேறொரு மூர்த்தியை ப்ரதிஷ்டை செய்வாயாக! என்று தெளிவாக எடுத்துரைத்தார்.

ஆனால் விதி எவரையும் விடாது என்பது சரியே! கோவிந்தராவ் ஸ்ரீ ஸ்வாமிகள் கூறியதை, இலட்சியம் செய்யவில்லை அவர் ஸ்வாமிகள், ஏதோ என்னை பயமுறுத்துவதற்காக விளையாடுகிறார், என்று நினைத்துக் கொண்டார். அதனால் தனது ஊரில், ஒரு ஆலயத்தை எழுப்பி, அம்மூர்த்தியைப் பெற்று ப்ரதிஷ்டையும் செய்துவிட்டார். வினையை விதைத்து விட்டால் அறுவடை செய்து தானே ஆகவேண்டும்! அச்சமயமும் வந்துவிட்டது மகான் ஸ்ரீ வாசுதேவ மகராஜ், இறைவனிடம், அக்கிராம மக்களை எவ்வாறாவது காப்பாற்றும்படி வேண்டினார்.

அதனால், கிராம மக்கள் காப்பாற்றப்பட்டார்கள். ஆதனால் கோவிந்தராவின் நிலை மிகவும் பரிதாபத்திற்குள்ளாகியது! அச்சிலையை ப்ரதிஷ்டை செய்த, சில தினங்களிலேயே அவருடைய புத்திரன் பரிதாபமாக இறந்து விட்டான் அச் செயல் அவரை நிலைகுலையச் செய்துவிட்டது. அவரும் நோய்வாய்ப்பட்டார் அவரால் தனது சரீரத்தை சுமந்து கொண்டு ஒரு அடி கூட நகர இயலவில்லை.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இறைவனுடைய உத்தரவையும், குருவின் வாக்கையும் மீறினால், அதன் விளைவு விபரீதமாகும்! என்பதை கோவிந்த ராவ் நன்கு உணர்ந்து கொண்டார். இப்பொழுது மனதார மன்னிப்பு வேண்டினாலும் இறந்த புதல்வன் எவ்வாறு மீண்டும் வருவான்? நான் எத்தகைய தவறை செய்துவிட்டேன்! என்று புலம்பினார்.

அன்று இரவு அவரது கனவில், அச்சிலை எழுந்து நடந்து வருவதை கண்டு பயந்துவிட்டார். அது அவரை நோக்கி நடந்து வந்து, அவர் முன்னால் நின்றுவிட்டது. அச்சிலை கோவிந்த ராவிடம் "கோவிந்தா இனியும் நான் இங்கு இருந்தால், பல அழிவுகள் ஏற்படும்! ஆகையால், உடனே என்னை தூக்கிச் சென்று ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் ஆலயம் அமைந்திருக்கும், பதவை (படவை) என்ற இடத்தில் வைத்துவிடு! உடனடியாக புறப்படு! நீ காலம் தாமதிக்கும், ஒவ்வொரு விநாடியும் உனது உயிருக்கும் ஆபத்து ஏற்படும்!" என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு தன்னுடைய இடத்திற்கு சென்று மீண்டும் அமர்ந்து கொண்டது.

NOT FOR SALE

கோவிந்தராவ், கனவில் கண்ட இக்காட்சியை எண்ணி நடுங்கினார். எப்பொழுது பொழுதுவிடியும் என்று எதிர் பார்த்து, இரவு முழுவதும் உறங்காமல், குருவான ஸ்ரீ வாசு தேவரை, தம்மை காப்பாற்றும்படி ப்ரார்த்தனை செய்தார். மறுநாள் பொழுது விடிந்தவுடன் முதல், வேலையாக, கோவிந்த ராவ் அச்சிலையை, நமஸ்காரம் செய்து, எல்லோரையும் காப்பாற்றும்படி ப்ராத்தனை செய்துவிட்டு, அதைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

இதே சமயத்தில், என்ன அற்புதம்! பதவை என்ற பகுதியில், அமைந்த ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் ஆலயத்தில், பூஜை செய்து கொண்டிருந்த ஸ்ரீ லஷ்மன் புவா என்பவருடைய கனவிலும், ஸ்ரீ தத்தர் தோன்றி, கோவிந்தராவ் தன் உருவச்சிலையை தூக்கிக் கொண்டு வருவதாகவும், அதை பெற்றுக் கொண்டு வருமாறும் ஆணையிட்டார். உடனே லஷ்மண் புவாவும் விரைந்து சாரங்க்பூர் சென்றார். என்ன ஆச்சர்யம்! அங்கே கோவிந்தராவ் அச்சிலையை எடுத்துக் கொண்டு பதவையை நோக்கி வருவதைக் கண்டார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## இரண்டாவது சாதுர்யமாஸ்ய விரதம் ப்ரம்மவ்ரத் – 1892

மகராஜ் தமது முதல் சாதுர்யமாஸ்ய விரதத்தை, முடித்துக் கொண்டு, இரண்டாவது வருட சாதுர்மாஸ்ய விரதத்தை மழைக்காலமான ஷ்ராவன் என்று சொல்லப்படும் மாதத்தில் , ஒரு நல்ல நாளில் ப்ரம்மவ்ரத் என்ற பகுதியில் துவங்கினார் இந்த ஸ்தலத்திற்கு, மகராஜ் முதன் முறையாக வருகை தந்தார். ஆனால் ஸ்ரீதத்தரின் உத்தரவை ஏற்று, அவ்விடத்தில் கிட்டத் தட்ட ஒன்றரை வருடங்கள் இருந்தார். மகராஜ் "அந்தாஜிபந்த் காட்" என்ற இடத்திற்கு அருகில் அமைந்த, ஸ்ரீராமரின் ஆலயத்திற்கு அருகில், ஒரு குடிசையை, தனக்கென்று அமைத்துக் கொண்டார் அவர் நீராடிய பிறகு, குடிசையில் மத்யானம் வரை அமர்ந்து கொண்டு தியானம் செய்வார்.

உச்சி வேளையில், திரும்பவும் கங்கையில் நீராடிவிட்டு, மூன்று வீடுகளுக்கு சென்று பிச்சை கேட்பார். அப்பொழுது அவருடைய குடிசையை அவர் மூடி வைப்பதே இல்லை. இவ் வாறாக எட்டு மாதங்கள் தொடர்ந்து, ஸ்ரீராமரின் ஆலயத்திற்கு அருகில் இருந்து வந்தார். அவர் எவரிடத்தும் தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்ளவில்லை ஆகையால் அவரை எவரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

ஆனால் மிகுந்த நறுமணமிக்க மலர்கள் தங்களுடைய சுகந்த வாசனையை எவ்வாறு மறைக்க இயலும்? அதைப் போல, நம் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை அனைவரும் அடை யாளம் கண்டு கொள்ள வேண்டிய சமயமும் வந்துவிட்டது சாதுர்மாஸ்ய விரதம் துவங்கியது. மகராஜ் ஸ்ரீராமரின் ஆலயத்தில், தினமும் புராணம் கேட்கச் செல்வது வழக்கம்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவ்வாறு கேட்கும் பொழுது ஒருநாள், அவர் அங்குள்ள "புராணிக்புவா" என்று அழைக்கப்படும், கதாகாலட்சேபம் செய்பவரிடம், நாளை தாங்கள் சொல்லும் ஒரு ஸ்லோகத்திற்கு, பகவத் கீதையின் அடிப்படையில் நான் விளக்கம் தர விரும்பு கிறேன்! தங்களுக்கு விருப்பமிருந்தால் இப்பணியைச் செய் கிறேன்! என்று பணிவுடன் கூறினார். மகாயோகிஸ்வரரான ஸ்ரீவாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் மிக்க பணிவுடன் வேண்டுவதைக் கேட்டு, "பணிதல்"என்பதன் அர்த்தத்தை நம்மால் புரிந்து கொள்ள இயலும்.

"புராணிக்புவா"வும் இதற்கு சம்மதித்தார். மறுநாள், அந்த ஆலயத்தில், ஒரு விசேஷம் காரணமாக, பெருந்திரளான மக்கள் தரிசனம் செய்யவும், புராணம் கேட்கவும் குழுமியிருந்தார்கள். அப்பொழுது புராணிக்புவா, கூறிய ஒரு ஸ்லோகத்திற்கான விளக்கத்தை மிகவும் எளிமையாக, பாகவதத்தில் மேற்கோள் காட்டி, மகராஜ் பொருள் கூறிய விதம், அனைவரையும் வியக்கவைத்தது.

மகராஜ் அவர்களின் ஆழ்ந்த ஞானத்தையும், உயர்ந்த தத்துவக் கோட்பாடுகளை மிக எளிமையாக, அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில், எடுத்துரைத்த விதத்தையும் கண்டு மெய்மறந்தார் புராணிக்புவா இவர் ஒரு சாமான்ய மனிதரல்ல! தெய்வீகத்தன்மை கொண்டவர் என்பதை, அங்குள்ளோர் அனைவரும் உணர்ந்து கொண்டனர். அன்று முதல் ஆயிரக்கணக்கான மக்கள் தினமும், மகராஜ் அவர்களை தரிசிக்க வரத் தொடங்கினர்.

"புராணிக்புவா மகராஜ் அவர்களை நமஸ்காரம் செய்து "ஸ்வாமி நாளை முதல், தாங்களே உபன்யாசம் தொடர்ந்து நடத்த வேண்டும்! தங்களிடமிருந்து கற்றுக் கொள்வதற்கு, ஏராளம் உள்ளது! தாங்கள், இப்பகுதியில் எழுந்தருளியது, எங்கள் அனைவரின் பாக்கியமே ஆகும்! என்றார் அன்று முதல் சாஸ்திரங்களையும், வேதங்களையும் கற்கும், மாணவர்களும் மகராஜ் அவர்களிடம், தங்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டார்கள். நாம் முன்னரே கண்டவாறு ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள், எல்லா கலைகளும், சாஸ்திரங்களும் அறிந்த பூரண ஞானியாவார். ஆகையால் இது பற்றி விவரம்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அறிந்த மாணவர்கள் பலரும், மகராஜ் அவர்களைத் தேடி வந்தனர். மகராஜ் வானசாஸ்திரம், ஜோதிடம், யாகங்கள் செய்யும் முறை, வேதாந்தம் முதலிய பலவற்றையும் ஒரு பலனும் பெற்றுக்கொள்ளாமல் அனைவருக்கும் இலவசமாக போதித்தார்.

ஒரு முறை மகராஜ் அவர்களின், தெய்வீக ஆற்றலைக் குறித்து கேள்வியுற்று, அவரை தரிசிக்க குவாலியர் பகுதியிலிருந்து "கோபாலாச்சாரியார்" என்ற மிகச்சிறந்த பண்டிதர் வந்தார். அவர் அந்த ஆலயத்திற்குள் நுழைந்து, போதனைகளை கேட்க துவங்கினார். அவருடன் அவருடைய சிஷ்யர்களும் அங்கு வந்துவிட்டார்கள்.

உபன்யாசம் செய்து கொண்டிருந்த மகராஜ், கோபாலாச்சாரியாவைப் பார்த்ததும், அங்கிருந்து புறப்பட்டு அவருடன் ஆசிரமத்திற்கு சென்றார். மகராஜ் அவர்களுக்கு கோபலாச்சாரியாவைப் பற்றியும், அவருடைய சந்தேகங்களைக் குறித்தும் நன்றாக தெரியும். ஆசிரமத்தை அடைந்ததும். கோபாலாச்சாரியாவின் அனைத்து சந்தேகங்களுக்கும், தெளிவான விடையை அளித்து, புரிய வைத்தார். கோபாலாச்சாரியா மிகச் சிறந்த பண்டிதர் என்றதால், அவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் விளக்கங்களை, மகராஜ் அவர்கள் மூலமாக தெளிவாக அறிந்து கொண்டார்.

ப்ரம்மவ்ரத் என்று சொல்லக்கூடிய புண்ணிய ஷேத்திரத்தில், ஸ்ரீ தத்தரின் கட்டளையை ஏற்று, ஸ்ரீவாசுதேவானந்த ஸ்வாமிகள், சமஸ்கிருதத்தில் ஸ்ரீதத்த புராணத்தை இயற்றினார். அந்த பெருமையும், மகத்துவமும் ப்ரம்மவ்ரத் என்ற புண்ணிய ஸ்தலத்தில், ஸ்வாமிகள் மேற்கொண்ட, இரண்டாவது சாதுர்மாஸ்ய விரதத்தில் அவரால் இயற்றப்பட்ட, இன்றளவும் சமஸ்கிருத வல்லுநர்களால், மிகச்சிறந்த நூலாகிய, **ஸ்ரீதத்த புராணம்** போற்றி பாராட்டப்பட்டு வருகிறது, நம் மகராஜ் அவர்களின், மிக உயர்ந்த ஞானமே இதற்கு காரணமாகும். **மூவாயிரத்து ஐந்நூற்று செயுள்களைக்** கொண்ட இந்நூலில் 64 அத்தியாங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# மூன்றாவது சாதுர்மாஸ்ய விரதம் ஹரித்வார் – 1893

ஸ்ரீ வாசுதேவ மகராஜ், ப்ரம்மவ்ரத்தை விட்டு புறப்பட்டு, ஹரித்துவாருக்கு அடுத்த சாதுர்மாஸ்ய விரதத்திற்காக சென்றடைந்தார்.

ஒரு பவுர்ணமி தினத்தில், கோகுலம், மதுரா, பிருந்தாவன் முதலிய பகுதிகளை கடந்து, புனித கங்கை நதிக்கரைக்கு வந்து விட்டார். ஸ்ரீஸ்வாமிகள், அங்கு அமைந்திருந்த ஸ்ரீதத்தாத்ரேயர் ஆலயத்திற்கு அருகில், அஹில்யா என்ற அம்மையார் கட்டிய, தர்ம சத்திரத்தில் தங்கி இருந்தார் மகராஜ் எவர் அழைத்தாலும், அவர் சமூகத்தில் எவ்வளவு செல்வாக்கினை பெற்று இருந்தாலும், செல்வந்தரானாலும், அவரது இல்லங்களில் தங்க மாட்டார். அவர்கள் அளிக்கும் பொற்காசுகளையோ, விலையுயர்ந்த பொருட்களையோ தமது கைகளால் தீண்டவும் மாட்டார்.

மகராஜ் ஹரித்துவாருக்கு வருகை தந்த அதே சமயத்தில் அப்பொழுதைய சங்கராச்சாரியாக வீற்றிருந்த ஸ்ரீசாரதா பீடத்தின் தலைவரும் அங்கே முகாமிட்டிருந்தார். பக்தி மார்கத்தை, தேசம் முழுவதும் பரவச் செய்யும், சேவையை செய்து கொண்டிருந்த மகராஜ், **ஸ்ரீசாரதா பீடத்தின்** தலைவருக்கு "**உபநிஷத்பாஷ்யா**" அதாவது உபநிஷத்தின் விளக்கத்தை உபதேசித்தார். பின்னர் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து பத்ரிநாராயண புரத்திற்கு சென்றார்.

மகராஜ் பத்ரிநாராயணபுரத்திற்கு சென்று கொண்டிருக்கும் வழியில், நர்மதா நதிக்கரையில், தலை சிறந்த பக்தரும், தவசீலருமான பல்வந்த்ராவ் என்பவர் தமது நண்பர்களுடன் அங்கே வருகை தந்து மகராஜ் அவர்களிடம் ஆசி பெற்றார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மகராஜ் அவர்களுக்கு, திரு. பல்வந்த்ராவ் அவர்களை காணும் போதே, அவருடைய கர்மவினைகளின் பலனை நன்றாகத் தெரிந்து கொண்டார். அவர் ஒன்றுமே உரைக் காமல், மௌனமாக சென்று விட்டார். சில மணி நேரங்களில், பல்வந்த்ராய் தீவிரமான குளிர்க்காச்சலால் அவஸ்தைப் பட்டார் அவரும், அவருடைய தோழர்களும், "டோலி" (Doli) எந்தி சொல்லப்படும், சுமார் நான்கு அல்லது ஐந்து பேர் மலை, மேல் தூக்கிச் செல்லக் கூடிய, சிறிய வண்டிகளில் தனித் தனியாக அமர்ந்து கொண்டு, பயணித்துக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் ஹரித்துவார் பிரதேசம் முழுவதுமே, மலைகளும், வனங்களும், அழகிய நீரோடைகளுமாக, வருவோர் அனை வரையும் அமைதியாக சிறிது நேரம் அமர்ந்து, தியானம் செய்யக்கூடிய இறைத்தன்மையோடு காட்சியளித்தது.

திடீரென்று பல்வந்த்ராவ், குளிர் காச்சலால் அவதி யுற்றதால், அருகில் இருந்த மருத்துவரை நாடினார். ஆனால் அம்மருத்துவரோ, ஏதோ ஒரு அவசர அலுவலில் , ஈடு பட்டிருந்த காரணத்தால், தவறுதலாக ஒரு மருந்தினை பல்வந்த்ராவிற்கு அளித்து விட்டார். அவர் அளித்த அம்மருந்து, பல்வந்த்ராவின் உடல்நிலையில் மிகவும் அபாயத்தை விளைவிக்கும் மருந்தாகும். ஆனால் இதைப்பற்றி அறியாத பல்வந்த்ராவ், அம்மருந்தை உட்கொண்டு விட்டார். மருத்துவர் அளித்த தவறான, அபாயம் விளைவிக்க கூடிய மருந்து, பல்வந்தராவின் சரீரத்தில், மிக விரைவாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டது அவருடைய தொண்டைப்பகுதி மிகப் பெரியதாக வீங்கவிட்டது.

அவரால் எச்சில் கூட முழுங்க இயலவில்லை, தண்ணீரும் அருந்த முடியவில்லை இதற்கிடையில் உடல் முழுவதும், தீயில் வாட்டியது போன்ற கடுமையான உஷ்ணம் பரவியது. அந்த உஷ்ணத்தை தாங்க இயலாமல், தன்னை சுமந்து கொண்டு வந்த டோலி வண்டியை தூக்கி வந்தவர்களிடம், அருகில் இருந்த நீருற்றுக்கு சமீபத்தில், தம்மை கொண்டு சென்று இறக்கிவிடுமாறு கூறினார்.

உடனே அவர்கள் பல்வந்த்ராவ் அவர்களை, ஒரு நீருற்றுக்கு அருகில், இறக்கி அமர்த்தினர். பல்வந்த்ராவ்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உடனடியாக அந்த நீருற்றில் பாய்ந்து, சென்று அமர்ந்து கொண்டார்.

நடுங்கும் குளிரில், உடல் மிகவும் பலவீனமான நிலையில், பனிக்கட்டியைப் போன்ற குளிர்ந்த நீரில், அமர்ந்து கொண்டிருந்த பல்வந்த்ராவைப் பார்த்து, ஒருவேளை இவர் இறந்து விட்டால், நம்மை விசாரணை செய்வார்கள் என்று பயந்து, அவர்கள் அனைவரும் ஓடிவிட்டனர்.

திக்கற்ற நேரத்தில், தெய்வம் மட்டுமே நமக்கு துணை நிற்கும். நம்முடன் இருக்கும் நண்பர்களும், உறவினர்களும், நம்மிடம் உள்ளம் செல்வம் அனைத்தும் கரைந்துவிட்டால் உடனடியாக ஓடிவிடுவார்கள்! மகான்கள் மட்டுமே நம்மை தேடி ஓடி வருவார்கள்.

அத்தகைய கருணை உள்ளம் கொண்ட, ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள், நடந்த விஷயங்களை, தெய்வீக அகத்தூண்டுதலால் உணர்ந்து கொண்டார். உடனடியாக காவல்துறையை அழைத்து, பல்வந்த்ராவ் அப்பகுதியில் எந்த நீருற்றின் அடியில் அமர்ந்து கொண்டிருந்தாலும், அவரை தம்மிடம் அழைத்து வரச் செய்தார். ஸ்வாமிகள் பல்வந்த்ராவிடம், என்ன மருந்தினை உட்கொண்டீர்கள்? என்று வினவினார். தம்மால் பேச இயலாத காரணத்தால், அம்மருந்து பொட்டலத்தை எடுத்து மகராஜ் அவர்களுக்கு காண்பித்தார் அப்பொழுது மகராஜ் கோபத்துடன், "இது விஷம், இதை எவர் உங்களுக்கு அளித்தது? தூர எறியுங்கள்! என்றார்.

இந்நிலையை சமாளிக்க, ஒரு குவளை நெய் அவருக்கு தேவைப்பட்டது ஆனால் அங்கு அந்த இடத்தில், நெய் வைத்திருப்பவர் வேறு எவரும் இல்லை. இதற்குள் பல்வந்த்ராவ் மயக்கமடைந்தார். அவரை தனது குடிசைக்கு, எடுத்துச் சொன்று தாமே பணிவிடைகளைச் செய்தார். கருணையே உருவான ஸ்வாமிகள், பல்வந்த்ராவின் கழிவுகள் நிறைந்த ஆடையை, தாமே துவைத்து அவரை சுத்தப்படுத்தி, ஒரு பணியாள் செய்யக்கூடிய வேலையை, மகாகுரு ஸ்ரீவாசுதேவானந்த ஸ்ாமிகள், தமது தீவிர பக்தருக்காக , அப்பணியை செய்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நடு இரவில், விழித்துக் கொண்ட பல்வந்த்ராவ் , ஸ்வாமியிடம், ஸ்வாமி, எனக்கு இப்பொழுதே இனிப்புப் பதார்த்தங்கள் வேண்டும்! என்று கேட்டார். ஸ்வாமிகள், பல்வந்திராவின், அந்திம காலம் நெருங்கியதை உணர்ந்து கொண்டார். அவர் உடனே அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்களித் தார்.

நடு நிசியில் எங்கிருந்து, இனிப்பு பலகாரங்களை பெற முடியும்? மிகுந்த குளிர் பிரதேசங்களில், இரவுப்பொழுது துவங்குவதற்கு முன்பாகவே, விரைவாகவே சூரிய வெளிச்சம் மறைந்துவிடும் என்பதால் அனைவரும் தம் கடைகளை மூடி விட்டு சென்றுவிட்டனர். பல்வந்தத்ராவ் இனிப்பு பதார்த்தங் கள் வேண்டும் என்று கேட்டபோது நடு நிசிக்காலமாகும்.

நம் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், ஸ்ரீதத்தரை ப்ரார்த்தினை செய்துவிட்டு, ஒரு பட்சணம் விற்கும் கடைக்குச் சென்றார். அக்கடை மூடப்பட்டிருந்ததால், வெளியில் நின்று கொண்டு "ஒ நாராயணா! ஒ நாராயணா"! என்று உரக்கக் குரல் கொடுத்தார். ஸ்வாமிகளின் குரல் கேட்டு கடையில் அருகில் இருந்த வீட்டிலிருந்து ஒருவர் வெளியே வந்தார்.

உடனே நம் ஸ்வாமிகள், அவரிடம் நடந்த நிகழ்வுகளை கூறி உடனடியாக தமக்கு இனிப்புகள் வேண்டும் என்றும், பொழுது விடிந்ததும், அவருடைய தொகை, அவரிடத்தில் வந்து சேரும் என்று வாக்களித்தார் ஆனால் கடைக்கு சொந்தக்காரர், ஸ்வாமிகளைப் பார்த்து, இரண்டு கைகளையும் கூப்பி, அவரை வணங்கி, அவர் கேட்ட அந்த இனிப்புகளை நிறைய அளவு, ஸ்வாமியின் கைகளில் அளித்து விட்டார். அவர் "ஸ்வாமி தாங்கள் இதற்குண்டான பணத்தை, எனக்கு தர வேண்டிய அவசியமில்லை! காரணம் தங்களைப்போன்ற சாதுக்கள், என்னிடம் யாசகம் வாங்கிக் கொள்வதை, நான் பெரிதும் விரும்புகிறேன்! என்று கூறியவுடன், அவரை ஆசிர்வதித்து விட்டு, ஸ்வாமிகள் விரைந்து குடிசைக்கு, திரும்பினார். பல்வந்த்ராவிற்கு தமது கைகளால், கருணையோடு, ஒரு தாய் உள்ளத்தோடு இனிப்புகளை ஊட்டிவிட்டார்.

மறுநாள் காலை, பல்வந்த்ராவின் உயிர் அமைதியாக பிரிந்துவிட்டது. இந்நிகழ்வு, நம் ஸ்வாமிகளுக்கு நன்றாகத்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தெரியும். ஆகையால் தான், முந்தைய நாள், நடு நிசியில் பல்வந்த் ராவ் விரும்பிக் கேட்ட இனிப்புகளை, வாங்கி வந்து அளித்தார்.

அது மட்டுமல்லாமல், தனது அடியவர்களிடம், பல்வத்ரா வின் புத்திரருக்கு, டெலிகிராம் என்று அக்காலத்தில், இருந்த, தொலைத் தொடர்பு வசதியை பயன்படுத்தி, தகவல் ஒன்றை, உடனடியாக தெரிவிக்கச் செய்தார். பல்வந்த்ராவின் உயிர் உடலைவிட்டு பிரிந்தவுடன் என்ன ஆச்சரியம்! வெகு தொலை வில் இருந்த அவரது புத்திரர், அங்கே விரைந்து வந்துவிட்டார். இவை அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, பல்வந்திரா வின் உயிர் பிரிவதற்கு முன்பே, ஸ்வாமிகள் அந்த இடத்தை விட்டு நீங்கிவிட்டார்.

நம் ஸ்வாமிகள் முறையாக, தீக்ஷை பெற்ற சந்யாச தர்மத்தை ஏற்றுக் கொண்டபடியால், அவருக்கென்று வகுக்கப் பட்ட நியம நிஷ்டைகளை தவறாது, கடைபிடித்து வந்தார். ஆகையால் தான், அவர் இருக்கும் இடங்களின் அருகில் பிணம், தீட்டு, தோஷம், உயிர்ப்பலி முதலிய அமங்கலமான நிகழ்வு களை, முன்கூட்டியே அறிந்து கொண்டு, அந்த இடத்தை விட்டு நீங்கிவிடுவார். அவருடைய பொறுமையை சோதிப்பதற்காக, சிலர் வேண்டுமென்றே, அவர் விரும்பாத அமங்கல செயல் களை, அவர் காணும்படி செய்ததுண்டு. ஒரு சமயம் அவ்வாறு நிகழ்ந்தபோது, நம் ஸ்வாமிகள் அமைதியாக எழுந்து, வேறு இடத்தை நோக்கி சென்றுவிட்டார். அது மட்டுமல்ல அன்று முழுவதும் அவர் தண்ணீர் கூட அருந்தவில்லை.

இவ்வாறு இத்தகைய மகான்களை சோதிக்க நினைப் பவர்களின் தலைமுறையும், வேதனைக்குள்ளாகும். இத்தகைய காரணங்களினால், ஸ்வாமிகள் எங்கு சென்றாலும் தனி யாகவே செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# நான்கு, ஐந்து சாதுர்மாஸ்ய விரதங்கள் – ஹிமாலயபர்வதம் (இமயமலை) 1894 – 1895

NOT FOR SALE

மகராஜ் பத்ரிநாராயணபுரத்திலிருந்து புறப்பட்டு, ரிஷிகேஷத்திற்கு வருகை புரிந்தார். ரிஷிகேஷிலிருந்து, ருத்ரப்ரயாக், குப்தகாஷி, பத்ரிகேதார் முதலிய புண்ணிய ஸ்தலங்களில், ஓரிரு நாட்கள் தங்கி இருந்தார். அப்பொழுது ஸ்ரீமன் நாராயணனே, ப்ரத்யட்சமாக மகராஜ் அவர்களுக்கு காட்சி அளித்து, தான் அளித்த சோதனைகளில், வெற்றி பெற்றதாக அறிவித்தும் விட்டார் அந்த அற்புத நிகழ்வை நாம் இப்பொழுது காணலாம்!

மகராஜ் இமயமலைத் தொடர் வழியாகச் செல்லும் வழியில், ஒரு பெரிய செங்குத்தான மலைத் தொடரைக் கண்டார். அது வழியாக ஏறி, அடுத்த பகுதிக்கு செல்வது என்பது மிகவும் கடினம். ஆகையால், அந்த ஸ்தலத்திற்கு அருகில், கூடாரம் அமைத்து அன்று தங்கினார். மறுநாள், இரண்டு உயரமான தெய்வீக தோற்றமுடைய மனிதர்கள், ஸ்ரீ வாசுதேவ மகராஜ் அவர்களிடம், "இம்மலைத் தொடர் மிகவும் செங்குத்தானது! அதே சமயம் ஆபத்தானதும் ஆகும். ஆகையால் உங்களால், அம்மலையைக் கடக்க இயலாது உடனடியாக திரும்பச் சென்று விடுங்கள்! என்று எச்சரித்தனர்.

மகராஜ் அவர்களிடம், "பகவானை தரிசிக்கச் செல்லும் அடியேன் நான்! " எனக்கு மரணம் நேர்ந்தாலும், அவற்றையும் ஆனந்தமாக ஏற்றக்கொள்வேன்! என்றார். மேலும் அவர் அந்த வழிப்போக்கர்களைப் பார்த்து, "தாங்கள் அப்பகுதியின் வழியாக செல்வதற்கு, எவ்வித வாய்பும் இல்லை என்று கூறினீர்கள்! சரி, அப்படியானால் தாங்கள் மட்டும் எவ்வாறு

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அப்பகுதியின் வாயிலாக, இங்கு வந்திருக்க?" முடியும்? என்று கம்பீரமாக கேட்டார்.

இதைக் கேட்டவுடன், அடுத்த விநாடி, அவ்விருவரும் மறைந்துவிட்டனர். அங்கு அவர்களுக்கு பதிலாக, ஸ்ரீமன் நாரா யணன், ஸ்வாமிகளுக்கு காட்சி அளித்தார். தம் வாழ்க்கையில், பல காலகட்டங்களில், மிகப்பெரிய இடையூறுகள் நேரும் வேளையில், அவற்றை இறைவன் நமக்களித்த தண்டனையாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் அவையாவும் தண்டனைகள் அல்ல! நமக்கு வைக்கப்பட்ட சோதனைகளே ஆகும். அச்சோதனைகளில் நாம் தேர்ச்சி அடைத்து விட்டால், தவம் செய்யாமலேயே, வரங்கள் நம்மைத் தேடி வரும் பாக்கியத்தை பெற்றவர்களாவோம்!

நம் வாசுதேவ ஸ்வாமிகளின் வைராக்கியத்திற்கு வைக் கப்பட்ட சோதனைகளில் இருந்து, வெளியேறியவுடன் இறைக் காட்சியும் காணும் பேறு அவருக்கு கிடைத்தது. இமயமலைப் பகுதியில், மகராஜ் அவர்கள் சென்று கொண்டிருந்த போது, அங்கு தவம் செய்து கொண்டிருந்த பல சாதுக்களும், ஸ்ரீவாசு தேவ ஸ்வாமிகள் மிகப்பெரிய யோகிஸ்வரர் என்பதை உணர்ந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் ஸ்வாமி களிடம், நமஸ்காரம் செய்து, ஆசியைப் பெற்றுக் கொண்டனர். அப்பொழுது, அங்குள்ள அனைவருமே ஒரு அற்புதக் காட்சியைக் கண்டனர். மகராஜ் அங்குள்ள ஒரு ஏரியின் வழியாக, நடந்து வந்து கொண்டிருந்தபோது, திடீரென்று ஏரியின் உள்ளிருந்து ஒரு யோகி வெளியே வந்தார்.

தண்ணீருக்குள்ளிருந்து வெளியே வந்த யோகி, நம் ஸ்ரீவாசுதேவனாந்த ஸ்வாமிகளை வணங்கினார். ஸ்வாமி களும், தமது கரங்களை உயர்த்தி, அவரை ஆசிர்வதித்தார். அவர் மீண்டும் தண்ணீருக்குள், சென்று மறைந்துவிட்டார். இக்காட்சியை அக்கரையில், நின்று கொண்டிருந்த அவனை ரும் கண்டு, இம்மகானின் தரிசனம் இந்த இடத்தில் நமக்கு கிடைத்திருப்பது, நாம் செய்த பூர்வஜென்ம புண்ணியமே ஆகும்! என்று ஸ்ரீவாசுதேவானந்த ஸ்வாமிகளை நமஸ்காரம் செய்து ஆசிர்வததம் பெற்றனர்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஹிமாசல பிரதேசத்தில், பல்வேறு தர்ம சத்திரங்களும், அன்னதானக் கூடங்களும் நிறுவப்பட்டு, தீர்த்த யாத்திரை செய்பவர்களுக்கு, அனைத்து வசதிகளும், செய்து கொடுக்கப் பட்டன. ஹிமாசல பிரதேசத்தின் குளிர், தாங்கிக் கொள்ள இயலாத ஒன்றாகும் ஆகையால், தீர்த்த யாத்திரை செய்யும், ஏழைகளுக்கும், முதியவர்களுக்கும், அறக்கட்டளையின் சார் பாக கம்பளித் துணிகள் வழங்கப்படும் மிகச் சிறந்த சேவையை அங்குள்ளோர் செய்து வந்தனர்.

ஆனால் ஸ்ரீவாசுதேவானந்த ஸ்வாமிகள், கையில் இரண்டு கோவணங்களும் ஒரு குவளையும் மட்டுமே வைத் திருந்தார். தன்னுடைய உடலில் கம்பளித் துணிகள் ஸ்பரிசிப் பதை அவர் விரும்பவில்லை. செம்மறி ஆடுகள் கொல்லப் பட்டு, அதன் மூலம் கிடைக்கும், கம்பளித் துணியை அவர்க கையால் தொடுவதற்கும் விரும்பவில்லை ஆகையால், அவர் வழக்கம் போல இடையில் ஒரு சிறிய துணியை மட்டுமே உடுத்தியிருந்தார். அவர் ஒரு போதும் மேல் சட்டை அணிந்த தில்லை. அக்னியில், தேவதைகளை ஆவாஹனம் செய்து, மந்திரங்கள் ஜெபித்த காரணங்களால், அக்னியில் குளிர்காய் வதை அவர் ஒரு போதும் விரும்பவில்லை. இத்தனை வைராக் கியத்துடன் அவர், ஹிமாசலபிரதேசம் முழுவதும், ஆனந்தமாக வலம் வந்தார். அவர் தன்னுடைய பாதுகாப்பாக ஸ்ரீதத்தாத் ரேயர் இருக்கும் போது, தமக்கு வேறு சாதாரண கருவிகள் தேவையில்லை என்று மறுத்துவிட்டார்.

NOT FOR SALE

அவரிடம், ஆசீர்வாதம் பெறுவதற்காக வந்திருந்த சாதுக் கள், அன்பளிப்பாக, கம்பளிப் போர்வைகளும், துணிகளும் அளித்த போதும் அவற்றை பெற்றுக்கொண்டு, ஏழைகளுக்கு அளித்து விட்டார்.

ஹிமாசல பிரதேசத்தில், அனைவரும் நம் ஸ்வாமிகளின் மனோவலிமையைக் கண்டு, ஆச்சரியமடைந்தனர். அந்த குளிரிலும் மூன்று வேளையும் நீராடி, காயத்திரி மந்திரம் கம்பீரமாக சொல்லிக் கொண்டிருந்தார். இத்தகைய நிலை ஒரு மகாபுருஷருக்கே ஏற்படும் நிலையாகும்.

பத்ரிநாராயணன் ஆலயத்தில், பக்தர்கள் எவருக்கும் கர்பகிருஹத்தில் நுழைவதற்கு அனுமதி இல்லை. வெளியே

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இருந்து தான் தரிசிக்க வேண்டும். அதற்கு காரணம் அத் திருவுருவச் சிலை முழுவதுமே, சிந்தாமணி என்றும் அழைக்கப் படும், கிடைத்தற்கரிய கல்லினால் உருவாக்கப்பட்டது. அச் சிலையின் சக்தியைப்பற்றி, நாம் அறிந்து கொள்ள வேண்டு மென்றால், அக்கலைக்கொண்டு, இரும்புத் துண்டுகளை மென்மையாக ஸ்பரிசித்தால், உடனடியாக அத்தனை இரும்புத் துண்டுகளும் சுத்த தங்கமாகவே மாறிவிடும், பவித்ர தன்மையை கொண்ட கல்லாகும் இரும்பு மட்டுமல்ல, மற்ற எல்லா உலோகங்களையும் தங்கமாக மாற்ற வல்லது. ஆகை யால் அத்திருவுருவச் சிலைக்கு அருகில் எவருமே செல்ல இயலாது.

ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளுக்கு, மட்டும் அத்திருவுருவச் சிலையை, ஸ்பரிசிக்கும் அதிகாரம், வழங்கப்பட்டது. மகராஜ் அவர்கள் இரும்புத் துண்டுகளுக்கும், தங்கப் பாளங்களுக்கும் எந்த வித்தியாசமும் பார்ப்பதில்லை. அவருடைய பார்வையில் இவை இரண்டுமே ஒன்றுதான்!

ஒருமுறை ஸ்வாமிகள், கங்கோத்ரியில் அதிகாலை நீராடிய பொழுது, மிகக் கடுமையான குளிர்காலமானதால், அவரு டைய கை, கால்கள் விறைத்துவிட்டன. உடல் ஒரு அங்குலம் கூட அசையவில்லை. உடலின் எப்பகுதியையும் அவரால் அசைக்க முடியவில்லை. பனிக்காலமாக இருப்பினும், அதி காலையில் நீராடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பனிமழை பெய்து, இயற்கையை, முழுவதுமாக உறைய வைத்த, குளிர்காலத்தில் ஒரு கோவணத்துடன், கங்கோத்ரி நதியில், அதிகாலையில் நீராடி விட்டு, ஆலயத்தில் நுழையும் நேரத்தில், இத்தகைய அனுபவம் அவருக்கு ஏற்பட்டது.

ஸ்ரீதத்தரை ப்ரார்த்தனை செய்தார். உடனே எங்கிருந்தோ ஒருவர், அவ்வேளையிலும் ஒரு பானையில், நெருப்புத் துண்டங்களைக் கொண்டு வந்து, ஸ்வாமிகளின் அருகில் வைத்தார். சில விநாடிகளில் ஸ்வாமிகளின் உடல் அசைய ஆரம்பித்து விட்டது. ஸ்வாமிகள் அனைவரிடமும் சரீர இச்சை களை, தேவைகளை ஆத்மாவின் மூலம் கட்டுப்படுத்தும் பொழுது தான் ஆத்மாவில் இறைவனை உணர இயலும் என்று போதித்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு கிராமத்தை கடந்து வரும் பொழுது, ஸ்வாமிகள் ஆச்சார அனுஷ்டானங்களை தவறாது கடைபிப்பார். ஆதலால் நித்ய பூஜை செய்பவரின், இல்லத்தை தேடினார். அப்பொழுது தான், அவருக்கு ஸ்ரீதத்தர், அச்சிறிய கிராமத்தில் வசித்த, நூறு குடும்பங்களும் முகமதியர்கள், என்பதை நினைவுறுத்தினார். உடனே நம் ஸ்வாமிகள், கிராம எல்லைக்கு சென்று விட்டார். அப்பொழுது இரவு பொழுதானதால், காட்டைக் கடந்து செல்ல இயலாத காரணத்தால், அங்கிருந்த ஒரு பெரிய பாறாங்கல்லின் மீது உறங்கிவிட்டார். நடுநிசியில் நன்றாக மழை வேறு பெய்தது. ஸ்வாமிகள், அதைப்பற்றியெல்லாம் இலட்சியம் செய்யாமல் பட்டினியாகவே ஆனந்தமாக உறங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## ஆறாவது சாதுர்மாஸ்ய விரதம் (ஜாலவன்–ஹரித்வார்) – 1896

*மகராஜ் இமயமலையில் இரண்டு சாதுர்மாஸ்ய விரதங்களை, மேற்கொண்டிருக்கிறார். ஆனால் அத்தகைய சமயங்களில், அவர் வசித்த ஸ்தலங்கள், பற்றிய முழுமையான விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. இரண்டு வருடங்கள் இமய மலையில் ஒரு வேளை, தனிமையில் அமர்ந்திருக்கக்கூடும் என்ற கருத்தும் வைக்கப்பட்டுள்ளது. 1894 ஆண்டிற்குப்பிறகு 1896இல் ஜாலவன் என்ற இடத்திலிருந்து ஹரித்துவாருக்கு வருகை தந்தார். மகராஜ் ஹரித்துவாரில், ஆறு மாதங்கள் தங்கி இருந்தார். பின்னர் அவர் ப்ரம்மவிரத்தை நோக்கிச் சென்றார். பல இடங்களில், அவருக்கு பல சோதனைகள் ஏற்பட்டன. உதாரணமாக மகராஜ் முறையாக பூஜைகள் செய்யும், மூன்று அந்தணர்கள் இல்லங்களில், மட்டும் யாசகம் வாங்கி உண்பார். ஆகையால், அத்தகைய அந்தணர்கள், அவர் சென்ற பல கிராமங்களில், கிடைக்காத காரணத்தால், பல நாட்கள் பட்டினியாகவே கிடந்தார். இக்கருத்தை வரைவதற்கு மனம் வேதனைப் படுகின்றது. அவ்வாறு ஒருமுறை தொடர்ச்சியாக கிட்டதட்ட பதினெட்டு நாட்கள் பட்டினி கிடந்துள்ளார். ஆனால் என்ன அற்புதம்! அவருடைய உள்ளமும் உடலும் சோர்வடைய வில்லை! பட்னியாக இருந்தபோதும், உபநிஷத்துக்களையும், புராணங்களையும் அற்புதமாக விளக்கிக்கூறுவார்.*

*ப்ரும்மவிரதத்தை அடைந்ததும், கங்கை நதிக்கரையில் அமைந்த, இராமரின் ஆலயத்திற்கு வந்தார். கங்கை நதிக் கரையில் சாதுவும், மிகச்சிறந்த பண்டிதருமான ஸ்ரீகண்பதி பூவா, அங்குதான் தங்கியிருந்தார். அவரது சகோதரனின் மகன், சில மத குருமார்களின் வற்புறுத்தலால், முகமதியனாக,*

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இஸ்லாமிய மதத்திற்கு மாறிவிட்டான். அவன் மாறியதோடு நில்லாமல், தனது மனைவியையும் கட்டாயப்படுத்தி, தன்னுடன் புறப்பட்டு வந்துவிடுமாறு வெளியூரில் இருந்து தகவல் அனுப்பினான்.

அவனது மனைவி, கணவனின் கூற்றை ஏற்கவில்லை. நமது சமயமும், சாஸ்திரங்களும் பண்பாடும், நெறிகளும் நம்மை பண்படுத்தி தூய பக்திமார்க்கத்தில், நம்மை அழைத்துச் செல்வதற்காக காத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு இருக்க, நாம் ஏன் மதம் மாற வேண்டும்?

நமது மதத்தின், கலாச்சாரத்தின் மகத்துவத்தை உணரத் தவறி, பிற மதங்களுக்கு மாற வேண்டும் என்று நினைப்பதே பாவமாகும்! என்பதை நன்கு உணர்ந்து கொண்டாள். பதவிக் காகவும், பணத்திற்காகவும், புகழுக்காகவும் மதங்களை விற்பவர் மீது, அவள் சிறிதும் நம்பிக்கை அற்றவளாக இருந்தாள். ஆகையால், அவள் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். கணவனுடன் செல்வது வேறு, ஆனால், கணவன் காட்டிய வழியில் செல்வது வேறு! இந்த முடிவை ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகளிடம் விட்டு விடுவோம்! என்ற முடிவிற்கு வந்தாள். ஆகையால் மகராஜ் அவர்களை காண விரைந்து வந்தாள்.

பொறுமையின், அமைதியின் திருவுருவான மகராஜ் அவர்களிடம், "ஸ்வாமி நான் இப்போது என்ன செய்வேன்! எல்லோரும் என்னை வற்புறுத்தி, கணவரோடு வாழும் வாழ்க்கைதான் சிறந்தது என்று கூறுகின்றனரே! நான் எவ்வாறு, எனது சமயத்தையும், கடவுளையும் புறக்கணித்தவ ரோடு இணங்கி அன்புடன் வாழ இயலும்? நான் அவரோடு செல்லத்தான் வேண்டுமா? தாங்கள் என்ன தீர்மானம் எடுத்தாலும், அதற்கு நான் கட்டுப்படுகிறேன்! என்றாள். ஆச்சரியமூட்டும் வகையில் ஸ்வாமிகள் அந்தப்பெண்ணிடம், "அம்மையே, தாங்கள் தங்களின் ஆத்மாவின் விருப்பத்திற்கு எதிராக, உங்கள் கணவரோடு செல்லத் தேவையில்லை! வேத சாஸ்திரங்களில் கூறியவாறு, உன் கணவன் என்று புனித மாக்கப்படுகிறாரோ! அன்று அவருடன் நீ செல்லலாம்! என்றவுடன் அப்பெண் மகிழ்ந்தாள்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

அவளுடைய கணவன் இல்லத்திற்கு வந்தவுடன், ஸ்வாமிகள் கூறியவாறே, அவருடன் வர மறுத்தாள். ஆனால் ஸ்வாமிகளின் இக்கூற்றை அவள் கணவர் நிராகரித்து விட்டார்.

தனது கணவரின் மனநிலை, நிச்சயமாக ஒரு நாள் மாறும் என்ற நம்பிக்கையுடன், அப்பகுதியில் தனது குழந்தையுடன் வசிக்கத்துவங்கினாள். திடீரென்று, அவளது ஐந்து வயது குழந்தையை, ஒரு தீய ஆவி, பிடித்துக் கொண்டு விட்டது! அக் குழந்தை, அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து கொண் டிருந்தது. ஸ்வாமிகளிடம் தனது குழந்தையை சுமந்து கொண்டு ஓடி வந்தாள் அந்தப் பெண்மணி.

ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள் ஒரு மந்திரத்தை ஜபித்தார் பின்னர் **புருஜ்பத்ரா** என்று சொல்லக்கூடிய, (இமயமலையில் அதிகமாக காணப்படுகின்ற, ஒரு வகை மரங்களின் மேல் பட்டையில்) ஓலையில் அம்மந்திரத்தை எழுதி தாயத்து வடிவில், அதை கோர்த்து, அக்குழந்தைக்கு அணிவிக்குமாறு கூறினார். புருஜ்பத்ரா (Burjapathra) என்ற வகை மரங்களின், மேல் பட்டை மிருதுவான காகிதச்சுருள் போன்று இருக்கும் தன்மையைக் கொண்டது ஆதிகாலம் முதல் ரிஷிகளும், சித்தபுருஷர்களும் மந்திரங்களை, ஸ்லோகங்களை இந்த மரப்பட்டையில் தான் அதிகமான அளவில் எழுதி வைத்திருக்கின்றனர். பல நூற் றாண்டுகளைக் கடந்தாலும் இப்பட்டைகளில் எழுதப் பட்டவை ப்ரகாசமாக இருக்கும் தன்மையை உடையது.

ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள் விதியை, இயற்கை நியதிகளை, கர்மாவை மாற்றுவதில், சிறிதும் விருப்பம் இல்லாதவர். மகானாகவே இருந்தாலும், அவர் ஒரு சாதாரண மானுடராக அனைத்து சோதனைகளையும் கடந்து வந்தார். ஆகையால், அவருக்கு அக்குழந்தையின் வருங்காலம் மிகத்துல்லியமாக தெரிந்துவிட்டது. ஸ்வாமிகள், குழந்தையின் தயாரிடம், தாயே! இம்மந்திர தாயத்தை, உன் குழந்தையின் கழுத்தில் அல்லது இடையில் கட்டிவிடு! ஆனால் ஒன்றை மட்டும் நன்றாக நினைவில் கொள்வாயாக! எக்காரணத்தை மட்டும் குழந்தை யிடம் இருந்து, இம்மந்திரதாயத்தை விலக்கி விடாதே!

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விளைவுகள் விபரீதமாக இருக்கும்! என்று எச்சரிக்கவும் செய்தார். அந்த அம்மையார் ஸ்வாமிகளுக்கு நன்றி தெரிவித்து, தன் மகனோடு வீடு திரும்பினார். அன்று முதல் ஒரு மாத காலத்திற்குள் அச்சிறுவனின் உடல் நிலை வேகமாக குணமடைந்து பழைய நிலைக்கு திரும்பியதும், அத்தாயார் மனம் மகிழ்ந்தார்.

ஆனால் அதன் பின்னர் விதிவசத்தால் ஸ்வாமிகள் அளித்த மந்திர தாயத்தின் நினைவே அவருக்கு மறந்து போய் விட்டது. "இதுவே விதியின் விளையாட்டாகும். ஒருநாள் அவளது குழந்தை, அவளிடம் ஓடிவந்தான். அப்பொழுது அவள் வீட்டுவிலக்கு என்ற காரணத்தால், குழந்தையை தீண்டுவதற்கு தயங்கினாள். காரணம், தனது குழந்தையின் கையில், மகராஜ் அளித்த, மந்திரதாயத்து இருக்கிறது.

தாம் இத்தகைய உடல்நிலையில், அத்தாயத்தை தீண்டிவிட்டால், ஒருவேளை தனது புத்திரனுக்கு ஆபத்து வருமோ, என்று எண்ணி அஞ்சினாள். உடனடியாக அத்தாயத்தை கழற்றச் செய்து, பூஜை அறையில் வைக்கச் சொல்லி விட்டாள் ஆனால் மகராஜ் அவர்கள், எக்காரணத்தை முன்னிட்டும் அத்தாயத்து அக்குழந்தையின் கையில் இருந்து, அகற்றக் கூடாது, என்று உத்தரவிட்டிருந்தார் விதியின் வசம் சிக்கிக் கொண்டவர்கள் அதை தாண்டி வெளியே வருவது சாமான்ய காரியமல்ல!

தாயத்தை அவிழ்த்தவுடன், அக்குழந்தையின் உறவினர் ஒருவர், சோதனையாக அவர்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் அக்குழந்தையின் தாயிடம், தாம் சிறிது நேரம் அக் குழந்தையை தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்வதற்கு, அனுமதி கேட்டார். அப்பொழுதாவது, குழந்தையின் கையில், பாதுகாப்பு தாயத்து இல்லை என்ற உணர்வே அவளிடம் இல்லை. அவளும் சம்மதித்துவிட்டாள். அவளது உறவினரும் குழந்தையை தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வெளியே வந்துவிட்டார்.

கையில் அக்குழந்தையுடன் சிறிது தூரம் சென்று கொண்டிருந்தவர், திடீரென்று சில இரைச்சல் ஒலிகள் கேட்கவே, அத்திசையை நோக்கித் திரும்பினார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அங்கே ஒரு இடுகாடு இருந்தது. அப்பொழுதுதான் ஒரு முகமதியரின் சடலத்தை, அவரது உறவினர்கள் எடுத்துக் கொண்டு வந்து புதைத்து விட்டுச் சென்றனர். கையில் குழந்தையை வைத்துக் கொண்டு, அக்காட்சிகள் முழுவதையும் வேடிக்கை பார்த்தவாறே நின்று கொண்டிருந்தார்.

அப்பொழுதுதான் அந்தக் கோர சம்பவம் நடந்துவிட்டது. பிணம் புதைக்கப்பட்ட அத்திசையை நோக்கி, அக்குழந்தை தன் கைகளை நீட்டியது. அவ்வளவுதான்! பல வருடங்கள் இந்த சந்தர்ப்பத்திற்காக எதிர்நோக்கி, காத்து கொண்டிருந்ததை போல, திடீரென்று அந்த சடலத்திலிருந்து, ஒரு உருவம் மேலேழுந்து விரைந்து வந்து, அக்குழந்தையின் கழுத்தை ஆக்ரோஷமாக பற்றிக் கொண்டுவிட்டது. அங்கிருந்த விலங்குகள் அனைத்தும், ஓங்காரமாக சப்தமிட்டு, இந்நிகழ்வை எதிர்த்தன.

அக்குழந்தையின் உறவினருக்கு, இதைப்பற்றி எதுவுமே தெரியாத காரணத்தால், அவர் அங்கேயே நின்று கொண்டு குழந்தைக்கு வேடிக்கை காண்பித்துக் கொண்டிருந்தார். முகமதிய சடலத்திலிருந்து எழுந்த ஆவி, குழந்தையின் கழுத்தைப்பற்றவும், அக்குழந்தைக்கு ஸ்வாசம் அடைத்துக் கொண்டது. அக்குழந்தை கீழே விழுந்து கை கால்களை உதற ஆரம்பித்து விட்டான். இதைப்பார்த்து அக்குழந்தையின் உறவினர் பயந்து விட்டார். நன்றாக இருந்த குழந்தைக்கு, திடீரென்று என்ன நேர்ந்தது? ஏன் இவ்வாறு அவஸ்தைப் படுகிறான்? உடனே மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும், என்று நினைத்து அக்குழந்தையை தமது கைகளால் தூக்குவதற்கு முற்பட்டார்.

ஆனால் அதற்குள் அக்குழந்தையின் விதி முடிந்துவிட்டது. கைகால்கள் துடிக்க, முகம் வெளிறி, தன்னுடைய தாயை நினைத்து அம்மா என்று அழைத்தவுடன் அக்குழந்தையின் ஸ்வாசம் பிரிந்து விட்டது.

அங்கு சுற்றியிருந்த கிராமத்து வாசிகள் அனைவருமே இதை பார்த்து அதிர்ச்சியடைந்தனர். என்ன காரணம் என்பது எவருக்கும் தெரியவில்லை! இதே சமயத்தில் தகவலை அறிந்த அப்பெண் துடித்துப் போய்விட்டாள்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள், ஆசிர்வதித்த குழந்தைக்கு ஏன் இந்த கதி ஏற்பட வேண்டும்? என்று பலவாறு புலம்பிய பின்னர் தான், அவளுக்கு, ஸ்வாமிகளின் கட்டளை நினைவிற்கு வந்தது. "ஐயகோ! ஸ்வாமிகள் எக்காரணத்தை முன்னிட்டும் அவர் அளித்த மந்திர தாயத்தை அவிழ்க்க வேண்டாம் என்று கூறினாரே? இந்தப்பாவி அவருடைய உத்தரவை உதாசீனப்படுத்திவிட்டேனே! அதற்கு கிடைத்த தண்டனைதான் இது! என்று அழுது புலம்பினாள்.

அப்போது என்ன ஆச்சரியம்! இறந்து கிடந்த சிறுவனின் சடலத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது. "ஏ பெண்ணே! உன் வாழ்வில் நடந்த இத்தனை துர்ச்சம்பவங்களுக்கும், என்ன காரணம் என்று தெரியுமா உனக்கு? சொல்கிறேன் கேட்பா யாக! சென்ற ஜென்மத்தில், நீ எனக்கு பட்ட கடனை தீர்க்க வில்லை! நான் உன்னிடம் இருந்து வரவேண்டிய தொகையை எதிர்பார்த்து, இறுதியாக ஏமாந்து போய் அதே வேதனையில் என் உயிரை விட்டுவிட்டேன்!

அதன் காரணமாகவே, ஆவியாய் அலைந்து கொண்டிருக் கின்றேன்! இந்த ஜென்மத்தில் உன்னையும் உனது கணவரை யும் பிரித்து வைத்தேன்! அவரை மதம்மாற வைத்து உனக் கெதிராக தூண்டிவிட்டேன்! உனக்கு நிறைய குழந்தைகள் கருவிலேயே மடிந்ததன் காரணமும் இதுவே! இப்பொழுது உனது குழந்தையும் உயிரை விட்டுவிட்டான்! இனியாவது எனது கடனை நான் கூறியவிதமாக செலுத்திவிடு!" என்று எச்சரித்தது. அக்கூற்றின்படி, சென்ற ஜென்மத்தில் வாங்கிய கடன் தொகையை, செலுத்திய பிறகே அப்பெண்ணால், அவர் கணவனை திரும்பப் பெறமுடிந்தது.

இச்சம்பவம் இந்ததிவ்ய சரித்திரத்தை பாராயணம் செய்து கொண்டிருக்கும். நமக்கு உணர்த்தும் கருத்து என்னவென் றால், நாம் இந்த ஜென்மத்தில், எவரிடமிருந்தாவது பெற்ற கடன் தொகையை, இந்த ஜென்மம் நிறைவடைவதற்குள், தீர்த்து விடவேண்டும்! அவ்வாறு இல்லையெனில், இதற்காக இனியொரு ஜென்மம் எடுத்து தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும்!

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒருமுறை மகராஜ் கான்பூரில் வசித்தபோது, அவரைத் தரிசிக்க வந்த ஒரு அந்தணர், ஒரு விசித்திரமான கோரிக் கையை வைத்தார். அது என்ன வென்றால், அவருடைய செல்வபுதல்விக்கு, வயது பத்துக்குமேல் ஆகிவிட்டது. பத்து வயதிற்கு மேல் பெண்ணிற்கு திருமணம் செய்து வைக்க வில்லையென்றால், அப்போதைய சமுதாயம் பெற்றோரைத் தூற்றும். அது மட்டுமல்லாமல் அப்பெண்ணிற்கு ஏதோ ஒரு குறை இருப்பதாக, ஊர் முழுவதும் வதந்தி பரவிவிடும்.

அதன்பிறகு அப்பெண்ணை, திருமணம் செய்து கொள் வதற்கு, எவருமே முன்வரமாட்டார்கள். எவராவது மனைவியை இழந்தவர்கள், இரண்டாம் தாரமாகவோ, அல்லது மூன்றாம் தாரமாகவோ மணம் செய்து கொள்ள பெண் வீட்டாரை, பெண் கேட்டு வற்புறுத்துவதும் அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்தது. இவ்வாறாக அந்த அந்தணரின் புதல்வி, பத்து வயதைக் கடந்து விட்டதால், அவருக்கு ஒரு நல்ல வரனைப் பார்த்து திருமணம் நிச்சயிக்க ஏற்பாடு செய்தார்.

ஆனால் அப்பெண் தனது தந்தையிடம் "தாங்கள் எனக்கு பார்த்திருக்கும் வரன் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்"! என்றாள். இதைக் கேட்ட அவளது தந்தை அதிசயமும், அதிர்ச்சியும் அடைந்தார். காரணம், அக்காலத்தில் இவ்வாறெல்லாம் கேட்பதற்கு, பெண்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

ஆயினும் தான் சகல உரிமைகளையும், அளித்து மிகவும் அருமையாக வளர்த்த, ஒரே புதல்வி என்ற காரணத்தால், அவளது தந்தை, அவளிடம் "குழந்தாய், உனக்கு நான் பார்த்திருக்கும் வரன், அரசாங்க உத்யோகத்தில் நல்ல பணியில் இருக்கிறார்! ஆகையால் நீ வசதிகளைக் குறித்தும் வருங் காலத்தைக் குறித்தும் எந்தக் கவலையும் கொள்ள தேவை யில்லை!" என்றார்.

தனது தந்தையானவர் இவ்வாறு கூறுவதைக் கேட்ட அப்பெண் சிரித்துக்கொண்டே "தந்தையே என்ன காரியம் செய்து விட்டீர்கள்? நம்முடைய குல வழக்கங்கள் பற்றி தங்களுக்கு தெரியாதா? இந்த குலத்தில் பிறந்த காரணத்தால்,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

குலதர்மத்தை அனுசரித்து, தினமும் அதிகாலையில் நீராடி, யாகம் வளர்த்து, எல்லா தெய்வங்களையும், தேவதைகளையும் வழிபட்டு, வீடுகளுக்கு சென்று யாசகம் பெற்று உண்ணும் அந்தணரை, மட்டுமே நான் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன்! இப்படி தங்களின் முன்னால் நான் பேசுவதற்காக என்னை மன்னியுங்கள்!

நான் வசதிவாய்ப்புகளை விட, குல தர்மத்தை அனுசரிப்பவரையே, திருமணம் செய்து கொண்டு சாதாசர்வகாலமும் பூஜைகளும், யாகங்களும், மந்திர உச்சாடனங்களும் எங்கள், இல்லத்தில் முறையாக நடத்த வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் தந்தையே!" என்று தன் புதல்வி கூறியதை கேட்டு வியந்தார்.

அந்தணருக்கு இப்பொழுது என்ன தீர்மானம் எடுப்பது என்று புரியவில்லை! மகராஜ் அவர்களிடம் "ஸ்வாமி இதற்குண்டான தீர்மானத்தை தாங்களே கூற வேண்டும்!" என்றார். மகராஜ் அவரிடம், "உன் மகள் முற்பிறவியில் யோகியாக இருக்க முயற்சி செய்து, ஆனால் அதில் வெற்றி பெற முடியாமல், தோற்றுப் போனாள்! அதன் காரணமாகவே, இந்த ஜென்மத்தில் யோகியின் வாழ்க்கையை, வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறாள்! அவளுடைய விருப்பத்திற்கு மாறாக எதுவும் செய்துவிடாதே! அவ்வாறு செய்தால், அவள் வாழ்க்கையையே ஒரு முடிவுக்கு கொண்டு வந்துவிடும்! பொறுமையாக இரு! அவருக்கு ஏற்ற நல்ல வரனை இறைவன் அவளிடத்தில், காண்பிக்கும் பொழுது அவளே தேர்ந்தெடுத்துக் கொள்வாள்!

அதுவரை பொறுமையாக இரு! என்று உபதேசித்தார். மகராஜ் அவர்களின் கட்டளையை ஏற்று, அந்தணர் வீடு திரும்பினார். சில நாட்களில் அவளுடைய இல்லத்திற்கு அருகில் இருந்த, ஒரு தர்மசத்திரத்தில் ஒரு அந்தணர், வெளியூரில் இருந்து வந்து தங்கியிருந்தார்.

அந்த அந்தண இளைஞர், இறையுணர்வுடன், எப்போதும் இறைவனின் நாமத்தையே உச்சரித்துக் கொண்டும், தனக்கென்று எதுவும் சேமித்து வைத்துக் கொள்ளாமல்,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வீடுகளுக்குச் சென்று யாசகம் பெற்று உண்டு வாழ்க்கையை நடத்தி வந்தார். இதை தொடர்ந்து கவனித்து வந்த அப்பெண், அவரையே திருமணம் செய்து கொள்ள விரும்பினார். அவளது தந்தையும், அவ்வரனை நிச்சயம் செய்வதற்காக அந்தணரிடம் சென்றார்.

ஆனால், அந்த அந்தணர் கூறிய பதிலால், அப் பெண்ணின் தந்தை வேதனையுற்றார். அந்த இளைஞன் , தமக்கு திருமணம் செய்து கொள்ள விருப்பமே இல்லை என்றும் தான் ஒரு யோகியாக விரும்புவதாகவும் கூறிவிட்டார். பெண்ணைப் பெற்றவருக்கு என்ன செய்வது என்று தெரிய வில்லை! அவர் உடனே ஸ்வாமிகளை தரிசிக்கச் சென்றார். வாசுதேவ ஸ்வாமிகளுக்கு முக்காலமும் தெரியும் ஆதலால் அவர் அந்த இளைஞனை அழைத்து வருமாறு கூறினார்.

மகராஜ் அந்த இளைஞனிடம் “உன்னுடைய யோகப் பயிற்சியை ஆதரித்து, உன்னை ஒரு யோகியாக உருவாக்கு வதற்காக அவதரித்தவளே அப்பெண் ஆவாள்! ஆகையால் அப்பெண்ணை திருமணம் செய்து கொண்டால் நீ நிதைத்தது நிச்சயமாக நிறைவேறும்!” என்றார்.

ஸ்வாமிகளின் கூற்று, ஒரு நாளும் பொய்க்காது என்பதை அந்த இளைஞன், நன்கு அறிவான். ஆதலால் திருமணத்திற்கு சம்மதம் அளித்துவிட்டான். இதைக் கேள்வியுற்ற அப்பெண் ஸ்வாமிகளைக் காண ஓடி வந்தாள். அவள் ஆனந்தமாக “ஸ்வாமி என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றி விட்டீர் கள்! என்து இல்லறவாழ்க்கை, ஒரு தவவாழ்க்கையாக இருக்க வேண்டும்! உங்களின் அனுக்ரஹம் இருந்தால்தான் அதுவும் சாத்தியமாகும்!” என்று கண்ணீர்மல்க வேண்டினாள். மகராஜ் அவளை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

மகான்களின் கருணை, அளவிட இயலாதது. நாம் அவர் களின் முன்னால் நின்ற மாத்திரத்தில், நமது உள்ளத்தின் உணர்வுகளை மதித்து, அவற்றை ஏற்றுக்கொண்டு நிறை வேற்றியும் வைக்கும் இத்தகைய மகான்களே, இன்றளவும் இப்பிரபஞ்சம் அழியாமல் காத்து, மக்களை இரட்சித்து வருகின்றனர்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வேத சாஸ்திரங்களை, உபநிஷத்துக்களை, புராணங்களை விமர்சனம் செய்வதையோ, விவாதத்திற்குரிய பொருளாக அவற்றை எடுத்துக் கொள்வதையோ, அல்லது அவற்றை வளர்க்கவேண்டும் என்று சாதாரண மானுடர்களாகிய நாம் நினைப்பதோ, நமது அறியாமையாகும் என்று மகராஜ் அடிக்கடி உபதேசிப்பார்.

நமது கற்பனைக்குக் கூட எட்டாத அதிசயங்களை, தன்னகத்தே கொண்டிருப்பதுதான் வேதங்களுடைய மகத்துவமாகும், என்று உபதேசித்து வந்தார். ஒருநாள் ப்ரயாக் (Prayag) என்ற பகுதியில், வேத சாஸ்திர ஞானங்களைக் குறித்த, தர்க்க விவாதங்கள், நடத்துவதற்காக, தலைசிறந்த பண்டிதர் குழு ஒன்று தீர்மானித்தது.

மகராஜ், அவர்களுக்கு இந்த விவாத மன்றத்தில் எவ்வித ஈடுபாடும் இல்லை. ஆயினும் மௌனமாக இருந்தார். இந்த விவாதத்தில் கலந்து கொள்வதற்காக, இந்தூர் மகராஜ் என்பவர் தனது சிஷ்யரான, பண்டிட் சாகராம் சாஸ்திரியை அனுப்பி வைத்தார். சாகாராம் சாஸ்திரி மிகச் சிறந்த ஒரு பண்டிதர் மட்டுமல்லாமல், மகராஜ் ஸ்ரீவாசுதேவானந்த சரஸ்வதியின் மீது மிகுந்த அன்பும், மரியாதையும் கொண்டவர். அவர் ப்ரயாக் வரும் வழியில், வாசுதேவமகராஜ் அவர்களிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக வந்தார். நம் மகராஜ் மிகவும் தெளிவாக, வேத சாஸ்திரங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றின் கையாளும் முறையைப் பற்றியும் அந்த அந்தணருக்கு எடுத்துரைத்தார்.

மகராஜ் அந்த பண்டிதரிடம் "வேதங்கள் பிறப்பும், இறப்பும், அழிவும் அற்றவை! மனிதர்களின் அறிவுத்திறனுக்கு எட்டக்கூடியவை அல்ல! அவற்றை குறித்து விவாதம் செய்வது தவறாகும்! அவற்றை நாம் வளர்த்து வருகிறோம் என்று நினைப்பதும் தவறு! ஜகத்குரு ஆதிசங்கராச்சாரியார் அனைத்தையும் உணர்ந்தவர்! அவரும் வேதங்களில் எந்த மாற்றத்தையும் செய்வதை ஆதரிக்கவில்லை! மேலும் இத்தகைய உயர்வான நமது வேதங்களை, ஒரு விவாதப் பொருளாக எடுத்துக்கொண்டு, இரு தரப்பினரும் விவாதிப்பது வீண் செயல்!" என்று எச்சரித்தார். ஸ்வாமிகளின் தெளிவான கருத்து

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

என்னவென்றால், ஒரு கருத்தைப் பற்றி விவாதம் செய்ய வேண்டுமென்றால், அதைப்பற்றி முழுமையான தெரிந்து கொள்ளவேண்டும்.

அவ்வாறு தெரிந்து கொள்ளாமல் விமர் சனம் செய்வது, மிகவும் தவறாகும், வேதங்கள், இறைவனின் ஒரு அங்கமாகும். நமது ரிஷிகளும், முன்னோர்களும் இந்த ப்ரபஞ்சம் அழிவை சந்திக்கக்கூடாது என்பதற்காகவும், இவ்வுலகத்தின் இயக்கம் இயல்பாகவும், சீராகவும் நடப்பதற்காகவும் ஸ்ருதி, ஸ்ம்ருதி மற்றும் புராணங்களை இயற்றினார்கள். அது மாற்ற இயலாதது. மாற்றக்கூடாதது. வேதங்களை வளர்ச்சியையும், நிலைத்து நிற்கும் தன்மையும் அவற்றை உண்டாக்கிய இறைவனே பார்த்துக் கொள்வார் இன்று கூறிவிட்டு சென்றுவிட்டார்.

பண்டிட் திரு சாகாராம் சாஸ்திரி, தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, அங்கு சென்றார். இம்முறை அவர் விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. விவாதத்தின் இறுதியில், எவராலும் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை. மகராஜ் அவர்கள் குறிபிட்டவாறே, ஒரு முடிவும் எடுக்க இயலாமல் , தொடர்ந்து கொண்டே இருந்த விவாதம், வேறுவழியின்றி இடையிலேயே நிறுத்தப்பட்டது. அங்கு வந்திருந்த அனைத்து பண்டிதர்களும், விவாதத்தின் போக்கை, தங்கள் கட்டுப்பாட்டிற்குள், கொண்டுவர இயலாமல்,இடையிலேயே பலர் எழுந்து சென்று விட்டார்கள். பண்டிட் சாகாராம் சாஸ்திரி உண்மையை உணர்ந்து கொண்டார்.

ஸ்ரீ வாசுதேவானந்த ஸ்வாமிகள் ஸ்ரீதத்த அவதாரியா வார். அவர் விரும்பாத இச்செயலை நாம் செய்தது பாவம்! நாம் இடத்திற்கு வந்திருக்கவே கூடாது என்று தன் தவறை உணர்ந்து கொண்டு, ஸ்வாமிகளிடம் மானசீகமாக மன்னிப்பு வேண்டி, தமது ஊருக்கு புறப்பட்டு விட்டார். அரசாங்க சாசனங்களை எவர் வேண்டுமானாலும், அனைவரின் ஒப்புதலோடு திருத்தி அமைக்கலாம். ஆனால் இறைவனால் உருவாக்கப் பட்ட, ரிஷிகளால் இயற்றப்பட்ட, வேதங்களை மாற்றவோ, திருத்தவோ அவற்றில் புதிதாக சேர்க்கவோ, குறைக்கவோ மனிதர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அந்த உரிமை அக்காலத்தில் செய்வினை, பில்லி, சூனியம் போன்வற்றின் மீது மக்கள் மிகுதியாக நம்பிக்கை வைத்திருந்தனர். இக் காலத்தில் அந்நம்பிக்கை குறைந்ததற்கு காரணம், நமக்கு வழிகாட்டக்கூடிய, சுயநலமில்லாத குருமார்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. நாம் அனுபவிக்கும் அனைத்து துன்பங்களுக்கும் காரணமே, நம் கண்களுக்கு புலப்படாத அத்தீய சக்திகள் தாம்! நமது கர்மவினை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்படும் போது அத்தீய சக்திகள் நம்மிடம் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்யும்.'' என்றார்.

அவர் செல்லும் இடங்களில் எல்லாம் "எல்லோருக்கும் நன்மை கிடைக்க வேண்டும், என்றே நாம் விரும்ப வேண்டும்! எவருக்கும் மனதால் கூட தீமை நினைக்கக்கூடாது! அவ்வாறு தீங்கு செய்ய நினைத்து, இது போன்ற தீயகாரியங்களில் ஈடுபடுவோர், ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்! பிறரை துன்புறுத்த நீங்கள் செய்யும் இச்சூனியம் திரும்பி, வந்து இரண்டு மடங்காக உங்களை பழிவாங்கிவிடும்! எவர் மீதும் ஏவல் செய்யக்கூடாது! ஒரு சிலர் அடுத்தவருக்கு தீமை விளைவிக்க இதுபோன்ற மந்திரங்களையும், தந்திரங்களையும் ஏவல் முதலியவற்றை செய்துவிட்டு, அதனால் தமக்கு ஏதும் துன்பங்கள் வராமல் இருக்க சில கட்டுக்களையும் தம்மை சுற்றி, சில வித்தைகளை உபயோகப்படுத்தி அமைத்துக் கொள்வார்கள்.

அவர்கள் செய்து கொண்ட பாதுகாப்பு வளையமெல்லாம், சிலகாலம் வரையே நம்மிடம் தங்கும்? நமது கர்மவினை என்று தீவிரமாகின்றதோ, அப்போது, அச்சமயத்திற்காக காத்துக் கொண்டிருக்கும் இத்தீவினைகள், பாதுகாப்பு வளையங்களை உடைத்துக் கொண்டு நம்மைச்சுற்றி நின்று தாக்கத் தொடங்கும்! அப்போது நம்மை சுற்றி இருக்கும் அனைவருக்குமே எதிரிகளாக தெரிவார்கள்! நமது வாழ்க்கையே சூனியமாகிவிடும்! ஆகையால் எல்லோருக்கும் நம்மை கிடைக்க, இறைவனை ப்ரார்த்தனை செய்யுங்கள்!'' என்று அனைவருக்கும் போதித்து, அவ்வாறே தானும் வாழ்ந்து நிரூபித்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இன்றைய காலத்தில் மந்திரங்களின் ஆற்றலை குறித்து நம்மில் பலருக்கும் ஐயம் எழுந்துள்ளன ஆனால் அவற்றின் ஆற்றல் அளவிட இயலாத ஒன்றாகும். ஒவ்வொரு மந்திரத்திற்க் கும் ஒரு தேவதை அதிபதியாக இருக்கிறார். நாம் துய்மையான உள்ளத்தோடு சமுகநலனுக்காக மட்டுமே மந்திரசக்திகளை பயன்படுத்த நினைக்கும்போது அதற்கு அதிபதியான தேவதை கள் நமக்கு உதவிசெய்வதற்காக காத்துக்கொண்டிருப்பார்கள்.

மக்கள் அனைவரும் ஸ்வாமியிடம் "மகராஜ் மிகப்பெரிய சித்தர்களான கோரக்கரும், மச்சீந்திரநாத் போன்றோரும் மாந்த்ரீக செயல்களில் மிகச்சிறந்து விளங்கினார்களே அதற்கு என்ன காரணம்? என்று கேட்டார்கள்.

ஸ்வாமிகள், கோரக்கரும், மச்சீந்திரரும் எவருக்குமே தீமை செய்ததில்லை! அவர்கள் மிகப்பெரிய சித்தர்கள்! அவர்கள் கைகளில், எல்லா சித்திகளும் அடங்கியுள்ளன! ஆனால் எக்காரியத்தால், இந்தச் சமுகத்திற்கு நன்மை கிடைக்குமோ அச்செயலை மட்டுமே, அவர்கள் செய்தனர்! இத்தகைய கட்டுப்பாடு, எல்லோருக்கும் இருக்க இயலாது! தன்னிடம் சில மந்திர சக்திகள் வந்தவுடன், அவற்றை சோதித்து பார்க்க நினைப்பவர்கள், சாமான்ய மனிதர்கள் ஆவார்கள்! இந்தக் கட்டுப்பாடு இல்லாத காரணங்களால் தான், தேவதைகளும், மந்திரங்களின் பலனை அவ்வளவு எளிதாக எவருக்கும் அளித்து விடுவதில்லை! ஸ்வாமிகள் அனைவரிடமும் "சகோதரர்களே நீங்கள் கடைக்குச் செல்லும்போது, பலவித பொருட்களை, கடைக்காரர் விற்பனை செய்வதை பார்த் திருப்பீர்கள்! அக்கடையில் சர்க்கரையும் இருக்கும்! எலி விஷமும் இருக்கும்! தேர்ந்தெடுக்கும் உரிமை உங்களுடையது! கடைக்காரருடையது அல்ல! ஆகையால் நல்லவற்றையே தேர்ந்தெடுங்கள்! தீயவற்றை அடியோடு விலக்குங்கள்!" என்று இவ்வாறு அச்சமுதாயத்தில் இருந்த கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களை எதிர்த்து, ஸ்வாமிகள் அனைவரையும் நல்வழிப்படுத்தினர்.

மகராஜ் கங்கை நதியின் கரையிலேயே தமது வாழ்நாளை கழிக்க விரும்பினார். மகான்களுக்கும், நதிகளுக்கும் உள்ள ,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தெய்வீக தொடர்பை, வர்த்தைகளால் வருணிக்க இயலாது. ஒவ்வொரு நதிக்கரையிலும் ஒரு ஞானியின் அவதாரம் குறித்து நாம் காண இயலும்! அவ்வாறே மகராஜ் ஸ்ரீவாசுதேவரும் கங்கை நதியையே, தமது தாயாகக் கருதி, அதன் கரையில் அமர்ந்து கொண்டிருப்பதை பெரிதும் விரும்பினார்.

ஆனால் புனித நர்மததா நதி, நம் மகானை தரிசித்து, அவருடைய ஸ்பரிசத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தாள். அவருடைய தெய்வீக அகத் தூண்டுதலால், புனித நர்மதை தம்மிடம் வரச்சொல்வதை நன்றாக அறிந்து கொண்டார். ஆனால் அவர் அதை இலட்சியம் செய்யவில்லை. இக்காரணத் தால் நர்மதை நதி தேவதை, ஸ்வாமிகளை தன்னிடத்தில் வரவழைக்க நடத்திய நாடகத்தை, நாம் இப்பொழுது காணலாம்! மகராஜ் அவர்கள் தங்கி இருந்த கிராமத்தில் வசித்த ஒருவர், தனது உடல் முழுவதும் கொப்புளங்கள் ஏற்பட்டு அவஸ்தையுற்றார்.

புண்கள் புரையோடி, ரத்தமும் சீழும் வெளிவந்த காரணத் தால், அவருடைய உறவினர், சுற்றத்தார் அனைவரும் அவரை ஊரைவிட்டு தள்ளிவைத்தனர். பெருவியாதி பிடித்திருக்கும் இவனிடம் நாம் நெருங்கினால், நமக்கும் அவ்வியாதி தொற்றிக் கொள்ளும் என்று அவனது மனைவி, மக்களும் அவனை வெறுத்தனர்.

அவ்வூரில் உள்ள சில நல்ல மனிதர்கள், அவரிடம், "மகராஜ் அவர்களை தரிசித்து, அவருடைய பாதகமலங்களை அபிஷேகம் செய்து, அந்த நீரை பருகினால், நிச்சயம் இவ்வியாதி உன்னை விட்டுத் தொலைந்து விடும்!" என்று அறிவுரை கூறினார்கள் அதைக் கேட்டு மிகுந்த நம்பிக்கையுடன், மகராஜ் அவர்களை தரிசிக்க வந்தான். நாம் நன்றாக வாழும் காலத்தில் உடலும், மனமும் நலத்துடன் செல்வச்செழிப்புடன் இருக்கும்போது நம்மைச் சுற்றி உள்ள கூட்டம் அனைத்தும், நமக்கு கஷ்டம் வரும் வேளையில், நம்மைவிட்டு தொலை தூரத்தில் சென்று, நம்மை வேடிக்கை பார்க்கும்.

இத்தகைய சூழ்நிலையில், ஒருவருக்கு எல்லாம் வல்ல இறைவன் மட்டுமே எப்போதும் உற்ற துணையாக இருக்க

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வல்லவன் என்பதை உணர இயலும். அத்தகைய சூழ்நிலைக்கு தள்ளப்பட்ட, அக்கிராமவாசி மிக மோசமான கர்மவினையின் காரணமாக தனது சரீரத்தைக் கண்டு, தாமே அருவருக்கும் நிலையில் இருந்த தான், மகராஜ் ஒருவரால் மட்டுமே, தனது அவல நிலையை மாற்ற முடியும், என்ற நம்பிக்கையுடன் அவரிடம் வந்தான்.

மகராஜ், தனது கால்களை மடித்து அமர்ந்துகொண்டு, தியானம் செய்து கொண்டிருந்தார். அவருடைய பாதங்கள் அபிஷேகம் செய்வதற்கு ஏற்றவாறு, வெளிப்பட்டு காணப் பட்டது. தனது கைகளில் இருந்த கங்கை நீரை, மகராஜ் அவர்களின் பாதங்களில் ஊற்றினான். பின்னர் உடனடியாக அவரது பாதங்களில் இருந்து வழிந்த நீரை, எடுத்து பருகி விட்டான். ஆனால் இச்செயல் புரிவதற்காக அவன் ஸ்வாமி களிடம், அனுமதி பெறவில்லை. அனுமதி பெறாமலேயே, இத்தகைய செயலை செய்தது குற்றம் என்பதை நன்கு அறிவான்.

இதற்கிடையில் ஆழ்ந்த தியானத்தில் இருந்த மகராஜ், தமது பாதங்களில் அபிஷேக நீர் பட்டவுடன், விழித்துக் கொண்டார். அவருடைய உள்ளுணர்வு, அவருக்கு ஏதோ ஒன்று நேரப் போகிறது, என்பதை நன்றாக உணர்த்தியது. என்ன ஆச்சர்யம்! மகராஜ் அவர்களின், பாத அபிஷேகம் செய்த நீரை, சிறிதளவு பருகிய அவன் உடலில் இருந்த அனைத்து கொப்புளங்களும், மாயமாய் மறைந்து போயின. புதுப்பொலிவுடன், தேஜஸ்து டன் அவன் உடல் மாறி விட்டது. இதைப் பார்த்த மகராஜ், என் அனுமதியின்றி ஏன் இவ்வாறு ஒரு காரியத்தை செய்தாய்?" என்றார். அவன் தான் செய்த தவறுக்கு வருந்தி, மகராஜ் அவர்களின் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்து, தம்மை தயை கூர்ந்து மன்னிக்கும்படி வேண்டினான்.

கருணையே உருவெடுத்த ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அவனை மன்னித்துவிட்டு உடனடியாக விரைந்து சென்று கங்கையில் நீராடினார். ஆனால் கங்கை நதியில் நீராடிய பொழுதும்கூட, தமது பாததீர்த்தத்தை பருகிய அவனுடைய கர்மவினை மிகவும் மோசமாக இருந்ததால், தமக்கு நேரவிருந்த துன்பத்தை உணர்ந்து கொண்டார். இப்பொழுது மகராஜ்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர்களின் உடல் முழுவதும், கொப்புளங்கள் பரவி தலை முதல் பாதங்கள் வரை பரவி வெடித்து இரத்தமும், சீழும் பெருக்கெடுக்க ஆரம்பித்துவிட்டது.

மகராஜ் அமைதியாக கங்கா மாதாவை ப்ராத்தனை செய்து, ஐந்து ஸ்லோகங்களை இயற்றி துதித்தார் அப்பொழுது அவருடைய ஆத்மாவில் புனித நர்மதா தேவி தமக்காக காத்துக் கொண்டிருப்பதாகவும், நர்மதை நதியில் மூன்று முறை முழுகினால், அவள் திருப்தி அடைந்து தம்மை இரட்சிப்பாள் என்பதையும் உணர்த்தவே அவர் கங்கா மாதாவிடம் உத்தரவு வேண்டினார். கங்கா மாதாவும் அனுமதி அளித்துவிட்டாள். தற்பொழுது ஸ்வாமிகள் நர்மதை நதியை வணங்கி நீராடினார் புனிதருடைய உடலை ஸ்பரித்த நர்மதா தேவி, மகிழ்ந்து ஸ்வாமிகளை, புதுப்பொலிவுடன் மாற்றிவிட்டாள்.

நதி தேவதைகள், தம்மிடம் நீராடி பாவத்தை தொலைக்க வரும் மனிதர்களையே தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்றாவது ஒரு நாள், ஒரு சமயம், ஒரே ஒரு புண்ணிய ஆத்மா, தம்மை வந்து அடையாதா என்று எல்லா நதி தேவதைகளும் ஏங்கி தவித்துக் கொண்டிருக்கும். அவ்வாறு நர்மதை நதி, நம் மகராஜ் அவர்களின் தரிசனம் பெறுவதற்காக, அவரை தம்மிடம் வரவழைக்க நடத்திய அற்புதமே, இத்தகைய நிகழ்வாகும்!

நர்மதா நதிக்கரையில், நதி தேவதையின் வேண்டுகோளுக்கு இணங்கி, (1 1/2) ஒன்றரை மாதங்கள் தங்கி இருந்தார். அங்கிருந்து ஹராங்காவ் (Harangaon) என்ற கிராமத்திற்கு செல்ல வேண்டியிருந்தது.

அக்கிராமத்தில் நடந்த ஒரு நிகழ்வு, மகராஜ் அவர்களுக்கு அதிர்ச்சியை தரக்கூடியதாக அமைந்தது. காரணம் அக்கிராமத்தில் வீடுகளே, அவர் கண்களுக்கு தென்படவில்லை. காணும் இடம் அனைத்துமே, சாம்பலாக இருந்தது, எல்லா குடிசைகளும் தீக்கிரையானது போன்ற, தோற்றத்தை அவருக்கு அளித்தது ஆனால் ஆச்சரியம்! ஒரே ஒரு குடிசையை மட்டும் அவர் கண்டார். அக்கிராமத்திலேயே தனித்து நின்ற அக்குடிசைக்கு மட்டும் எக்கேடும் நிகழவில்லை.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இது எவ்வாறு சாத்தியம்? இதைச்சுற்றி இருந்த அனைத்து குடிசைகளும் எறிந்து சாம்பலாகியும், இது மட்டும் எவ்வாறு தப்பித்தது? அதற்கு காரணம் யாது? என்று சிந்திக்கும் போது அவருடைய ஞான திருஷ்டியில், உண்மையை உணர்ந்து கொண்டார். சிறிது காலத்திற்கு முன்னர் அக்கிராமத்திற்கு ஒரு சாது வந்திருந்தார். அவருக்கு ஒரு மத்யான நேரத்தில், மிகுந்த பசி எடுத்தது. தொடர்ந்து பல நாட்கள் விரதமிருந்த காரணத்தால், வயிற்றுப் பசியை போக்க, அங்கிருந்த வீடுகளில் உணவை யாசித்தார்.

ஆனால் அங்குள்ள வீடுகளில் அவருக்கு சிறிதளவு உணவைக்கூட தரவில்லை. ஒரே ஒருவர் மட்டும் அந்த சாதுவை, மரநிழலில் அமரச் செய்து தனது இல்லத்திலிருந்து உணவை எடுத்துச் சென்று அளித்தார். இக்காரணத்தினால் அச்சாதுவிற்கு கோபம் வந்துவிட்டது. தனக்கு உணவளித்த இல்லம் தவிர, மற்ற அனைத்து வீடுகளும், தனது வயிறு காய்ந்து எரிவதைப்போல, பற்றி எரிந்து சாம்பலாகட்டும்! என்று சபித்து விட்டார்! அதனால் அப்பகுதி முழுவதும், ஒரு வீட்டைத்தவிர எரிந்து சாம்பலானது.

இந்நிகழ்வின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் நாம் முன்னரே கண்டவாறு மத்யான வேளையில் எவராவது "பசி" என்று சொல்லி, நம்மிடம் வரும்போது, குறிப்பாக மத்யான வேளையில் இல்லை என்ற வார்த்தையை உபயோகிக்ககூடாது! நம்மிடம் இருக்கும் ஏதாவது ஒருவகை உணவை, அன்னம், பால், பழம், நீர் எவற்றையாவது அளித்து அவர் பசியை போக்க வேண்டும்! என்று சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீவாசுதேவ ஸ்வாமிகள், மிக முக்கியமாக மக்களுக்கு போதித்த விஷயம், யாசகம் கேட்டு வருவோர் எவராக இருந்தாலும், அவர்களின் குலம், கோத்திரம் பார்க்காமல் பிக்ஷை இடவேண்டும் என்பதே ஆகும். ஆகையால் தான் ஸ்ரீகுரு நிருசிம்ம சரஸ்வதியின் ஸ்தலமான கானகாபூரில் இன்றளவும் பிக்ஷை இடும்போது, தலையை குனிந்து கொண்டே இடவேண்டும், என்ற விதியை அறிவுறுத்து

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கின்றனர். நிமிர்ந்து பிக்ஷை இடும்போது, ஒருவேளை யாசகம் பெற வந்தவர், நமக்கு விருப்பமில்லாத நபராக இருந்தால், நாம் பிக்ஷை அளிக்க தயங்குவோம்! ஆதலால் தலை நிமிராமல் பிக்ஷை அளிப்பதே புண்ணியமாகும் என்று ஸ்ரீ தத்த அவதாரிகள் மக்களுக்கு போதித்துள்ளார்.

மகராஜ் அங்கிருந்து "நேமாவர்" என்று அழைக்கப்படும் பகுதிக்கு சென்றார். அப்பகுதி முழுவதும் நர்மதா நதிக்கரையில் அமைந்திருந்தது. மகராஜ் அங்கு மூன்று நாட்கள் தங்கி இருந்து நர்மதா தேவியை போற்றி துதித்து பல பாடல்கள் பாடினார். அப்பாடல் தொகுப்பு நர்மதா லஹரி (Narmadha Lahari) என்று அழைக்கப்படுகிறது. உடல் முழுவதும் கொப்புளங்கள் நிறைந் திருந்த தம்மை காப்பாற்றிய நர்மதா தேவிக்கு நன்றி கூறினார். நர்மதையின் கோபத்திற்கு தாம் ஆளாக நேர்ந்தது என்பதால் தம்மை மன்னிக்குமாறு நர்மதா தேவியை வேண்டினார்.

மகராஜ், ப்ரம்மகட் (Bramaghat) என்ற மலைப்பகுதியை அடைந்தார். அங்கு மலையில் ஏறிக் கொண்டிருக்கும்போது திடீரென்று கீழே சரிந்துவிட்டார் விழுந்தவரை, ஒரு கன்னி தேவதை, தடுத்து காப்பாற்றியது விழுந்த வேகத்தில் மகராஜ் அவர்களுக்கு, இடுப்பு பகுதியில், மிக அதிகமாக அடி பட்டிருந்தது.

உடனே கன்னித் தேவதையின் வடிவில் அவர் அருகில் வந்த நர்மாதா நதி, தன் கைகளால் பஸ்மம் என்று சொல்லக் கூடிய, சாம்பலை எடுத்து, ஸ்வாமிகளின் உடலில் தடவியதும் உடனடியாக ஸ்வாமிகள் புத்துணர்ச்சி பெற்றார். வலி முழுவதும் நீங்கவிட்டபடியால், தற்பொழுது எழுந்து உட்கார்ந் தார். அவரை அங்கிருந்த கிராமத்திற்கு யாசகம் பெறச் செல்லுமாறு அத்தேவதை கூறி மறைந்துவிட்டது.

நர்மதா தேவியின் உத்தரவிற்கு ஏற்ப, ப்ராமினி என்ற அக்கிராமத்திற்கு யாசகம் பெறச் சென்றார். ஆனால் அக் கிராமத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி ஒருவர் கூறக்கேட்டு, அந்தப்பக்கமே செல்லக்கூடாது என்று ஊர் எல்லைக்கு சென்று அமர்ந்து கொண்டார். அதற்கு காரணம், அக்கிராமத்தில் ஒருவர் மிகவும் பேராசை கொண்டவர் அவர் தனது புதல்விக்கு

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

திருமணம் நிச்சயித்து, ஒரு குறிப்பிட்ட தொகையை தருவதா கவும், ஒப்புக் கொண்டார். அவருடைய வாக்கை ஏற்றுக் கொண்டு, வரனின் பெற்றோரும் திருமணம் செய்து வைத்து விட்டனர். திருமணம் ஆனபிறகு, தான் தருவதாக ஒப்புக் கொண்ட தொகையை, தர இயலாது என்று கூறிவிட்டார். அது மட்டுமல்லாமல் தனது பெண்ணையும் தம்மோடு இல்லத்திற்கு அழைத்து வந்து விட்டார்.

அப்பெண்ணைப் பெற்ற, பேராசைக்காரனை அக் கிராமம் முழுவதும் தூற்றி, வசைபாடி வந்தது. இந்நிலையில் அவன் இறந்து விட்டான். பெண்ணின் தந்தை காலமானவுடன், அப்பெண்ணை கைவிடுதல் பாவம் என்று கருதி, அவளை மணம்செய்து கொண்ட கணவன், அவளைத்தேடி அக்கிராமத் திற்கு வந்தான். இதற்கிடையில் அப்பெண்ணின் மீது நீண்ட நாட்களாக மையல் கொண்டிருந்த, அந்த ஊரின் தீவிரவாதி ஒருவன் அவள் தந்தை இறந்த செய்தி கேட்டு, விரைந்து சென்று அப்பெண்ணை , தமது இல்லத்திற்கு தூக்கிக் கொண்டு வந்து விட்டான். துணையில்லாத ஒரு பெண், தனியாக வாழ்வதை இப்போதுள்ள சமூகமே ஏற்க மறுக்கும் பொழுது, அப் போதைய காலகட்டத்தில் நினைத்துக்கூட பார்க்க இயலாது. நடந்தவற்றை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கிராமவாசி கள் மௌனமாக இருந்தனர். அப்பெண்ணை காப்பாற்ற எந்தநடவடிக்கையும் எடுக்கவில்லை.

NOT FOR SALE

இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட மகராஜ், இப்படியும் கூட துஷ்டர்கள் இவ்வுலகத்தில் இருக்கிறார்களே, என்று மனம் வேதனையுற்று, அந்த ஊருக்குள் செல்லவே விருப்பமின்றி, ஊருக்கு வெளியிலேயே தங்கிவிட்டார். மதிய நேரம் யாசகம் வாங்க செல்ல வேண்டும். என்ன செய்வது? சரி, இன்று நாம் உபவாசம் மேற்கொள்வோம். நாளை பொழுது விடிந்ததும், பக்கத்து ஊருக்கு சென்றுவிடுவோம் என்று பட்டினியாக, அந்த ஊரின் எல்லையிலேயே அமர்ந்து கொண்டிருந்தார்.

அப்பொழுது அவரின் எதிரில் தோன்றிய நர்மதா தேவதை, அவரை அருகில் உள்ள டெக்கான் என்ற இடத்திற்கு சென்று, யாசகம் பெற்று உண்ணுமாறு பணித்தார். அப்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பொழுது ஸ்வாமிகள் தேவதையிடம், "தாயே அங்கே அந்தணர் ஒருவரோ அல்லது இருவரோ, மட்டும்தான் இருப்பார்கள். அதுவும் சந்தேகம்தான்!" என்றார். இதைக்கேட்டு சிரித்த நர்மதா தேவி, "இல்லை வாசுதேவரே! அங்கே (17) பதினேழு குடும்பங்கள், அந்தண குல வழியில் அவதரித்து முறையாக பூஜைகள் செய்யும் நல்லவர்கள் அங்கு உள்ளார்கள்.!

ஆதலால் நீங்கள் அங்கு சென்று யாசகம் பெற்று உண்ணுங்கள்!" என்று அன்னையின் கருணையோடும், பரிவோடும், அன்னை நர்மதா கூறியது எவ்வாறு பொய்க்கும்? என்ன ஆச்சரியம்! அன்னை நர்மதா கூறிய அக்கிராமத்தில், சென்று விசாரித்தார் அங்கு 17 அந்தண குடும்பங்கள் இருந்தது தெரியவந்தது புனித நர்மதா தேவிக்கு நன்றியைத் தெரிவித்தார்.

நேமாவரிலிருந்து புறப்பட்ட மகராஜ், உஜ்ஜெயினியை வந்தடைந்தவர். உஜ்ஜெயினியில் யோக கலையில், தாமே தலைசிறந்தவன், என்று பெருமை பேசிய ஒருவரின், அவர் கர்வத்தை அடக்கிய அற்புத சம்பவம் அங்கு நிகழ்ந்தது! அதைப்பற்றி நாம் இப்பொழுது காண்போம்! இந்நிகழ்வின் மூலம் மகராஜ் அவர்கள், யோககலையில் தலைசிறந்து விளங்கும், யோகமார்கத்தின் தலைவர், என்பதை அனைவரும் அறிந்து கொண்டனர். மகான்கள் எப்போதும், தங்களுடைய தெய்வீக ஆற்றலை வெளிப்படுத்துவதில்லை. அதற்கான சந்தர்ப்பம் நேரும் போது, சமயம் வாய்க்கும்போது மட்டுமே, அவர்களின் ஆற்றல் வெளிப்படும்.

உஜ்ஜெயினியில், கணபதிபுவா என்ற கணபதியின் தீவிர பக்தர் ஒருவர் இருந்தார் அவர் "சத்ய விநாயக் விரதம்" (Satya Vinayak Vratham) என்று கணபதி விரத பூஜையை தொகுத்துள்ளார். அவருக்கு யோகா என்ற யோகக்கலையைப்பற்றி சிறிதளவு ஞானம் உண்டு.

ஆனால் அவருக்கு தம் யோகக் கலையின் மீது கர்வம் இருந்தது. அகம்பாவம் கண்களை மறைக்கும்போது, மகான்களை பல சமயங்களில் தாம் உணரத் தவறுகிறோம், ஆகையால் மகராஜ், அவர்களின் ஆற்றலை அவர் அறியவில்லை அதனால் அவர் மகராஜை, தன்னுடைய யோக வகுப்பறைக்கு, அழைத்துச்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சென்று, தனக்குத் தெரிந்த யோக வித்தையைப்பற்றி, சொல்லிக் கொண்டிருந்தார். மகராஜ் அவரை உதாசீனம் செய்யவில்லை. அவருடைய போதனை முழுவதையும், பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்தார்.

இறுதியாக அவர் செய்து காட்டிய, அந்த அற்புதத்தை பார்த்த கணபதிபுவா, சாஷ்டாங்கமாக, மகராஜ் அவர்களின் பாதங்களில் விழுந்து, நமஸ்காரம் செய்தார். அவருக்கு மகராஜ் செய்து காட்டிய அற்புதம் என்னவென்றால், ஒரு வெள்ளைத் துணியை தனது வாய்க்குள் நுழைத்து, நன்றாக விழுங்கி விட்டு, அரைமணி நேரம் கழித்து, அத்துணியை வெளியே எடுத்து, அவருக்கு காண்பித்தார். அத்துணி முழுவதும் இரத்தம் தோய்ந்து இருந்தது. மகராஜ் இந்நிகழ்வின் செயல்முறையை விளக்குமாறு கணபதிபுவாவிடம் கேட்டார்.

கணபதி புவா, இந்த அற்புதத்தைப் பார்த்து பயந்து விட்டார். இவர் யோக வித்தையின் அரசர், இவரிடம் போய் நாம் கற்ற வித்தையை பெருமை பேசிக் கொண்டிருந்தது, எத்தகைய முட்டாள்தனம் என்பதை உணர்ந்தார். அவர் பாதங்களில் விழுந்து, பணிந்து, தம்மை மன்னிக்குமாறு வேண்டினார்.

மேலும் கணபதிபுவா மகராஜ் அவர்களிடம், அக் கலையைப்பற்றி தமக்கு உபதேசிக்குமாறு வேண்டினார். மகராஜ் அவர்களும் கருணையோடு அவர் செய்து காட்டிய யோகக் கலையைக் குறித்து விளக்கினார். சுவாமிகள் எழுதி வைத்த பல முக்கிய கூறிப்புகள் அடங்கிய நூல்கள் ஒருமுறை பூனாவில் அணைகட்டு உடைந்து வெள்ளம் சூழ்ந்தபொழுது, அவையாவும் அடித்துச்செல்லப்பட்டன. அவருடைய பிரதம சிஷ்யர், ஸ்ரீ பரமபூஜ்ய குலாவனிமகராஜ் அரும்பாடுபட்டு ஸ்வாமிகளுடைய நூல்களை தொகுத்து, ஸ்ரீ தேம்பே ஸ்வாமி களின் புகழை உலகம் முழுவதும் கொண்டுசென்றார்.

உஜ்ஜெனியில் உள்ள ஜோதிர்லிங்க ஸ்தலத்திற்கு சென்று வழிபட்டார். அங்கு “தவனி குண்டா” என்ற (Dhavani Kunda) குளம் இருந்தது. அக்குளத்தில் நீராடிய மகராஜ், அக்குளத்தில் அடியில் இருந்து, நர்மதை நதியின் மண்ணை இருகைகளில்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஏந்தினார். உடனடியாக சர்வேஸ்வரர் அவருக்கு ப்ரத்யட்ச மாகி, அவர்முன் தோன்றி சன்யாசிகள், மண்ணை வழிபாடு செய்யலாமா, என்று கேட்டார். உடனே ஸ்வாமிகள், தவறு தான் ஸ்வாமி! என்னை மன்னித்து விடுங்கள்! பரமாத்மா, இப்ரபஞ்சம் முழுவதும் நிறைந்து காணப்படுகிறார். இந்த மண்ணில் மட்டுமல்ல என்பதைக் கருத்தில் கொண்டு அவற்றை அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார். அந்த ப்ரதேசத்தில் **33** நாட்கள் தங்கி இருந்த மகராஜ் அந்த ஊர் அரசனின் காரியதரிசியாக விளங்கிய, பல்வந்த்ராவ் என்பவரிடம் தினமும், நாம் உச்சாடனம் செய்யக்கூடிய மந்திரங்களை உபதேசித்தார். பின்னர் அங்கிருந்து ஸ்ரீ தத்தரின் உத்தவிற்கு ஏற்ப பெடாலாப்த் (Petald) நோக்கி புறப்பட்டார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# ஏழாவது சாதுர்மாஸ்ய விரதம்
# பெதாலத் (இந்தூர்) – 1897

NOT FOR SALE

பெதாலத் என்ற ப்ரதேசம் "மாஹி" என்ற நதிக்கரையில் அமைந்துள்ளது. அப்பகுதி இந்தூர் (Indora) நகரில் அமைந்துள்ள ஒரு கிரமமாகும். அங்கு அந்தண குடும்பங்கள் நிறைய வாழ்ந்த தால், தமது ஏழாவது சாதுர்மாஸ்ய விரதத்தை துவக்கினார்.

மகராஜ் தமது ஏழாவது சதுர்மாஸ்ய விரதத்தில்தான் மங்களரமான ஆவாத ஏகாதசியில் **ஸ்ரீ தத்த லீலாம்ருத் சிந்து** (Datha Leelamrith Sindhu) என்று பிரசித்தி பெற்ற, ஸ்ரீ தத்தாத்ரேயரின் லீலைகளை, ப்ராக்ருத் (Prakrit) மொழியில் ஆயிரம் பாடல்கள் கொண்ட தொகுப்பாக எழுதினார். ஸ்வாமிகளின் வைராக்கியத்தை நினைக்கும் பொழுதே, மனம், மெய் இரண்டும் சிலிர்க்கின்றது, பல நாட்கள் பட்டினி கிடந்து, தினமும் பலமைல்கள், தூரம் பாத யாத்திரையாகவே சென்று கடைபிடித்து, பல நூல்களையும், மிகப்பெரிய மிகச்சிறந்த நூல்களையும், பாடல் தொகுப்புகளையும், ஸ்லோகங்களையும் இயற்றியுள்ளார் என்பதை கவனிக்கும் பொழுது, மகராஜ் வேறு யாருமல்ல, அவர் ஸ்ரீதத்தரின் அவதாரமே என்பதை, நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும் ஒரு சாமான்ய மனிதரால் இத்தகைய அபூர்வ செயல்களைச் செய்ய இயலாது.

சாதுர்மாஸ்ய விரதத்திற்காக, மகராஜ் சிக்கல்தா என்ற ஸ்தலத்திற்கு சென்றார் அவர் வரும் வழியில் ஒரு ஆலயம் அமைந்திருந்தது அந்த ஆலயத்தில் நுழைந்த, மகராஜ் அவர் களின் கண்கள் எவரையோ தேடின. அந்த பக்தர் ஆலயத்தில் தனியாக அமர்ந்து கொண்டு இருந்தார். மகராஜ் அவர்களைக் கண்டதும், அவர், தனது மனக்குறைகளை அவரிடம் சொல்லி

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அழுதார். இளம் வயதான அவர் சமீபத்தில் தனது மனைவியை இழந்துவிட்டார். தமக்கு வேறு போக்கிடம் எதுவுமில்லை என்று விரக்தியில் தினமும் ஆலயத்தில் சென்று அமர்ந்வது வழக்கம்.

அவர் மகராஜ் அவர்களிடம், தனது தனிமையைப் போக்க தமக்கு யோகாப்பியாசம் கற்றுத்தர வேண்டும் என்று வேண்டினார் மகராஜ் அவர் மீது மிகவும் இரக்கம் கொண்டார். அவருக்கு "சத்கிரியா" "ப்ராணாயமம்" இவற்றையும் கற்றுக் கொடுத்தார்.

ஒரு தீபாவளி தினத்தன்று மகராஜ் அங்கு தங்கி இருந்தார், அன்று மறுநாள் "நாரக்சதுர்தஸி" என்று சொல்லக்கூடிய புண்ணிய தினத்தில், அப்பொழுது ஸ்ரீ தத்தர், நம் மகராஜ் அவர்களிடம் நிகழ்த்திய ஒரு விளையாட்டை நாம் இப்பொழுது காண்போம். மக்கள் அனைவரும், தீபாவளி கொண்டாட விருக்கும் நேரத்தில், ஸ்ரீ தத்தாத்ரேயர், நமது மகராஜ் அவர்களிடம், "வாசுதேவா எனக்கு வாசனை திரவியங்களை, பூசி இளம் சூட்டில் உள்ள தண்ணீரால் நீராட்டுவாயாக! என்றார்.

இதைக்கோட்டு வாசுதேவ மகராஜ் உடனடியாக மறுத்து விட்டார் அவர் இறைவனிடம், "ஸ்வாமி நான் ஒரு சந்யாசி சந்யாச தர்மத்தில், வாசனை திரவியங்களை வாங்கிவருவதோ அல்லது வெந்நீரை வாங்கி வருவதோ தவறு இன்று எனக்கு ஏன் இச்சோதனை? தாங்கள் ஏற்கனவே , என்னிடம் பஸ்மம் என்று சொல்லப்படும், விபூதியை அபிஷேகம் செய்வதற்கு உத்தரவு இட்டுவிட்டீர்கள்? அப்படியிருக்க, ஏன் என்னால் இயலாதவற்றை, கேட்கிறீர்கள், என்று மனம் வருந்தி, இறைவனுடைய அன்புடன் கோரிக்கைகளை மறந்து விட்டார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், இறைவனாகிய ஸ்ரீ தத்தரின் கோரிக்கைகளை மறுக்கும் அளவிற்கு, மனோவலிமையைப் பெற்றிருந்தார்.

ஆனால் ஸ்ரீதத்தாத்ரேயர், மகராஜ் அவர்களை விடுவதாக இல்லை. நைவேத்யம் செய்வத்காக, ஸ்ரீதத்தரிடம் வந்த மகராஜ், ஸ்ரீதத்தரை அங்கு காணாமல் தவித்தார். "எங்கே என்னுடைய

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்வாமி? சிறிது நேரத்திற்கு முன்னர் எனது கைகளால் அபிஷேகம் செய்தேனே! எவர் என் ஸ்வாமிக்கு தீங்கு நினைத் தார்கள்? என்று அவருடைய திருஷ்டியில் நோக்கிய பொழுது, ஸ்ரீதத்தர் நர்மதா நதியில் தவழ்ந்து கொண்டிருந்தார்.

அவ்வளவுதான், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் விரைந்து நர்மதா நதிக்கரைக்கு சென்றார். அங்கு நதியில் மிதந்து கொண்டு வந்த, ஸ்ரீதத்தரை தனது கைகளால், இறுக்கி அணைத்துக் கொண்டு கரையேறினார்.

ஸ்ரீதத்தரின் திருவுருவத்தை மகராஜ் எவ்வாறு அடை யாளம் தெரிந்து கொண்டார் என்றால், ஒரு குழந்தையின் அழு குரல், நதியில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதைக் கவனித்த ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், "இது என் ஸ்ரீபால தத்தரின் குரலே ஆகும்! அவர் ஏன் அழவேண்டும்? என்று அதிர்ச்சியடைந்து தேடினார். அப்பொழுதுதான் ஸ்ரீதத்தரின் விக்கிரகம் அவரது கைகளுக்கு கிடைத்தது. அப்பொழுது ஸ்ரீதத்தர் மகராஜ் அவர்களிடம் "என்னை எனது விருப்பத்திற்கு ஏற்றவாறு ஏன் வாசனை திரவியங்களைக் கொண்டு நீராட்டவில்லை! வெந் நீரில் நீராட்டினால் என்ன தவறு இருக்க முடியும்? இன்றைக்கு விசேஷமான தீபாவளித் திருநாள் என்பது உனக்கு தெரியாதா? தீபாளித் திருநாள் அன்று ஏன் என் விருப்பத்தை புறக்கணித்தாய்? இவ்வாறெல்லாம் கேட்டவுடன், ஸ்ரீ மகராஜ் உடனே மன்னிப்பு வேண்டினார். மகராஜ் அவர்களுக்கும் இறைவனுக்கும் இருந்த தெய்வீக தொடர்பை, அங்கு அவரை தரிசிக்க வந்த பக்தர்கள் அனைவருமே சாட்சியாக கண்டிருக் கின்றனர்.

இதற்கிடையில் மகராஜ் அவர்களையும், ஸ்ரீ தத்தரின் திருவுருவச் சிலையும் ஆலயத்தில் காணாமல் போகவே, அவர்து சீடர்கள் யாவரும் பயந்து, மிக விரைவாக, ஸ்வாமி களை தொடர்ந்து நதிக்கரைக்கு ஓடி வந்து விட்டனர்.

நதிக்கரையில் குருநாதரை தேடிக்கொண்டு வந்த கங் காதர், ஞானாசாஹேப், பால்வைதியா மற்றும் அவர்களுடன் இருந்த சக நண்பர்கள், நர்மதா நதிக்கரையில் குருநாதர், ஸ்ரீ தத்த விக்கிரகத்துடன், தான் பெற்ற குழந்தையுடன்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உரையாடுவதைப் போல, பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன், ஆச்சர்யத்தில் சிலையாக நின்று விட்டார்கள். அங்கிருந்த ஸ்ரீ தத்தரின் திருவுருவச்சிலையை, மெலிந்த தேகம் கொண்ட குருமகராஜ், எவ்வாறு இத்தகை பாரத்தை சுமந்து கொண்டு, அதனோடு உரையாடிக் கொண்டிருக்கிறார் ! என்று கரையில் நின்று கொண்டிருந்த அனைவருமே அதிசயித்தனர்.

ஸ்ரீதத்தரின் விளையாட்டு இன்னும் பூரணத்துவம் அடையவில்லை. ஸ்ரீ தத்தர் குருநாதரைப் பார்த்து, "என்னை ஏன் சுமந்து கொண்டு செல்கின்றாய்? நான் நர்மதை நதியிலேயே இருந்து விடுகின்றேன்! வேறு எதுவும் எனக்குத் தேவையில்லை! நான் ஆலயத்திற்கு வரமாட்டேன்! இவ்வாறெல்லாம் ஒரு சிறு குழந்தை தன் தாயாரிடம், பிடிவாதம் செய்து உரிமையுடன் கேட்பதைப் போல, மும்மூர்த்திகளின் அம்சமான ஸ்ரீதத்தாத்ரேயர் ஒரு குழந்தையின் வடிவத்தில், நம் குருநாதரிடம் கேட்பதை பார்க்கும்பொழுது ஸ்ரீவாசுதேவானந்த ஸ்வாமிகள் ஸ்ரீதத்தாத்ரேயரின் அவதாரம் என்பதையும் அவருடைய அன்பால் அவர் எவ்வாறு, பிணைக்கப் பட்டிருந்தார் என்பதை நம்மால் உணர இயலும்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளும், தான் ஏற்றுக் கொண்ட சந்யாச தர்மத்தில், என்றுமே பிறழாமல், இறைவனே வந்து தம்மை சோதித்தாலும், தனது தர்ம நெறியை கைவிட மாட்டேன் என்ற அவருடைய வைராக்யத்தை, வேறு எவரிடமும் காண இயலாது!

நதிக்கரையில் நடந்த இந்த அற்புதத்தை, அனைவரும் கண்டு வியந்து, குருமகராஜ் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளையும், ஸ்ரீதத்தரையும் வணங்கி, ஆலயத்திற்கு மீண்டும் எழுந்தருளச் செய்தனர். ஆலயத்திற்குள் திருவுருவம் எழுந்தருளியதும், உடனடியாக, ஸ்ரீதத்தரின் கட்டளையை சிரசில் ஏற்று, அனைவரும் வாசனை திரவியங்கள், பஞ்சாமிர்தம் போன்ற அபிஷேக பொருட்களையும், அவர் நீராடுவதற்கு வெந்நீரையும் ஏற்பாடுகள் செய்து, நீராட்டி பூஜை வழிபாடுகள் செய்த பின்னரே, ஸ்ரீதத்தரின் முகத்தில் புன்னகை ததும்புவதை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீவாசுதேவர் உணர்ந்து கொண்டார். "சிறு குழந்தையைப் போல, இது என்ன லீலை ஸ்வாமி? என்று ஸ்ரீ வாசுதேவர் ஸ்ரீதத்தரிடம் கேட்க நினைத்த போது, தான், தாமே ஸ்ரீதத்தருக்கு தாயாக இருக்க விரும்புவதை, உணர்ந்து கொண்டார்! இதைவிட பாக்யம் செய்தவர், இவ்வுலகில் வேறு எவர் இருக்க முடியும்? ஆனால் ஸ்ரீவாசுதேவர் சில சமயங்களில், கண்டிப் பான தாயாகவும் இருந்தார். தனது குழந்தையின் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் எவற்றையும் ஒரு தாயால் தர இயலாது! அவ்வாறே ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளும், மும்மூர்த்தி களின் ஸ்வரூபமான, தத்தருக்கே தாயாகும் சௌபாக்யத்தை பெற்றார்.

ஸ்ரீதத்தரின் திருவுருவச் சிலைக்கு, அபிஷேக ஆராதனை கள் நிவேற்றியவுடன், ஸ்வாமிகள் "அபங்" என்று மராட்டிய மொழியில், இறைவனை குறித்து பாடப்படும் நமது நாட்டுப் புறப் பாடலைப் போன்று, துள்ளல் ஓசையோடு பக்தி நெறி சேர்ந்த பாடலை பாடினார். அதுவும் ஸ்ரீதத்தர் விரும்பிக் கேட்டதன் காரணமே ஆகும்.

அப்பாடல், "மித்ர மித்ர ஜரி பந்தே" என்று தொடங்கி "தேதோ தத்த பரமானந்த்" என்று நிறைவு செய்தார்.

அதன் பொருள் "ஹே ப்ரிய தத்த பிரபு, இரண்டு நண்பர் கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டால் உடனே சேர்ந்து விடும் உயர்ந்த நட்பைப் போல, மனமொத்த தம்பதியினர் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டாலும், இரவுப் பொழுதிற்குள் மீண்டும் இணைந்துவிடுவார்கள். அவர்களால் ஒருவரை ஒருவர், பிரிந்து இருக்க இயலாது, அதைப்போலவே நீயும், நானும் சில சமயங்களில் கோபித்துக் கொண்டாலும், உரிமையோடு விவாதங்கள் செய்தாலும், நம்மால் பிரியவே இயலாது. அத்தகைய அளவுகடந்த அன்பை, நாம் இருவரும் பொழிந்து கொண்டிருக்கிறோம்.

ஆகையால் நடந்ததை நினைத்து கோபித்துக் கொள்ளா மல், சாந்தமடைந்து, இந்த வாசுதேவனின், நைவேத்யத்தை ஏற்றுக் கொள் ஐயனே! "நீ உண்ணாமல், நானும் உண்ணப் போவதில்லை! என்று அன்போடு வேண்டியதை பார்த்த

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அனைவருடைய கண்களிலும் நீர் வழிந்தது. இத்தகைய ஒரு அன்பையே , இறைவனும் நம்மிடம் எதிர்பார்க்கிறார்! நம் வாழ்க்கையின் பெரும்பகுதியை மனிதர்களை, முகஸ்துதி பாடியே கழித்து விட்டோம். சாமான்ய மனிதர்களுக்கே, முகஸ்துதி அவசியமென்றால், பரம்பொருளை, பக்தர்களாகிய நாம், எவ்வாறெல்லாம் ஆராதனை செய்ய வேண்டும்! என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்! ஸ்ரீ வாசுதேவர், தனது பக்தர்களிடம், இறைவன் உருவ வழிபாட்டை, ஆதரிக் கிறாரா என்று உங்களில் பலருக்கு சந்தேகம் ஏற்பட்டிருக் கலாம்! இறைவன் உருவமாகவும் உள்ளார். அருவமாகவும் உள்ளார்! மனம் ஒருமுகப்பட்டு, சிந்தனை முழுவதும், உருவ மில்லாத இறைவனை, நினைத்து தியானம் செய்ய இயலும் வரை நிச்சயமாக உருவழிபாடு அவசியம்!" மனம் ஒருமுகப் படவேண்டுமானால் உருவவழிபாடு மிக மிக அவசியம் என்றார்.

"எவ்வாறு ஒரு நாட்டு மன்னன் தனது" ராஜ முத்திரை யால், பெருமை கொள்கிறானோ, அதை போல இறைவனும் வழிபாடுகள், ஆராதனைகள் வேத கோஷங்கள் இவற்றால் மகிழ்கிறார். ஆனால் "(ராஜ முத்திரையே" ராஜாவாக அங்கீ காரம் பெற இயலாது. ராஜ் முத்திரை என்பது அக்காலத்தில், அரசர்கள் கலைகளில் சிறந்தவர்களை கௌரவிக்க வழங்கும் அடையாளமாகும், அந்த முத்திரையை பெற்றுக் கொண்டவர் கள் அந்த நாட்டில் எந்த மூலை முடுக்குகளில் சென்றாலும், அவர்களை மக்கள் கௌரவிப்பார்கள். ஆனால் கௌரவம் என்பது உண்மையிலேயே அரசருக்கு மட்டும்தான், முத்திரை என்பது வெறும் ஒரு கருவியே ஆகும்.

அதைப்போன்றே வழிபாட்டு முறைகள், விதிகள், ஆராதனைகள், சடங்குகள் சம்பரதாயங்கள் இவை யாவுமே, நாம் இறைவனை அடைய உதவும் கருவிகளே ஆகும். இவை நம் கைகளுக்கு வந்துவிட்ட காரணத்தால், நாம் கர்வம் கொண்டு நம்மையே இறைவனாக கருதி விடக்கூடாது. இத்தகைய மிகச்சிறந்த உபதேசத்தை அவர் சென்றவிட மெல்லாம் மக்களுக்கு வழங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## எட்டாவது சாதுர்மாஸ்ய விரதம் – திலக் வாடா - பரோடா, 1898

குருமகராஜ் சிக்கல்தாவில் இருந்து, தமது அடுத்த சாதுர் மாஸ்ய விரதத்தை அனுஷ்டிக்க, திலக் வாடாவிற்க்கு வருகை தந்தார். நர்மதா நதிக்கரையில் இருந்த அப்பகுதியில் அப் பொழுது "ப்ளேக்" நோய் பெரிதும் பரவியிருந்தது மகராஜ் அதைப்பற்றி இலட்சியம் செய்யவில்லை.

திலக்வாடாவில் மாருதி ஆலயத்தில் மகராஜ் தங்கியிருந் தார் திலக்வாடா, பரோடா என்ற மாநிலத்தில் அமைந்துள்ளது.

அங்கு நம் மகராஜ் அவர்களை தரிசிக்க வந்த பக்தர் ஒருவர் தமது "ஜாதகத்தை, மகராஜ் அவர்களின் பாதங்களில் சமர்ப் பித்து, "ஸ்வாமி திருமணமாகி இத்தனை ஆண்டுகளாகியும், அடியேனுக்கு ஒரு புத்திர பாக்கியம் இல்லை! என்னுடைய ஜாதகத்தில் கோளாறு இருப்பதாக அனைவரும் கூறுகின்றனர். ஆனால் எவராலும் அதை சரி செய்யும் பரிகாரத்தை இயல வில்லை! தயவுகூர்ந்து கருணை காட்டுங்கள்! ஸ்வாமி என்றார்.

ஸ்வாமிகள், மணிசங்கர் என்ற பெயரைக் கொண்ட அவருடைய ஜாதகத்தை, தமது கைகளால் கூட தொடவில்லை அவற்றின் சாரத்தை உள் வாங்கிக் கொண்டு, "சென்ற ஜென்மத்தில், நீ நாகத்தை கொன்றுள்ளாய்! அதனுடைய பாவத்தை சிறிது அனுபவித்த பிறகு "நாக பஞ்சமி விரதம்" கடைபிடிப்பாயாக! என்றார் குருநாதர் சொன்னதை ஏற்றுக் கொண்ட அவர், நாக பஞ்சமி பூஜையை சிறப்பாக நடத்தி தனது சென்ற ஜென்மத்தவறுகளை மன்னிக்குமாறு வேண்டி னார். அடுத்த வருடத்தில் ஒரு குழந்தையை அவர் மனைவி பெற்றெடுத்தார். மகராஜ் அவர்களின் லீலைகள் ஏராள மானது.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் இயற்றிய **"நர்மதாகியான்"** என்ற ஸ்லோகம், அதனுடைய விளக்கங்களுடன் அனைவருக்கும் உபதேசிக்கப்பட்டது. இந்த கால கட்டத்தில் மகராஜ், தேவநாகரி மொழியில் **"கூர்ம புராணத்தை"** இயற்றினார். கூர்மபுராணம் என்பது கூர்ம அவதாரத்தின் மகிமையை விளக்கிச் சொல்வதாகும். கூர்மபுராணம் பதினெட்டு வகை புராணங்களில் ஒன்றாகும். மகராஜ் எல்லா மொழிகளிலும், மிகுந்த தேர்ச்சியும் புலமையும் வாய்ந்தவர். ஸ்வாமிகள் எந்த பள்ளியிலும், கல்லூரியிலும் சென்று கல்வி பயிற்சியைப் பெறவில்லை. தெய்வீக ஆற்றலால் அனைத்து மொழிகளிலும் கவிதைகளும், பாடல்களும், கதைகளும் எழுதும் அளவிற்கு ஆற்றல் பெற்றிருந்தார்.

பேராசியராக ஒரு கல்லூரியில் பணியாற்றிவர், வாசுதேவ் கணேஷ் அனகரே (Vasudeo Ganesh Angare) என்பவர், பக்திப்பாடல்களை, மிக இனிமையாக பாடுவதில் வல்லவர், அவர் தமது வாழ்க்கையில் நடந்த, முக்கிய சம்பவங்களை குறிப்பாக பதிவு செய்திருக்கிறார். அக்குறிப்பில், அவருடைய வாழ்க்கையில், ஸ்ரீ வாசுதேவ சரஸ்வதி ஸ்வாமி கள் எத்தகைய அற்புதங்களை செய்தார் என்பைதயும், ஸ்வாமிகள் செய்த சில மிகப்பெரிய அற்புதங்களையும், ஒரு நூலாக வெளியிட்டுள்ளார். அவருடைய குறிப்பில் இருந்து சில அற்புத நிகழ்வுகளைக் காண்போம்.

பேராசிரியரின் தந்தையான கணேஷ் அனகரே, என்பவர் திலக்வாடா கிராமத்தில் வசித்தார். அவருடைய தாய் நர்மதாபாய் என்பவர், தமக்கு நீண்ட காலமாக புத்திரபாக்கியம் இல்லையே என்று, ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பேராசிரியரின் பாட்டியான வாருபாய் என்பவர், சந்யாசிகளுக்கு சேவை செய்வதிலேயே, தமது பொழுதை கழித்து வந்தார். நர்மதா நதிக்கரையில் வலம் வருவோர்க்கும், பூஜைகள் செய்பவர்க்கும், தரிசனம் செய்பவருக்கும், அன்னமும், நீரும் தொடர்ந்து அளித்து சேவை செய்து கொண்டிருந்தார்.

இச்சமயத்தில் நர்மதாபாயும், தனது அன்னையோடு சேவையில் ஈடுபடுவது வழக்கம். மகராஜ் ஸ்ரீவாசுதேவானந்த

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சரஸ்வதி ஸ்வாமிகள், நர்மதாபாயை தினமும் சந்திப்பதால், அவளை தன்னுடைய குழந்தையாகவே கருதி அன்போடு போதனைகள் செய்வார்.

ஒரு முறை வாருபாய், நம் ஸ்வாமிகளுக்கு சேவை செய்து கொண்டிருந்தபோது, அவர் வாருபாயிடம் இன்றைக்கு ஏன் என் குழந்தை நர்மதா வரவில்லை? என்று அன்போடு கேட்டதைப் பார்த்து அனைவரும் வியந்தனர். அப்பொழுது மிகுந்த மனம் வருந்தத்துடன் வாருபாய் “ஸ்வாமி தாங்கள் எல்லாம் தெரிந்திருந்தும் ஒன்றுமே தெரியாதவர் போல ஏன் இவ்வாறு நடிக்கின்றீர்கள்? என் குழந்தை நர்மதா என்று அன்போடு அழைக்கும் நீங்கள், அவளுக்கு நீண்டகாலமாக, ஒரு குழந்தை பாக்கியம் இல்லை என்பது தங்களுக்கு தெரியாதா? தற்பொழுது கூட அவள் வீட்டு விலக்காக இருப்பதன் காரண மாக, தங்களை வந்து தரிசிக்க இயலாமல் இல்லத்திலேயே அமர்ந்து கொண்டு இருக்கின்றார்! என்று கண்ணீர் சிந்தி புலம்பினார்.

வாருபாய் இவ்வாறு புலம்புவதைக் கேட்ட மகராஜ் ,சிரித்துக்கொண்டே, “உனக்கு ஒரு பேரன் நிச்சயமாக உண்டு! அவனுக்கு வாசுதேவ் என்றே பெயர் சூட்டுவாய்! உன் பேரனுக்கு ஐந்து மாதங்கள் ஆனவுடன், அவனுடைய எடைக்கு எடை கோதுமை தவிட்டை, கல்பனேஷ்வர் ஆலயத்திற்குத் தர வேண்டும்! அவ்வாறு அளிப்பதற்கு சம்மதித்தால் நீ நினைத்த காரியம் விரைவில் நிறைவேறும்! என்று ஆசிர்வாதித்தார். தாம் எவருக்கு பரிகாரம் உரைத்தாலும், அவர்களின் சக்திக்கு என்ன இயலுமோ, அதை மட்டுமே மகராஜ் கூறுவார்.

மகாராஜ் அவர்களின் வாக்கு, சத்திய வாக்காகும். நர்மதா பாய் கருவுற்றார். வாருபாய், மகராஜ் அவர்களின் மீது, அளவு கடந்த அன்புடனும், பக்தியுடனும் சேவை செய்து வந்தனர்.

அன்று முதல் நர்மதாபாய் நன்றியுனர்வுடன் வருடந் தோறும் ஸ்ரீ வாசுதேவ மகராஜ் அவர்களை தரிசிக்க, பரோடாவில் அமைந்த ஸ்ரீ கருடேஷ்வர் என்ற ஆலயத்திற்கு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். ஆனால் நம் ஸ்வாமிகள் இவ்வழக்கத்தை ஆதரிக்கவில்லை. அவர் நர்மதா

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பாயிடம் "நீ எப்போதும் இங்கு வந்து கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை! காடு மலைகளைக் கடந்து, குழந்தைகளையும் கஷ்டப்படுத்தி, ஏன் இவ்வாறு என்னை வந்து தரிசிக்க வேண்டும்? நான் எப்போதும் உன் மனதில் இருக்கிறேன்! ஆகையால் இனிமேல் என்னைத் தேடி வராதே! என்று கட்டளை இட்டார்.

ஆனால் நர்மதாபாய் அவர் கூறியதை இலட்சியம் செய்யவில்லை. அதன் விளைவுகள் என்ன என்பதை நாம் இப்போது காண்போம்! மகான்களின் வாக்கை மீறினால் நாம் மிகுந்த துன்பத்திற்கு ஆளாவோம் என்பதை நர்மதாபாய் உணரும் சமயமும் வந்துவிட்டது.

ஒரு சமயம் கருடேஷ்வர் செல்வதற்கு நர்மதாபாய், தனது குடும்பத்தினருடன், அதற்குண்டான ஏற்பாடுகளை செய்து கொண்டு புறப்பட்டாள். கருடேஷ்வர் செல்லும் வழி முழுவதும் அடர்ந்த கானகமாக இருந்தது! அவ்வழியாக செல்வதற்கு எவரும் அஞ்சுவார்கள். நர்மதாபாய், மகராஜ் நம்முடன் கூட இருக்கும் போது நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும்? என்று அனைவரிடமும் கூறுவது வழக்கம். அந்த முறையும் அதே போல மிகப்பெரிய மலையை கடப்பதற்காக, அனைவரும் முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

மகராஜ் அவர்களின் உத்தரவை மீறிய காரணத்தால், அவர்கள் செல்ல வேண்டிய வழியிலிருந்து திசை மாறி விட்டார்கள். தவறான வழியில் நீண்ட தூரம் சென்றவுடன், அனைவருமே உடலும் உள்ளமும் சோர்ந்து விட்டனர். அவர்களோடு குழந்தைகளும் வந்திருந்தனர். அக்குழந்தைகள் வலிதாங்க முடியாமல், மலைப்பாறையில் படுத்துக் கொண்டு, அழுது கொண்டிருந்தார்கள். மகராஜ் கருணையே உருவானவர். இவ்வாறு எல்லோரையும் வேதனைக்கு உள்ளாக்கி, ஒவ்வொரு முறையும் இங்கு வர வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியும், நர்மதாபாய் இலட்சியம் செய்யாததால் வழக்கமாக செல்லும் வழியையே மறந்து விட்டனர். இதுவும் மகராஜ் அவர்களின் லீலையே ஆகும்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அச்சமயம் திடீரென்று அவர்கள் காதுகளில், ஒரு கம்பீரமான குரல் ஒலித்தது "ஸ்ரீ குருதேவ தத்தா" (Shri Gurudev Datha) என்ற குரல் அனைவரின் காதுகளிலும் ஒலித்தது. இதை கேட்ட அவர்கள், அக்குரல் வந்த திசையை நோக்கி செல்லத்துவங்கினார்கள். அவர்களின் காதுகளில் தொடர்ந்து, அக்குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. அக்குரல் வந்த திசையை நோக்கி, கவனத்துடன் சென்று கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் அவர்கள் கருடேஷ்வரை அடைந்து விட்டார்கள்! என்ன ஆச்சரியம்! தொடர்ந்து பல மணி நேரங்கள் பாதை மாறி வேறு திசையில் சென்றவர்கள், சிறிது நேரத்தில் கருடேஷ்வரை எவ்வாறு அடைய முடியும்? ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமியின் அற்புதமே என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டனர்.

மகராஜ் அவர்களை தரிசித்தவுடன், ஸ்வாமிகள் நர்மதா பாயிடம் மிகவும் கோபமாக இருந்தார் அவர் "இன்று ஸ்ரீ தத்த பிரபு மிகவும் கருணையோடு உங்கள் அனைவரையும் காப்பாற்றி இருக்கிறார்! உங்களுக்கு நன்மையே புரிந்திருக்கிறார்! இதை நன்றாக நினைவில் நிறுத்திக் கொள்! இனியும் என்னைக் காண இத்தனை சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டாம்! ஸ்ரீ தத்த பிரபுவிற்கு நன்றி கூறி புறப்படுங்கள்! என்று ஒரு தாயுள்ளத்தோடு அனைவரையும் அவர்களுடைய இல்லங்களுக்கு அனுப்பி வைத்தார்.

ஸ்வாமிகள் தமது பின்னால், பக்தர்கள் கூட்டம் தொடர்வதை விரும்பவில்லை. அனைத்து சக்திகளின் பிறப்பிடமும் ஸ்ரீ தத்தாத்ரேயரே ஆவார். அவரை மனதார வணங்கினால் போதுமானது என்று அனைவருக்கும் உபதேசிப்பார். அவர் எந்த கிராமத்திற்கு சென்றாலும், மக்களின் பந்த பாசங்களில் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை. ஆகையால் மூன்று நாட்களுக்கு மேல் ஒரு இடத்தில் தங்கி இருக்க மாட்டார். எவரும் தன்னுடன் தங்குவதையும் அவர் விரும்பவில்லை.

எங்கு செல்ல வேண்டும் என்று ஸ்ரீ தத்த பிரபுவின் உத்தரவு கிடைத்தவுடன், உடனே புறப்பட்டு விடுவார். எவரிடமும் எந்த உதவியும் கேட்டுப் பெறாதவர். அவருக்கு மிகப்பெரிய செல்வந்தராக இருந்தாலும். கஞ்சிக்கே

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வழியில்லாத ஏழையாக இருந்தாலும் அனைவருமே ஒன்று தான். அவரைக் காண வரும் பக்தர்கள் அளிக்கும், பரிசு களையும், விலையுயர்ந்த பொருட்களையும் தமது கையால் தொடவும் மாட்டார்.

உடனடியாக அப்பொருட்களை அவ்விடத்தை விட்டு நீக்குமாறு கடுமையாக உத்தரவிடுவார். அவற்றை தமது கைகளால் தொடுவது விஷத்தை தொடுவதற்கு சமானமாகும் என்று அனைவருக்கும் உபதேசிப்பார். மகான்களுக்கே உள்ள இயல்பான இவ்வகை குணங்கள், சாமான்ய மானுடர்க்கு ஒரு போதும் இருக்க வாய்ப்பில்லை. அவ்வாறு ஆசைகளை துறப்பவர்களே மகான்கள் என்ற தகுதியையும் பெறுகிறார்கள்.

### பேராசிரியர் வாசுதேவ கணேஷ்

பேராசிரியராக இருந்த வாசுதேவ கணேஷ் தமது குறிப்பில், தாம் தமது தாய் நர்மதாபாயிக்கு **1907** இல் பிறந்ததையும், குறிப்பிட்டு தாம் பிறந்தது முதல், தினமும் சாதுக்களையும், சந்நியாசிகளையும், ஞானிகளையும் தேடிச் சென்று தரிசிப்பதை சிறு வயது முதல் பழக்கமாக கொண் டிருந்ததாகக் குறிப்பிடுகிறார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் அருளால்தான் தமக்கு இவ்வாறு மகான்களின் மீது அளவற்ற பக்தி ஏற்பட்டதையும் தமது கையேட்டில் பதிவு செய்துள்ளார்.

பேராசிரியர் வாசுதேவ கணேஷ் தமது நண்பர் பரணசங்கர் என்பவரிடத்தில் மகராஜ் செய்த அற்புதங் களையும் மிகத் தெளிவாக விவரித்துள்ளார். **1913** இல் ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது, ஒரு பிரபல ஆங்கிலேயே நிறுவனம் பரணசங்கர் தேவ், அவர்களை தங்களின் நிறுவனத்தில் அதிகாரியாக நியமித்திருந்தது.

அச்சமயத்தில் தமது தெருங்கிய நண்பர் ஒருவர், தமக்கு செய்த நம்பிக்கை துரோகத்தினால், தாம் சமுகத்தில் மானம், மரியாதை அனைத்தும் இழந்து, அனைவரின் முன்னிலையி லும் குற்றவாளியாக தெரிந்த காரணத்தால், தற்கொலை செய்ய எடுத்த முடிவை ஸ்ரீ வாசுதேவ மகராஜ் எவ்வாறு

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தடுத்து காப்பாற்றினார் என்ற அற்புதத்தை, பேராசிரியர் வாசுதேவரின் குறிப்பேட்டின் மூலமாக நாம் இப்பொழுது காண்போம்!

பரணசங்கர் தேவ் என்பவர் மிகவும் நேர்மையான, இறையுணர்வு கொண்ட ஒரு நல்ல மனிதர், அவர் நல்ல திறமையான நிர்வாகி என்ற காரணத்தால் அவர் மீது முழு நம்பிக்கை வைத்திருந்த ஒரு ஆங்கிலேய நிறுவனம், உயர்ந்த பதவியை அவருக்கு அளித்திருந்தது. ஒரு முறை குடும்ப சூழ் நிலை காரணமாக பரணசங்கர் தேவ், சில நாட்கள் விடு முறையில் எங்காவது வெளியில் சென்று வரவிரும்பினார். தனது நிறுவனத்திடம் ஒப்புதல் பெற்றுக் கொண்டு, விடுமுறையை கழிப்பதற்காக புறப்பட்டார்.

மிகுந்த பணத் தொகையை, தினமும் பரிவர்த்தனை செய்யக்கூடிய அளவில், அந்நிறுவனத்தின் வியாபாரமும் சிறந்து விளங்கியது. ஆகையால் தாம் விடுமுறையில் செல் லும்போது, தனக்குபதிலாக பணத்தொகையை, பரிவர்த் தனை செய்யும் பொருட்டு தமது நெருங்கிய நண்பரிடம், சில வெற்றுக் காகிதங்களில் கையெழுத்து இட்டு கொடுத்து விட்டார். பரணசங்கர் தேவ் செய்த மாபெரும் தவறு, வெற்றுக் காகிதங்களில் கையெழுத்து இட்டதே ஆகும். அதன் விளைவுகளை சில நாட்களிலேயே அவர் மிகவும் விபரீதமாக அனுபவிக்க நேர்ந்தது.

பரணசங்கர் தேவின் நெருங்கிய நண்பர், காகிதங்களில் கையெழுத்திட்டு தம்மிடம் அளித்ததை, துஷ்பிரயோகம் செய்து பல இலட்சக்கணக்கான பணத்தொகையை, கையாடல் செய்து அத்தொகையை, தன்னுடைய பெயருக்கு மாற்றிக் கொண்டு விட்டார். பரணசங்கர் தேவ் விடுமுறை கழிந்து பணிக்குத் திரும்பினார். அந்த மாதம் அவருடைய நிறுவனத்தின் பணப் பரிவர்த்தனைகள், அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட வேண்டியிருந்தது.

தணிக்கை அலுவலகத்திற்கு சென்ற ஆவணங்கள், மோசடி நடந்திருப்பதை தெளிவாக உணர்த்திவிட்டது. பரண சங்கர் தேவ் அதிர்ச்சி அடைந்து, செயல் இழந்து போய்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விட்டார். தான் ஒரு நேர்மையான அதிகாரி என்று, அந்நிறுவனத்தில் பலமுறை விருதுகளை வாங்கியவர் அவர். ஆனால் தனது நேர்மைக்கும், தூய்மையான பக்திக்கும் இப்படிப்பட்ட சோதனை ஏற்படும் என்று கனவில் கூட அவர் நினைத்ததில்லை. அவருடைய நண்பர் மீது அவர் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால் அவருடைய நண்பர் அவருக்கு நம்பிக்கை துரோகம் இழைத்துவிட்டார். அது மாபெரும் பாவச் செயலாகும்.

இதன் விளைவாக பரணசங்கர் தேவ் விரைவில் கைது செய்யப்படலாம் என்ற தகவல் வந்தது. இனியும் நாம் இங்கு இருக்கக்கூடாது என்று தீர்மானித்து, தலைமறைவாக வேறு ஒரு இடத்திற்கு சென்று விட்டார். ஸ்ரீ தத்தரின் மீது பரண சங்கருக்கு மிகுந்த பக்தி இருந்தது.

பரணசங்கர் தலைமறைவான செய்தி கிடைத்தவுடன், அவர் மேல் உள்ள சந்தேகம் ஊர்ஜிதமாகியது. நிச்சயமாக அவரே இத்தகைய ஒரு இழிவான செயலை செய்திருப்பார் என்று, அவருடைய நிறுவனமும், நெருங்கிய நண்பர்களுமே அவரை சந்தேகப்பட்டனர். இது மிகவும் துரதிருஷ்டவசமானது. உடனடியாக காவல் துறையிடம் புகார் அளிக்கப் பட்டது. அவரை தேடி நாலாபுறங்களிலும், காவல்துறையினர் வலைவீசிக் கொண்டிருந்தனர். அது மட்டுமில்லாமல், ஒரு தவறுமே செய்யாத அப்பாவி பரணசங்கரின் மீது, அபாண்டமாக திருட்டுப்பழி சுமத்தப்பட்டு, தினசரி நாளிதழ்கள் அனைத்திலும் முதற்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டன.

இதைவிட ஒருவருக்கு வேறு என்ன இழிவான நிலை ஏற்படமுடியும்? தாம் கௌரவமாக வாழும் இச்சமூகம், முழுவதும் தம்மை ஒரு குற்றவாளியாக காணும் நிலை ஏற்பட்டு விட்டது. இனியும் உயிரோடு இவ்வுலகில் வாழ்வதை, பரணசங்கர் விரும்பவில்லை.

இறைவனை மனதார பிரார்த்தனை செய்துவிட்டு, ஒரு கடிதத்தை எழுதி ஒரு இடத்தில் வைத்துவிட்டு, ஓம்காரேஷ்வர் சென்று இறைவனை தரிசித்து, புனித நர்மதா நதியில் தனது வயிற்றில் ஒரு பெரிய கல்லைக் கட்டிக் கொண்டு விழுந்து விட வேண்டும் என்று உறுதியாக தீர்மானித்து விட்டார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பரண சங்கர் இப்பொழுது, நர்மதா நதியில் இறங்கி விட்டார். நதியில் மழைக்காலமாதலால், வெள்ளம் பெருக் கெடுத்து ஓடிக் கொண்டு இருந்தது. நதியின் நடுப்பகுதிக்கு, பரணசங்கர் வந்துவிட்டார். மாதா நர்மதா தேவியை வணங்கி, தலை மூழ்கினார். என்ன ஆச்சரியம்! நதியின் நடுப்பகுதியில் இருந்த, அவரின் தலை முடியை, ஒரு கரம் மிகவும் வேகமாகப் பற்றி, மேலே இழுப்பதை உணர்ந்தார். அந்தக் கரத்தின் வலிமை, மிகவும் அதிகமான ஆற்றலுடைய கைகள், என்பதை அவருக்கு உணர்த்தியது.

அந்தக் கரங்கள் பரண சங்கரை, முழுமையாக வெளியில் இழுத்து, கரையில் சென்று தள்ளிவிட்டது. கண்விழித்துப் பார்த்தவர், தாம் கரையில் ஒதுங்கிக் கிடப்பதைக் கண்டார். அப்பொழுது அவருடைய காதுகளில், ஒரு குரல் ஒலித்தது. “நீ எதற்கும் அஞ்ச வேண்டாம்! உனக்கு நம்பிக்கை துரோகம் செய்த உனது நண்பன், காவல்துறையிடம் பிடிபட்டுக் கொண்டான்! அவனுடைய வாக்குமூலத்தில், உன்னை நிரபராதி என்று அனைவரும் புரிந்து கொண்டுவிட்டனர்! “நீ நேராக அருகில் இருக்கும் “மார்டாகோ” என்ற இரயில் நிலையத்திற்கு செல்வாயாக! என்று அவர் காதுகளில் ஒலித்த குரலால், ஆச்சரியமடைந்தார்.

பரணசங்கர் இக்குரலுக்கு சொந்தக்காரர் யார்? என்னைக் காப்பாற்றிய அந்த சன்யாசி யார்? என்று புரியா மல் தவித்தார். பின்னர் அவருடைய உத்தரவை, ஏற்று, மார் டாகோ இரயில் நிலையத்திற்கு சென்றார். என்ன ஆச்சரியம்! அந்த இரயில் நிலையத்தில், அப்பொழுது ஒரு புகைவண்டி நின்று கொண்டிருந்தது. அவர் அந்த வண்டியில் எவராவது தென்படுகிறார்களா, என்று உற்றுக் கவனித்தார். அங்கே அவர் கண்டகாட்சி அவரை மெய்சிலிர்க்க வைத்தது. அவர் பார்த்த அந்த வண்டியில், இருந்த ஒரு பெட்டியில், ஆறு காவல்துறை அதிகாரிகள் மற்றும் அவர்களோடு கைது செய்யப்பட்ட நிலையில், அவருடைய நெருங்கிய நண்பனும் இருந்தான்.

இக் காட்சியை கண்ட பரணசங்கர் தேவ், இறைவா! என்னை காப்பாற்றிய அந்த சந்யாசிக்கு, நான் நமஸ்காரம்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

செய்து நன்றி சொல்ல வேண்டும்! அவர் யார்? எங்கு இருக்கிறார்? தயைகூர்ந்து என் கண்களுக்கு தெரியப்படுத்து வாயாக! என்று இறைவனை வேண்டினார். பரணசங்கர் இரயில் பெட்டியில் பார்த்த, காவல்துறை அதிகாரிகள், அவரை அடையாளம் கண்டு கொண்டனர். விரைந்து பரணசங்கரின் அருகில் வந்தவர்கள், அவரிடம் கைகுலுக்கி அவருடைய நேர்மையை பாராட்டினார்கள். அது மட்டு மல்லாமல் அவர் மீது அளித்த புகாரை, வாபஸ் பெற்றுக் கொண்டதாகவும், உண்மையை அறிந்து கொள்ளமல், ஏற்பட்ட தவறுக்கு மன்னிக்கும்படியாகவும் கூறினார்கள்.

இவை யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பரண சங்கருக்கு, தாம் காண்பது கனவா அல்லது நினைவா என்று தெரியவில்லை.

பரணசங்கர் ஊருக்கு திரும்பியதும், அவருக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. அதுவரை அந்நிறுவனத் தின் ஒரு பிரிவின் அதிகாரியாக பணிபுரிந்த அவர் அன்று முதல் அந்நிறுவனத்தின் ஒரு பங்குதாரராக நியமிக்கப் பட்டார். இவை யாவுமே நம்மைக் காப்பாற்றிய அந்த சந்யாசியின் மகிமையே, என்பதை நன்றாக புரிந்து கொண் டார். ஆனால் அவரை எவ்வாறு அடையாளம் காண்பது என்று அவருக்கு தெரியவில்லை.

ஒரு நாள் தமது நண்பரான பேராசிரியர் வாசுதேவ கணேஷ்வரின், இல்லத்திற்கு விருந்து உபசாரத்திற்காக அழைக்கப்பட்டிருந்தார். நண்பரின் இல்லத்தில் உரிமையு டன், அவருடைய பூஜை அறைக்குச் சென்று வணங்கினார். ஆனால் அங்கு அவருக்கு ஒரு ஆச்சர்யம் காத்துக் கொண் டிருந்தது. பரணசங்கர் எவரைக்காண வேண்டுமென்று, மனம் துடிதுடிக்க காத்துக் கொண்டிருந்தாரோ, அவருடைய வரைபடம் அங்கே இருந்ததைக் கண்டுவிட்டார். ஆனந்தத் தில் அவருக்கு தலைகால் புரியவில்லை விரைந்து நண்பரின் தாயான நர்மதாபாயை, அழைத்து "அம்மா இப்படத்தில் உள்ளவர் யார்? உடனே எனக்கு தெரிய வேண்டும்?

நான் இவரை உடனடியாக தரிசிக்க வேண்டும்! என்றார். நர்மதாபாய் ஆச்சரியத்தில், பரணசங்கரிடம்,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

“அவரை இதுவரை நீ பார்த்தது கூட இல்லையே! பின்னர் இவ்வாறு நீ ஆர்வமாக இருப்பதன் காரணம் என்ன?” என்று கேட்டார். அவ்வளவுதான் பரணசங்கர் கண்களில் நீர் வழிய அழ ஆரம்பித்து விட்டார். “அம்மா என்னை அவமானத்திலிருந்தும், பழியில் இருந்தும், சாவிலிருந்தும் காப்பாற்றியவரே இந்த சந்யாசிதான்! “இவர் என்னை காப்பாற்றவில்லை என்றால், நான் இன்று குற்றவாளி என்ற பட்டத்துடன், தற்கொலை செய்து கொண்டு இருப்பேன்! தயை கூர்ந்து என்னை இவரிடம் அழைத்துச் செல்லுங்கள்! அவருடைய பாதங்களில் வீழ்ந்து என் கண்ணீரால் அபிஷேகம் செய்ய வேண்டும்! என்று தன்னிலை மறந்து உணர்ச்சி வசப்பட்டு கூறினார்.

நர்மதாபாய் மனம் மகிழ்ந்து, “இதுவே நம் குருநாதரின் கருணையாகும்! உனது நண்பனை நான் பெற்றெடுத்ததற்கும் அருள் செய்தவரே ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் ஆவார்!” என்று கூறிவிட்டு, உடனடியாக பரணசங்கரை, ஸ்வாமிகளின் இருப்பிடத்திற்கு, நர்மதாபாய் அழைத்துச் சென்றாள். பரணசங்கரை வெளியில் அமரச் செய்து விட்டு, ஸ்வாமிகளை தரிசித்து, அவரிடம் உத்தரவு பெற்று வருகிறேன் என்று கூறிவிட்டு ஆலயத்தில் நுழைந்தார். நர்மதாவைக் கண்டதும் ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே,

“எங்கே அந்த தற்கொலை செய்து செய்து கொள்ளப் போன ஆசாமி?” அவனும் உன்னோடு வந்திருக்கிறானா! என்று கேட்டவுடன் நர்மதாபாய் அதிசயித்து, “ஸ்வாமி தங்களுடைய லீலைகளை யாரால் வர்ணிக்க இயலும்? தாம் காப்பாற்றியவர், தங்களைக் காணும் ஆவலில், காத்துக் கொண்டிருக்கிறார்! நீங்களோ உங்கள் பக்தரைக் காணும் ஆவலில், இங்கு காத்துக் கொண்டிருக்கிறீர்கள்! இது எத்தகைய ஒற்றுமை! என்று வியந்து பரணசங்கரை அழைத்து, ஸ்வாமிகள் அவருக்காக காத்துக் கொண்டிருப்பதாகக் கூறினார்.

பரணசங்கர் ஓடிச் சென்று, ஸ்வாமிகளின் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். அப்பொழுது ஸ்வாமி, “தற்கொலை செய்து கொண்டால் உன் மீது

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சுமத்தப்பட்ட பழி சரியாகிவிடுமா? உனது ஆத்மா சாந்தியடையுமா? ஏன் இவ்வாறு ஒரு காரியத்தை செய்யத் துணிந்தாய்? என்று உரிமையுடன் கோபித்துக் கொண்டார். இந்நிகழ்வை பரணசங்கருடைய வாழ்க்கையில், அம்மஹான் ஏற்படுத்திய அற்புதத் திருப்பமாக, அவருடைய நண்பரான பேராசிரியர் தமது கையேட்டில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் வாசுதேவ கணேஷ், குறிப்பிட்ட மற்றொரு அற்புதம், ஸ்ரீ தேம்பே ஸ்வாமி என்று போற்றப்படும், ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரமே என்பதை அனைவருக்கும் அறிவித்து விட்டது.

பேராசிரியர் வாசுதேவகணேஷ் இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மிக இனிமையாக பஜனைப்பாடல்களைப் பாடுவதில் வல்லவர். அவருக்கு இசை மீது இருந்த ஆர்வம், அவர் செய்து கொண்டிருந்த பணியை விட்டுவிட்டு, சாஸ்திரிய சங்கீதத்தை இன்னும் சிறப்பாக கற்றுத் தேர்ந்து பாட வேண்டும் என்ற ஆர்வத்தில் தமது வருமானத்தையே உதறிவிட்டார்.

அவர்களின் குடும்பத்தில் எல்லோருமே செல்வந்தர்களாக இருந்ததால், தமக்கு வருமானம் இல்லாவிட்டாலும், மனைவி, மக்களுக்கு எந்த குறையும் நேராது என்ற காரணத்தால், இசைப்பயிற்சிக்காக குவாலியர் (Gwalior) செல்ல தீர்மானித்தார். பெற்றோரிடமும், மனைவி மக்களிடம் தான் சங்கீதம் பயில்வதற்காக, குவாலியர் செல்லப் போவதாகவும், இக்கலையை பூர்த்தி செய்வதற்கு இரண்டு அல்லது மூன்று வருடங்கள் கூட ஆகலாம் என்றும் கூறி, அனுமதியும் பெற்று விட்டார்.

தனது நண்பர் கிருஷ்ணராவ் என்பவருடன் குவாலியர் வந்து சேர்ந்தார். குவாலியர் என்ற பகுதியில், மிகச்சிறிய பல கிராமங்கள், ஒன்றாக இணைந்திருந்தன. பேராசிரியர் வாசுதேவகணேஷ், தமது நண்பருடன் இசைப்பள்ளியில் ஒரு பகுதியில் தங்கினார். ஆனால் பயிற்சி செய்வதற்காக தனியாக ஒரு வீட்டை, தேடிக் கொண்டு இருந்தார். அப்பொழுது அவருடைய நண்பர், அந்தப்பள்ளியின் எதிரே ஒரு நல்ல

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வீடு காலியாக அமைந்திருப்பதாகவும், பேராசிரியர் அந்த வீட்டை ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்றும் யோசனை தெரிவித்தார்.

அந்த யோசனை, போராசிரியருக்கு சரியாகத் தோன்றி யது. உடனே அங்கு சென்று, தம்மைப்பற்றி கூறிவிட்டு, வீடு வாடகைக்கு வேண்டும் என்று கேட்டவுடன், அந்த வீட்டின் உரிமையாளரான ஆலந்திகர் என்பவர், பேராசிரியரின் குடும்பத்தைப்பற்றி விசாரித்தார். அவர் தமக்கு திருமணமாகி மனைவி, மக்கள் எல்லோரும் இருப்பதாகவும், அவர்கள் தனது பெற்றோருடன், தனது சொந்த ஊரில் தங்கிவிட்ட தாகவும், தாம் மட்டும் இசையை முழுமையாக பயில்வதற்காக இங்கு வந்திருப்பதாகவும் கூறினார்.

அவ்வளவுதான்! ஆலந்திகர் ஆத்திரத்தின் எல்லைக்கே சென்றுவிட்டார். "உங்கள் ஊரில் மனைவியை விட்டுவிட்டு இங்கு தனியாக எதற்காக வரவேண்டும்? "எனக்கு இரண்டு பெண்கள், மூன்று மருமகள்கள் இருக்கின்றார்கள்!" என்னுடைய இல்லத்தில், வயதில் சிறிய பெண்கள் இருக்கும் போது நான் எவ்வாறு உங்களை தங்குவதற்கு அனுமதிப் பேன்? சொந்த மனைவியை ஊரில்விட்டுவிட்டு, அப்படி என்ன இசைப்பயிற்சியை செய்து கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்கு வீட்டை வாடகைக்கு தருவதற்கு இயலாது! நீங்கள் வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று கூறிவிட்டு, பேராசிரியர் அளித்த முன்பணத்தை திரும்ப தந்துவிட்டார். ஆனால் பேராசிரியர் அவரிடம் பணிவோடு, "ஸ்வாமி நான் தேம்பே மஹராஜ் அவர்களின் பக்தனாவேன்! என்னை நீங்கள் தாராளமாக நம்பலாம்! நான் மற்ற இளைஞர் கள் போல இல்லை! எனக்கு இசையைத்தவிர வேறு எதுவுமே தெரியாது! "தயவு செய்து என்னை உங்களின் மகனாக ஏற்றுக்கொண்டு நான் தங்குவதற்கு இடம் தாருங்கள்!" என்று மிகவும் பணிவுடன் வேண்டினார். ஆனால் துரதிர்ஷ்டவச மாக ஆலந்திகர், அவர்களுக்கு, பேராசிரியரின் மேல் நல்ல எண்ணமோ, நம்பிக்கையோ ஏற்படவில்லை.

இவ்வாறாக அந்த வீட்டின் உரிமையாளர் ஆலந்திகர், பேராசிரியரின் மனம் நோகும்படி, வார்த்தைகளால் அவரை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

காயப்படுத்தி அனுப்பி வைத்துவிட்டார். "இன்றும் சிறிது நேரம் இங்கே நின்று கொண்டிருந்தால் உன்னை அடித்து துரத்துவேன்" என்ற அளவிற்கு, மரியாதைக் குறைவாக அவர் பேசிய வார்த்தைகளால் மனம் வருந்திய பேராசிரியர், தனது இசைப் பள்ளிக்கு வந்து விட்டார். மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த தேம்பே ஸ்வாமிகளின் படத்தை, சற்று நேரம் அமைதியாக உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

அவர் மனம் அமைதியின்றி இருந்தது. அப்பொழுது அவருடைய நண்பர் ஸ்ரீ சோனுபையா (Sonubhaiyaa) என்பவர், அவரை தம்முடன் வருமாறு அழைத்துச் சென்றார்.

சோனுபையா குவாலியர் நகரத்தில், ஒரு சிறிய ஸ்ரீ இராமர் ஆலயத்தை நிர்மாணித்திருந்தார். அந்த ஆலயத் தில், ஒரு பகுதியை மூங்கில் கொட்டகையால் தடுத்து, ஒரு சிறிய அறையை பேராசிரியருக்கு ஏற்பாடு செய்து அளித்தார். ஸ்ரீ இராமரின் ஆலயத்தின் எதிரில், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமி களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட, ஸ்ரீ தத்தரின் ஆலயமும் அமைந்திருந்தது. இதைக் கண்டவுடன் நடப்பவை அனைத் துமே ஸ்வாமிகளின் திருவுளமே என்று மகிழ்ந்தார். இருப் பினும் அவருடைய மனது, ஆலந்திகர் என்ற அந்த வீட்டு உரிமையாளரின், தகாத சொற்களால் மிகவும் காயமடைந்து இருந்தது.

அப்பொழுது ஸ்ரீ இராம நவமி திருநாள் துவங்கியது. கோலாகலமாகத் துவங்கிய, ஸ்ரீ இராம நவமி திருநாளின் துவக்க நிகழ்ச்சியாக, பேராசிரியரின் இசைக்கச்சேரி இடம் பெற்றது. அனைவரும் அவருடைய குரல் இனிமையைக் கேட்டு, வியந்து போற்றினர். பேராசிரியரின் குரல், பெண்ணின் குரல் போன்று மிக இனிமையாக இருக்கும். அன்று ஸ்ரீ இராமரின் ஆலயத்திற்குள், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமி கள் அந்த அற்புதத்தை நிகழ்த்தினார்! ஆலந்திகர் ஸ்ரீ இராம நவமியை முன்னிட்டு, தரிசனம் செய்வதற்காக அந்த ஆலயத் திற்குள் நுழைந்தார். அதே சமயத்தில் பேராசிரியர், மூங்கில் தட்டியினுள் அமர்ந்து கொண்டு, இனிமையாக பாடிக் கொண்டிருந்தார். இக்குரலைக் கேட்ட ஆலந்திகர் சோனுபை யாவிடம் "ஏனப்பா இங்கு பாடிக்கொண்டிருப்பவரின்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

குரல், இத்தனை இனிமையாக உள்ளதே? இப்பெண்ணை எங்கிருந்து அழைத்து வந்தீர்கள்? இத்தனை வருடங்களாக இல்லாத திருநாளாய், இன்று இப்பெண்மிக இனிமையாக ஸ்ரீ இராமரைக் குறித்து பாடுகிறார்!" என்று புகழ்ந்து போற்றினார்.

பேராசிரியரின் குரலை, பெண் பாடகியின் குரல், என்று நினைத்து, விட்டார். இதைக் கேட்டு சிரித்த சோனுபையா, "ஆமாம் ஆமாம் இந்த வருடம், நாங்கள் ஒரு பெண்பாடகியை வரவழைத்துள்ளோம்! அவரை நீங்கள் காண வேண்டுமா? என்று கேட்டவுடன், ஆலந்திகரும் "நிச்சயமாக அவரைக் கண்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டும்!" என்னை அறிமுகம் செய்துவை! என்று உற்சாகமாக கூறினார். சோனுபையாவும் "ஆஹா அவ்வாறே ஆகட்டும்! நிச்சயமாக அப்பெண்ணை உங்களுக்கு மிகவும் பிடிக்கும்! அப்படிப்பட்ட தெய்வீகப் பெண் அவள்! என்று கூறி ஆலந்திகரை அழைத்துச் சென்று, மூங்கில் தட்டியினுள் இருந்த நமது பேராசிரியரை காண்பித்தார். "ஐயா இவரே தாங்கள் இத்தனை நேரம் புகழ்ந்து போற்றிய, பெண் பாடகி ஆவார்! என்று பேராசிரியரை அறிமுகம் செய்து வைத்தவுடன், ஆலந்திகர் அதிர்ச்சியடைந்தார். பேராசிரியர் அமைதியாக, கண்களை மூடிக்கொண்டு, ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளின் படத்தின் முன் இனிமையாக பாடிக்கொண்டிருந்தார்.

ஆலந்திகர் உடனே தம்முடைய தவறை உணர்ந்து கொண்டார். பேராசிரியர் முன்னால், தமது இரு கரங்களையும் கூப்பி வணங்கி, "ஐயனே என்னை மன்னித்து விடுங்கள்! இத்தனை சிறிய வயதில் தாங்கள் கொண்டிருக்கும் பக்தி, அடக்கம், அன்பு, அமைதி என்னிடம் இல்லை! ஒரு வேளை இருந்திருந்தால், நான் தங்களை அவ்வாறு புண்படுத்தி பேசியிருக்க மாட்டேன்! தாங்கள் என்னை மன்னித்து எனது இல்லத்திற்கு வரவேண்டும்!" என்று வேண்டி நின்றார்.

இதைக்கேட்ட பேராசிரியர், இப்பொழுது தாவது என்னை புரிந்து கொண்டாரே என்று மகிழ்ந்து, "ஸ்வாமி நான் இந்த இடத்தில் மிகவும் ஆனந்தமாக ஸ்ரீ இராமருடன்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வசிக்கிறேன்! தங்களுக்கு சிரமம் வேண்டாம்! என்று மறுத்து விட்டார். ஆனால் ஆலந்திகர், பேராசிரியரை விடுவதாக இல்லை. "இல்லை இல்லை தாங்கள் ஒருபோதும் அப்படிச் சொல்லாதீர்கள்! தங்களை என்னுடைய இல்லத்திற்கு அழைத்து உபசாரம் செய்ய, அடியேன் கொடுத்து வைத் திருக்க வேண்டும்! தாங்கள் கட்டாயம் வந்துதான் ஆகவேண் டும்! என்று வற்புறுத்தி மிகவும் மன்றாடி வேண்டினார்.

பேராசிரியர் வேறு வழியின்றி, அவருடன் அவருடைய இல்லத்திற்கு சென்றார். அங்கு அவருக்கு மிகப்பிரமாதமான வரவேற்பு அளிக்கப்பட்டது ஆலந்திகரின் மனைவி, மகள், குழந்தைகள், பெற்றோர் அனைவரையும், பேராசிரியருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவருடைய உபசாரத்தைப் பார்த்து, மயக்கமே வந்துவிட்டது. எந்த இல்லத்தில் நின்று கொண்டு, "உன்னை அடித்து விரட்டுவேன்" என்று கூறியவர் இன்று, அதே இல்லத்தில் நின்று கொண்டு, என்னை கௌரவிக்கின்றார் என்றால் இந்த அற்புதம் ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் லீலையே! ஆகும்.

என்று எண்ணி மகிழ்ந்தார். ஸ்ரீ தத்தர் தமது பக்தர்களை சோதிப்பார். ஆனால் ஒரு போதும் கைவிடமாட்டார்! ஸ்ரீ தத்தரின் அவதாரங்களான ஸ்ரீ பாதஸ்ரீ வல்லபர், ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி, ஸ்ரீ மாணிக்பிரபு, ஸ்ரீ அக்கல்கோட் மகராஜ், ஸ்ரீ கஜானன் மகராஜ், ஸ்ரீ சமர்த்த சத்குரு சாய்நாத் மகராஜ் அனைவருமே, தமது பக்தர்களின், உறுதியான நம்பிக்கையை விடாது பல சோதனைகளை செய்து, இறுதியில் காப்பாற்றி, சகல நலங்களும், வரங்களும் அளித்து, அருளும் கருணையான தாயுள்ளம் கொண்டவர்கள்.

அவ்வரிசையில் ஸ்ரீகுரு நிருசிம்மசரஸ்வதியின் அவதார மான, ஸ்ரீ வாசுதேவ சரஸ்வதி ஸ்வாமிகள், தாமும் அத்தகைய சோதனைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இறுதிவரை இறைவன் மீது, நமது வைராக்கியம் நிலைத்திருக்க வேண் டும் என்றார். ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள், மக்களுக்கு பக்தி மார்கத்தில், வழிகாட்டியாக இருந்தது மட்டுமல்லாமல், தாமும் அவ்வழியே நடந்து, வாழ்ந்து நிரூபித்தும் காட்டி னார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ வாசுதேவ மகராஜ், நிச்சயமாக, ஸ்ரீதத்தாத்ரேயரின் அவதாரம் என்பதற்கான வாக்குமூலத்தை ஸ்ரீதத்தரே அனைவருக்கும் அறிவித்த, அந்த அற்புதங்களை அன்று ஆலந்திகரின் மூலம், அறிந்து கொண்டார். மற்றும் ஆலந்திகர், பேராசிரியரிடம், தனது இல்லத்தின் கொல்லைப்புறத்தில் இருந்த, ஒரு தும்ப மரத்தை காண்பித்து, "இப்புனிதமரத்தை எனக்கு வழங்கியவர் எவர் என்பதை தாங்கள் அறிவீர்களா? என்று கேட்டார்.

அவரே தொடர்ந்து "ஸ்ரீ தத்தாத்ரேயரின் அவதாரமான, ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் தாம் இப்புனித மரத்தை எனக்களித்து, ஒரு மிகப் பெரிய சோதனையிலிருந்து, என் மனைவியை மீட்டு தந்தவரும் அவரே ஆவார்!" என்றார். உடனே ஆவலை அடக்க இயலாத நான், "அச்சம்பவத்தைப் பற்றி கேட்க ஆர்வமுடன் உள்ளேன்! ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் புரிந்த, அத்தகைய அற்புதங்களை, கூறுங்கள்!" என்று கேட்டவுடன், ஆலந்திகர் தன்னிலையை மறந்து அந்நிகழ்வைப் பற்றி கூறலானார்.

ஆலந்திகர் இளைஞராக இருக்கும்பொழுது, அவர் ஆலயத்தில் பணிபுரியும் அர்ச்சகராகவும், வைதீக காரியங்கள் செய்யும் பண்டிதராகவும் இருந்திருக்கின்றார். அவருக்கு திருமணமும் ஆகியிருந்தது. ஒரு நாள் மாலைப்பொழுதில், குவாலியரின், ஆள்நடமாட்டமே இல்லாத ஒரு சத்திரத்திற்கு, ஆன்மிக நூல்களை படிப்பதற்காக சென்று கொண்டிருந்தார். அச்சத்திரம் அவ்வூரில் உள்ளவர்க்கு, நூலகமாக பயன்பட்டது. பல்வேறு நூல்கள் அடங்கிய அவ்விடத்திற்கு, சென்று படித்து முடித்துவிட்டு அவர் இல்லம் திரும்பும் நேரம், நன்றாக இருட்டி விட்டிருந்தது. அது ஒரு காட்டுவழிப் பாதை என்பதால், ஸ்ரீ தத்தரின் கவச மந்திரங்களை சொல்லிக் கொண்டே வந்தார்.

அவர்கள் வரும் வழியில் தொலைவில் "டாங்கா" என்ற வடஇந்திய மொழியில் அழைக்கப்படும் கைவண்டியில் மூன்று பேர்கள் அமைந்து கொண்டிருந்தனர். வண்டியோட்டியும் அருகில் இருந்தான். அவர்களைத் தாண்டி செல்வதற்கு முன்னர், அவர்கள் மூவரும் ஆலந்திகரை சுற்றி

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வளைத்துக் கொண்டனர். அவர்கள் ஆலந்திகரை பார்த்து "சண்டிபாத்" (Chandipath) என்றால் என்ன அர்த்தம் என்று தெரியுமா உனக்கு? என்று கேட்டார்கள். எனக்கு தெரியாது என்று உண்மையைக் கூறினார்.

அவர்கள் உடனே, "சரி நாங்கள் சண்டிபாத்தை காண்பதற்காக, உன்னை அங்கு அழைத்துச் செல்லப்போகிறோம்! நீ கவலைப்படவோ, பயப்படவோ தேவையில்லை! நாங்கள் அங்கு சென்ற சிறிது நேரத்தில் இங்கு திரும்பி வந்துவிடலாம்!

இவ்வாறு கூறிய பின்னர் அவர்கள் மூவரும் ஆலந்திகரின் கண்களை இறுக்கிக் கட்டி விட்டனர். கண்கள் கட்டப்பட்ட நிலையில், ஆலந்திகரை அந்த வண்டியில் தூக்கி உட்கார வைத்து, விட்டனர். ஆலந்திகர் அன்று மிகவும் பயந்து விட்டார். சாதாரணமாக எதற்குமே அஞ்சமாட்டார். உடனே அம் மூவரும் நீ இவ்வாறு பயப்பட வேண்டாம்! என்று ஆறுதல் கூறி அவ்வண்டியில் எங்கோ சென்றார்கள். சுமார் ஒன்றரை மணி நேரம், பிரயாணம் செய்த பிறகு, ஒரு பெரிய குகைக்குள் நுழைந்த அனுபவம், ஆலந்திகருக்கு ஏற்பட்டது. அக்குகைக்குள் சென்றவுடன், அம்மூவரும் ஆலந்திகரின், கண்கட்டுக்களை அவிழ்த்து விட்டனர்.

அப்பொழுது அவ்விடத்தை சுற்றி நோக்கிய ஆலந்திகர், அக் குகையில் ஒரு "காளிகா" தேவியின், திருவுருவச் சிலையைக் கண்டார். அத் தேவியின் முன்னால், ஒரு எருமை மாடு பலியிடுவதற்காக கட்டப்பட்டு இருந்தது. அக்குகை மிகவும் பாழடைந்ததாக இருந்தது. அவர்கள் மூவரும் யார் என்ற விவரம் ஆலந்திகருக்கு தெரியவில்லை. அவர்கள் பலியிடுவதற்கு தயாராக நின்று கொண்டிருந்த எருமை மாட்டை, நோக்கி அரிவாளை ஏந்திக் கொண்டு சென்றனர். உடனடியாக ஆலந்திகரின் வாயில், சில மந்திர உச்சாடனங்கள் ஒலித்தன. அந்நிகழ்வு, அவர் அறியாமலேயே நடந்த நிகழ்வாகும், என்று ஆலந்திகர் பேராசிரியரிடம் விவரித்துக் கொண்டிருந்தார்.

"நான் என்னை அறியாமலேயே, மந்திர உச்சாடங்களை சொல்லி முடித்தவுடன், எருமை மாட்டை அவர்கள் பலியிட்ட

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

னர்! உடனடியாக, எனது கண்களை இறுக்கிக் கட்டிவிட்டு, ஏற்றிச் சென்ற அதே இடத்தில் விட்டு விட்டனர்! கண்கள் திறந்து பார்த்தபோது அவர்கள் கைகளில் வெள்ளிக் காசுகள் நிறைய இருந்தன! அவர்கள் என்னிடம் மிக உயர்ந்த மதிப்புள்ள **300** ரூபாய்க்கான குவாலியர் நாணயங்களை வழங்கினார்கள்! அது மிகப் பெரிய தொகையாகும்!

அவர்கள் என்னிடம் "நீ அடுத்த முறை இதே போன்று "குரு பூர்ணிமா" தினத்தன்று இங்கு வா! இன்னும் நிறைய தொகையைத் தருகிறோம்! அதுமட்டுமல்ல உனது மனைவியை அழைத்துக் கொண்டுவா! அவருக்கு விலை யுயர்ந்த ஆபரணங்களை பரிசாகத் தருகிறோம்! எங்களைப் பார்த்தாக வேறு எவரிடமும் சொல்லாதே! என்று கூறிவிட்டு உடனே மாயமாய் மறைந்து விட்டனர்.

அவர்கள் கூறியவாறே அடுத்த பௌர்ணமி தினத்தன்று, ஆலந்திகர் அவர் மனைவியுடன் அங்கு சென்றிருக்கிறார். அதுவே ஆலந்திகர் செய்த மாபெரும் தவறு, என்பதை இறுதி யாக உணர்ந்து கொண்டார். ஆலந்திகரின் மனைவியைக் கண்டதும், அவர்கள் மனம் மகிழ்ந்து, தம்மிடம் உள்ள விலையுயர்ந்த ஆபரணங்களை எல்லாம் அளித்து, அவற்றை உடலில் அணிந்து கொள்ளுமாறு வேண்டினார்கள். பொன் என்றால் எந்தப் பெண் வேண்டாம் என்று சொல்வார்? அவரும் மகிழ்ந்து இவர்களைப் பார்த்து முதலில், நாம் பயந்தது எவ்வளவு முட்டாள்தனமானது! இவர்கள் அனை வரும் நல்லவர்களே! என்று தீர்மானித்து அவர்கள் அளித்த ஆபரணங்களை, தமது உடலில் மிகுந்த ஆர்வத்துடன், அணிந்து கொண்டாள். அவ்வளவுதான்! அன்று முதல் அவள் அனுபவித்த துயரங்களை எடுத்துச் சொல்ல வார்த்தை களே இல்லை!

அவர்கள் மூவரும் ஆலந்திகரிடம், "தங்கள் மனைவி நாங்கள் அன்புடன் அளித்த நகைகளை அணிந்து கொண் டமைக்கு நன்றி! மேலும் நாங்கள் மூவரும் கொள்ளைக் காரர்கள்! ஆனால் நீங்கள் எங்களைப் பார்த்து அஞ்ச வேண் டாம்! உங்களிடம் இருக்கும் ஆபரணங்கள், இறந்த ஒருவரின் உடமையாகும். ஆகையால் அது குறித்து எந்த கவலையும்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உங்களுக்கு வேண்டாம். தைரியமாக இருங்கள்!" என்று சொல்லிவிட்டு புறப்பட்டு போய்விட்டனர்.

ஆலந்திகரும் அவரது மனைவியும் அதிர்ஷ்ட தேவதை தம் வீட்டை தேடி வந்தததாக நினைத்து, ஆனந்தமாக தமது இல்லம் நோக்கி திரும்பினார்கள்.

அந்நிகழ்வின் மூலம் பல வருடங்கள் தொடர்ந்து, ஆலந்தி கரின் குடும்பமே சிதைந்து, இன்பமும், மகிழ்ச்சியும் அவர் களைவிட்டுத் தொலைந்து விட்டன. கொள்ளைக்காரர்கள் அளித்த ஆபரணங்களை அணிந்த நாள் முதல், அவளது உடலில் பல மாற்றங்கள் ஏற்படத் துவங்கின. இயல்பான மன நிலையும் அவளிடத்தில் இல்லை. திடீரென்று ஆவேசம் வந்தவளைப் போல உரக்கக் கத்துவாள்! அடுத்த சில நிமிடங்களில், பரிதாபமாக அழத் துவங்குவாள்! மற்றும் சில நேரங்களில் கைகளில் கிடைத்த அனைத்தையும் உடைத்து எறிவாள்! இவ்வாறாக அவளை முழுமையாக தீய ஆவி ஒன்று பிடித்துக் கொண்டுவிட்டது.

அதன் பிடியில் இருந்து வெளியே வருவதற்கு, பல்வேறு திருத்தலங்களுக்கும், ஆலந்திகர் சென்று வந்தார். பலவகை யான பரிகாரங்களும் செய்து பார்த்தார். ஒரு பலனும் இல்லை. அத்திருடர்கள் தந்திரசக்திஉடையவர்கள் என்பதால் இந்த நகைகளால் தமக்கு ஆபத்து வரும் என்பதை உணர்ந்து கொண்டு அவற்றை ஆலந்திகரின் மனைவியிடம் அளித்து விட்டார்கள். அப்பொழுது ஆலந்திகரிடம் ஒரு நண்பர், கானகாபூருக்கு அழைத்துச் சென்றால், உடனடியாக அவர் மனைவியை பிடித்த தீய ஆவி அவரை விட்டு நீங்கி விடும் என்று கூறினார்.

மேலும் அவர் "ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி, ஸ்ரீ தத்தாத் ரேயராக அங்கு வீற்றிருக்கிறார்! "அங்கு உடனே உங்கள் மனைவியை அழைத்துச் செல்லுங்கள்! என்றார். அவர் அவ்வாறே ஸ்ரீ தத்தரின் பீடமான கானகாபூருக்கு, தனது மனைவியை அழைத்துச் சென்றார். ஆனால் ஆலயத்தின் கருவறைக்குள் இருந்து, அசரீரியாக ஒரு ஒலி அவருக்குக் கேட்டது. ஸ்ரீதத்தர் ஆலந்திகரிடம்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

"உன் மனைவியை கருடேஷ்வர் அழைத்துச் செல்வாயாக! நான் ஸ்ரீ தத்தாத்ரேயராக, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் ரூபத்தில், கருடேஷ்வரில் வீற்றிருக்கிறேன்! "அங்கு சென்றவுடன் உன் மனைவியை பிடித்து ஆட்டிப்படைக்கும் தீய ஆவி அவளை விட்டு உடனடியாக விலகிவிடும்! "அதுமட்டுமல்ல உன் குடும்பத்தினருக்கு சகல நன்மைகளும் அளிக்க, ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் காத்துக் கொண்டிருக்கிறார்! உடனே புறப்படு!" என்ற உத்தரவைக் கேட்டு ஆலந்திகர் ஆச்சரியமடைந்தார்.

அவர் ஸ்வாமியிடம் "குருதேவா, என்னிடம் கருடேஷ்வர் செல்வதற்கு ஒரு அணா கூட இல்லை! ஒருநாள் அவகாசம் தாருங்கள்! எவரிடமாவது யாசகம் பெற்றுச் செல்கிறேன்! என்றார். ஆனால் ஸ்வாமிகள் அதை மறுத்தார், அவர் "நாளை பொழுது விடிவதற்குள், நீ உன் மனைவியுடன், இந்த இடத்தை விட்டு கருடேஷ்வரை நோக்கி செல்லாவிட்டால், உன் மனைவியை இழந்துவிடுவாய்! எச்சரிக்கிறேன்! பயணத்தைப்பற்றி நீ கவலை கொள்ள வேண்டாம்! உனக்கான எல்லா ஏற்பாடுகளும் ஏற்கனவே செய்தாகிவிட்டது! இப்போது உடனடியாக இங்கிருந்து கருடேஷ்வரை நோக்கி புறப்படு! இது என் உத்தரவு! நீ இங்கு தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும், உன் மனைவியின் உயிருக்கு ஆபத்து!" இவ்வாறு கூறியதை கேட்ட ஆலந்திகர், ஸ்ரீ தத்தரின் கருணையை நினைத்து, மெய்சிலிர்த்து கண்களில் கண்ணீர் வழிய, அப்படியே சிலைபோல நின்று விட்டார். இந்நிகழ்வு ஒன்றே ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், ஸ்ரீ தத்தாத்ரேயரின் சத்தியமான அவதாரம் என்பதை அனைவரையும் உணரச் செய்தது.

கருடேஷ்வரை நோக்கி செல்வதற்கு உத்தரவு கிடைத்ததும், ஆலந்திகர் ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல், ஸ்ரீ தத்தரின் உத்தரவை ஏற்று, தன் மனைவியை அழைத்துக் கொண்டு, இரயில் நிலையத்திற்குச் சென்றார். ஆனால் பயணச்சீட்டு வாங்குவதற்குக் கூட அவரிடம் எந்த வசதியும் இல்லை. அவர், "ஸ்ரீ தத்தர் எனக்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டதாக கூறியுள்ளார்! அதனால் நான் ஏன் வருந்த வேண்டும்! என்று பொறுமையாக இரயில் நிலையத்தில் காத்துக்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டிருந்தார். பொதுவாக மனநிலை சரியில்லாதவர்களை, இல்லத்தில் வைத்து பராமரிப்பதே, மிகவும் சிரமமான காரியம்! ஆனால் ஆலந்திகர் தனது மனைவியை, புகை வண்டியில் இத்தனை தூரம் அழைத்து வந்திருக்கிறார் என்றால் அதுவும் ஸ்ரீ தத்தருடைய கருணையே ஆகும்.

என்ன ஆச்சரியம்! இரயில் நிலையத்தில் எல்லோரையும் போல, இயல்பான மனநிலையைக் கொண்டவர் போல, அவரது மனைவி அமர்ந்து கொண்டிருந்தார். இதைப்பார்த்த ஆலந்திகர் ஸ்ரீ தத்தர் தனது லீலையை துவங்கிவிட்டார் என்று ஆனந்தமாக அடுத்த உத்தரவிற்காக காத்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு முன்பாக நின்று கொண்டிருந்த, புகைவண்டியில் "தேவாஸ்" (Devas) என்று அழைக்கப்படும் இடத்தின் அப்போதைய இளவரசராக இருந்தவர், அமர்ந்து கொண்டு (ஆலந்திகர்) என்னையே உற்று நோக்கிக் கொண்டு இருந்தார். திடீரென்று என்னை அழைத்து வண்டியில் ஏறச் செய்தார். உடனே அவர் என்னிடம் "தாங்கள் எப்போது குவாலியர் செல்லவிருக்கின்றீர்கள்! என்று கேட்டார். என்ன ஆச்சரியம்! நான் குவாலியரில் இருப்பதை, அவர் எவ்வாறு அறிந்தார் என்று எனக்குத் தெரியவில்லை! நான் அவரிடம் தயங்கியபடி "நாங்கள் கருடேஷ்வர் சென்று கொண்டிருக்கிறோம்! அடுத்த வாரம் குவாலியர் செல்வோம் என்று நினைக்கிறேன்"!

இவ்வாறு கூறியதும் என்ன அற்புதம்! அவர் தனது பையில் இருந்து (300Rs) முன்னூறு ரூபாய்களை எடுத்து என்னிடத்தில் அளித்து, " நீங்கள் குவாலியர் செல்லும்போது எனது உறவினரிடம் இந்தத் தொகையை அளித்து விடுங்கள்! அவசரமில்லை, பெறுமையாக உங்கள் பணியை நிறைவேற்றி விட்டு செல்லவும்!" என்று கூறிவிட்டு தனது உறவினரின் விலாசமும் அளித்தார்.

ஸ்ரீ வாசுதேவானந்த ஸ்வாமிகள், ஸ்ரீதத்தரின் பரிபூரண அவதாரம் என்பதில் எனக்கு இப்போது எந்த சந்தேகமும் இல்லை! நான் அவரிடமிருந்து அத்தொகையை பெற்றுக்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டேன் கருடேஷ்வரை ஒருவழியாக நாங்கள் அடைந்த பிறகு அங்கு மற்றொரு பெரிய சோதனை காத்துக் கொண் டிருந்தது.

வெள்ளப்பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்த, பரந்து விரிந்த நர்மதா நதி தேவதையை தாண்டியபின்னரே ஆலயத் திற்கு செல்ல முடியும். ஆனால் படகுகள் எங்களுக்காக தயா ராக காத்துக் கொண்டிருந்தன. இந்நிலையில் படகில் ஏறுவதற்கு என் மனைவியைப்பிடித்திருந்த, தீய ஆவி ஒப்புக் கொள்ளவில்லை! அவளை பிடித்திருந்த தீய ஆவிக்கு, ஒரு உண்மை நன்றாக புரிந்து விட்டது. அது என்னவென்றால், ஸ்ரீ தத்த பீடமான, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் எழுந்தருளியிருக் கும், அவ்விடத்திற்கு சென்றால், தமக்கு ஆபத்து விளையும், தாம் இனியும் ஆலந்திகரின் மனைவியின் உடலில் தங்க இயலாது, என்பதை நன்றாகவே அறிந்திருந்தது.

ஒரு வழியாக சமாளித்து படகில் ஏற்றி நதியின் நடுப் பகுதிக்கு வந்தபிறகு, மிகப்பெரிய சோதனையாக என் மனைவிக்கு ஆவேசம் ஏற்பட்டு, தீய ஆவியின் வேலையால் படகை திரும்பச் செய்யுமாறு உத்தரவிட்டாள். படகோட்டி மற்றும் உடன்பயணம் செய்தவர்கள் பயந்து நடுங்கி செய் வதறியாது திகைத்தும் போனார்கள். நான் மனதார, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை, ப்ரார்த்தனை செய்தேன்! ஆனால் அவர் என்னிடம் " உன் மனைவி நர்மதா நதியில் இருக்கும் வரை, என்னால் அந்த ஆவியை ஒன்றுமே செய்ய இயலாது! காரணம், "அந்த ஆவி நர்மதா தேவியிடம் தஞ்சம் புகுந்து காப்பாற்றுமாறு வேண்டுகிறது!

ஆகையால், இதற்கு வேறு ஒரு உபாயம் உள்ளது! எனது சீடர்கள், நர்மதா நதியின் கரையில் நின்று கொண்டு இருப்பார்கள்! இப்போது நான் உன் மனைவியின் மீது அபிஷேகத் தீர்த்தம், இவ்விடமிருந்தே தெளிக்க உள்ளேன்! அவ்வாறு தெளித்தவுடன், அவளைப்பிடித்திருக்கும் தீய ஆவி, அதனுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும்படி என்னிடம் அழுது முறையிடும்! நான் வாக்குறுதி அளித்த பிறகு மீண்டும் தீர்த்தத்தை அதன் மீது தெளித்துவிடுவேன்! அப்போது அந்த ஆவி வெளியேறிவிடும்! நர்மதா தேவதையி

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

டம் தஞ்சம் அடைந்ததால், நான் நர்மதையிடம் அத்தீய ஆவிக்கு முக்தி அளிக்க வேண்டுகிறேன்! ஆனால் உன் மனைவியின் உடலில் நுழைந்து கொண்டு இருப்பதால், நான் தீர்த்தம் தெளித்தவுடன் அந்த ஆவி உன் மனைவியையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு நர்மதை நதியில் குதிக்கச் செய்துவிடும்!

அச்செயலை எவரும் தடுக்க வேண்டாம்! அவ்வாறு தடுத்தால், அந்த ஆவிக்கு முக்தி கிடைக்காது! உன் மனைவி யின் உடலை விட்டு செல்லாது! ஆகையால், உன் மனைவி நர்மதை நதியில் குதிக்கும் பொழுது அனைவரும் பொறுமை யாக இருங்கள்! அவள் குதித்தவுடன், என்னால் ஆசிர்வதிக்கப் பட்ட சீடர்கள் அனைவரும், நதியில் நீந்தி, வந்து உனது மனைவியைக் காப்பாற்றுவார்கள்! இது நான் உனக்கு அளிக்கும் வாக்காகும்! என் வாக்கு பொய்யாகாது! என்று கூறியவுடன், "ஜெய் குருதேவ தத்தா" என்று படகில் இருந்த அனைவரும் கோஷமிட்டனர்.

மகராஜ் சிறிதளவு தீர்த்தம் தெளித்தவுடன், சுறுசுறுப்பாக அந்த ஆவி விழித்துக் கொண்டு தனது அவலநிலையைக் கூறி புலம்ப ஆரம்பித்தது. "ஸ்வாமி, இந்த அம்மையார் உடலில் அணிந்திருக்கும் எல்லா நகைகளும், என்னுடைய உடலில் இருந்து திருடப்பட்டவையே ஆகும்! இந்த ஆபரணங் கள் மீது நான் மிகுந்த மோகம் கொண்டிருந்தேன்! அக் காரணத்தால் என் உயிர் பிரிந்தும், முக்தி அடையாமல் ஆவியாக அலைந்து கொண்டிருந்தேன்!

நான் தங்களிடம், இந்த அம்மையாரை துன்புறுத்தியதற் காக பாவ மன்னிப்பு வேண்டுகிறேன்! மேலும் எனக்கு மற்றொரு கோரிக்கையும் உண்டு! அவற்றையும் தாங்கள் நிறைவேற்றுவதாக எனக்கு வாக்களிக்கவேண்டும் என்றவு டன், மகராஜ் "உனது கோரிக்கைகளை நானறிவேன்! அவை நிச்சயமாக நிறைவேற்றப்பட்டு, நீ முக்தி அடைவாய்"! என்று வாக்களித்தார். இந்த வாக்கால் மகிழ்ந்த ஆவி " ஸ்வாமி நான் சௌபாக்கியம் செய்தவள்! இல்லையெனில், தங்களின் கருணையின்றி எனக்கு முக்தி கிடைக்க வாய்ப்பே இல்லை! "ஸ்வாமி என்னுடைய மற்றொரு கோரிக்கை என்னவென்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

றால், எனக்கு முறையாக செய்ய வேண்டிய திதியை எனது கணவர் இருக்கும் வரை செய்து வந்தார்.

அக்காரியத்தை செய்து, திதி கொடுப்பதாக வாக்களித்தால் நான் இந்த அம்மையாரை விட்டு நீங்குகிறேன்! இது என்னுடைய வாக்கு! என்றவுடன் ஆலந்திகர், அவ்வாக்கை தாம் நிறைவேற்றுவதாக வாக்களித்தார். உடனடியாக மகராஜ் சிறிதளவு அபிஷேக நீரை காலம் தாழ்த்தாமல் அப்பெண்ணின் மேல் தெளித்துவிட்டார். அவ்வளவுதான், உடலைவிட்டு நீங்கப்போகிறோம் என்பதை உணர்ந்தவுடன், ஆக்ரோஷமாக அந்த அம்மையரையும் தம்முடன் நதியில் குதிக்கச் செய்தது. காரணம், இதுவரையில் அவர் உடலில் தங்கி இருந்த காரணத்தால் போதுமான அளவிற்கு உணவு கிடைத்து வந்தது.

இப்போது வெளியேறிவிட்டால், என் நிலை என்ன ஆகும் என்ற ஆவேசத்துடன் அந்த அம்மையாரையும், நதியில் குதித்து உயிரைவிடுமாறு கட்டளை இட்டது. உடனே அந்த அம்மையார் நதியில் குதித்து விட்டார். அதற்காகவே காத்துக் கொண்டிருந்த சீடர்களும் நீந்திச் சென்று, அந்த அம்மையாரை கரைக்கு தூக்கி வந்தனர். கருடேஷ்வரின் சன்னதியில், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் இத்தகைய மிகப் பெரிய அற்புதத்தை நிகழ்த்தி, அந்த அம்மையாரை காப்பாற்றினார் என்ற செய்தி காட்டுத்தீ போல அனைவருக்கும் பரவியது.

தனது மனைவிக்கு ஏற்பட்ட இச்சம்பவத்தை, ஆலந்திகர் பேராசிரியர் வாசுதேவ கணேஷ், அவர்களிடம் விவரித்தார். இத்தகைய மாபெரும் மகான்களின் சரித்திரத்தை, படிப்பவரும், கேட்பவரும், சொல்பவரும் மாபெரும் பாக்யம் செய்தவர்கள்.

மகராஜ் திலக்வாடாவிலிருந்து புறப்பட்டு, அத்ரி மஹரிஷியின் ஆசிரமம் அமைந்திருந்த பர்கால் (Barkal) என்ற இடத்தை அடைந்தார். புனிதமான அத்ரி மகரிஷியின் ஆசிரமத்தில், தான் மாதா **அனுசூயா மாதாவை** போற்றும் ஸ்லோகங்களை எழுதினார். முதன் முதலாக அனுசூயா மாதாவை போற்றி, ஸ்லோகங்கள் இயற்றியதும் ஸ்ரீ

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளே ஆவார். அங்கிருந்து சிறிது தொலைவில் அமைந்த மார்கண்டேஸ்வர் ஆலயத்திற்கு சென்றார். அங்கு 1 1/2 மாதங்கள் தங்கி இருந்தார்.

அதே கர்வத்துடன் அவர் ஸ்வாமிகளை தரிசிக்க வந்தார். ஸ்வாமிகளின் மெலிந்த தேகத்தையும், அவருடைய மென்மையான குரலையும் பார்த்துவிட்டு, இவருக்கென்ன தெரிந்துவிடப் போகிறது! என்று எண்ணினார். ஸ்வாமிகளின் முன்னர் கால் மேல் கால் வைத்து, கர்வத்துடன் அமர்ந்து கொண்டார்.

மகராஜ் பொறுமையுடன், அமைதியாக அமர்ந்து கொண்டு இருந்தார். அவர் தன்னை அலட்சியம் செய்த ததைப் பற்றியும், மரியாதை தராதது குறித்தும், மகராஜ் சிறிதளவும் இலட்சியம் செய்யவில்லை. மகராஜ் முன்னர் அமர்ந்து கொண்ட ராம சாஸ்திரி அவரைப் பார்த்து, உரத்த குரலில் உங்களுடைய சொந்த ஊர் எது? தாங்கள் என்ன தொழிலை செய்து கொண்டிருக்கிறீர்கள்? இங்கு வந்த உத்தேசம் என்ன? தங்களுடைய பூர்வீகப் பெயர் யாது? இவ்வாறெல்லாம் ஏதோ பேட்டி எடுப்பதைப் போல உரத்த குரலில் கேட்டார்.

மகராஜ் கருணையே உருவானவர். அவரை மன்னித்து பாகவதம் மற்றும் பஞ்சதஸி முதலியவற்றை, அவருக்கு கற்றுக்கொடுத்தார். ஒருநாள் எவரிடமும் சொல்லாமல், அங்கிருந்து வேறு எங்கோ சென்று விட்டார்.

மகராஜ் “ஷினோர்” என்ற இடத்தில் இருந்தபோது ஒரு வயதான விதவை குஜராத்தைச் சேர்ந்தவர், மகராஜை தரிசிக்க வந்தார். அவர் ஒரு பெரிய கோப்பை நிறைய சர்க்கரை கட்டிகளை வைத்து ஏற்றுக் கொள்ளும்படி கூறினார். ஆனால் மகராஜ் அவர்கள் அக் கோப்பையை தனது கைகளால் கூட தொடவில்லை. சிறிது நேரம் கழித்து, அந்த அம்மையார் விரைந்து சென்று விட்டார்.

அது மட்டுமல்ல, அந்த அம்மையார் வந்து சென்ற பிறகு, மூன்று நாட்களுக்கு அவர் எடுத்துக் கொண்டு வந்த கோப்பை சர்க்கரை, அப்படியே இருந்தது. அதை மகராஜ்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கவனிக்கவே இல்லை. ராம சாஸ்திரி, மகராஜ் அவர்களிடம் "ஏன் அந்த அம்மையார் கொண்டு வந்த ப்ரசாதத்தை தாம் ஏற்கவில்லை? என்று காரணம் கேட்டார். அதற்கு மகராஜ் அந்த கோப்பையை உற்று கவனிக்கச் சொன்னார். ராம சாஸ்திரியும் அவ்வாறே உற்று நோக்கிய பொழுதும், அவருடைய கண்களுக்கு எதுவும் தென்படவில்லை. இப் போது மகராஜ், ராம சாஸ்திரியிடம் "அந்தக் கோப்பைக்கு அருகிலும், சற்று தொலைவிலும் எத்தனை எறும்புக் கூட்டங்கள் பார்த்தாயா? என்றார். ராமசாஸ்திரி உற்று நோக்கிய பொழுது தான், அவருக்குத் தெரிந்தது.

மகராஜ் "அப்படியானால் ஏன் அக் கோப்பைக்குள் ஒரு எறும்பு கூட செல்லவில்லை! என்ன காரணம் யோசித் தாயா!" என்றார். ராமசாஸ்திரி, "எனக்குப் புரியவில்லை ஸ்வாமி!" என்றார். மகராஜ் அவர்கள் இத்தனை எறும்புக் கூட்டங்கள் இங்கே சுற்றிக் கொண்டிருக்கின்றன.! இவற்றில் ஒன்று கூட அக்கோப்பைக்குள் செல்ல மறுத்து வெளியி லேயே சுற்றிக் கொண்டு இருப்பதை கவனித்தாயா!

அந்த அம்மையாரிடம் உண்மையான அன்பும், பக்தியும் இல்லை. ஆதலால் அவர் கொண்டு வந்த சர்க்கரை கட்டி களில் இனிப்புத் தன்மை போய் விட்டது. இனிப்பில்லாத சர்க்கரையை எவர் சீண்டுவார்கள்! அந்த அம்மையார் இவ்வாறு இருப்பதற்கு காரணம் அவருடைய இளமைக்கால வாழ்க்கையே ஆகும்!" என்றார் என்ன ஆச்சர்யம்! மூன்று நாட்களாக திறந்த கோப்பையில் வைக்கப்பட்ட சர்க்கரைக் கட்டிகளை ஒரு எறும்புகூட தொடாத நிலை என்ன? நாம் மகான்களிடத்தில், சமர்ப்பிக்கும் பொருளின், தன்மையும், அதனுடைய மதிப்பும், தரமும் மகான்களை ஒருபோதும் மகிழ்விக்காது. நாம் சமர்ப்பிக்கும் பொருள்களின் தன்மையை வைத்து நமது அன்பையும், மதிப்பையும் அறிந்து கொள்வது மனிதர்களுடைய சுபாவம்.

ஆனால் மகான்கள் அப்படியல்ல. தூய்மையான அன்பு டன் ஒரு குவளை நீரை சமர்ப்பித்தால் கூட ஸ்ரீ கிருஷ்ணர் விரும்பி ஏற்றுக் கொள்கிறார் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது. மகான்களும் நமது உள்ளத் தூய்மையை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மட்டுமே கருத்தில் கொள்கிறார்கள். நாம் கொண்டு செல்லும் விலையுயர்ந்த பொருட்களால், அவர்கள் மகிழ்வ தில்லை! அவ்வாறு அப்பொருட்கள் மட்டுமே அவர்களை மகிழ்வித்தால் அவர்கள் நிச்சயம் மகான்களாக இருக்க இயலாது.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் பிறரை குறை கூறவதை ஒரு போதும் விரும்பாதவர். ஒரு நாள் அவர் லீலானந்த ஸ்வாமி களுடன் நர்மதா நதிக்கரைக்கு ஒரு மாலைப்பொழுதில் சென்றிருந்தார். அப்போது நதிக்கரையில் சிறுவர்கள் பட்டம் விட்டு விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் பட்டமும் காற்றின் வேகத்தால், மற்ற வருடைய பட்டத்தின் நூலை அறுத்துக் கொண்டிருந்தன. இதைக் கவனித்த சிறுவர், ஆரவாரித்து மகிழ்ந்தனர். அப் போது லீலானந்த ஸ்வாமி “இந்த சிறுவர்கள் இப்படி கோஷம் போடுவதால், அனைவருடைய பணிகளும் பாதிக்கப்படுகின்றன, கடற்கரைக்கு அமைதியை தேடிவரும் மக்கள், இச்சிறுவர்களின் சண்டையால் அமைதியிழந்து வீடு திரும்புகிறார்கள்! என்றார், “அப்பொழுது மகராஜ் அவர்கள் “ஒருவேளை இச்சிறுவர் கூட்டத்தில், நம் வீட்டுச் சிறுவர் களும் இருந்தால், நாம் இவ்வாறு குறை கூறுவோமா!” என்று கேட்டவுடன், லீலானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் அமைதி யானார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் தனது அடுத்த சாதுர் மாஸ்ய விரதத்தை அனுஷ்டிக்க துவாரகைக்கு புறப்பட்டு விட்டார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# ஒன்பதாவது சாதுர்மாஸ்ய விரதம்
# துவாரகை - 1899

NOT FOR SALE

ஸ்ரீ வாசுதேவ சுவாமிகள், தமது 9வதாவது சாதுர் மாஸ்ய விரதத்தை, துவாரகையில் சாரதா மடத்தில் துவங்கினார். அப்போது சாரதா மடத்தின் தலைவராக, ஸ்ரீ சங்கராசாரி யார் அவர்கள் பொறுப்பேற்றிருந்தார். அப்போது நம் பாரத தேசம் முழுவதும் பசியும், பிணியும் சூழ்ந்திருந்த காலமாகி யிருந்தது. எங்கு பஞ்சம் சூழ்ந்து இருந்தது. தம் இல்லத்திற்கு தேவையான பொருள்களை வாங்குவதற்கு கூட வழியில்லா மல் இருந்தது. குடும்பத்தில் ஆண்மகன்கள் அனைவருமே வேலையும், வருமானமும் இல்லாத காரணத்தால், மிகுந்த துயரத்தோடும், அவமானத்தோடும், தங்கள் குடும்பத்தை துறந்தனர்.

அங்கு வாழ்ந்த மக்கள் ஸ்ரீ வாசுதேவ மஹராஜ், அவர் களிடம் வேண்டி, தங்கள் பிரதேசத்தில் வறுமை ஒழிவதற் காக துவாரகையிலிருந்து சாதுர்மாஸ்ய விரதத்தை துவங்கு மாறு கேட்டுக் கொண்டனர்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், அந்த இடத்திற்கு வருகை தந்துள்ளார் என்பதை அறிந்து (கெய்க்வாட்) Gayakwad. சர்க்கார் என்ற செல்வந்தர் 2 1/2 லட்சம் ரூபாய், அந்த மக்களுக்கு வழங்கும், அன்னதானத்திற்காக செலவழித்தார். நாம் முன்னரே கண்டவாறு, மகராஜ் அவர்கள் துவா ரகையை, நோக்கி பயணம் செய்யும் போது, தமக்கு யாசகம் தருவதற்கான தகுதி, அப்பகுதி மக்களிடம் இல்லை என்ற காரணத்தால் கிட்டதட்ட 33 நாட்கள், யாசகம் பெறாமலேயே, உணவு உண்ணாமலேயே பட்டினியாயிருந்தார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அப்போது குஜராத்தை சேர்ந்த அந்தணர்கள், அவருக்கு பிரசாதமாக காய்ந்த தேங்காய் துண்டுகளை அளித்திருந் தார்கள். மஹராஜ் தன் பயணம் முழுவதும், அவற்றையே உண்டு வாழ்ந்து வந்தார். இவ்வாறு தொடர்ந்து வெறும் தேங்காய் துண்டுகளையே, உண்டு வாழ்ந்ததால், அவர் உடல்நிலை மிகவும் மோசமானது.

தன்னுடைய உடல்நிலை சீர்கேடு அடைந்த போதும், அவர் தன் மன உறுதியை, இழக்கவில்லை. தினமும் செய்யும் நித்திய கர்மாவை முறைப்படி செய்து வந்தார். மஹராஜ் அவர்கள் துவாரகையில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார். இந்த சமயத்தில்தான் **ஸ்ரீ குரு சரித்திரத்தில் 10வது அத்யாயத்திற்கான** விளக்கவுரையை எழுதினார். அப்போது மஹராஜ் அவர்களிடம், ஸ்ரீ குரு சரித்திரம் என்ற மூலநூல் இல்லை. 10 வருடங்களுக்கு முன்னால் மஹராஜ் அவர்கள், பாராயணம் செய்த ஸ்ரீ குரு சரித்திரத்தின் வரிகளை நினைவு கூர்ந்து, இந்த விளக்க உரையை எழுதி உள்ளார். இந்நிகழ்வின் மூலம் மஹராஜ் அவர்களின் நினைவு ஆற்றல். மிகவும் அபாரமானது என்பதை நம்மால் உணர்ந்துக் கொள்ள முடிகிறது.

ஒருமுறை ஸ்ரீ தயானந்தர் அவர்களின் சீடர், மஹராஜ் அவர்களின் தரிசனத்திற்கு வந்தார். அவர் மஹராஜ் அவர் களின் ஆற்றலை சரியாக உணர்ந்துக் கொள்ளாத காரணத் தால், கர்வத்துடன் அவரிடம் விவாதம் செய்தார். பொது வாகவே மஹராஜ் அவர்கள் தேவையில்லாத விவாதங்களில் ஈடு படமாட்டார். ஆகையால் மஹராஜ் அவர்கள் தயானந்தரின் சீடரைப்பார்த்து, "தங்களுடைய கருத்துக்கள் என்னை ஒருபோதும் பாதிக்காது நான் கூறிய விடையால் தாங்கள் திருப்தியடையவில்லை, என்றால் தங்களுடைய ஆத்திரம் தீருவதற்கு ஒரு உபாயம் சொல்கிறேன்!

"தாங்கள் கையில் பிரம்பை எடுத்துக் கொண்டு, எத்தனை முறை, என்னை அடிக்க வேண்டுமோ அடித்து விட்டு நிறைவோடு தாங்கள் இல்லம் செல்லுங்கள்! என்றார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அது மட்டுமல்லாமல் மஹராஜ், தன்னுடைய தலையில் அவர் அடிக்க வேண்டும் என்பதற்காக குனிந்து காண்பித்தார். இதற்கிடையில் அங்கிருந்த மஹராஜ் அவர்களின் பக்தை ஒருவர். கூக்குரலிட்டு, அனைவரும் வாருங்கள்! எவரோ ஒருவர் மஹராஜ் அவரை துன்புறுத்தப் பார்க்கிறார்!" என்று எல்லோரையும் அழைத்தார் அக்குரலைக் கேட்டு அனைவரும் அவ்விடத்தை சூழ்ந்து கொண்டார்கள்.

தயானந்தரின் சீடர், உடனே அங்கிருந்து ஓடிவிட்டார். ராஜ்கோட்டிலிருந்து மஹராஜ், சீதாபூருக்குச் சென்றார். கந்தாபுவாவும் மஹராஜ் உடன் தொடர்ந்து வந்தார். அப்போது ஸ்ரீதத்த ஜெயந்தி உற்சவம் துவங்கி விட்டது.

அச்சமயத்தில் மஹராஜ் அவர்கள் தம்மை தரிசிக்க வந்த பக்தர் ஒருவரின் கர்மவினையிலிருந்து முக்தி அளித்தார் அந்த அற்புத நிகழ்வை நாம் இப்போதுக் காண்போம்.

கர்நாடகா மாநிலத்திலிருந்து, ஒரு சன்யாசி, மஹராஜை தரிசிக்க வந்தார் அவருடைய உடல் நோய்வாய்ப்பட்டிருந்தது. மஹராஜ் அவர்கள் மற்ற சீடர்களிடம், அவரை நன்றாக கவனித்துக் கொள்ளும்படி கூறினார். ஆனால் மஹராஜின் உத்தரவை அனைவரும் உதாசீனப்படுத்தி விட்டார்கள். இந்நிலையில் அவரை கவனித்துக் கொள்ள எவருமே அங்கு இல்லை. மஹராஜ் கந்தாபுவாவை 15 நாள்கள் மட்டுமே அவரை கவனித்துக் கொள்ளுமாறு கூறினார். இந்த 15 நாட்களுக்குள் மஹராஜ் அவர்கள், தாமே முன் நின்று அவரை கவனித்துக் கொண்டார். தினமும் கங்கை நதியின் நீரைப்பருகச் சொன்னார் சதா சர்வ காலமும் இறைவனுடைய சிந்தனையில் இருக்கும்படி கூறினார். 15வது நாளில் ஸ்ரீ தத்தாத்ரேயரின் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கும் போது, அவருடைய கடைசி மூச்சு அடங்கியது. மஹராஜ் அந்த கிராமத்து மக்கள் அனைவரையும் அழைத்து", இது மாதிரியான தவறுகளை இனி மேலும் செய்யாதீர்கள்!" என்று அறிவுறித்தினார். அவ்வூர் மக்களும் தங்களுடைய தவறை உணர்ந்து மன்னிப்பு வேண்டினர்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பத்தாவது சாதுர்மாஸ்ய விரதம்
# சிக்கல்தா - 1900

NOT FOR SALE

மஹராஜ் தம் 10வது சாதுர்மாஸ்ய விரதத்திற்காக சிக்கலதா புறப்பட்டார். மஹராஜ் அவர்கள், சிக்கலதாவில் நர்மதை நதிக்கரையில் அமைந்த, ஸ்ரீராமரின் ஆலயத்தில் தங்கியிருந்தார். நர்மதா நதியை தாண்டி. (Badhawani) பதவானி என்ற மாநிலம் இருந்தது. அந்த மாநிலத்தின் பிரபுவாக இருந்த டாகூர் (Tagore) என்பவர் மஹராஜ் அவர்களின், பரமபக்தர் ஆவார்.

ஒரு நாள் மஹராஜ் அவர்களின் பூர்வீகமான (Sawantwadi) சாவந்த்வாடியிலிருந்து (Naropanth) நரோபந்த், மஹராஜ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்த கடிதத்தில், தாம் மஹராஜ் அவர்கள் இயற்றிய, ஸ்ரீ குரு சரித்திரத்தை புத்தகமாக வெளியிட போவதாக அறிவித்திருந்தார்.

இதற்கிடையில் ஒரு முகம் தெரியாத நபர், தமக்கு எதிராக அதே புத்தகத்தின் நகலை எடுத்துக் கொண்டு தாமும், அந்த புத்தகத்தை வெளியிட போவதாக விளம்பரம் செய்தார். இத்தகைய விளம்பரத்தைப் பார்த்து மனம் வருந்திய, நரோபந்த் தமது கடிதத்தில், மஹராஜ் அவர்களை, முகம் அந்த நபரின் இச்செயலைத் தடுக்குமாறு வேண்டினார். ஆனால், அவருடைய கடிதம் மஹராஜ் அவர்களை அடைவதற்கு முன்பாகவே, மஹராஜ் ஒரு பக்தரின் மூலமாக, கடிதத்தை நரோபந்த் அவர்களுக்கு எழுதினார். அக்கடிதத்தில், ஸ்வாமிகளுக்கு எவ்வித ஆசைகளும் இல்லை. அவர்கள் தன்னை முன்னிலைப்படுத்தி, விளம்பரப்படுத்திக் கொள்ளவும் விரும்பவில்லை. ஆகையால் மஹராஜ் அவர்கள், ஸ்ரீ குரு

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சரித்திரத்தை, எவர் புத்தகமாக வெளியிட்டாலும் எனக்கு கவலையில்லை என்றார். அதே நேரத்தில் தாம் எவருக்குமே அந்த புத்தகத்தை வெளியிடுவதற்கு அதிகாரம் வழங்க வில்லை என்று கூறினார். இதுவே வாசுதேவ மஹராஜ் அவர்களின் மகிமையாகும். இவ்வுலக வாழ்விற்கு உரிய பொருள்களை அவர் ஒரு போதும் தேடவில்லை ஒரு முறை சாவந்த்வாடியில் விஸ்வநாத் என்பவரை தீய ஆவி ஒன்று பிடித்துக் கொண்டுவிட்டது.

அதனால் அவரால் ஒரு வேளை உணவைக்கூட உண்ணமுடியவில்லை. எப்போது உணவு உட்கொண் டாலும், அதை அடுத்த வினாடியே வாயில் எடுத்துவிடு வார். இதனால் அவருடைய உடல் மிகவும் தளர்ந்து விட்டது. இந்த பரிதாப நிலையை கண்டு அவருடைய சகோதரர் அவரை அழைத்துக் கொண்டு மஹராஜ், அவர்களை தரிசிக்க சென்றார். மஹராஜ் குலதெய்வ வழிபாட்டை முறையாக, செய்வதில்லை. ஆகையால்தான் இத்தகைய கஷ்டங்கள் நேர்ந்துள்ளது என்று கூறினார். உடனடியாக அவர்களை குலதெய்வ வழிபாட்டை மேற்க்கொள்ள செய்தார். ஸ்ரீ தத்த மந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்தார்.

அவர் ஒரு மருந்தை தயாரித்து விஸ்வநாத்திற்கு வழங்கி னார். விஸ்வநாத்தும் அவருடைய சகோதரரும், சுவாமி களிடம் உத்திரவைப் பெற்றுக் கொண்டு, தங்களுடைய குலதெய்வ வழிப்பாட்டை செய்வதற்காக விரைந்து புறப் பட்டனர். விரைவில் அவர் குணமடைந்து இயல்பு நிலைக்கு மாறிவிட்டார். இதற்கு காரணம் ஸ்ரீ வாசுதேவ சுவாமிகளின் கருணையே யாகும் என்பதை புரிந்து கொண்டார்கள். ஸ்ரீ வாசுதேவ மஹராஜ் எவரிடமும் தம்மை குரு என்றோ அல்லது இறைவனின் அவதாரம் என்றோ சொல்லிக் கொண்டதில்லை.

மஹராஜ் சிக்கலதாவிலிருந்து, மண்டலேஸ்வருக்கு சென்றார். அப்பகுதியும் நர்மதை நதியின் கரையில் அமைந் திருந்தது. அப்போது ஒரு சமயம் வாமன்ராவ் என்பவர், தனது பசு மிகவும் நோய்வாய்ப்பட்டிருப்பதால், அதை அழைத்துக்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டு ஸ்வாமிகளைக் காணவந்தார். அப்போது மஹராஜ், அவர்கள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். அவ்வாறு அவர் உறங்கிக் கொண்டிருந்த போது, திடீர் என்று எழுந்து உட்கார்ந்தார் அவர் ஒரு மருந்தை தயார் செய்து அந்த பசுவிற்கு அளிக்குமாறு, கூறினார்.

அம்மருந்தை உட்கொண்டவுடன் பசு உடனடியாக எழுந்து சுறுசுறுப்பாக ஓட ஆரம்பித்து விட்டது. இந்த அற்புதத்தை பார்த்துக் கொண்டிருந்த வாமன்ராவ், மஹராஜ் அவர்களுக்கு நமஸ்காரம் செய்து, தமது நன்றியை தெரிவித்துக் கொண்டார். மேலும் அவர் சுவாமிகளை தூக்கத்திலிருந்து எழுப்பியதற்காக மனதார மன்னிப்பு வேண்டினார். ஸ்ரீ வாசுதேவ மஹராஜ், வாமன் ராவிடம், “நான் எவ்வளவு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலும் என்னை சுற்றி நடக்கும் நிகழ்வுகள் அனைத்தையும் நான் அறிவேன்!” என்றார்.

சாவந்த்வாடியிலிருந்து நான்கு அந்தணர்கள், சுவாமியை தரிசிக்க வந்தனர். அவர்களின் முதலானவர் சங்கர் பட்டாஜி ஆவார். அவர் தினமும் யாசகம் பெற்று முறையாக, அக்னிஹோத்ரம் செய்து வாழ்ந்துக் கொண்டிருப்பவர். மஹராஜ் அவர்களின் புத்தகங்களை அவர் படித்துள்ளார். இரண்டாவதாக, சாக்காராம் என்பவர் அரசு பணியில் இருந்தார்.

முன்றாவதாக, சீதாராம்பந்த் என்பவர் சாவந்த் வாடியில் உள்ள நீதி மன்றத்தில், நீதிபதியாக பணியாற்றி கொண்டிருந்தார். ஒரு முறை, அவருடைய கனவில் ஸ்வாமிகள் காட்சி அளித்து காமம், குரோதம், பேராசை இந்த மூன்றையும் விட்டுவிட்டு, தத்த மந்திரத்தை பாராயணம் செய்யுமாறு உத்தரவிட்டார்.

அவர் கூறிய காமம், குரோதம், போராசை இந்த மூன்றும் இந்த பணியிலிருக்கும் வரை, தம்மை விட்டு நீங்காது என்பதை புரிந்துக் கொண்டார் ஆகையால் நீதிபதி, தன்னுடைய பதவியை துறந்து விட்டார். ஆன்மிகத்தில் நுழைந்து தூய்மையான வாழ்க்கையை வாழத்துவங்கினார். அவர் மஹராஜ் அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைத்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அது என்னவென்றால் தனக்கு துன்பமில்லாத மரணம் வேண்டும் என்று ஸ்வாமிகளை பிராத்தனை செய்தார். அவர் கேட்ட வரத்தை மஹராஜ் வழங்கி விட்டார்.

ஒரு முறை அவர் ஆலயத்தில் இறைவனைக் குறித்து சத்சங்கம் செய்துக் கொண்டிருக்கும் போது, இறைவனுடைய நாமத்தை கூறும்போதே, அவருடைய உயிர் பிரிந்துவிட்டது. நான்காவதாக, கணேஷ் என்பவர் இறைவனை தேடும் பணியில், தம்முடைய வீட்டை துறந்து சென்றார் அவருடைய தந்தையார் அவரை வற்புறுத்தியதால் அவர் மீண்டும் வீட்டிற்கு திரும்பினார்.

மீண்டும் அவர் தமது வீட்டைவிட்டு புறப்பட்டார் இந்த முறை தமது தந்தையிடம், “நான் வாசுதேவ ஸ்வாமிகளை தரிசிக்காமல், நம் வீட்டிற்கு திரும்ப மாட்டேன்! அது மட்டுமல்ல! என்னுடைய மனம் முழுமையாக நிறைவடைய வேண்டும்! என்று ஸ்ரீகுருசரித்திரத்தின் மேல் ஆணையிட்டு கூறினார். அங்கிருந்து புறப்பட்ட அவர் மஹராஜை தரிசிக்க மண்டலேஸ்வர் வந்து சேர்ந்தார். அவர் ஸ்வாமிகளிடம் வேத ஸ்துதி, பிரம்ம ஸ்துதி, உபநிஷதங்களுக்கு விளக்கவுரை கள், இவையாவற்றையும் முறையாக கற்றுக் கொண்டார். மஹராஜ் அவர்கள் மகிழ்ந்து தனது ஆசீர்வாதத்தை அளித்து, தமது சீடராக ஏற்றுக்கொண்டார் ஒரு நாள் அவருடைய கனவில் ஸ்ரீ தத்தாத்ரேயர் காட்சியளித்தார்.

அந்த காட்சியைப் பார்த்து அவருடைய மனம் முழுமை அடைந்ததை, அவர் பரிபூரணமாக உணர்ந்துக் கொண்டார். ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் அவரை, அவருடைய இல்லத்திற்கு திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினார். அப்போதுதான் தன் தந்தையிடம் செய்த சபதம் நினைவுக்கு வந்தது. மனம் நிறைவடையாமல் இல்லத்திற்கு திரும்பமாட்டேன் என்று கூறிய கணேஷ் அவர்கள் மனம் நிறைந்த மகிழ்ச்சியோடும், மஹராஜ் அவர்களின் ஆசியோடும் இல்லம் திரும்பினார்.

மஹராஜ் அவர்களுடைய சிறுவயதில், அவருக்கு ஆசானாக விளங்கிய குருஸ்வாமி, அவரைக்காண மண்ட லேஷ்வர் வந்தார். அப்போது அங்கு ஒரு இளைஞர்,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சன்னியாச தீக்கைஷ பெறுவதற்காக, குருசுவாமியிடம் வந்தார். அவர் தன்னுடைய பெற்றோருடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டை துறந்து ஓடி வந்தவர், அவருக்கு சன்னியாச தீக்கைஷ அளிக்கப்பட்டதை மஹராஜ் அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும் மஹராஜ் மௌனமாக இருந்தார்.

சில நாட்களில் சன்னியாச தீக்ஷைப் பெற்றுக் கொண்ட இளைஞன், ஒரு வீட்டிற்கு யாசகம் பெறுவதற்காகச் சென்றான். அவனுக்கு பிக்ஷையிடுவதற்காக, அந்த வீட்டின் அம்மையார் அவன் அருகில் வந்தார். அந்த அம்மையாரின் கழுத்தில் உள்ள ஆபரணங்களை பார்த்தவுடன், அவனுடைய மனது மாறிவிட்டது. சன்யாச தர்மத்தை மீறி அந்த அம்மையாரின் நகைகளை பறித்துக்கொண்டு போய்விட்டான். இதைக் கேள்வியுற்ற வாசுதேவ ஸ்வாமிகளின் மனம் வேதனை அடைந்தது.

அவர் தமது குரு ஸ்வாமியிடம், “அந்த இளைஞனுக்கு சன்யாச தீக்ஷை பெறுவதற்கு எந்த தகுதியும் இல்லை! இப்படிப்பட்டவர்களுக்கு ஏன் சன்னியாச தீக்ஷை வழங்குகிறீர்கள்? “இவர்கள் போன்றோர் செய்யும் தவறுகளால் தான், சன்யாச தர்மமே சிதைந்து விட்டது! ஆகையால் மக்கள் மனதில் சன்யாசிகளைப் பற்றி ஒரு நல்ல அபிப்ராயமே இல்லை! மஹராஜ் அவர்கள் கூறியதைக் கேட்டு, குரு ஸ்வாமியும் தன்னுடைய தவறை உணர்ந்து கொண்டார்.

அந்த இளைஞன் சிறையில் தண்டனை பெறுவதற்கே தகுதியானவன்! சன்யாச தீக்ஷை பெறுவதற்கு தகுதியானவன் அல்ல என்பதை முன்பே உணர்ந்த வாசுதேவ ஸ்வாமிகளை பாராட்டி வாழ்த்தினார்.

ஒரு நாள் ஒரு இளைஞன் மஹராஜ் அவர்களிடம் “சன்யாசிகளுக்கு பந்தபாசம் இருக்க கூடாது அவர்கள் எவரையும் நமஸ்காரம் செய்ய கூடாது! இக்கருத்து உண்மை என்றால் இதுவரை சன்யாச தர்மத்தை ஏற்றவர்கள், தமது தாயாரைக் காண்பதற்கு ஏன் செல்ல வேண்டும்? இதற்கான விளக்கத்தை தாரும்! என்றான். அப்போது மஹராஜ்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர்கள் சன்யாசி என்பவர், தமது அன்னையைத் தவிர வேறு எவர் பாதங்களிலும் விழுந்து வணங்கக்கூடாது! தமது அன்னையின் விருப்பத்தின் பேரில் அவரை தரிசிக்க வரும்போது, அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும்! அதற்கு காரணம், அன்னை என்பவர் ஆதி சக்தியாவாள்! ஒருவர் சன்யாச தருமத்தை ஏற்றுக் கொண்டால், அவருடைய 25 தலைமுறைக்கும் முக்தி கிடைத்துவிடும்.

அச்சமயத்தில் பாரத தேசம் முழுவதும், மறுமணம் செய்து கொள்வது பற்றி கருத்து விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன. அப்போது மஹராஜ் அவர்களைச்சுற்றி, அமர்ந்துக் கொண்டிருந்த பக்தர்கள், சடங்கு, சம்பரதாயம் இவற்றை மீறி பெண்கள் மறுமணம் செய்து கொள்வது இயற்கை விதிகளுக்கும், சாஸ்திர விதிகளுக்கு புறம்பானது. ஆகையால் தாங்களும் மறுமணம் என்ற கருத்தை எதிர்த்து அனைவருக்கும் நீதியை போதிக்கவேண்டும் என்று அனைவரும் வேண்டுகோள் வைத்தார்கள்.

“ஸ்ரீ தத்தரின் அனுமதியிருந்தால் இக்காரியம் நடைபெறும்” என்று கூறிய மஹராஜ், எழுதுக்கோலை தம் கையில் எடுத்துக் கொண்டார். அவர் எழுதுவதற்காக ஆயத்தமாகும் பொழுது, திடீர் என்று அசரீரியாக ஸ்ரீ தத்தரின் குரல் அங்கு ஒலித்தது. அந்த குரல் ஸ்வாமிகளிடம், “எழுதுகோலை கீழே வைத்துவிடு” என்றது. ஸ்ரீ தத்தரின் இந்த உத்தரவைக் கேட்ட ஸ்வாமி, அவர்கள் எழுதுவதை நிறுத்தி விட்டார். அன்றிலிருந்து ஒரு வருடம், ஸ்வாமிகள் அன்றிலிருந்து ஒரு வருடம், ஸ்வாமிகள் எழுதுக்கோலை கையில் தொடவேயில்லை.

ஒரு நாள் அவருக்கு ஸ்ரீ தத்தரின் நாமத்தை எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அப்போது எழுதுக் கோலை கையில் எடுத்து, அவர் வைத்திருந்த அனைத்து கடிதங்கள் மேலும் ஸ்ரீ தத்தா என குறிப்பிட்டார். அப்போது தான் அவருக்கு ஸ்ரீ தத்தரின் உத்தரவை மீறி எழுதுக் கோலைக் கையில் எடுத்து விட்டோம்! என்று புரிந்தது அச்சமயத்தில் ஸ்ரீ தத்தர் காட்சியளித்து அவரிடம் “நாம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உன்னை எழுதவேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் பெண்கள் மறுமணம் செய்துக் கொள்வதை எதிர்த்து, நீ கருத்து தெரிவிப்பதை நான் விரும்பவில்லை பெண்களின் உரிமையை பறிப்பதற்கு எவருக்கும் தகுதியில்லை!'' என்றார்.

இதைக் கேட்ட அவருடைய பக்தர்கள் ஸ்வாமிகள் மறு மணத்தை எதிர்க்கவில்லை! அதே சமயம் ஆதரிக்கவுமில்லை! என்பதை புரிந்துக் கொண்டனர் மஹராஜை சந்திக்கவந்த மற்றொரு இளைஞன் அவர்களிடம், "ஸ்வாமி தாங்கள் தன்னிலையை அடைந்தவர்கள், அப்படியிருக்கையில் உருவ வழிப்பாட்டை ஏன் ஆதரிக்கிறிறீர்கள்? என்றுக் கேட்டார்.

அப்போது மஹராஜ் அவனிடம், உருவ வழிபாடு என்ற தத்துவம் மனம் ஒருமுகப்படுவதற்காக முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. பக்தர் மனம் இறைவனை தவிர வேறு எங்கேயும் செல்லாமல், இருப்பதற்கான தீர்வே உருவ வழிபாடாகும். இவ்வாறு பல்வேறு அற்புதங்களை சிக்கலாதாவில் புரிந்த மஹராஜ் சிக்கலதாவில் நீங்கி மகத்பூர் (Mahatpur) என்ற இடத்தை நோக்கி புறப்பட்டார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பதினோராவது சாதுர்மாஸ்ய விரதம் மகத்பூர் - 1901

NOT FOR SALE

மஹராஜ் அவர்கள் தனது 11வது சாதுர்மாஸ்ய விரதத்தை அனுஷ்டிக்க மகத்பூருக்கு வந்தார். இங்கு தான் பிரசித்தி பெற்ற "**தத்த மஹாத்மியம்** என்ற நூலை பிராகிருத மொழியில் எழுதினார் ஸ்ரீ குருசரித்திரத்திற்கு **த்ரிசதி** என்று சொல்ல கூடிய முன்னூறு பாடல்களையும் சமஸ்கிருதத்தில் எழுதினார். ஸ்வாமிகள் தான் இவ்விரண்டு நூல்களையும் எழுதியதாக எனது குறிப்பேட்டில் குறித்து வைத்துள்ளார். அவர் எழுதிய குறிப்பில் "ஷ்ராவன் என்று சொல்லப்படும் மழைக்காலத்தில், மகத்பூரின் மக்கள் ஸ்ரீ தத்த மஹாத்மியத்தை என்னை எழுதுமாறு வேண்டினர்! ஸ்ரீ தத்த குருவின் கருணையால், நான் எழுதிய இந்த தொகுப்பில் 50 அத்தியாயங்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் 108 செய்யுள் தொகுப்பு இணைந்துஉள்ளது. இந்நூல் முழுவதுமே செய்யுள் (Ovi) தொகுப்பாக அமைந்துள்ளது.

இப்பாடல் தொகுப்பு முழுவதுமாக 4500 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. "இதே சமயத்தில் சாவந்த்வாடியில் ஸ்ரீ குரு சரித்திரத்தை பதிப்பித்தவர்கள், அதில் நிறைய தவறுகள் இருப்பதை தெரிந்துக் கொண்டார்கள். இந்த செய்தி அவர்களுக்கு தெரிவதற்கு முன்பாகவே, மஹராஜ் அவர்களுக்கு தெரிந்துவிட்டது. மஹராஜ் முக்காலமும் உணர்ந்தவர். அவர் உடனே சாவந்த்வாடிக்கு ஒரு தகவல் அனுப்பினார்.

அத்தகவலில் ஸ்ரீ குரு சரித்திரத்தை பதிப்பின்போது ஏற்ப்பட்ட பிழைகளை திருத்தவேண்டாம் என்று கூறிப்பிட்டார். அதற்கு பதிலாக சரியான வார்த்தைகளை

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவற்றின் சரியான அர்த்தங்களுடன் இறுதி பகுதியில் குறிப்பிடுமாறு கூறினார். எந்த நூலை பதிப்பிட்டாலும் தவறுகள் ஏற்படுவது சகஜம் என்றும் கூறினார்.

குவாலியர் மாவட்டத்தில் (Junachawari) ஜீனாசாவரி என்ற பகுதியில் வாழ்ந்த விஸ்வநாதராவ் என்பவர், அந்த ஊரில் அனைவராலும் போற்றப்படும் அறுவை சிகிச்சை நிபுணர் ஆவார். ஆனால் அவருடைய பாதங்களில், எலும்பு புற்றுநோய் பரவி விட்டது. மிகச் சிறந்த மருத்துவரிடம் காண்பித்தபோதும், அவர்களால் ஒன்றுமே செய்ய இயலாது என்று கைவிட்டனர். விஸ்வநாத ராவ் தானே மிக சிறந்த அறுவை சிகிச்சை நிபுணராக இருந்த போதும் தனது பாதங்களை குணப்படுத்திக்கொள்ள இயலவில்லை.

மஹராஜ் ஒருவரே இதற்கு தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையோடு மஹராஜை காண வந்திருந்தார். ஸ்வாமிகள் அவரிடம் ஒரு மருந்தை அளித்தார் அதை அவருடைய பாதங்களில் தடவ செய்து வருமாறு கட்டளையிட்டார் மேலும் விஸ்வநாத ராவ்விடம் ஒரு மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார். மஹராஜ் கூறியவாரே, அவர் அளித்த மருந்தையும் தடவிக்கொண்டு, அவர் அளித்த மந்திரத்தையும் நம்பிக்கையோடு ஜபித்துவந்தார். சிறிது நாட்களிலேயே அவருடைய புற்றுநோய் முற்றிலுமாக குணமானது.

விஸ்வநாத ராவ் மஹராஜை காண்பதற்கு முன்னால் கடவுள் நம்பிக்கை அற்றவராக இருந்தார். புற்றுநோயால் தமது கால்களையே பறிகொடுக்க வேண்டிய நிலையில், ஒரு வேளை மஹராஜ் என்னுடைய நோயை சரிசெய்துவிட்டால், நான் நாஸ்திகத்தை விட்டு ஆன்மீக வழியில் வாழ்நாள் முழுவதும் இறைவுணர்வுடன் நம்பிக்கையுடன் வாழ்வேன்" என்று சபதம் பூண்டார். தான் சத்குருவிற்கு அளித்த வாக்கை அவர் நிறைவேற்றினார். தீர்க்கமுடியாத தன்னுடைய வியாதியை தீர்த்து வைத்தால், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் இயற்றிய ஸ்ரீ தத்த மஹாத்மீயம் என்ற நூலை தன்னுடைய சொந்த செலவில் புத்தகமாக வெளியிட்டார்.

ஒரு பௌர்ணமி தினத்தன்று, ஷிப்ரா (Shipra) என்ற நதியில் நீராட வருகை தந்தார். நதியில் நீராடிய பின்பு மகத்பூர்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செல்லலாம் என்று திட்டமிட்டிருந்தார் ஸ்ரீ தத்தர் அவருக்கு காட்சி அளித்து, உடனடியாக அந்த இடத்தை விட்டு நீங்குமாறு கூறினார் ஆனால் மஹராஜ் அவர்கள், நதியில் இறங்கி விட்டதால், ஒரு சில விநாடிகள் நீராடிவிட்டுச் செல்லலாம் என்று எண்ணினார். மஹராஜ் நீராடிவிட்டு மகத்பூருக்கு திரும்பிக்கொண்டிருக்கும் வழியில், காட்டுப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அங்கிருந்த ஒரு நாகம் ஒன்று அவரை தீண்டிவிட்டது. அவரோடு கூட வந்தவர்கள் அனைவரும் வருந்தினார்கள் சிகிச்சை அளிக்க மருத்துவரை அழைக்கப் புறப்பட்டார்கள். ஆனால் மஹராஜ் தான் மருந்துகள் எதையும் உபயோகப் படுத்துவதில்லை என்று கூறிவிட்டார். இந்த ராஜநாகத்தின் விஷம் தலைக்கு ஏறிவிட்டால் அதை சரி செய்வதற்காக மஹராஜ் உடனடியாக சமாதி நிலைக்குச் சென்றுவிட்டார்.

நான்கு மணி நேரம் கழித்து மஹராஜ் சமாதி நிலையை விட்டு எழுந்தார். சிறிது நேரம் கழித்து அந்த விஷம் அவரை மீண்டும் துன்புறுத்தியது. உடனே மஹராஜ் இரண்டு நாள் சமாதி நிலையில் இருந்தார். இரண்டு நாள்கள் கழித்து விஷத்தின் வீரியம் குறைந்துவிட்டது.

ராஜ நாகத்தின் விஷப்பல், அவருடைய பாதங்களில் தங்கிவிட்டது. அந்த காரணத்தால் அவருடைய மூளை வேலை செய்யும் திறனை வெகுவாக குறைத்துவிட்டது. அவர் அந்த விஷப்பல்லை பாதத்திலிருந்து எடுத்துவிட்டார். அவருடைய உடலும் மணமும் பரிபூரணமாக குணமடைந்து அவர் மகத்பூரிலிருந்து அலோடா (Alota) என்று இடத்திற்குச் சென்றார். அங்கு ஆனந்த கல்பேஸ்வரர் ஆலயத்தில் இறைவனை தரிசித்தார்.

மஹராஜ் அலோட் என்ற இடத்தில் இருந்து சாரங்க பூருக்குச் சென்றார் அவருடன் கூட இருந்த கந்தாபுவா யோக கலையின் முத்திரைகளை முறையாக பயிலவிரும்பினார். ஆகையால் கந்தாபுவாவை அறுவை சிகிச்சை நிபுணரான, விஸ்வநாதராவிடம் அனுப்பி வைத்தார். மஹராஜ் அவர்கள் தற்பொழுது அறுவை சிகிச்சை நிபுணருக்கு அளித்த பணி மிகவும் அபாயகரமானது. யோக கலையின் ஒரு முத்திரை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

யான கேச்சரி முத்ரா (Kechari) என்ற முத்திரையை அளிப் பதற்காக மஹராஜ் விரும்பினார். இந்த முத்திரையின்படி நம்முடைய நாக்கின் ஒரு தசை துண்டிக்கப்படும். இந்த அறுவை சிகிச்சையை, விஸ்வநாதராவ் வெற்றிகரமாக முடித் தார். இது மஹராஜ் அவர்களின் கருணையால் வெற்றிக்கர மாக முடிந்தது என்பதை அவர் நன்கு அறிவார். இதை கேள்வியுற்ற அந்த ஊரின் முக்கிய பிரமுகர்கள் தாமும் அந்த கேச்சரி முத்திரையை பழக வேண்டும் என்று விருப்பம் கொண்டனர். அதன் காரணமாக அவர்கள், மஹராஜ் அவர்களிடம் உத்திரவு பெறாமலேயே நேரடியாக அறுவை சிகிச்சை நிபுணரை அணுகி தமக்கும் அதே சிகிச்சையை அளிக்கும்படி வேண்டுக் கொண்டனர். வேறு வழியின்றி அவர்கள் சொல்லைத் தட்ட முடியாமல், விஸ்வநாத ராவும் அந்த அறுவை சிகிச்சை செய்வதற்கு ஏற்பாடு செய்தார் ஆனால் அவர் மேற்கொண்ட அறுவை சிகிச்சை வெற்றி பெறவில்லை. தவறான ஒரு நரம்பு துண்டிக்கப்பட்டு இரத்தம், பீறிட்டுக்கொண்டு வந்தது. விஸ்வநாதராவ் மனம் வருந்தி உடனடியாக அவர்களை காப்பாற்றுமாறு, மஹராஜ் அவர்களுக்கு தகவல் அனுப்பினார்.

அவருடைய தகவல் அங்கு சென்று சேருவதற்கு முன் மஹராஜ் அங்கு அவரை தேடி வந்துவிட்டார். அந்த இருவரை யும் உற்று நோக்கிய மஹராஜ் தன் கையில் இருந்த ஒரு பச்சிலையை எடுத்து, அவற்றின் சாற்றை பிழிந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்த இடத்தில் தடவினார். என்ன ஆச்சரியம்! உடனடியாக இரத்தம் வெளியேறுவது நின்று விட்டது. துண்டிக்கப்பட்ட நரம்பு சேர்ந்துவிட்டது. மஹராஜ் அவரிடம் “தாங்கள் விரும்பினாலும், இந்த யோக முத்திரை தங்களை எப்போது வந்து அடைய வேண்டுமோ அப் போதே வந்து அடையும்! கேச்சரி யோக முத்திரையை தாங்கக் கூடிய அளவில், உங்கள் சரீரத்தில் பலம் இல்லை! இனி மேலும் என்னிடம் அனுமதி பெறாமல், இது மாதிரி காரியங்களில் ஈடுபடாதீர்கள்! என்று எச்சரித்துவிட்டு மஹராஜ் சென்றுவிட்டார்.

ஒரு தத்த ஜெயந்தி அன்று மஹராஜ் ப்ரம்ம விரதம் என்று இடத்தை நோக்கி சென்றார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பனிரெண்டாவது சாதுர் மாஸ்ய விரதம்
# பிரம்மவிரத் – 1902

NOT FOR SALE

மஹராஜ் மூன்றாவது முறையாக தனது சாதுர்யமாஸ்ய விரதத்தை பிரம்மவிரதா என்ற இடத்தில் அனுஷ்டித்தார். அங்கு ஸ்ரீ ராமருடைய ஆலயத்தில் தங்கியிருந்தார். கங்கை நதிக்கரையின் அருகில், அவர் கூறிய அந்த இடம் அமைந்திருந்ததால், தினமும் அதிகாலை கங்கை நதியில் நீராடி, தமது பூஜை விதிமுறைகளை முறையாக செய்து விட்டு, யாசகம் பெறுவதற்காக மூன்று வீடுகளுக்கு செல்வார். அந்த இடத்தில் மஹராஜ் அவர்களுக்கு, ஏராளமான மாணவர்கள் கிடைத்தார்கள் மஹராஜ் அவர்கள் உபநிஷத்தின் விளக்க உரைகள், மனுஸ்ம்ருதி, பஞ்சதஸி, முதலிய நூல்களை கற்றுக் கொடுத்தார். சிலர் அவளிடம் யோகக்கலையை பயில வந்தார்கள் சிலர் அவரிடம் மூலிகை மருந்தை தயாரிப்பதற்காக, வந்திருந்தனர் மஹராஜ் சகல கலைகளிலும் வல்லவர். ஆனாலும் அவரவருக்கு தகுதியாவற்றை வழங்கினார்.

சிலருக்கு மந்திரங்களையும், சிலருக்கு தந்திரங்களையும் கற்றுக் கொடுத்தார் அவர் துவாரகை செல்லும் வழியில், உலர்ந்த திராட்சைகள் மட்டுமே அவருக்கு உணவாக கிடைத்தன இவ்வாறாக பலநாட்கள் உணவின்றி பட்டினியாகக் கிடந்ததாலும் வெறும் வயிற்றில் உலர்ந்த திராட்சையும், வறண்ட தேங்காய் துண்டுகளையுமே தொடர்ந்து உண்டதால், அவருக்கு கடுமையான வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. அவர் இச்சமயத்தில் தன்னுடைய குறிப்பேட்டில் தான் அனுபவித்த வேதனைகளை கூறிப்பிட்டுள்ளார். அவ்வரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

"பிரமவிரதா பவுஷ்மாதம்! சேஷநாராயணன் (மஹராஜ் எப்பொழுது எழுத துவங்கினாலும் எவரை அழைக்க நினைத்தாலும் நாராயணா என்று தான் துவங்குவார்) நான் துவாரகைக்கு சென்று கொண்டிருக்கும் பொழுது, முறை யாக பூஜைகள் செய்யக் கூடிய அந்தணர்கள் இல்லாத காரணத்தால், என்னால் யாசகம் பெறமுடியாமல், தொடர்ந்து **33** நாட்கள் பட்டினியாகவே இருந்தேன்.

பசிவரும் வேளையில், எப்போதோ பக்தர்கள் அளித் திருந்த உலர்ந்த திராட்சைகள் நான்கையும், வறண்ட இரு தேங்காய்த் துண்டுகளை மட்டுமே உணவாக உண்பேன்! பிறகு ஆகாரமாக நீர்மோர் மட்டுமே அருந்துவேன்! ஒரு முறை நான் அதிகமாக தண்ணீர் அருந்திய காரணத்தால், எனது வயிற்றில் தேங்காய் துண்டுகள் ஜீரணமாகாமல் கடுமையான வயிற்றுப் போக்கை உண்டாக்கியது.

ஒரு நாள் நான் எவரிடமும் எதுவும் பேசாத நிலைக்கு ஆளானேன்! அப்போது என்னை பார்க்க வந்திருந்த பக்தர் களை அழைத்து, இன்று என்னுடைய வயிற்றுப்போக்கு (**13**) பதிமூன்று முறை ஏற்பட்டுவிட்டதால், என்னுடைய உடல் பறவையின் இறக்கையை விட மென்மையாகிவிட்டது. ஆகையால் உங்களுடைய கோரிக்கைகளை நாளை நிவர்த்தி செய்கிறேன்!" என்று கூறி அனைவரையும் அனுப்பி வைத்து விட்டதாக தமது கையேட்டில் குறிப்பிட்டுள்ளார். கடுமை யான கோடைக்காலத்தில், அவர் வசித்த அந்த குடிசையி லிருந்து, கங்கை நதியை அடைய, வெகுதொலைவில் செல்ல வேண்டும். அவர் ஆச்சார விதிகளை கடுமையாக பின் பற்றியதால், ஒவ்வொரு முறையும், வயிற்றுப்போக்கு ஏற் படும் போதும், குளிர்ந்த நீரில் நீராடி விட்டு வந்து விடுவார்.

அப்படி குளிரிந்த நீரில் நீராடியதால் ஜலதோஷம் கடுமையாக பாதிக்கும். தம்முடைய சரீரத்தில் இத்தனை வேதனைகளை அனுபவித்தாலும், மருந்து மாத்திரைகள் எதுவும் உட்கொள்ள மாட்டார். அவருடைய தினசரி பூஜையை முறையாக நடத்துவார். தன்னைத் தேடி வரும் பக்தர்களுக்கு, அவர்கள் குறையை கேட்டு அறிந்து நிவர்த்தி

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செய்வார். தினமும் மாலை வேளைகளில் சரீரத்தில் எத்தனை கடுமையான வலி ஏற்பட்டாலும், அந்த ஊரில் உள்ள இளைஞர்களுக்கு வேத பாடங்களை கற்றுத் தருவார். காயத்ரி மந்திரத்தின் மகிமையையும் எடுத்துக் கூறி, அனைவரையும் ஜபிக்கச் செய்தார்.

அவர் பண்டிதர்களிடம், நீங்கள் உங்களிடம் இருக்கும் பொருளை தானம் செய்யவிடினும், ஞானத்தை தானமாக அனைவருக்கும் வழங்குங்கள் என்றார். ஒரு முறை அவருடைய பக்தர் ஒருவர் அவரிடம் உங்களுக்கு மட்டும் எவ்வாறு இதல்லாம் சாத்தியமாகிறது? என்றார். அப்போது மஹராஜ் நம்முடைய சரீரம் வேறு, ஆத்மா வேறு நம் சரீரத்தில் ஏற்படக் கூடிய உபாதைகள், நமது ஆத்மாவை பாதிக்கக்கூடாது. அவ்வாறு தொடர்ந்து உடலை மட்டுமே நினைத்துக் கொண் டிருந்தால் நாம் உயிர் துறக்கும் நேரத்தில், எவ்வாறு இறைவனை நினைக்க முடியும்.

ஆகையால் பயிற்சியை இப்போதே தொடங்க வேண் டும்! நம் உடலில் ஏற்படுகின்ற வேதனை அனைத்துமே நாம் எதிர்நோக்கும் மரணத்தின் ஒத்திகையாகும்! ஆகையால் இத்தகைய சரீர உபாதைகளால் மனம் தளர்ந்து விடகூடாது! காரணம் சரீர பலத்தை காட்டிலும், ஆத்மபலம் மிகவும் உயர்ந்தது! என்று உபதேசிப்பார். நம் தேசத்தில் அவதரித்த இத்தகைய மாபெரும் மகான்கள், ஆன்மீக பாதையில் நமக்கு மிக பெரிய வழிக்காட்டியாக இருக்கின்றனர்.

ச்ரிங்கேரி பீடத்தின் அப்போதைய சங்கராச்சாரியராக இருந்த சங்கரசாஸ்திரி, தாம் மடாதிபதி பதவியைப் பெற்ற தற்கு, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் ஆசிர்வாதமே காரண மென்று அனைவரிடமும் கூறுவார். இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதைக் காண்போம். மஹராஜ் அவர்கள் பிரம்மசூத்திரத் திற்கான பாஷ்யம் என்று சொல்லப்படும் விளக்கவுரையை, தமது கைகளால் எழுதியிருக்கிறார்.

அவ்வாறு எழுதிய அந்த நூலை, கேசவ சாஸ்திரி என் பவரிடம் அளித்து, அந்த நூலை விரைவாக சங்கர சாஸ்திரியி டம் சேர்த்து விடுமாறு உத்தரவிட்டார். ஆனால் கேசவ

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சாஸ்திரி பல்வேறு முயற்சிகள் எடுத்தும், சங்கர சாஸ்திரியை காணமுடியவில்லை. இதனால் மனம்சோர்ந்து போன கேசவ சாஸ்திரி, அந்நூலை நரசோபாவாடியில் வசித்த தீக்ஷித் மஹராஜிடம் அளித்து, எவ்வாறாயினும் சங்கர சாஸ்திரியிடம் சேர்த்து விடுமாறு வேண்டினார்.

சுமார் 1 1/2 வருடங்கள் கழித்து இந்த நூல் சங்கர சாஸ்திரியிடம் அளிக்கப்பட்டது. அச்சமயம் சங்கர சாஸ்திரி, சிருங்கேரி மடத்தின் பீடாதிபதியாக பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்காக தயாராகும்பொழுது, மஹராஜ் அளித்த, பிரம்மசூத்திரத்தின் விளக்கவுரையை முறையாகப் பயின்றார். அதன் காரணமாகவே அவருக்கு தெளிவு ஏற்பட்டு விட்டது. உடனடியாக அந்த பீடத்திற்கு தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவை அனைத்திற்கும் காரணம், என்றும் மகான் ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதிகளே ஆவார் என்றும் இது வரை, சங்கரசாஸ்திரியாக இருந்த நான், இன்று சங்கராச்சாரியார் என் பதவியை முழுமனதோடு ஏற்றுக் கொள்ள, வழிவகுத்தவரே ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் ஆவார்" என்று நமது குறிப்பேட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரம்ம விரதத்தில் சுபேதார் என்ற மிக பெரிய செல்வந்தர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு அன்னதான சத்திரம் நடத்தி வந்தார். ஒரு நாள் "பைராகி" (Bairagi) என்று சொல்லப்படும் ஐந்து தீவிர காளி மாதாவின் உபாசகர்கள், அன்னதானம் பெற்றுக் கொள்ள வந்தார்கள். அவர்கள் உணவு உண்டுவிட்டு செல்லும் பொழுது, விறகு எரிவதற்கான சிறிதளவு எண்ணையை, சுபேதாரிடம் சொல்லாமலேயே எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள்.

தகவலை அறிந்த சுபேதார், அவர்கள் ஐவரையும் காவல் துறையில் புகார் அளித்து, சிறையில் தள்ளிவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த பைராகிகள், இறைவனால் நீங்கள் சித்ரவதை செய்யப்படுவீர்கள், என்று சாபம் அளித்தார்கள். அந்த சாபத்தின் காரணமாக, சுபேதாரின் சகோதரர் ஒரு சில நாட்களிலேயே இறந்து விட்டார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு நாள் இரவு சுபேதாரின் இல்லத்திலிருந்து, ஒரு பெண் அழுதுக் கொண்டே, கங்கைக்துறைக்கு செல்வதாக மஹராஜ் அவர்களின் காட்சியில் தெளிவாகத் தெரிந்தது. அவர் உடனே சுபேதாரிடம், நேற்று இரவு செல்வத்தின் அதிபதி யான, மஹாலக்ஷ்மி உன்னுடைய வீட்டிலிருந்து சென்று விட்டாள்! இனிமேல்தான், நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! என்று தெரிவித்தவுடன் சுபேதாரின் மனம் மிகவும் வருந்தியது அவர் ஸ்வாமிகளிடம் "நான் தினமும் நிறைய சாதுக்களுக்கு உணவு அளித்து புண்ணியத்தை தேடிக்கொள்ளலாம் என்று நினைத்தேன்.

ஆனால் நான் செய்த இந்த செயலால், ஐஸ்வர்யத்தை தரக்கூடிய தேவதையே, என் வீட்டைவிட்டுச் சென்று விட்டாள். இனியும் நான் ஒரு பொழுதும் இத்தவறை செய்ய மாட்டேன்!" என்று மஹராஜ் அவர்களை மனதார பிரார்த்தனை செய்தார்.

குவாலியரில் இருந்து சாஸ்திரி புவா என்ற சீடர் மஹராஜ் அவர்களை தரிசிக்க வந்தார். மஹராஜ் அப்போது புராணங்களை போதித்துக் கொண்டிருந்தார். சாஸ்திரி புவா தன்னுடைய புலமையை முன்னிறுத்திக் கொள்வதற்காக, மஹராஜ் அவர்களுடைய கருத்தில் தவறு இருப்பதாகக் கூறினார். மஹராஜ் அவர்கள் பொறுமையாக பல நூல்களை மேற்கோள் காட்டி, தாம் கூறிய கருத்துக்கள் சரியானதே என நிரூபித்தார். அன்று இரவு சாஸ்திரி புவா, மஹராஜ் அவர்களிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டார். "சன்யாசிகள் உருவ வழிப்பாட்டை செய்வதற்கு என்ன அதிகாரம் உள்ளது! என்று கேட்டார்! "நீங்கள் தவமும் செய்து கொண்டிருக்கும்போது, ஏன் உருவங்களை வைத்து ஆராதனை செய்ய வேண்டும்?" ஆகையால் உருவ வழிபாட்டை விட்டு விடுங்கள்! என்றார்.

இதைக் கேட்ட மஹராஜ் அவர் கருத்துக்களுக்கு எதிர் விவாதம் செய்யவில்லை. அவர் சாஸ்திரியிடம், நிர்குண உபாசனை ஒருவருக்கு கைவந்துவிட்டால் அவர் உருவ வழிப் பாட்டை மேற்கொள்ள அவசியமில்லை! அது உண்மையே!

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆனால் இந்த தீர்மானத்தை எடுக்க வேண்டியது நாம் அல்ல! இத்தீர்மானத்தை நாம் வைத்து வணங்கும் அந்த உருவங்களே எடுக்கவேண்டும். நான் பூஜையில் வைத்து வணங்கும் அந்த உருவம், என்னை விட்டு செல்ல மறுக்கின்றது! அதற்கு நான் எப்படி பொறுப்பாவேன் என்று கூறினார். உடனே சாஸ்திரி புவா "இதற்கு என்ன ஆதாரம்? என்று கேட்டார் மஹராஜ் அவர்கள், நாளை என்னுடன் கங்கை துறைக்கு வாருங்கள். அப்போது தங்களே உணர்ந்து கொள்வீர்கள்! என்றார்.

சாஸ்திரி புவாவிற்கு, அன்று இரவு முழுவதும் உறக்கம் வரவில்லை. மறுநாள் பொழுது விடிந்து விட்டது மஹராஜ் நீராடிவிட்டு தான் வணங்கும், ஸ்ரீ தத்தரின் உருவச்சிலையை, எடுத்துக் கொண்டு கங்கைக் கரைக்கு சென்றார். அங்கு என்ன நடக்க போகிறது என்ற ஆவலில் அங்குள்ள அனை வருமே கங்கை கரைக்கு வந்து விட்டார்கள். மஹராஜ் தம் கையிலிருந்த, திருவுருவச் சிலையை கங்கையில் நீராட்டினார். பின்னர் தாமும் கங்கையில் நீராடிய பின்னர் அச்சிலையை, நதியின் அலைகளின் மேல் வைத்து வணங்கி விட்டு, கரைப்பகுதிக்கு வந்துவிட்டார்.

கங்கை நதியின் அலைகள், அச்சிலையை மிக வேகமாக எடுத்துக்கொண்டு சென்று விட்டது அத்திருஉருவச்சிலை கட்டை விரல் அளவே இருந்தது. அலைகளின் நடுவில் அச்சிறிய சிலை எங்கோ சென்று மறைந்துவிட்டது. மஹராஜ் அவரும், அவரோடு வந்தவர்களும், கரைக்கு திரும்பியவுடன், ஒரு மிகப்பெரிய அலை ஒன்று விரைந்து வந்து, மஹராஜ் அவர்களின் பாதங்களை நனைத்தது.

அவர்கள் நின்று கொண்டு இருந்த கரைப்பகுதி, மிகவும் தொலைவில் இருந்தது. அப்படியிருந்தும் அவ்வளவு தொலைவையும் கடந்து விரைந்து வந்த ஒரு பெரிய அலை, மஹாராஜை தீண்டியவுடன், அனைவரும் அக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்த வேளையில், மஹராஜ் அவர் களுக்கு முன்னால் அச்சிறிய திருஉருவச்சிலை கம்பீரமாக நின்று கொண்டு இருந்தது. இதைப் பார்த்த சாஸ்திரி புவா,

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தன்னுடைய அகம்பாவம் அடியோடு அழிந்துவிட்டதை உணர்ந்து கொண்டார். அதுவரை உருவ வழிபாட்டை கைவிட்டு இருந்த அவர், மீண்டும் உருவ வழிபாட்டை தொடர்ந்தார் மஹராஜ் அவர்கள் ஸ்ரீ தத்தரின் அவதாரம் என்பதை உணர்ந்து கொண்டார்.

அன்று ஸ்ரீ தத்த ஜெயந்தி விழா நடந்துக் கொண்டு இருந்தது. மஹராஜ் அவர்கள் தியானத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவருடைய காட்சியில், ப்ளேக் என்ற கொடிய நோய் அந்த கிராமத்துக்குள் நுழைய இருப்பதாகவும், அது பல உயிர்களை பழிவாங்கும் என்பதையும் தெளிவாக உணர்த்தியது. அக்கிராமத்தின் வெளியே இருந்த, தீய ஆவிகள் கிராமத்து மக்களுக்கு துன்பம் விளைவிப்பதற்காக இத்தகைய செயல்களை செய்ய துணிகிறது என்பதை உணர்ந்துக் கொண்டார். அந்த ஆவிகள் மஹராஜ் அவர்களிடம், "தங்கள் உடனடியாக, இந்த கிராமத்தை விட்டு புறப்படுங்கள்" என்று உத்தரவிட்டன.

மஹராஜ் காரணம் கேட்டபோழுது, "ஸ்வாமி தாங்கள் இங்கு இருக்கும் வரை, எங்களால் நாசவேலைகளை செய்ய முடியாது! என்று அவரை வற்புறுத்தின. மஹராஜ் அந்த ஆவிகளிடம், ஸ்ரீ தத்தரின் உத்திரவு இல்லாமல், நான் இந்த இடத்தைவிட்டு எங்குமே செல்லமாட்டேன்! என்று கூறினார். இவர்களுடைய இந்த உரையாடலைக் கேட்டு கொண்டிருந்த ஒரு பெண். அந்த கிராமம் முழுவதும் சென்று அங்கு நடந்ததை விவரித்துவிட்டார். அதன் விளைவாக, பெரும் பாலான மக்கள் அந்த இடத்தை விட்டு, வேறு ஊர்களுக்கு சென்றுவிட்டனர். சுபேதார் அவர்களின் உறவினர் ஆன மாதவராவ், ப்ளேக்நோயால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டார். இறைவனின் அருளைப்பெற்ற, தீவிர உபாசகர்களின் சாபத்தை எவரும் ஆளாகக்கூடாது. அந்த கிராமத்திலேயே ப்ளேக் நோய்க்கு 20 பேர் இறந்துவிட்டார்கள்.

மஹராஜ் அவர்கள் அந்த கிராமத்தை விட்டு ப்ளேக் என்ற தேவதை, இறைவனின் உத்தரவின்றி வெளியேறாது, அப்பகுதியில் வாழும் மற்றவரை காப்பதற்காக எவருமே

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செய்ய துணியாத ஒரு காரியத்தை செய்தார். அவர் ப்ளேக் நோயை தாமே ஏற்றுக்கொண்டார்.

மஹராஜ் அங்குள்ள அனைவரிடடும் ப்ளேக் நோய் தீவிரமானதால், அங்கிருந்து நீங்குமாறு எச்சரித்தார் அவருடைய சொல்லை ஏற்று நடக்காதவர்கள் அங்கேயே இறந்து போனார்கள். ப்ளேக் நோய் மஹராஜ் அவர்களைப் பிடித்துக் கொண்டதால், ஸ்ரீதத்தர் அவரிடம் "**சமஸ்லோகி குரு சரித்திரா**" என்ற நூலை எழுதுமாறு பணித்தார் அந்த நூல் எப்படியிருக்க வேண்டும் என்பதையும், ஸ்ரீதத்தர் விளக்கினார். "அந்த நூலில் (**6750**) ஆறாயிருத்து எழு நூற்று ஐம்பது சுலோகங்கள் இடம் பெற வேண்டும்! தினமும் குறைந்தது நூறு ஸ்லோகங்களாவது எழுத வேண்டும்! இம்முறையில் இந்த நூலை நாற்பத்தைந்து நாட்களுக்குள் எழுதி முடித்தாக வேண்டும் என்று கட்டளையிட்டார்.

இன்றளவும் இந்நூலை பாராயணம் செய்து கொண்டு இருக்கும் பக்தர்கள், ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் பரிபூரண தத்த அவதாரி என்பதை உணர்ந்து கொள்ள வேறு என்ன சான்று இருக்க முடியும்? பொதுவாக ஒரு நாளைக்கு நூறு ஸ்லோகங்களை, எழுதி எவராவது நம்மிடம் அளித்தால், அவற்றை அப்படியே நகல் எடுப்பதற்குக் கூட ஒரு நாள் போதாது. இச்செயல் மஹராஜ் அவர்களின் தெய்வீக ஆற்றலைத் தெரிவிக்கின்றது. ஒரு நாளைக்கு நூறு சுலோகங் கள் எழுதுவதைத் தவிர மற்றபணிகளையும், நித்திய பூஜை களையும், போதனைகளையும் ஒரு குறையும் இன்றி மஹராஜ் செய்தார்.

மஹராஜ் அவர்களின் கருணையால், ப்ளேக் நோய் அந்த கிராமத்தை விட்டுச் சென்றுவிட்டது. அந்த நோய் அந்த கிரா மத்தை விட்டு முழுமையாகச் செல்ல வேண்டுமென்ற காரணத்தாலும், இனியும் ப்ளேக் நோய், அந்த கிராமத்திற் குள் நுழையக்கூடாது! என்பதாலும் மஹராஜ் அனைவரிட மும், ஹரி பஜனை செய்தும், ஹரியின் நாமத்தைக் ஜபிக்கு மாறும் அது ஒன்றே நோயைவிரட்டக் கூடிய சக்தியை அளிக்கவல்லது! என்றும் போதித்தார். இப்படியாக ஏழு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வாரங்கள் தொடர்ந்து ஹரி நாமத்தை சொல்லி இறுதியான ஒரு வாரம் முழுவதும் **"திகம்ரா திகம்பரா ஸ்ரீ பாத வல்லப திகம்பரா"** என்ற தத்த மந்திரத்தையும் தொடர்ந்து ஜபிக்கு மாறு கூறினார். மற்றும் ஒரு வாரத்தில் புனித கங்கா மாதாவின் பூஜை துவங்கயிருப்பதால், கங்கா மாதாவை துதித்து வாரம் முழுவதும் ஜபிக்கச் சொன்னார். இப்படியாக ஒன்பது வாரங்கள் தொடர்ந்து நாமஜெபத்தை அவ்வூர் மக்கள் செய்து வந்தனர். ஒவ்வொரு வாரத்தின் முடிவிலும், ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. இல் மஹராஜ் தனது **13**வது சாதுர் மாஸ்ய விரதத்தை பிரமவிரதத்திலேயே கழித்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## பதிமூன்றாவது சாதுர் மாஸ்ய விரதம்
## பிரம்ம விரதம் – 1903

NOT FOR SALE

ஒரு முறை பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்த பெண்மணி மருத்துவர்களால் இனியும் பிழைக்க முடியாது என்று கைவிட்ட நிலையில், அவர்களின் குடும்பத்தினர் மஹாராஜ் அவர்களிடம் வந்து அழுது புலம்பினர். மஹாராஜ் அவர்கள், ஒரு மந்திரத்தை தொடர்ந்து உச்சரித்துக் கொண்டு இருந்தார். சிறிது நேரத்தில் அந்த பெண்ணுக்கு ஒரு வேதனையும் இல்லாமல் குழந்தையை பெற்று எடுத்தாள் மஹாராஜ் அவர்களின் புகழ், பாரத தேசம் முழுவதும் பரவியது.

பல்வேறு இடங்களில் இருந்தும் அவரை தங்கள் ஊருக்கு வரச் சொல்லி கடிதங்கள் வந்தன. ஆனால் மஹாராஜ், ஸ்ரீதத்தரின் உத்தரவின்றி எங்கேயும் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது! என்று பதிலளித்துவிட்டார். இந்நிலையில் காசியிலிருந்து, ஒரு சன்யாசி மஹராஜை தரிசிக்க வந்தார் அவர் தீவிரமான பக்தரும் மிகச்சிறந்த மனிதருமாவார் அவர் ஒவ்வொரு வாரமும பாகவத்தை பராயணம் செய்வார்.

இவ்வாறு நாற்பது வருடங்கள் தொடர்ந்து பாராயணம் செய்து வந்தார். அந்த சன்யாசி மஹராஜை பார்த்தபோது, அவர்கள் ஒருவரை ஒருவர் தங்களின் கண்களிலிருந்து வந்த கண்ணீரால் வாழ்த்திக் கொண்டார்கள். சன்யாசிக்கு அந்த இடத்தைவிட்டுச் செல்ல மனம் வரவில்லை அவர் நான்கு மாதங்கள் மஹராஜ் உடனேயே தங்கியிருந்தார் அச்சமயத்தில் மஹராஜ் மாராத்திய மொழியில் “**சப்த சதி**” குரு சரித்திரா என்ற நூலை எழுதினார். இந்த நூலில் ஸ்ரீ குரு சரித்திரத்தால்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இடம் பெற்று இருந்த அனைத்து நிகழ்வுகளும் தொகுத்து வழங்கப்படுள்ளன.

ஒரு சமயம் விஷ்ணு பந்த் என்பவர், காசியிலிருந்து ஸ்வாமிகளை தரிசிக்க வந்தார். அவர் மிகச்சிறந்த கீர்த்தனை களை இயற்றிப் பாடுவதில் வல்லவர் ஒரு முறை, அவர் ஆலயத்தில் கீர்த்தனைகளை பாடிக்கொண்டு இருந்த பொழுது அங்கு அழகான ஒரு பெண்ணைக் கண்டார். உடனே அவருடைய உள்ளம் அந்த பெண்ணிடம் சென்று விட்டது. கீர்த்தனைகளை பாடி முடித்த பின்னர், அவர் மஹராஜ் அவர்களோடு நெருக்கமாக இருந்த சீத்தாராம் புவாவிற்கு ஒரு கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில் நான் செய்த தவறால் என்னுடைய கண்கள் இறைவனை தரிசிப்பதை விட்டு விட்டு இன்று ஒரு பெண்ணை தரிசித்து விட்டது! இத்தகைய கண்களுக்கு நான் தண்டனை வழங்கியே ஆகவேண்டும்! ஆகையால் நான் விஷச் செடியிருந்து இலைகளை பறித்து என்னுடைய கண்களில் ஊற்றிக் கொண்டுவிட்டேன்! இப்பொழுது எனக்கு பார்வை தெரியவில்லை! என்னுடைய கண்கள் முழுவதும் புண்ணாகி புரை ஏறிவிட்டன! என்று எழுதி இருந்தார்.

சீதாராம்புவா இந்த தகவலை, மஹராஜீக்கு தெரிவித்தார். மஹராஜ் அவர்கள் மிகுந்த கோபத்தோடு, விஷ்ணுபந்த்தை அழைத்துவரச் செய்து, அமர வைத்து தன்னிடமுள்ள மந்திர சக்தியால், அவருக்கு பார்வை தெரியும்படி செய்து விட்டார். இது என்ன அற்புதம்! என்று விஷ்ணுபந்த் வியந்தார். மேலும் மஹராஜ் விஷ்ணு பந்திற்கு, சில அறிவுரைகளை வழங்கினார் அவர் கூறிய அறிவுரை, விஷ்ணு பந்த்திற்கு மட்டுமல்லாமல் நம் அனைவருக்குமே பொருந்தும்.

மஹராஜ் அவர்கள் "புலன் அடக்கம் என்பது, நமது புலன்களை கொல்வதால் ஏற்படுவது அல்ல! அப் பெண்ணைப் பார்த்து, ரசித்தது உன்னுடைய கண்கள்! ஆனால் பார்க்கும் படி தூண்டியது உன்னுடைய உள்ளம்! ஆக உள்ளத்தின் கருவிகளே கண்கள்! உண்மையாக

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உள்ளம்தான் இந்த காரியமாற்றியது! அவ்வாறு கூடாத காரியம் ஆற்றிய உள்ளத்தை, பக்குவப் படுத்தாமல், அவற்றிக்கு துணைநின்ற கருவிகளாகிய கண்களை ஏன் பழிவாங்குகிறாய்! புலன்களை நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்றால், அவற்றின் போக்கை நல்ல வழியில் திசை திருப்ப வேண்டுமே தவிர, அதன் போக்கை நிறுத்தக் கூடாது.

இறைவனைக்குறித்த விரதங்களும் தவமும் இருப்பது வேறு. நம் சரீரத்திற்கு நாமே தண்டனை விதித்துக் கொள்வதால் எந்த பயனுமில்லை! உள்ளம் தூய்மை அடைய வேண்டும்! இவ்வாறு மிகச் சிறந்த அறிவுரையை விஷ்ணு பந்திற்கு வழங்கினார். மஹராஜ் அவர்கள் சிகிச்சை அளித்தபோதும் கூட, அவர் கண்களில் வலி இருந்து வந்தது இதற்கு காரணம் விஷ்ணுபந்த் செய்த தவறேயாகும்! என்று கூறினார்.

மேலும் இதிலிருந்து விடுபட வேண்டும் என்றால் நர்மதா நதிகரைக்குச் சென்று, இறைவனை தொடர்ந்து பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார் விஷ்ணு பந்தும் அவ்வாறே பிராத்தனை செய்தார். அவருடைய வலி சிலநாட்களில் மறைந்து விட்டது. விஷ்ணு பந்த், ஸ்ரீ வாசுதேவரின் கருணையை போற்றி வணங்கினார்.

ஒரு நாள் ஸ்வாமிகள் ஆலயத்தில் அமர்ந்து கொண்டு இருந்த போது திருடர்கள் பற்றி ஒரு விவாதம் எழுந்தது. அப்போது ஸ்வாமிகள் விளையாட்டாக “இங்கிருந்து எல்லாவற்றையும் திருடிக்கொண்டு போனவர்கள், ஏன் இந்த சிலையை மட்டும் விட்டு விட்டனர்! என்று கேட்டார் அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு திருடன் அந்த கூட்டத்தில் அமர்ந்து கொண்டு இருந்தான்.

மஹராஜ் அவர்களுக்கு அவனை நன்றாக அடையாளம் தெரியும்! இருந்தாலும் அவனை அவர் காட்டிக் கொடுக்கவில்லை. அத்திருடன் தன் காட்டிக் கொடுக்காத காரணத்தால் மஹராஜ் அவர்களுக்கு தன் நன்றிகளை தெரிவிக்க வேண்டும்! ஆனால் அவன் மற்றொரு மிக பெரிய பாவச் செயலையும் செய்தான். அன்று இரவே மஹராஜ் குறிப்பிட்ட

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அந்த சிலையையும், திருடிச் சென்று விட்டான் மறுநாள் காலை மஹராஜ் நடந்ததை உணர்ந்து கொண்டார் அவர் அனைவரையும் அழைத்து "இச்சிலையை எடுத்துக் கொண்டுபோனவன், முறையாக அதற்கு உண்டான பூஜைகளைச் செய்ய வேண்டும்! அவ்வாறு செய்யாவிட்டால் அந்த சிலையை வைத்திருந்து என்ன பயன்? என்று கேட்டார். இது எவ்வாறு உள்ளது என்றால் ஒரு பெரிய யானையை இலவசமாக ஒருவர் அளித்தார் என்று அதை பெற்றுக் கொண்டு சென்றவன், அதற்கு போதுமான உணவு அளிக்க முடியாமல் போனால் அந்த யானை அவனை சும்மா விடாது! அவர் இவ்வாறு கூறிய இரு நாட்களிலேயே சிலையை திருடிய திருடன் இறந்து விட்டான். மஹராஜ் அனைவருக்கும் "ஒரு பொருளை நாம் பராமரிக்கவோ அல்லது பாதுகாக்கவோ முடியவில்லை என்றால் அவற்றை பெற்றுக் கொண்டு என்னை பயன்? என்று கூறினார். இவ்வாறாக அவருடைய 13வது சாதுர்மாஸ்ய விரதம் நிறைவடைந்தது.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பதினான்காவது சாதுர்மாஸ்ய விரதம் ப்ரம்ம விரத் – 1904

NOT FOR SALE

மகராஜ் தமது அடுத்த சாதுர்மாஸ்ய விரதத்தை அனுஷ்டிக்க காசிக்கு புறப்பட தயாரானார். ஆனால் ஸ்ரீதத்தர் அவரது காட்சியில் தோன்றி நரசோபாவாடிக்குச் செல்ல உத்தர விட்டார். நரசோபாவாடியில் ஸ்ரீகுரு நிருசிம்மசரஸ்வதி பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலத்தில், இன்று மக்கள் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றனர். அவர்களை வழிநடத்த ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை சென்று வருமாறு உத்தரவிட்டார். ஸ்ரீதத்தரின் உத்தரவை ஏற்று ஸ்ரீ வாசுதேவானந்த ஸ்வாமிகள் நரசோபாவாடிக்கு புறப்பட்டார்.

மகராஜ் ப்ரம்மவிரதத்தை விட்டு புறப்பட்ட பொழுது சிவ தத்தா என்ற இளைஞன், அவரை அங்கிருந்து செல்ல விடாமல் தடுப்பதற்காக, கூரையிலிருந்து அவர் இருந்த இடத்தை நோக்கி கீழே விழுந்துவிட்டான். ஆனால் மகராஜ் இருக்கும் இடத்திற்கு அருகில் விழுந்த அவன் எழுந்து பார்த்ததும், மகராஜ் எப்படியோ மாயமாக மறைந்து விட்டார். அவர் குடிலின் கதவு சாத்தியிருந்தபோது, அவர் எவ்வாறு சென்றிருக்க இயலும்! இறைப்பணி ஒன்றையே செய்து கொண்டிருக்கும், இவரை தடுக்க நினைத்தது, பாவம் என்று உணர்ந்தான் என்ன அற்புதம்! சிறிது நேரம் கழித்த பிறகே அவனுக்கு ஒரு விஷயம் புரிந்தது! “நாம் மிக உயரத்திலிருந்து கீழே குதித்து இருக்கிறோம்!, ஆனால், நமது உடலில் ஒரு அடி கூட விழவில்லை! இதுவும் மகராஜ் அவர்களின் லீலையே என்பதை புரிந்து கொண்டான்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மகராஜ் எல்லா மதத்தினரையும் நேசித்து, மரியாதை செய்தார். எல்லா குருமார்களையும் சந்தித்து வணங்கினார். மகராஜ் ஜால்வன் என்ற இடத்திற்கு, யமுனா நதிக்கரையின் வழியாக சென்று கொண்டிருக்கும் போது, ஒரு முகமதியர், மகராஜ் அவர்களிடம், ஆசி பெறுவதற்காக வந்தார். மகராஜ் அவரை ஆசிர்வதித்து, திருகுரானில் இருந்து, ஒரு ஜபத்தை அவனுக்கு கற்றுக்கொடுத்து அதையே தொடர்ந்து ஜபித்து வரும்படி கூறினார். அந்த முகமதியர் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றுவிட்டார்.

ஜால்வன் என்ற இடத்திலிருந்து பிச்சோரா (Pichhora) என்ற இடத்திற்கு சென்றபோது, அங்கு அவரைத் தேடி ப்ரம்மவ்ரத்தி லிருந்து ஒரு முனிவர் வந்தார். அவர் மகராஜ் அவர்களுடைய கமண்டலம், கம்பளிப்போர்வை முதலியவற்றை கேட்டார். அங்கிருந்த அனைவரும் அதை எதிர்த்தனர். ஆனால் மகராஜ் அவர்கள், அந்த மனிதரின் எண்ணம் பற்றி நன்கு அறிவார். அவர் அனைவரிடமும் "இவர் என்னிடம் இருந்து, இவை யாவும் கேட்டிருப்பது தனக்காக அல்ல! ப்ரம்மவர்ரத் ஆலயத் தில், இவற்றை நான் அமரும் இடத்தில்வைத்து பண்டிகை நாட்களில் வணங்குவதற்காகவே, என்னிடம் கேட்டுள்ளார்! என்று கூறியதும் அந்த நபர் "இது என்ன அற்புதம் ஸ்வாமி! நான் இவற்றை கேட்க தங்களிடம் வருவேன்! என்பதை இங்கு எவருமே அறியமாட்டார்கள்! தாங்கள் எங்களைக் காத்து இரட்சிக்க வந்த ஸ்ரீதத்தரே! ஆவீர் என்று அவரை நமஸ்காரம் செய்து விட்டு, அப்பொருட்களைப் பெற்றுக் கொண்டு சென்றார்.

ப்ரம்மவரத்தை அவர் அடைந்ததும், அந்த ஆலயத்தில் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் அவர்கள் அமர்ந்த இடத்தில் இப் பொருட்களை வைத்து, அதற்கு மாலைகள் அணிவித்து பூஜை செய்தார். அங்கு அமர்ந்து எவர் தியானம் செய்தாலும் ஸ்ரீவாசுதேவரின் பரிபூரண அருளைப் பெற இயலும் என்று இன்றளவும் பக்தர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மகராஜ் அவர்கள் ஆலயங்களை மட்டுமே ப்ரதிஷ்டை செய்யவில்லை. ஒரு மசூதியைக் கூட புனர்நிர்மாணம் செய்ய ஏற்பாடுகள் செய்திருக்கின்றார். பிச்சோரா என்ற பகுதியில்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இருந்து ரேவர் என்ற பகுதிக்கு சென்றார். அங்கே ஒரு இல்லத்தில் யாசகம் பெறுவதற்காக சென்றார். அவர்கள் வீட்டில் ஒரு பெண், அருகில் இருந்த ஒரு மசூதியின் வாசலில் வீட்டுவிலக்கான நேரத்தில் நின்று கொண்டு இருந்ததால் அவளுடைய உடல் திடீரென்று மிகவும் பாரமாகிவிட்டது. அவளால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. இந்தக வலை அறிந்து கொண்ட மகராஜ், ஐந்தாவது நாளில் அவளது உடல் தூய்மையானவுடன், அவளை தம்மிடம் அழைத்து வரச் செய்தார். அப்பெண் தனதருகில் வந்ததும் அப்பெண்ணை பீடித்திருந்த, முகமதிய ஆவி மகராஜ் அவர்களின் அருகில் வருவதற்கு பயந்து அஞ்சி கூக்குரலிட்டு அழ ஆரம்பித்து விட்டது.

மகராஜ் அந்த ஆவியிடம் நீ? ஏன் இப்பெண்ணை பிடித்துக்கொண்டு துன்புறுத்திக் கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார். அதற்கு பதில் கூறிய அந்த முகமதிய ஆவி, இங்கு வாழும் மக்கள் அனைவரும், "இந்த மசூதியின் அருகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!. இம்மசூதி மிகவும் பாழடைந்து காணப்படுகின்றது! இதை சரி செய்து, புனர் நிர்மணம் செய்வதற்கு எவருக்குமே மனம் வரவில்லை!ஆகையால் இக்கருத்தை, அனைவருக்கும் உணர்த்தவே, நான் இவளைப் பிடித்துக் கொண்டேன்! இவள் மசூதியை சரி செய்து விட்டால், நான் இவளைவிட்டு நீங்கி விடுகிறேன்! என்று வாக்களித்தது.

மகராஜ் அந்த ஆவியை கோபத்துடன் பார்த்து, அதற்கும் இப்பெண்ணிற்கும் என்ன சம்பந்தம்? நீ இப்பெண்ணை துன்புறுத்துவதை நாம் சம்மதிக்க மாட்டேன்! இப்பெண்ணை விட்டு நீ உடனடியாக நீங்கவில்லையென்றால், நான் உன்னை சபித்து விடுவேன் ! என்றார். ஆவியும் மிகவும் அச்சத்துடன், அங்கிருந்து சென்றுவிட்டது. மகராஜ் அந்த ஆவியிடம், நீ நினைத்தவாறே இம்மசூதி புதுப்பிக்கப்படும்! இப்போது நீ இப்பெண்ணை விட்டுவிடு! என்று கூறினார். மகராஜ் தான் அளித்த வாக்கை காப்பாற்றினார்.

அவர் அப்பெண்ணிடம், அங்கு வசிப்பவர்களின் துணை கொண்டு, மசூதியை புனர் நிர்மானம் செய்து வைத்தார். அந்த ஆவியும் மனம் மகிழ்ந்து முக்தி அடைந்தது. மகான்களுக்கு

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

NOT FOR SALE

மதம் ஒரு தடையாகவே இருந்தது இல்லை. காரணம் அவர்கள் இவை யாவற்றையும் கடந்தவர்கள். எல்லா சமயங்களும், இறைவனை அடையச்செய்யும் கருவிகளே ஆகும். ஸ்ரீவாசுதேவானந்த ஸ்வாமிகளை, அனைத்து மதத்தினரும், தங்களுடைய வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டனர்.

ஒருவர் மரணத்தருவாயில் கூட உடனடியாக சந்யாசத்தை ஏற்றுக் கொள்ளமுடியும். அவ்வாறு உடனடியாக வழங்கப் படும் சந்யாச விதிமுறை "**ஆதுர் சன்யாசம்**" என்று அழைக்கப் படுகிறது. மகராஜ் தமது ப்ரியமான சீடரான தீக்ஷித் ஸ்வாமிக்கு, ஆதுர் சந்யாசத்தை வழங்கினார். அதற்குக் காரணம், தீக்ஷித்தின் மனைவி ப்ளேக் நோயால் மரணித்து விட்டார். தற்போது அவரையும் ப்ளேக் நோய் தொற்றிக் கொண்டுவிட்டது.

NOT FOR SALE

தாம் விரைவில் இறந்து விடுவோம் என்று நினைத்தவர், அதற்குள் சந்யாச நிலையை, அடைந்து விட் வேண்டும் என்று விரும்பி னார். மகராஜ் அவருக்கு உடனடியாக அடையும் சந்யாச நிலையை அருளினார். மகராஜ் ப்ரம்மவ்ரத்திலிருந்து "பொல்லா" என்ற இடத்தை அடைந்தவுடன் அங்கு மகராஜ் அவர்களை தீக்ஷித் சந்தித்தார். அங்கு புகழ் பெற்ற புண்ணிய நதியான, வத்ராவதி நதி ஓடிக்கொண்டிருக்கிறது. மகராஜ் நதியில் நீராடிய பிறகு நதி தேவதையை வணங்கி "**நமோ வத்ராவதி கங்கா**" என்று ஸ்லோகத்தை கூறினார். அவ் வார்த்தைகளின் பொருள் கலியுகத்தில் வத்ராவதி நதியே கங்கை நதியாக, போற்றப்படும் என்பதே ஆகும். மகராஜ் எங்கு சென்றாலும் மூன்று அந்தணர்களின் இல்லங்களில் மட்டுமே, யாசகம் பெற்று உண்டதை கண்டோம். ஆனால் நரசோபா வாடியில் மட்டும், அத்தகைய விதி முறைகளை அவர் அனுசரிக்கவில்லை. காரணம் நரசோபாவாடியை மகராஜ், தமது தாய்வீடாகக் கருதினார். ஸ்ரீகுரு நிருசிம்ம சரஸ்வதியை, தமது தாயாக கருதியபடியால் அங்கு அவருக்கு, ஸ்ரீதத்தர் எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. நரசோபாவாடியில் இருந்த சமயம் அவர் அடிக்கடி சமாதி நிலையை அடைந்து விடுவார். அந்த நிலை மணிக்கணக்கில் சென்று கொண்டி இருக்கும். இத்தகைய சமாதி நிலையை, அவர் எவ்வித முயற்சியும் இன்றி மிக எளிதாக அடைந்து விடுவார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சந்நியாசிகளைப் பற்றிய உண்மை நிலையை அறிய வேண்டும் என்ற ஆர்வம், ஸ்ரீ பார்கவ் என்பவருக்கு ஏற்பட்டது. அவர் மகராஜ் அவர்களிடம் "ஸ்வாமி இப்போதைய சூழ்நிலையில், நம் தேசத்தில் எல்லாவிடங்களிலும் சந்யாசிகளைக் காண முடிகிறது. ஆனால் ஒரு சாமான்ய மானுடன், சநியாசம் பெற்றுக் கொண்டால், அவர் சந்யாசி என்ற நிலைக்கு, அதாவது தகுதிக்கு அவர் உடனே மாற்றப்படுவாறா!? எல்லோருக்கும் இதே கதி தானா! அப்படியானால் சந்யாசிகள், எல்லோருமே தர்மத்தை அனுஷ்டிப்பவர்களா? எவ்வாறு ஒரு உண்மையான சந்யாசியை நாம் அடையாளம் காணமுடியும்? என்று கேட்டார். அதற்கு ஸ்வாமிகள் "உண்மையான சநியாசியை ஒருவன், அடையாளம் காண வேண்டுமென்றால், அவனும் சந்யாசநிலையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே, அக்காரியம் நிகழும் ஒரு சநியாசியால மட்டுமே உண்மையான சந்யாசியை உணர்ந்து கொள்ள இயலும் என்று பதிலளித்தார்.

மகராஜ் ப்ரயாக் என்ற பகுதியை, வந்து அடைந்தார். அங்கு என்ன ஆச்சரியம்! அங்கு அவரைச் சுற்றி எறும்புக் கூட்டங்கள் அவரை ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாமல் எங்கிருந்தோ இலட்சக்கணக்கான எறும்புகள், பாதங்கள் இருக்கும் இடத்தை சூழ்ந்து கொண்டன. மகராஜ் அமைதியாக ஸ்ரீதத்தரிடம் ஸ்வாமி, நான் இப்போது எத்திசையை நோக்கிச் செல்ல வேண்டுமோ! அத்திசையில் ஒரு எறும்பு கூட நிற்கக்கூடாது!, என்று வேண்டினார். என்ன அற்புதம்! அத்ததனை எறும்புக் கூட்டங்களும், கிழக்கிலிருந்து தெற்குப்பகுதி வரை சூழ்ந்து கொண்டன. மேற்குத்திசையில் ஒரு எறும்பு கூட செல்லவில்லை. மகராஜ் தமக்கு சரியான பாதையைக் காண்பித்த இறைவனுக்கும், அந்த எறும்புக் கூட்டத்திற்கும் தமது நன்றிகளைத் தெரிவித்து மகராஜ் பயணத்தை மேற்குத் திசையை நோக்கி தொடர்ந்தார். தமது பதினைந்தாவது சாதுர்மாஸ்ய விரதத்தை ஸ்ரீ தத்தரின் கட்டளைப்படி நர்ஸி என்ற இடத்தில் துவங்குவதற்கான ஏற்பாடுகளை செய்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## பதினைந்தாவது சாதுர்மாஸ்ய விரதம்
## நரஸி, நரசோபாவாடி - 1905

NOT FOR SALE

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் பௌர்ணமி தினத்தில் தனது 15வது சாதுர்மாஸிய விரதத்தை அனுசரிக்க, நர்சி என்ற இடத்திற்கு வந்தார். அன்றைய தினம் மகரிஷி வியாசருடைய பூஜை விமர்சையாக கொண்டாடப்பட்டது. மஹராஜ் அங்கு வந்தது முதல் ஒரு மாத காலத்திற்கு அவரை சுற்றி மக்கள் கூட்டமேயில்லை அவருடைய மகிமையை முதலில் அவ்வூர் மக்கள் அறியாதவராக இருந்தார்கள் ஆனால் ஒரு மாத காலத்திற்கு பின் அவருடைய புகழைக் கேள்வியுற்று, ஒருவர் பின் ஒருவராக வரத் தொடங்கினார்கள், நர்சி என்ற அந்த பகுதியில் மஹராஜ் அமர்ந்திருந்த ஆலயம் மிகவும் சிறியதாக இருந்தது.

நாளைடைவில் ஏராளமான பக்தர்கள் வரத்துவங்கிய தால், அனைவருக்கும் அமர்வதற்கு கூட அங்கு இடமில்லை. இந்த நெருக்கடியை சமாளிக்க மஹராஜ், ஒரு மிகப் பெரிய அற்புதத்தை நடத்திக் காட்டினார். பிரசாதம் வழங்கும் வேளையில், அவர் தங்கியிருந்த இல்லத்திலிருந்தும், அதே சமயத்தில் தரிசனம் வழங்கும் வேளையில் அவர் அமர்ந்து இருந்த அரசமரத்தின் அடியிலும் ஆக இரு வேறு இடங் களிளும், ஒரே சமயத்தில் அவர் காட்சியளித்து அந்த அற் புதத்தை நிகழ்த்தினார். பிரசாதம் பெற்றுக் கொள்ள வந்த பக்தர்கள், அவருடைய இல்லத்திலும் அதே நேரத்தில், அரச மரத்தின் அடியிலும் பலர் பார்த்துவிட்டதால் ஆச்சரியம் அடைந்தார்கள். மகான்கள் அஷ்டமாசித்திகளையும் உடைய வர்கள்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தினமும் அதிகாலையில் மஹராஜ் புனித கங்கை நதிக்கரையில் நீராடச் செல்வார். மக்களும் அவரை தரிசிக்க கங்கை நதிகரைக்குச் செல்வார்கள். சரீர உபாதைகள் ஏற்பட்டு மஹாராஜை தரிசிக்க வருபவர்கள், அனைவருக்கும் மஹராஜ் அவர்களுக்கு ஏற்ற தீர்மானத்தை வழங்குவார். மருத்துவராலும் குணப்படுத்த முடியாத, பல்வேறு வியாதிகளை மஹராஜ் தம்முடைய தெய்வீக ஆற்றலினால் குணப்படுத்தி விட்டார்.

இதனால் அவரை தரிசிக்க வரும் மக்களின் எண்ணிக்கை அதிகமானது. ஒரு சில சமயங்களில் அதிக பட்சமாக முன்னூறு பேர்கள் வருவதுண்டு. பல சமயங்களில் மஹராஜ் நீராடியவுடன் அடுத்ததாக தாம் நீராடவேண்டும். அப்போது தான் அவரின் உடலை தீண்டிய அபிஷேக நீர் தம்முடைய உடலை தீண்டும். அவ்வாறு தீண்டும் பொழுது தம்முடைய கர்ம வினைதீரும்! என்று நம்பிக்கைக் கொண்டிருந்தனர். ஆகையால் மஹராஜ் நீராடிய பிறகு அடுத்ததாக எவர் நீராடுவது என்ற போட்டி அனைவரிமும் இருந்தது. மஹராஜ் நீராடிவிட்டு வரும் வேளையில்கூட அதிகாலை அவ்வூர் மக்கள், தங்கள் இல்லத்தின் வாசலுக்கு வந்து தரிசித்தனர்.

காலை நேர பூஜைகள் நிறைவடைந்ததும், மஹராஜ் அரச மரத்தின் அடியில் அமர்ந்துக் கொண்டு, காவிய பாகவதம் பஞ்சதஷி இவற்றின் விளக்கவுரையை அனைவருக்கும் போதிப்பார். மஹராஜ் நடத்தும் அந்த வகுப்புகளுக்கு சுக்காராம் சாஸ்திரி, ஸ்ரீ ராம் பாபா அவர்கள் இருவரும் தினமும் தவறாமல் கலந்து கொள்வார்கள்.

ஒரு முறை மஹராஜ் நதிக்கரைக்கு நீராடச் சென்றிருந்தார் அவரை தொடர்ந்து வந்த ஒரு பெண்மணி, நதியில் நீர் எடுப்பதற்காக குடத்துடன் வந்தாள் அவள் அங்கே பார்த்த காட்சி அவளை மெய் சிலிர்க்க வைத்தது. மஹராஜ் நதிக்கரையில், ஓர் இடத்தில் அமர்ந்துக் கொண்டு இருந்தார்.

சூரிய ஒளியின் பிரகாசத்தைப் போன்ற ஒரு ஆறுமாதக் குழந்தை இடதுகை விரலை வாயில் வைத்துக் கொண்டு, மஹராஜ் அவர்களுடைய மடியில் அமர்ந்து கொண்டு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இருந்தது. இந்த காட்சியை பார்த்த அந்த பெண்மணி, அந்த குழந்தையின் தெய்வீக அழகில் மயங்கி, மெய்மறந்து, அந்த குழந்தையையே உற்றுநோக்கிக் கொண்டு இருந்ததால் மஹராஜ் தனது தலையை தூக்கி, அந்த பெண்மணியை பார்த்துவிட்டார். அவர் மடியிலிருந்த அந்த குழந்தை மாயமாய் மறைந்து விட்டது.

அதைப் பார்த்த அதிர்ச்சியில் அந்த பெண்மணி மயக்கம் அடைந்து கீழே விழுந்து விட்டாள். மஹராஜ், தன் கையில் இருந்த தீர்த்தத்தை அவள் முகத்தில் தெளித்தார் சிறிது நேரம் உணர்வுகள் அற்றநிலையில் அவர் அவ்வாறே அமர்ந்துக் கொண்டு இருந்தாள். இந்த குழந்தையை பார்த்த கண்களால், வேறு எந்த காட்சியையும் அவள் பார்க்க விரும்பவில்லை. மஹராஜ் அவளை பார்த்து "தாயே நீ ஒரு புண்ணியவதி! பல ஆண்டுகள் தவம் செய்தோர்களும் இந்த காட்சியை காண்பது அரிது! முடிந்தவரை இந்த நிகழ்வைப்பற்றி எவரிடமும் உரைக்கவேண்டாம்! என்னுடைய ஆசிர்வாதம் உனக்கு எப்போதும் இருக்கும்! சென்றுவா! என்று அனுப்பி வைத்தார்.

ஆனால் தண்ணீர் குடத்துடன் வீடு திரும்பிய அவள், மஹராஜ் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, முதல் காரியமாக அங்குள்ள அனைவரையும் அழைத்து நடந்த நிகழ்வுகளை அப்படியே கூறிவிட்டாள். அந்தப் பெண் ணிற்கு கிடைத்த தெய்வீகக் காட்சியை நமக்கும் கிடைக்கா தொன்று அனைவரும் ஏங்கினர்.

அந்த கிராமத்தில் திடீர் என்று ப்ளேக் நோய் தொற்றிக் கொண்டது. அங்குள்ள அனைவரும் ஆலயத்தில் அமர்ந்துக் கொண்டு **"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத வல்லப திகம்பரா"** என்ற நாமத்தை 24 மணிநேரமும் ஜபித்துக் கொண்டு இருந் தனர் ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி ஸ்ரீ வாசுதேவ மஹராஜ் அவர்களின் படத்தையும் வைத்து, தொடர்ந்து இரவு பகல் பாராமல் நாம சங்கீர்த்தனை செய்துக் கொண்டு இருந்தார் கள். இந்த தகவல் மஹராஜ் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மஹராஜ் அவர்கள் இந்த முயற்சியை ஆசிர்வதித்தார். ப்ளேக் நோய் அந்த கிராமத்தின் அருகில் கூட வரவில்லை. அங்கு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒருவரை தொற்றிக் கொண்ட அந்த நோய் அவரையும் விட்டு விட்டு சென்று விட்டது.

இந்த அற்புதத்தைக் கண்ட அக்கிராமமக்கள், மஹராஜ் தங்கள் ஊருக்கு திரும்ப வரும்வரை நாமஜெபம் தொடர்ந்துக் கொண்டே இருக்கும் என்று கூறி விட்டார்கள் பக்தர்களின் கோரிக்கையை நிறைவேற்ற மஹராஜ் புறப்பட்டு விட்டார். அச்சமயத்தில் பால்கி (Palki) என்ற சொல்லப்படும் பல்லக்கு ஊர்வலம் அங்கு நடைப்பெற்றுக் கொண்டு இருந்தது. அப்போது எதிர் பாராத விதமாக ஒரு அசம்பாவிதம் ஒன்று அங்கு நடைபெற்றது பல்லக்கு, ஆலயத்தை வலம் வந்துக் கொண்டு இருந்த போது அதை சுமந்து கொண்டு இருந்த கும்பார் என்பவருடைய கைகளில் இருந்து நழுவி உற்சவ மூர்த்தி கீழே விழுந்து விட்டது.

இதை பார்த்து நடுங்கிய அந்த ஊர் மக்கள், இந்த ஊருக்கு ஏதே தீமை விளையப்போகிறது என்பதை அறிந்துக் கொண்டார்கள்! அந்த பல்லக்கை சுமந்துக் கொண்டுவந்த கும்பார், மஹராஜ் அவர்களிடம் இது பற்றி தகவல் தெரிவிக்கச் சென்றார். மஹராஜ் ஸ்ரீ தத்தரிடம் இதற்கான காரணத்தை கேட்டபொழுது, ஸ்ரீ தத்த மஹராஜ் அந்த பூஜாரிகளுடைய முறையற்ற செயலால் தாம் சினம் கொண்டு இருப்பதாக கூறினார். பூஜைகள், விதிமுறைகளை அனுசரித்து வழிபாடுகளைச் செய்யவில்லை. அவர்களுக்குள் ஒரு ஒற்றுமையில்லை! அவர்கள் உன்னை தவறாக விமர்சிக்கின்றார்கள்! பாதுகா அபிஷேகம் முறையற்ற பொருள்களைக் கொண்டு செய்யப்படுகின்றது! இத்தகைய காரணங்களால் ஸ்ரீ தத்தர் சினம் கொண்டுள்ளதை மஹராஜ் புரிந்துக் கொண்டார் மஹராஜ் அவர்கள் ஸ்ரீ தத்தரிடம் அவர்களை மன்னிக்க வேண்டினார்.

தாம் விரைவாகப் புறப்பட்டுச் சென்று பூசாரிகளை தம்மிடம் வருமாறு அழைத்தார் பூசாரிகள் அனைவருக்கும் பயம் தொற்றிக் கொண்டது. மஹராஜ் யாரை குற்றம் சொல்ல போகிறார்? எவருக்கு இப்போது தண்டனைக் கிடைக்கப் போகிறது? இவ்வாறு எல்லாம் யோசித்துக் கொண்டு இருந்த அவர்களை பார்த்து மஹராஜ், இறைபணி செய்பவர்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

களின் உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும் அவ்வாறு இல்லையெனில், உங்களில் ஒரு சிலர் செய்ததவறுக்கு இந்த ஊர் மக்கள் முழுவதும் தண்டனை அனுபவிப்பார்கள்.

ஸ்ரீதத்தர் மன்னிப்பதில் **கருணா த்ரிபாதி,** கருணையே உருவானவர்! மஹராஜ் கூறிய அந்த கருணா த்ரிபாதி என்ற பாடலை இன்று அளவும் பல்லக்கு ஊர்வலத்தில் பாடிக் கொண்டு இருக்கின்றனர்.

ஒரு நாள் மஹராஜ், தனக்கு சவரம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டார். இதைக் கேட்டுக் கொண்டு இருந்த ஊர் சவரத் தொழிலாளி, மஹாதேவ் அடைந்த உற்சாகத்திற்கு அளவேஇல்லை தாம் மஹராஜ் அவர்களுக்கு சவரம் செய்யும் பொழுது அவருடைய உடலை தீண்டும் பாக்கியம் எனக்கு கிடைக்கும் இதைவிட என்ன பேறு எனக்கு கிடைக்க முடியும்? என்று ஆனந்தமாக, மறுநாள் பொழுது விடிவதை எதிர்ப்பார்த்து ஆவலுடன் காத்துக் கொண்டுஇருந்தாள்.

பொதுவாக மஹராஜ் எவரையுமே தன்னுடைய சரீரத்தை தீண்ட அனுமதிப்பதில்லை அதைப்போலவே தானும் பிறரை தீண்டவும் மாட்டார். இப்பொழுது அந்த சவரத் தொழிலாளிக்கு அந்த பாக்கியம் கிடைத்திருக்கிறது. மறுநாள் சவரம் செய்யும் பொருட்களோடு புறப்பட்டு ஸ்வாமிகளை தேடி வந்துவிட்டார். அவர்தனக்கு இட்ட பணியை விரைவாக செய்து முடித்து விட்டார்.

அப்போது மஹராஜ் உடைய பாதங்கள் முழுவதும் முட்கள் நிறைதிருந்ததைக் கண்டான். அந்த முட்களை நீக்க வேண்டும், என்று வேண்டினான். அவருடைய பாதங்களில் இத்தனை முட்கள் நிறைந்து இருப்பதற்கு காரணம், அவர் எங்கு சென்றாலும் நடந்தே செல்லும் பழக்கம் உள்ளவர். அவருக்கு காலணிகளை அணியும் பழக்கம் இல்லை, அவர் எந்த வாகனத்திலும் ஏறி பயணம் செய்ய மாட்டார். இவ்வாறு பல ஆயிரக்கணக்கான மையில்கள் நடந்தே சென்றதால், அவருடைய பாதங்களில் நிறைய முட்கள் நுழைந்து புண்கள் நிறைந்து காட்சியளித்தன.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அந்த நிலையிலும் அவர் பாதயாத்திரைச் சென்றுக் கொண்டு இருந்தார். மஹராஜ்க்கு சவரம் செய்த அந்த நாவிதர், அவருடைய பாதங்களில் உள்ள முட்களை எடுப் பதற்கு அனுமதிப் பெற்றார். அந்த முட்களை நன்கு அறிய அவருடைய பாதங்களை கழுவி அபிஷேகம் செய்யும் பாக்கியம் அவருக்கு கிடைத்தது. அவருடைய பாதங்களில் இருந்து இருபது முட்களை கண்டு எடுத்து நீக்கிவிட்டார்.

அன்று அவர் அந்த கிராமத்தை விட்டு புறப்பட வேண்டும் அவருடைய தண்டத்தில் (சன்யாசிகள் கையில் வைத்திருந்த புனித தடி) பரசு முத்திரா (Parshu mudhra) அமைந்த ஒரு துனியைக் கட்டினார். பொதுவாக சன்யாசிகள் எல்லையைத் தாண்டும்பொழுது அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து விடுவார்கள். ஆனால் அந்த ஊர் மக்கள் அவ்ா அங்கு இருந்து செல்வதை விரும்பவில்லை.

அந்த ஊரின் அருகில் இருந்த கிராமத்தில், அதிகாரியாக இருந்தவர் குல்கர்னி என்பவர் மஹராஜ் அவர் அவர்கள் முன் மண்டியிட்டு, தங்களுடைய போட்பேகாவ் கிராமத் திற்கு இரண்டு மாதங்கள் வந்து தங்கி இருக்க வேண்டும் அங்கே தங்களுக்கு பிச்சை அளிக்க அந்தணக்குடும்பங்கள் இல்லை என்பதால் பக்கத்து ஊர்களிலிருந்து நாங்கள் வரவைத்து தருகிறோம். மஹராஜ் தத்தரின் உத்திரவைக் கேட்டு அவர் ஏற்றுக்கொண்ட காரணத்தால் அவர் போப் பேகாவ் என்ற ஊருக்கு வருவதற்கு சம்மதித்தார் கிராம எல்லையை கடந்து செல்வதற்கு முன்னால் நதியில் நீராடி விட்டு செல்ல நினைத்தார் அவ்வாறு நீராடுவதற்காக நதிக்கரைக்குச் செல்லும் பொழுது அங்கு மக்கள் கூட்டமாக நின்று கொண்டு இருப்பதைப்பார்த்தார். காரணம் கேட்டதற்கு அங்கு உள்ள ஒரு மார்வாடி “ஸ்வாமி, என்னுடைய தலையை தங்களுடைய பாதத்தில் வைத்து ஆசீர்வாதம் பெறவிரும்புகிறேன்.

இதுவே என்னுடைய கோரிக்கையாகும்! என்றார். இது அவருடைய கோரிக்கை மட்டுமே என்று நினைத்து இருந்த மஹராஜ், பின்னர் அங்கு நின்று கொண்டிருந்த மக்கள் அனைவரும் தமது பாதங்களையே ஸ்பரிசிக்க விரும்புகிறார்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கள் என்பதை புரிந்துக் கொண்டார். இப்போது அவருக்கு என்ன செய்வது என்றே தெரிய வில்லை! அவர் மக்களை பார்த்து, “இவ்வாறு ஒரு காரியம் நடந்தால் நான் எனது புனித தண்டத்தை கைவிடவேண்டிய சூழ்நிலை ஏற்படும்! என்று கூறினார் அதைக் கேட்ட அந்த மக்கள் கூட்டம், வருந்தி புலம்பி உரத்தக்குரலில் அழத்துவங்கிவிட்டார்கள்.

நடப்பது நடக்கட்டும் என்று நினைத்த மஹராஜ் ஸ்ரீ தத்தரை வணங்கி விட்டு தமது இரண்டு கரங்களையும் குறுக்காகக் கட்டிக்கொண்டு அவர்களுக்கு சம்மதம் தெரிவித்துவிட்டார். இந்த காட்சியை அவர்கள் ஒவ்வொரு வரும் தமது வாழ்நாளில் மறக்கவே முடியாது. தமது முதலில் வந்த அந்த மார்வாடியை தன்னுடைய தலையை அவருடைய பாதத்தில் வைத்து நமஸ்காரம் செய்தார். உடனே அவர் பேரின்பநிலைக்கு சென்று விட்டார் அன்று அனைவருக்கும் அந்த பாக்கியம் கிடைத்தது எல்லோரும் மஹராஜ் அவர் களை, ஆனந்தமாக தீண்டி நமஸ்கரித்தார்கள் அவருக்கு நமஸ்காரம் செய்து எழுந்த ஒவ்வொரு பக்தருக்கும், ஸ்ரீ வாசுதேவஸ்வாமிகள் ஸ்ரீ தத்தாரேயத்ராகவே காட்சி யளித்தார்.

இந்த செயல் சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்றது. ஆனால் என்ன அற்புதம்! மஹராஜ் அவர் களுக்கு அந்த இரண்டு மணிநேரமும் முழுமையான சமாதி நிலையை அடைந்துவிட்டார்.

“தேம்பே மகராஜ்கி ஜெய்! ஸ்வாமிக்கு ஜெய், என்று கோஷம் எழுப்பினார்கள் அப்போதுதான் சமாதி நிலையி லிருந்து மஹராஜ் எழுந்தார் அங்கு இருந்த அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு, அந்த நதியை கடந்து பக்கத்து கிராமத்துக்கு சென்றார். அந்த கிராமத்தின் ஊர் எல்லையில் அமைதியாக இருக்கலாம் என்று நினைத்த மஹராஜ் அங்கும் சுமார் 400 பேர் கூட்டமாக வந்திருப்பதை பார்த்து திகைத்து விட்டார் அந்த கிராமத்தினர் மட்டும் அல்லாமல் பக்கத்து கிராமத்தினரும் வந்து இருந்தனர், அவர்கள் அனைவரும் ஸ்வாமிகளை வாத்தியக் கருவிகளின் இசையோடு வர வேற்றார்கள், மஹராஜ் அன்று இரவு அந்த ஊரில்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தங்கிவிட்டு, மறுநாள் விடியற் காலையிலேயே வெரும் அறிமாமல் அந்த ஊரை விட்டு புறப்பட்டுவிட்டார்.

அங்கிருந்து வாசீம் என்ற பகுதியை நோக்கிச் சென்றார். அங்கு கருடேஷ்வர் என்ற ஆலயத்தில் இரண்டு நாள் தங்கினார். அங்கு நாராயண ராவ் என்ற ஒரு பக்தரின் தந்தையின், உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. மருத்துவர்கள் அனைவரும் அவரை இனிமேல் பிழைக்க வைக்கமுடியாது என்று கைவிரித்து விட்டார்கள் மஹராஜ் யாசகம் பெறுவதற்காக சென்ற போது, இந்த தகவலை அறிந்துக்கொண்டார்.

அவர் நாராயணராவிடம் அவருடைய தந்தையை அழைத்துக் கொண்டு, கருடேஷ்வர் ஆலயத்திற்கு வருமாறு உத்திரவிட்டார் ஆலயத்தில் மஹராஜ் அவர்கள் ஒரு இயந்திரத்தில் எழுதி அதை தாயத்து வடிவில் அவருடைய தந்தையின் கழுத்தில் கட்டுமாறு கூறினார். ஆனால் அந்த எந்திரத்தை ஒரு போதும் தரையில் வைக்கக் கூடாது! என்றும் எச்சரித்தார் மஹராஜ்.

அளித்த அந்த இயந்திரத்தின் மூலம் நாராயணராவின் தந்தை பரிபூரணமாக குணமடைந்தார். ஆனால் ஒரு நாள் ஸ்வாமியின் எச்சரிக்கையை மறந்து விட்டார். அவருடைய கழுத்திலிருந்து அவிழ்க்கப்பட்ட, அந்த இயந்திரம், அலமாரி யில் தவறுதலாக வைக்கப்பட்டு விட்டது. அடுத்த வினாடியே, அந்த அலமாரியிலிருந்த அனைத்தும் பொருள் களும் எரிந்து சாம்பலாகின அந்த இயந்திரமும் காணாமல் போய்விட்டது.

நாராயணராவும், அவருடைய தந்தையும் தங்கள் அறி யாமல் செய்த தவறுக்காக மஹராஜிடம் மன்னிப்பு வேண்டி னார்கள் இனிமேலும் இது போன்ற தவறு புரியமாட்டேன் என்று வாக்குறுதி அளித்தார்கள்! இதற்கு இடையில் நாராயணராவ் அவர்களின் தந்தைக்கு, வ்யாதி பூரண குணமாகி விட்டது. இதற்கு ஸ்ரீ மஹராஜ் அவர்களின் கருணையே காரணம் என்று உணர்ந்து நன்றி தெரிவித்தனர்.

மஹராஜ், வாசீம் என்ற பகுதியிலிருந்து கரன்ஜா என்ற பகுதிக்குச் சென்றார். கரன்ஜா என்ற புண்ணிய ஸ்தலம்,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி அவதரித்த தலமாகும். அங்கு ஸ்ரீ குரு நரசிம்ம சரஸ்வதியின் ஆலயம் பிரம்மானந்த ஸ்வாமி களால் நிர்மாணிக்கப்பட்டது. மஹராஜ் அங்குள்ள **காலா மாருதி** ஆலயத்தில் மூன்று நாட்கள் தங்கி இருந்தார். காலா மாருதிக்கு பூஜை செய்யும் பூஜாரிகள், தினமும் மாருதிக்கு பிரசாதம் நைய்வேத்தியம் செய்தவுடன், உடனடியாக அதை சாப்பிட்டு விடுவார்கள் பிறகு மற்ற பூஜைகள் தொடரும் இவ்வாறு செய்வது அங்கு ஒரு வழக்கமாக வைத்து இருந்தார்கள்.

ஆனால் அச்சமயத்தில் மஹராஜ் அங்கு இருந்ததால், அவருக்கு முன்னால் நைவேத்தியம் செய்த பிரசாதத்தை, பூஜை முடியும் முன்னரே உண்பதை நாகரீகம் இல்லாத செயலாக கருதினார்கள். அப்போது சிறிது நேரம் மஹராஜ் அவர்கள் தியானத்தில் இருந்தார். அவருடைய தியானத்தில் அன்று ஸ்ரீதத்தருக்கு பதிலாக ஸ்ரீ ஆஞ்சநேயர் வந்தார், ஆஞ்நேயர் மஹராஜ் அவர்களிடம், "எனக்கு மிகவும் பசிக்கிறது, எதையாவது சாப்பிட அளிப்பாயாக! என்று கூறியவுடன், திருவுருவச்சிலையிலிருந்து ஆஅஞ்சநேய ருடைய வாய் திறந்து கொண்டது. இந்த காட்சியை பார்த்த மஹராஜ், அங்குள்ள பூஜாரிகளை அழைத்து, நைய்வேதி யத்தை சாப்பிடுவதை ஏன் நிறுத்திவிட்டார்கள்? என்று கேட்டார்.

அந்த பூஜாரிகள், மஹராஜ் அவர்களிடம், "தாங்கள் சிறப்பு விருந்தினராக இந்த ஆலயத்திற்கு வந்து இருக்கும் காரணத்தால், பிரசாதத்தை முதலில் தங்களுக்கு முன்னால் உண்பதை நாங்கள் விரும்பவில்லை" என்று கூறினார்கள் அதுவரை மஹராஜ் அவரின் காட்சியில், ஸ்ரீ தத்தரை தவிரவேறு எவருமே தோன்றியதில்லை அன்று பூசாரிகள் பசியோடு இருப்பதை, இறைவன் ஏற்றுக் கொள்ளவில்லை. மஹராஜ் அவர்கள் பூசாரிகளிடம், இதுவரை இங்கு இருந்த பழக்கவழக்கங்களை ஏன் எனக்காக மாற்றிக் கொண்டிர் கள்? இனிமேலும் அந்த தவறை செய்யாதீர்கள்!" என்று கூறினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்ரீ தத்த ஜெயந்தி விழா நிறைவு அடைந்ததும், மஹராஜ் அவர்களை உடனடியாக அங்கிருந்து புறப்படுமாறு ஸ்ரீதத்தர் உத்தரவிட்டார். ஆனால் அவ்வூர் மக்கள், இரண்டு நாட்கள் அங்கு தங்கி இருந்துதான் செல்லவேண்டும் என்று மஹராஜை வேண்டினார்கள். ஸ்ரீதத்தரின் உத்திரவுபடி அன்று ஒரு நான்கூட அந்த கிராமத்தின் எல்லைக்குள் வசிக்க கூடாது என்பதாகும்.

அதனால் மஹராஜ் மக்களிடம் "நான் இன்றே இங்கிருந்து புறப்படவேண்டும்! இது இறைவனின் ஆணையாகும்! ஆகை யால், இறைவனுடைய ஆணையை ஏற்று, நான் புறப்பட அனுமதி தாருங்கள்! என்றார். "அவ்வூர் மக்கள் மஹராஜ் அவர்களிடம், "எங்கள் வேண்டுகோளை தாங்கள் ஏற்கா விட்டால், நாளை ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கும் விதிமுறையை நாங்கள் புறக்கணிப்போம்!

மேலும் அன்னதானத்திற்கு தேவைப்படும் உணவுப் பொருள்கள் அனைத்தையும் கங்கை நதியில் சமர்ப்பித்து விடுவோம்! என்று அவர்கள் அனைவரும் மண்டியிட்டு அன்னதான பூஜை முடியும் வரை செல்ல வேண்டாம்! என்று கேட்டுக் கொண்டனர். "இவர்களை எவ்வாறு சமாளிப்பது? என்று யோசித்தார். நாளை அன்னதான விழா நடைபெறும் என்று, அவ்வூர் மக்களுக்கு மட்டுமல்லாமல் அக்கம் பக்கத்து ஊர் மக்களுக்கும் தண்டோரா மூலம் ஒரு வாரம் முன்ன தாகவே அறிவித்தாகிவிட்டது.

பசியோடு வரும் அனைவரும் உணவு கிடைக்காமல் திரும்பினால் அது பாவசெயலாகும். ஆகையால் மஹராஜ் ஒரு தீர்மானத்திற்கு வந்தார். ஸ்ரீ தத்தரின் ஆணைப்படி அன்று, அந்த ஊர் எல்லையை தாண்டவேண்டும்! ஆகையால் மஹராஜ் அனைவரிடமும்தாம் நாளை இங்கு வருவதாக கூறிவிட்டு உடனடியாக அந்த ஊர் எல்லையைத் தாண்டிச் சென்று விட்டார். மறுநாள் அதிகாலையில் அந்த ஊருக்கு மீண்டும் திரும்பினார்.

ஆயிரம்பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நல்முறையில் நிறைவடைந்தது அவ்வூர் மக்கள் அனைவரும் மஹராஜ் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். அன்று ஸ்ரீ

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தத்தர், ஸ்வாமிக்கு, ஒரு சோதனைவைத்தார் அன்று இரவு ஆலயத்தில் மஹராஜ் அமைதியாக தியானம் செய்து கொண்டிருந்தார். அவருடைய தியானத்தில் அந்த ஆலயம் உடைந்து நொறுங்குமாறு ஒரு ஓசை வந்தது. உடனே அந்த ஆலயத்திலிருந்து பிரகாசமான ஒரு ஒளியும் வந்தது.

அந்த ஒளி அவருடைய பார்வையை இழக்கச் செய்வ தாகவும், அந்த ஓசை அவருடைய காதுகளை கேட்க இயலா மல் செய்வதாகவும் அவருக்கு ஓர் உணர்வைத் தோற்று வித்தது. மஹராஜ் அவர்களுக்கு நன்றாக புரிந்து விட்டது. நான் இன்று இந்த ஊருக்குள் நுழைவதற்கு காரணம் என்னுடைய புத்தி சாதுர்யமே என்று நினைத்தேனே தவிர ஸ்ரீதத்தருடைய அனுக்கிரஹம் என்பதை உணரவில்லை.

ஆகையால் மஹராஜ் ஸ்ரீ தத்தரிடம், மனதார பிராத்தனை செய்து தம்மை மன்னிக்கும்படி வேண்டினார். அவர் ஸ்ரீதத்தரிடம் ஸ்வாமி நான் செய்தது தவறுதான்! ஆனால், இத்தவறை நான் எனக்காக செய்ய வில்லை! பசியோடு வரு பவருக்கு உணவு கிடைக்க வேண்டும் என்ற காரணத்தால் நான் இச்செயலை செய்தேன்! இதை நாங்கள் விரும்பவில்லை என்றால் எனது கண்களில் பார்க்கும் திறனையும், காது களின் கேட்கும் திறனையும் நான் தங்களுக்கே சமர்ப்பித்து வருகிறேன்''! என்றார். மஹராஜ் இவ்வாறு கூறியதைக் கேட்டதும், ''ஸ்ரீ தத்தர், நான் உம்மை சோதிப்பதற்க்காவே இவ்வாறு கூறினேன்! என் சோதனையில் தாம் வென்று விட்டீர்கள்! என்று சிரித்துக் கொண்டே ஆசிர்வதித்தார்

ஒரு முறை தத்தர், பரமஹம்சர், ஸ்வாமியும், ''ஒருவர், உன்னைக்காண வருகிறார். என்று அறிவித்தார் அப் போழுது மஹராஜ், ''ஸ்வாமி தாங்கள் அனுமதி அளித்தால் நான் சென்று அவரை தரிசிக்கிறேன்! என்றார் அதற்கு ஸ்ரீ தத்தர், ''நீ எங்கும் செல்ல வேண்டாம்! அவர் இங்கு வந்து உன்னை தரிசிப்பார், என்றார் மறுநாள் காலை ஸ்ரீ தத்தர் குறிப்பிட்ட அந்த துறவி, மஹராஜை தேடிவந்தார்.

அவர் ஒரு திகம்பரர். தன்னுடைய சரீரத்தின் மேல் எந்த விருப்பமும் இல்லாதவர் பசி, தாகம், மழை, வெய்யில், குளிர் இவற்றால் சிறிதளவும் பாதிக்கப்படாதவர். அவர் மஹராஜ்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர்களின் முன்னால் அமர்ந்து கொண்டு அவருடைய கண்ணையே உற்று நோக்கிக் கொண்டு அமர்ந்திருந்தார். சிறிது நேரம் கழித்து அவர் அங்கிருந்து புறப்பட்டு விட்டார். அவர்கள் இருவருக்குள்ளும் எவ்விதமான பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை. அந்த சாது எழுந்து சென்ற போது அவருடைய முகத்தை பார்த்தவர்கள் தாம் இதுவரை தேடியது கிடைத்து விட்டது போன்ற உணர்வு தோன்றியது.

கிருஷ்ணாஜி என்ற ஒரு அந்தணர் ஒரு வகை நரம்பு வியாதியால் அவதியுற்றார் அவருடைய ஒரு கை முழுவதுமாக பாதிக்கப்பட்டு இருந்தது. பல வருடங்கள் சிகிச்சை பெற்றுப் பல்வேறு மருந்துகளை உட்கொண்டும், அந்த வியாதி சரியாகவில்லை. கிருஷ்ணா ஸ்வாமிகளை எவ்வாறாவது சந்தித்து, இதற்கு தீர்வு காணவேண்டும் என்று விரும்பினார். அவரால் எங்கும் செல்லமுடியாத காரணத்தால் மனமுடைந்து அவர் இல்லத்திலேயே அமர்ந்துக் கொண்டிருந்தார். அவருடைய வேண்டு கோளை ஸ்ரீ தத்தர் ஏற்றுக் கொண்டார்.

ஒரு நாள் மஹராஜ் அவர்கள், கிருஷ்ணாஜியின் இல்லத்திற்கே யாசகம் பெறுவதாக வந்தார். அவரை பார்த்தவுடன் கிருஷ்ணாஜியால் எதுவும் பேச இயலாமல் அழ ஆரம்பித்து விட்டார். மஹராஜ் அவரிடம் சீக்கிரம் குணமடைந்து விடுவார் என்றும் ஸ்ரீதத்தரை எப்பொழுதும் நினைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

கிருஷ்ணாஜீயும் தொடர்ந்து ஸ்ரீ தத்தரை பிரார்த்தனை செய்துக் கொண்டிருந்தார். அன்று இரவே அவருடைய கனவில் ஸ்ரீதத்தர் தோன்றி, சென்ற ஜென்மத்தில் நீ கோவிந்த பட்டாஜி என்பவருக்கு 35ரூபாய் கடனாக தரவேண்டும்! அதைத் தராத காரணத்தால், கோவிந்த பட்டாஜி இறக்கும் தருவாயில் மனம் உடைந்து இறந்தார். "அந்த பாவம் தான் உங்களை இந்த நிலைக்கு ஆளாக்கி இருக்கிறது!" ஆகையால் உடனடியாக அந்த கடனை திருப்பி கொடுத்து விடுங்கள் என்று உத்திரவிட்டார்! "மறுநாள் கோவிந்தபட்டாஜியின் புதல்வனை அழைத்து அவருடைய தந்தையிடம் பட்ட கடனை திருப்பி அளித்துவிட்டார் அந்த கடனை திருப்பி அளித்ததும் உடனடியாக கிருஷ்ணாஜி முக்தி அடைந்துவிட்டார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு முறை, அனைவரும், மூன்றுநாட்கள் சாரங்கபூரில் தங்கிச் செல்லுமாறு மஹராஜை வேண்டிக் கொண்டார்கள். அந்த வேண்டுகோலை மஹராஜ் மறுத்துவிட்டார். அவர் அங்கு வருகை தந்ததின் நோக்கம், அவர் முதன் முதலாக பூஜை செய்த ஸ்ரீ தத்தரின் திருவுருவச் சிலை, அவர் அவதரித்த மான்காவ் பகுதியிலிருந்தது அந்த ஆலயத்திற்கு வந்து உள்ளது அந்த திருவுருவச் சிலையை தரிசிக்கவே அங்கு வந்து இருந்தார் அதை தரிசித்தவுடன் அங்கிருந்து புறப்பட்டு தேவாஸ் மாவட்டத்திற்கு சென்று விட்டார்.

ஸ்வாமிகள் அங்கு வருவதை அறிந்துக் கொண்ட அந்த ஊர் பிரபு மஹராஜை வரவேற்கச் சிப்பாய்களை வழி எங்கும் நிறுத்தி வைத்திருந்தார். அதை பார்த்த மஹராஜ், “பிரபுக் களும், மன்னர்களும் நாட்டை ஆளும் அதிகாரம் பெற்றவர் கள். அவர்களுக்கு இந்த சன்யாசியை அழைப்பதில் என்ன லாபம் இருக்க முடியும் என்றார்? அந்த பிரபு ஒரு வேளை சன்யாசி பல்லக்கில் மட்டுமே செல்லக்கூடியவர் என்று நினைத்து பெரிய பல்லக்கையும் ஒரு ஏற்பாடு செய்திருந்தார்.

மஹராஜ் அங்கு உள்ள சிப்பாய்களிடம் மஹராஜ் அவர் களுக்காக தம்முடைய போக்கில் தம்மைவிட்டு விடுமாறு கூறினார். சிப்பாய்களும், பணியாட்களும் அவரை வணங்கி அவர் செல்வதற்கு அனுமதி அளித்தனர். மஹராஜ் அங் கிருந்து இந்தூர் வழியாக போர்குவா என்ற இடத்தை அடைந்தார். போர்குவா என்ற இடத்தில் மஹராஜ் அவர் களின் ஒருவர் தீவிர பக்தர் அவரை எவ்வாறாவது தரிசிக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டார். அதிர்ஷ்டவசமாக மஹராஜ் தங்கள் ஊருக்கே வருவதை அறிந்துக் கொண்டார்.

நீண்டநாட்களாக அவரை காணவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அன்று நிறைவடைந்தது அங்கிருந்து மஹராஜ் ஓங்காரேஷ்வரர் சென்றார். ஓங்காரேஷ்வரர் என்ற சிவ திருத்தலத்தில், ஒரு அந்தணர் அரசுத் துறையில் பணியாற்றி வந்தார். ஆனால் அவருடைய செய்கைகள் முன்னுக்கு பின் முரணாக இருந்தது. மஹராஜ் அவர்கள் அவருடைய இல்லதிற்கே யாசகம் பெறுவதற்காக சென்றார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அங்கே பிக்ஷையும் அவருக்கு அளிக்கப்பட்டது. அந்த சமயத்தில், நண்பகல் வேளையில் அந்த அதிகாரி, நீராடும் நீர்த்தொட்டியில் (BathTub) அமர்ந்துக் கொண்டு இருந்தார். அவர் பகலில் செய்யவேண்டிய சந்தியாவந்தனமும் செய்ய வில்லை, காயத்திரி ஜபத்தையும் உச்சாடனம் செய்யவில்லை, உணவு தயரானதும் செய்யவேண்டிய, வைஸ்வதேவம் என்று சொல்லப்படும் பஞ்ச பூதங்களுக்கு, காக்கை போன்ற பறவைகளுக்கும் பசு முதலிய விலங்குகளுக்கும் அளிக்க வில்லை. ஆகையால் மஹராஜ் அந்த அந்தணருடைய தாயாரிடம், "இன்று நான் பவித்திரமில்லாத உணவை உண்டுவிட்டேன்! இந்த உணவு என்னுடைய வயிற்றில் சென்று, ஜீரணிப்பதற்கு முன்பாக, இவற்றை நான் வாயில் எடுத்துவிடுவேன்!" அந்தண குலத்தில் பிறந்து முறையாக சந்த்யாவந்தனமும், வைஸ்வதேவமும் செய்யாதவர்களை இறைவன் மன்னிக்கமாட்டான்!

"இத்தகைய காரணங்களால் வரும் காலத்தில், அவர் களின் தலைமுறையினரும் துன்பத்திற்கு ஆளாவார்கள்! மஹராஜ் இவ்வாறு கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு விரைந்து நீங்கி சென்றுவிட்டார். இதை கேள்விப்பட்ட அந்த அந்தணர் மனம் வருந்தி, மஹராஜ் அவர்களிடம் மன்னிப்பு வேண்டினார். மஹராஜ் விதி முறைகளை முறையாக அனுசரிப்பதை, அவருக்கு கற்றுக் கொடுப்பதற்காகவே, அவரோடு சில நாட்கள் தங்கி இருந்தார்.

அப்பொழுது ஸ்வாமி அந்த அந்தணரிடம், "அவரவர் தோன்றிய குல பழக்க வழக்கங்களை முறையாக அனுசரிக்க வேண்டும்! அவற்றால் எந்த உயிருக்கும் துன்பம் நேரக் கூடாது! அவ்வாறு குல பழக்க வழக்கங்களை அனுசரிக்கும் போது, கர்வமோ, பெருமையோ, பிடிவாதமோ, பிறரை உதாசீனப்படுத்துவதோ கூடாது! என்று உபதேசம் செய் வார். பின்னர் ஓம்காரேஸ்வரரை விட்டு புறப்பட்டு, பதவை என்ற இடத்திற்கு வந்தார். வதவை என்ற புண்ணிய ஸ்தலத்தில், தன்னுடைய 16வது சாதுர்மாஸய விரதத்தை துவங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பதினாறாவது சாதுர் மாஸ்ய விரதம்
## பதவை – 1906
## நரசோபாவாடி

NOT FOR SALE

அப்போதைய இந்தூர் மாநிலத்தில், நர்மதா நதிக்கரையில் அமைந்த புண்ணியஸ்தலமே பதவை என்ற பிரதேசமாகும். அங்கு ஒரு குடிசையில் மஹராஜ் தங்க விரும்பினார். சேதமடைந்திருந்த அந்த குடிசை, மஹராஜ் அவர்களின் வருகையின் காரணமாக, அந்த ஊர் மக்களால் சரி செய்யப் பட்டது. மஹராஜ் தனிமையில் இருக்க விரும்பியதால் ஊரை விட்டு தள்ளி இருந்த அந்த குடிசையில் தங்கியிருந்தார். ஆனால் அங்கேயும் தகவல் அறிந்த ஏராளமான மக்கள் கூட்டம் அவரை சூழ்ந்து கொண்டார்கள்.

அதனால் அங்கிருந்து புறப்பட்டு சற்று தள்ளி இருந்த, காட்டுப்பகுதியை நோக்கி புறப்பட்டார். அந்த காட்டு பகுதியில் சில நாட்கள் தங்கி இருந்தார் அவர் அங்கு இருப்பதை அறிந்த மக்கள் அங்கேயும் சென்று சூழ்ந்து கொண்டார்கள். ஸ்ரீ தத்தர் அவருக்கு கனவில் காட்சி அளித்து, “மக்களோடு உனக்கு தொடர்பு இருக்கும் வரையில் மட்டுமே நீ அவர்களை நல்வழிப் படுத்த முடியும்! ஆகையால் நீ தனிமையில் இருக்க வேண்டாம்” என்று உத்தவிட்டார். ஸ்ரீ தத்தரின் உத்தரவை ஏற்று மஹராஜ் நகரத்தில் தங்கி இருந்தார்.

அவர் தமது 16வது சாதுர்மாஸ்ய விரத காலத்தில், தாம் உண்ணும் உணவின் அளவை மேலும் கட்டுப்படுத்தினார். மூன்று கைப்பிடி உணவை மட்டுமே உட்கொண்டார். நீர் மோரும், பழங்களையும் உடல் பலஹீனமாக இருக்கும் போது எடுத்துக் கொண்டார் அவருடைய பக்தரான ராம் பாபு,

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தினமும் அவருக்கு நீர் மோரும் பழங்களும் கொண்டுவந்து தருவார், காலை வேளையில் பூஜையை முடித்த பிறகு தனது கல்வி பயிற்சியை வழக்கம் போல் தொடர்ந்தார் மஹராஜ் அவர்களுடைய பெயரில் தினமும் 200 குடும்பங்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. மஹராஜ் தன்னிடம் குறையோடு வருபவர்களுக்கு, அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்தார். சிலருக்கு பரிகாரம் கூறினார். சாயங்கால வேளையில் பூஜை முடிந்ததும் தொடங்கிய பஜனை நடு இரவு வரை சென்று கொண்டு இருக்கும்.

ஒரு நாள் சிவாஜிராஜ் கேல்கர் என்பவர், இந்தூரிலிருந்து மஹராஜை தரிசிக்க பதவை வந்தார். அவருடைய உதவி யாளரையும் அழைத்து வந்திருந்தார். அவருடைய உதவியாளர் மஹராஜ் அவர்களை சந்தித்து, தன்னுடைய மேல் அதிகாரி மஹராஜ், அவர்களை தரிசிப்பதற்கு அனுமதி வேண்டினார்! என்று கேட்டார் அப்போது அதைக்கேட்ட ஸ்வாமிகள், "என்னைப் போல் மனநிலை சரியில்லாதவர்களை தரிசித்து என்னபலன்? என்னை தரிசிக்க இங்கு வருபவர்களும் மனநிலை சரியில்லாதவர்களே? அவர்களின் நானும் ஒரு வனே ஆவேன் ஆகையால் சித்தபிரமை கொண்டவர்களை தரிசிப்பவர்களைக் காட்டிலும் இல்லத்தில் இருப்பதே மேல்! இதை உங்கள் அதிகாரியிடம் சொல்லிவிடுங்கள்! மஹராஜ் அவர்களின் இந்த வார்த்தைகளை கேட்டதும் சிவாஜி ராவ் மற்றும் அவரது உதவியாளர் அவர்களுக்கு தன்னுடைய தவறு புரிந்துவிட்டது.

ஸ்வாமிகளை குறித்து அவதூறான செய்திகளை அவர் கள் ஒரு வேளை எவரிடமாவது கூறி இருக்கலாம். அவ்வாறு கூறிய விஷயம் ஸ்வாமிகளுக்கு தெரியாது என்று நினைத்து இருக்கலாம் ஸ்ரீ வாசுதேவானந்த ஸ்வாமிகள் தனக்கு முன்னால் நின்று கொண்டு இருப்பவர்களின் முந்தைய தலைமுறை மட்டும் அல்லாமல் வரும் தலைமுறையின் கணக்குகளையும் தீர்ப்பவர். ஆகையால் தான் இவ்வாறு ஒரு செய்தியை அந்த உதவியாளரிடம் மஹராஜ் கூறியிருக்கிறார்.

இந்தூர் மஹாராணி, ஸ்வாமிகளை அவர்களை தரிசிப் பதற்காக புறப்பட்டார். அவருடைய பணியாட்கள் மஹராஜ்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர்களை சந்தித்து, எங்கள் மஹாராணி தங்களை தனியாக சந்திக்க விரும்புகிறார் என்று தெரிவித்தார். மஹராஜ் அவர்கள் சிரித்துக் கொண்டே, "இங்கு நாட்டை ஆளும் அரசருக்கும், அவருக்கும் சமைத்துப்போடும், சமையல் காரருக்கும் ஒரே பட்சமான மரியாதையே கிடைக்கும்! இந்த இடத்தில் அவர்கள் இருவருக்கும் எந்த வித்தியாசமில்லை! சாதாரன மனிதர்கள் என்னை வந்து தரிசிக்கட்டும்! அது எனக்கு போதும் என்றார். அவருடைய வார்த்தைகளைக் கேட்ட பணியாட்கள் கோபத் தோடு சென்று விட்டார்கள் மஹராஜ் அதைப்பற்றி இலட்சியம் செய்யவில்லை.

சீதாராம்புவா மற்றும் கந்தாபுவா, மஹராஜ் அவர் களுடன் இருந்த ஒரு சமயம், சீதாராம் பூவாவின் தந்தையின் நினைவு நாள் வந்தது. அப்போது மஹராஜ் அங்கு சென்று, இந்த நினைவு நாளை நாளைய தினத்தில் அனுசரியுங்கள். இன்று வேண்டாம் என்றார். அதற்கு காரணம் கேட்டதற்கு "மழையின் அறிகுறிகள் இருக்கின்றன," என்று கூறினார்.

இதனால் ஆச்சரியம் அடைந்த கந்தபுவாவும், சீதாராம் புவாவும் மஹராஜ் ஏன் இப்படி சொல்கிறார்? வானத்தில் ஒரு மூட்டமும் இல்லை! வெய்யிலின் கடுமை மிகவும் அதிகமாக இருக்கின்றது! இந்த நிலையில் இன்று எவ்வாறு இங்கு மழை பெய்யும்? மஹராஜ் ஏதோ விளையாடுகிறார் என்று தங்களுக் குள் பேசிக்கொண்டார்கள். அன்னதானத்திற்காக ஏற்பாடு கள் நடந்துக் கொண்டிருந்தன. உணவு சமைத்தாகிவிட்டது.

இப்போழுது திடீர் என்று மேகக் கூட்டங்கள் சூழ்ந்து, சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மழைக் கொட்டிக் கொண்டு இருந்தது. இதை பார்த்த சீதாராம் பூவாவும் கந்தாபுவாவும், மஹராஜ் அவரின் உத்தரவை மீறியதற்காக, மன்னிப்பு வேண்டினார்கள். அன்னதானம் முடியும் வரை மழை நிற்க வேண்டும் என்று வேண்டி நின்றார்கள்.

மஹராஜ் அவர்களுடைய கருணையால், அன்னதானம் நிகழ்வு முடியும் வரை மழை நின்று விட்டது. அனைவரும் உணவு உண்ட பின், மீண்டும் பெய்யத் துவங்கிய மழை, வெள்ள அபாயம் ஏற்படும் அளவிற்கு கொட்டித் தீர்த்தது.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இதை பார்த்து அதிசயத்த அனைவரும், மஹராஜ் அவர்கள் ஸ்ரீ தத்தரின் அவதாரம் என்று பரிபூரணமாக உணர்ந்து கொண்டார்கள்.

அங்கிருந்து ஒரு காட்டுப்பகுதியில் மஹராஜ் நுழைந்தார். அங்கு ஒரு சிறிய கிராமம் இருந்தது. அங்கு வசித்து வந்த குல்கர்னி அவர்கள், அந்த பாதை வழியாக பயணிக்க வேண்டாம் என்று வேண்டினார். அந்த காட்டு பாதை மிகவும் ஆபத்தானது என்றும் அங்கு சென்றவர்கள் இது வரை திரும்பியது இல்லை என்றும் வேண்டினார். மற்றும் மஹராஜ் அவர்களுக்கு இரயில் வண்டியில் செல்ல ஒரு பயணச்சீட்டு வாங்கி தருகிறேன் என்றான். ஆனால் மஹராஜ் காட்டுப் பகுதி வழியாகவே சென்று விட்டார்.

அவரைப் பார்த்த ஒரு காட்டுவாசி, அவர் எங்கிருந்து வருகிறார்! ஏன் இவ்விடத்திற்கு தனியாக வருகிறார்? என்று ஹிந்தி பாஷையில் கேள்விகள் கேட்டான்? மஹராஜ் அதற்கு, மராத்திய பாஷையில் பதில் அளித்தார். அப்போது அந்த காட்டுவாசி, எவ்வாறு அதை புரிந்து கொண்டானா என்று தெரியவில்லை. ஆனால் அவன் ஸ்வாமியிடம், தானும் அவ் வழியில் செல்வதாகவும், தன்னுடன் வருமாறும் மஹராஜை அழைத்தான்.

சில மணி நேரங்களில் அவர்கள் வரவேண்டிய அந்த கிராமம் வந்தவுடன், அந்த காட்டுவாசி மாயமாய் மறைந்து விட்டான். என்ன ஆச்சரியம்! தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் பயணம் செய்து அடைய வேண்டிய அந்த கிராமத்தை சில மணி நேரங்களில் அடைந்துவிட்டார்கள் என்று சொல்லும்பொழுது ஸ்வாமியை அழைத்து செல்லவந்தவர் ஸ்ரீ தத்தாத்ரேயரே ஆவார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்! அச்சமயத்தில் ஒரு வித்யாசமாக தோற்றமளிக்கும் மனிதர் ஒருவர், மனிதர் மஹராஜை தமது குடிசைக்கு வருமாறு அழைத்தார் அவர் தம்முடைய குடிசைக்குச் சென்ற அவர் இரண்டு ரொட்டி துண்டுகளை மஹராஜ் அவர்களிடம் அளித்து உண்ணும் படி கூறினார். மஹராஜ் முறையாக பூஜை செய்யும் வழக்கம் இல்லாத வீட்டில் தாம் உண்ணும்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பழக்கமில்லை என்றார். அப்போது அந்த மனிதர், “இது உங்களுக்கு பாரபட்சமாக தோன்றவில்லையா! என்று கேட்டார்.

அதைக் கேட்ட மஹராஜ் “எனக்கு தோன்றியதை நான் எப்போழுதுமே செய்தது இல்லை! இது ஸ்ரீ தத்தர் இட்ட கட்டளையாகும்! ஸ்ரீ தத்தரின் ஆணையை நான் ஒரு போதும் மீற மாட்டேன்! என்றார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த விசித்திர மனிதர் திடீர் என்று மறைந்து போய்விட்டார் மஹராஜ் அவர்கள் தம்மை சோதிக்க ஸ்ரீ தத்த மஹா பிரபுவே வந்தார் என்பதை உணர்ந்தார்.

வட இந்தியாவில் அப்பொழுது ஆரிய சமாஜம் பிரசித்திப் பெற்றிருந்தது. ஆரிய சமாஜத்தை சேர்ந்த ஸ்வாமி தயானந்த சரஸ்வதி நமது ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் இருக்கும் இடம் தேடி வந்து அவருடைய கருத்துக்களுக்கு, எதிர்மறையான கருத்துக்களை கூறி ஸ்வாமிகளோடு வாக்குவாதத்தில் ஈடுப் பட்டார் பொதுவாக ஸ்வாமிகள் எவரிடமும் தேவை இல்லாத விவாதங்களில் ஈடுபடமாட்டார். ஆகையால் அவர் அமைதி யாக அமர்ந்து இருந்தார்.

அச்சமயத்தில் ஒரு அந்தணர் ஸ்வாமிகளை தரிசிக்க அங்கு வந்தார். ஸ்வாமிகள், திடீர் என்று தன்னுடைய மந்திர சக்தியின் உதவியால், அந்த அந்தணரை மூன்று நாட்கள், பேச விடாமல் செய்து விட்டார். மூன்று நாட்களுக்கு அவரால் வாயைகூட திறக்க முடியவில்லை. அவர் ஸ்வாமிகளிடம் தன்னை மன்னிக்குமாறு சரணாகதி அடைந்தார். அப்போது மஹராஜ் அவரிடம், “உன்னிடம் உள்ள மந்திர சக்தியால் தவறான காரியத்தில் ஈடுபடுகிறாய்! நீ பெற்ற மந்திர சக்தியை திருப்பி அளித்து விட வேண்டும்! அப்படி அளித்தால், நான் உன்னை காப்பாற்றுகிறேன்! என்றார் ஸ்வாமிகள் கேட்ட வாறே அந்த அந்தணர் செய்து முடித்தவுடன் திடீர் என்று அவர் பேச ஆரம்பித்து விட்டார்.

மூன்று நாட்களாக கட்டப்பட்டு இருந்த அவருடைய வாய் ஸ்வாமிகளின் கருணையால் திறக்கப்பட்டு விட்டது. தனக்கு பேச்சு வந்ததும் அவர் அங்கிருந்து விரைந்து ஓடி விட்டார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஸ்வாமிகள், இறைவனால் சில சக்திகளை கைவரப்பெற்ற மனிதர்களில் பலர், அவற்றை சமூக நலனுக்காக உபயோகப் படுத்தாமல், சுய ஆதாயத்திற்காகவும், விளம்பரத்திற்காகவும் பயன்படுத்துவதை ஒரு நாளும் அந்த சக்திகளை தவறாக ப்ரயோகிக்க கூடாது என்று ஐதேசித்தார்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் உபதேசத்தை கேட்க வரும் முக்கிய மனிதர்களில், வக்ரதுண்ட புவாவும் ஒருவர். வக்ர துண்ட புவா ஸ்ரீ கணபதியின் தீவிர உபாசகர். தினமும் கல்வி பயிற்சியைத் துவங்கும் போது, மஹராஜ், இன்று வக்ரதுண்ட புவா வந்திருக்கிறார்? என்று கேட்பார். அவரும் தான் வந்து இருப்பதாக மஹராஜ் அவர்களிடம் கூறுவார்.

இவ்வாறு அவருடைய உபதேசங்களைக் கேட்க, பெறும் அளவு மக்கள் அங்கு கூடுவார்கள். மஹராஜ் நரசோபா வாடியில் இரண்டு மாதங்கள் தங்கி இருந்தார் அங்கு அவரை காண வந்த பக்தர்கள் ஆயிரக்கணக்கான தொகையை அவரிடம் அளித்தார்கள்! பலர் அவருக்கு பழங்களையும் தேங்காய்களையும் அளித்தனர்! அவருக்கு தக்ஷிணையாக பணத்தொகை வைக்கப்பட்டிருந்தால் அவர் தம்முடைய அவர் பூஜாரிகளை அழைத்து, “இந்த புழுதியை எப்போது இந்த இடத்தை விட்டு அகற்ற போகிறீர்கள்!?” என்று கேட்பார்.

பூஜாரிகளை அவற்றை எடுத்துக் கொள்ளச் சொல்வார் நரசோபாவாடியில் மட்டும், உணவை யாசகமாக பெறுவதில் அவருக்கு எந்த கட்டுபாடும் இல்லை. மற்ற இடங்கல் மூன்று வீடுகளில் மட்டுமே யாசகம் பெறும் ஸ்வாமி நரசோபா ஹாலில் ஐந்து வீடுகளுக்கு சென்று யாசகம் பெறுவார். சாதுக்கள் எத்தகைய உணவை, எந்த அளவு உட்கொள்ள வேண்டும் என்பதை குறிப்பிட்டுள்ளார். எட்டு சிறிய கைபிடி அளவு உணவை மட்டுமே உண்ணவேண்டும்.

போதை தரும் பொருள்களையும் மற்றும் இனிப்புகளையும் உண்ண கூடாது. உணவு வகைகளை தனித்தனியாக உண் டாலும், ஒன்றாகச் சேர்த்து கலந்து உண்டாலும் ஒரே மாதிரி யாகத்தான் சுவையை உணர வேண்டும், என்றும் நாக்கு சுவைக்காக அலையக்கூடாது என்றும் போதித்தார். அன்ன

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தானம் நடைபெறும், பெயரால் அன்னதானம் நிறைவடைந்ததும், நரசோபவாடியில் உள்ள ஆண்களும், பெண்களும் அந்த இடத்தை சுத்தம் செய்வதிலும், சமைத்த பாத்திரங்களை தேய்த்து வைப்பதுமாக போட்டி போட்டு கொண்டு சேவை செய்தனர்.

ஆனால் ஒரு சிலரின் தலையீட்டால் அந்த சேவையிலும் அந்தணர்க்கே முதலதிகாரம் வழங்கப்பட்டது. ஒரு நாள் அந்த குலத்தை சேராதவேறு குலத்தை சேர்ந்த பெண்மணி, அன்ன தான கூடத்தை கழுவி சுத்தம் செய்யும் பாக்கியம் தமக்கு கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டு இருந்தார் அந்த பெண் மணி பல மாதங்களாக இதற்காக காத்துக் கொண்டு இருந்தாள். ஒரு நாள் மதிய உணவு முடிந்த பிறகு மஹராஜ், தன்னுடைய கைகளை அலம்புவதற்காக சென்று கொண்டு இருந்தார். அவர் வரும் வழியில் அவர் தன்னுடைய கைகளில் இருந்த அன்னத்தை, வேண்டுமென்றே கீழே விழாசெய்தார்.

சேவை செய்வதற்காக காத்துக் கொண்டிருந்த, அந்த பெண்மணியை, உடனடியாக அழைத்தார். இந்த இடத்தை சுத்தம் செய்து, உன்னுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்! என்று கூறினார். அதைக் கேட்டு மகிழ்ந்த அந்த பெண்மணி மஹராஜ் தனக்காகவே அன்னத்தை கீழே விட்டு இருக்கிறார்! என்பதை உணர்ந்தும் கொண்டாள். அங்குள்ள அனைவரிடமும் மஹராஜ், “சேவை செய்யும்போது இனம், குலம் என்ற பேத உணர்வு ஒருவருக்கும் ஏற்படக்கூடாது. அவ்வாறு வேறுபாடுகள் தோன்றினால் அவருடைய சேவையை இறைவன் ஒருநாளும் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்று போதித்தார்!”

ஒவ்வொரு வருடமும் குருதுவாதசி பூஜை, பூஜாரிகளால் கோலாகலமாக கொண்டாடப்படும். ஆனால் அந்த வருடம் இந்த விழாவை கொண்டாடுவதற்கு, கோலாபூர் அரசு தடைவிதித்து இருந்தது. அனைவரும் மஹராஜ் அவர்களிடம், விழா தடையின்றி நடைபெற பிரார்த்தனை செய்தனர். மஹராஜ் அவர்கள், பூஜாரிகளுடைய தவறான நடவடிக்கைகளால், பணத்தின் மீது மோகம் கொண்டு இருப்பதால், இந்த

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வருடம் ஒரு மாறுதலுக்காக, ஆலயத்தில் உள்ள கருவறைக்குப் பதில், விலை உயர்ந்த சாமான்கள் வைக்கும் அறைக்கு பூஜையை செய்யுங்கள்! ஏனெனில் உங்கள் பார்வையில் கருவறைக்குள் இருக்கும் கடவுளைவிட விலை உயர்ந்த சாமான் கள் வைக்கும் அறை மட்டுமே உயர்ந்ததாக இருக்கின்றது என்றார். பூஜாரிகள் தங்கள் தவறுக்காக மன்னிப்பு வேண்டி னர். கருணையே உருவான மஹராஜ் குரு துவாதசியை கொண்டாட எந்த சிக்கலும் இருக்காது என்று வாக்களித்தார்.

மஹராஜ் அவர்கள் வாக்குப்படியே கோலாபூர் அரசு ஆணை அந்த விதியை, தளர்த்தி விட்டது. ஆகையால் குரு துவா தசி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அந்த புண்ணிய நாளில், கிருஷ்ணா நதிகரையில், மஹராஜ் அவர்களுக்கு ஸ்ரீ தத்த பிரபு காட்சி அளித்தார் அதே நாளில் ஸ்ரீ தத்த பிரபுவின் பாதுகைகள் தரிசிக்கச் சென்றவர், சமாதி நிலையை அடைந் தார் அதே சமாதி நிலையில், அவர் பிரமானந்த சரஸ்வதியின் மடத்திற்க்கு சென்றார். அன்று மாலை பொழுது வரை அந்த சமாதி நிலை நீடித்தது. அப்போது அவருக்கு காட்சி அளித்த தத்தர், அங்கு இருந்து புறப்பட்டு இராமஸேவரத்திற்கு பாதயாத்திரை செல்லுமாறு கட்டளை இட்டார்.

மஹராஜ் தத்தரின் உத்தரவின் படி இராமேஸ்வரத்திற்கு புறப்பட தயாரானார். ஆனால் நரசோபாவாடியை சேர்ந்த பூஜாரிகள், ஸ்வாமிகளின் வருகைக்கு பிறகு, நல்ல வருமானம் கிடைத்ததால், அதை இழக்க அவர்கள் விரும்பவில்லை. அவர் கள் அனைவரும் மஹராஜ் அவர்களிடம் சென்று, பணிந்து வேண்டி, நரசோபா வாடியிலேயே தங்கி இருக்கும்படி வேண்டினர். ஆனால் மஹராஜ் தன்னால், தத்தரின் ஆணையை மீறமுடியாது என்று கூறினார்.

உடனே அனைவரும் சேர்ந்து, ஸ்ரீ தத்தரை மகிழ்விப்பதற் காக தொடர்ந்து, தத்தரின் திருவுருவச் சிலைக்கு அபிஷேகம் செய்துக் கொண்டே இருந்தனர். அதில் சில நல்ல உள்ளம் கொண்ட பூஜாரிகள், மஹராஜ் அவர்கள் இன்னும் சில நாட்கள் இங்கே தங்கி இருந்தால், தீய எண்ணம் கொண்டவர் களையும் நல்லவர்களாக மாற்றிவிடுவார். ஆகையால் ஸ்ரீ தத்த

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மகா பிரபு கருணையோடு ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை இன்னும் சில நாட்கள் இங்கேயே இருக்க செய்ய வேண்டினார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஸ்ரீ தத்தர், மஹராஜ் அவர்களை நரசோபாவாடியிலேயே தங்கி இருக்க செய்தார்.

ஒரு நாள் அரசு அதிகாரியான (Kalakundrikar) கால் குன்ரீகர் நரசோபா வாடிக்குவந்தார். அவருடைய மனைவி தன்னுடைய கையால், மஹராஜ் அவர்களுக்கு பிக்ஷை அளிக்க விரும்பினார். அவள் மஹராஜ் அவர்களிடம், தங்கள் வீட்டிற்கு யாசகம் பெற வருமாறுக் கேட்டுக் கொண்டார். அப்போது மஹராஜ் அவர்கள் ஒரு அற்புதத்தை நிகழ்த்தினார். அந்த அம்மையாருடைய இல்லத்திற்கு யாசகம் பெறச் சென்ற போது அவருடனே வேறு சிலரும் சென்றனர்.

அதே சமயத்தில் மஹராஜ் அவர்கள், ராமசந்திர யோகியின் ஆலயத்திற்கும் வந்து இருந்தார் ஆலயத்திற்குள் நுழைந்தவர் திடிர் என்று மாயமாகிவிட்டார். அச்சமயத்தில் அந்த வழியாக வந்து கொண்டு இருந்த பக்தர்கள் யோகி ராமசந்திரரின் ஆலயத்தில் மஹராஜை தரிசித்தனர். பின்னர் மஹராஜ் அவர்களுக்கு பிரசாதத்தையும் வழங்கினார்.

இதை கண்ட பக்தர்கள் அனைவரும், மஹராஜ் அவர்கள் முதலில் அந்த பெண் மணியின் இல்லத்திற்கு செல்வதாக வாக்களித்தார். ஆனால் அவர் சென்றாறா! இல்லையா! என்று சந்தேகம் அவர்களுக்கு எழுந்தது. தகவலை அறிந்த திருமதி கால்குன்ரிர். மஹராஜ் அவர்களைத் தேடி வந்தார். அந்த அம்மையார் மஹராஜிடம், "ஸ்வாமி தாங்கள் காலையில் என்னுடைய இல்லத்திற்கு வந்து, என்னுடைய கையால் பிக்ஷை பெற்றுக் கொண்டிர்கள், "ஆனால் பலர், நீங்கள் வேறு ஏதோ ஒரு இடத்திற்கு சென்றதாக கூறுகின்றனர்!" எனது சந்தேகத்தைப் போக்கிக்கொள்ளவே, நான் தங்களிடம் வந்துள்ளேன்! காலையில் தாங்கள் எங்கு இருந்தீர்கள் என்று கேட்டாள். மஹராஜ் சிரித்துக் கொண்டே, "காலையில் நான் சமாதி நிலையில் இருந்தேன்! ஆகையால் எத்தனை இடங்களுக்கு சென்றேன்," என்று எனக்கு தெரியவில்லை என்றார். மக்கள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அனைவரும், ஸ்ரீ தத்த மஹா பிரபுவின் அவதாரமே, ஸ்ரீ வாசுதேவனந்த சரஸ்வதி ஸ்வாமிகள் என்ற உண்மையை இது போன்ற பல அற்புதங்கள் மூலம் உணர்ந்து கொண்டனர்.

குருத்வாதசி நாள் அன்று, ஒரு அம்மையார் ஸ்ரீ தத்த மஹா பிரபுவுக்கு நைவேத்தியம் செய்வதற்காக, சில உணவுப் பொருட்களை கொண்டு வந்தார். அவற்றைப் பார்த்த பூஜாரி, ஆத்திரம் அடைந்து அந்த அம்மையாரை கடுமையாக, மனம் வேதனைப்படுமாறு சொற்களைக் கூறினார். அந்த அம்மையார் தூய்மையான பக்தியோடு கொண்டு வந்த உணவுப் பொருள்களை, தகாத வார்த்தைகளை கூறி பூஜாரி நிராகரித்தார்.

இது ஸ்ரீ தத்த மஹா பிரபுவிற்கு ஏற்புடையதாக இல்லை. தீடீரென்று அவர் ஒரு சிறுவனின் ரூபத்தில் வந்து அந்த பூஜாரியை நன்றாகத் தாக்கினார். தான் தாக்கப்பட்டவுடன் பூஜாரி நிலை குலைந்து கீழே சாய்ந்தார். அவருக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு விட்டன. பூஜாரியை இவ்வாறு தாக்கியதால், அங்கிருந்த அனைத்து பூஜாரிகளும் ஒன்று சேர்ந்து அந்த சிறுவனை தண்டிப்பதற்காக அவனைத் தேடினார்கள். திடீரென்று அச்சிறுவன் மாயமாய் மறைந்து விட்டான். அந்த பூஜாரி, மஹராஜ் அவர்களிடம் சென்று, இதற்கான தீர்வை வேண்டினார்.

அப்பொழுது மஹராஜ், "அந்த சிறுவனை உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. காரணம், அச்சிறுவன் உருவில் வந்து பூஜாரியை தண்டித்தவர், ஸ்ரீ தத்த மஹா பிரபுவே ஆவார். அனைத்து பூசாரிகளையும், அழைத்து ஸ்ரீதத்தரிடம் மன்னிப்பு வேண்ட சொல்லுங்கள்! உங்கள் உடலில் உள்ள காயங்களை போக்க ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளது. அந்த அம்மையார் கொண்டு வந்த பிரசாதத்தை, உங்கள் உடல் மீது காயம்பட்ட இடங்களில் தேய்க்கவும்! அது ஒன்றே காயங்களைப் போக்க வல்ல மருந்தாகும்! இவ்வாறு மஹராஜ் கூறியதை கேட்டு, பூஜாரியும் அவ்வாறே செய்தால் அவரின் உடலில் உள்ள காயங்கள் எல்லாம் மறைந்து விட்டன. மற்றொரு முறை இதே போல், ஒரு பெண்மணி, ஸ்ரீ தத்த

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மஹாபிரபு தன்னுடைய கோரிக்கை நிறைவேற்றிவைத்ததால் மகிழ்ந்து, தான் வாக்கு அளித்தபடி பூரண்போளி என்று சொல்ல கூடிய உணவை எடுத்துக்கொண்டு பிரசாதத்தை, நைவேதியம் செய்வதற்காக கொண்டு வந்தார்.

அப்போது, பூஜை சமயத்தில், பிரசாதக் கூடையை திறந்து பூஜாரியிடம் அளித்த போது, அந்த அம்மையாரை அவர் மிகவும் இழிந்த சொற்களால் கேலி செய்தார். பூரண்போளி என்று சொல்லப்படும் அந்தப் பிரசாதம், தடிமனாகவும் மிக பெரியதாகவும் இருந்தது. அதைப் பார்த்த பூஜாரி, அந்த அம்மையாரிடம், "இறைவனுக்கு நைவேத்தியம் அளிக்கும் பிரசாதம் என்று இதை செய்தாயா! அல்லது உன்னுடைய திருமண நாளுக்கு உன்னுடைய கணவருக்கு செய்யும் உணவு என்று நினைத்தாயா! இவ்வாறு கூறியதைக் கேட்டதும், அந்த பெண்மணி வேதனை தாங்காமல் அழ ஆரம்பித்துவிட்டார்.

அடுத்த சில நிமிடங்களில், சில முகம் தெரியாத நபர்களின் மூலமாக இந்த பூஜாரிக்கும் நல்ல அடி கிடைத்தது தவறு செய்தவர்கள், அவர் எவராக இருந்தாலும், கடுமையாக தண்டிக்கவும், தத்த மஹா பிரபு தயங்க மாட்டார் அவருடைய கையிலிருக்கும் ஆயுதம், தேவந்திரனின் வஜ்ராயுதத்தை விடவும் அதிக ஆற்றலை உடையது.

தீபாவளித் திருநாளை ஆலயத்தில், ஐந்து நாட்கள் கொண் டாடுவது வழக்கம். இத்திருநாளில் ஸ்ரீ தத்த பாதுகைகளை, வெதுவெதுப்பான நீரால் அபிஷேகம் செய்வது வழக்கம். அதற்காகவே ஒரு பெரிய பானையில் தண்ணீர் கொதிக்க வைக்கப்பட்டு இருக்கும் அபிஷேகம் செய்ய விரும்புவோர், அந்த பானையிலிருந்து தண்ணீர் எடுத்து பாதுகைக்கு அபிஷேகம் செய்வார்கள்.

தண்ணீரை அபிஷேகம் செய்யும் போது, இளம் சூட்டில் உள்ளதா என்று தெரிந்துக் கொண்டு, அபிஷேகம் செய்ய வேண்டும்! ஆனால் மக்கள், இந்த பானையில் கொதித்துக் கொண்டு இருக்கும் தண்ணீரை அப்படியே பாதுகைகளுக்கு ஊற்றி, அபிஷேகம் செய்துவிட்டு போய்விட்டார்கள். அவர்கள் விரைந்து செல்ல வேண்டும் என்ற காரணத்தால்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொதிக்கும் நீரை பாதுகைகளில் அபிஷேகம் செய்து விட்டார்கள். இந்த நிகழ்வு மஹராஜ் அவர்களின் உடல் நிலையை வெகுவாக பாதித்தது. பாதுகையில் கொதிக்கும் நீரை அபிஷேகம் செய்த சில மணித்துளிகளில் மஹராஜ் அவர்கள் கழித்த சிறுநீரிலிருந்து தொடர்ந்து இரத்தம் வெளி யேறியது. அவர் வலியால் துடிதுடித்தார். ஸ்ரீ தத்த பிரபுவிடம் என்ன தவறு நடந்தது? என்று கேட்டார்.

அப்போது ஸ்ரீ தத்தர், மஹராஜ் அவர்களிடம், “ஒரே ஒரு நாள் கொதிக்கும் நீரில் அபிஷேகம் செய்த காரணத்தால், உன்னுடைய உடல் நிலை இத்தகைய சீர்கேடு அடைந்துள்ளது. ஆனால் இந்த பூஜாரிகள் பண்டிகை நாட்கள் முழுவதும் என்னை கொதிக்கும் நீரில் அபிஷேகம் செய்கின்றனர். “அப்போது என்னுடைய நிலையை யோசித்துப்பார்த்தாயா! இவ்வாறு தத்த மஹா பிரபு கூறியதும் மனம் வருந்தி பிரபுவி டம் மன்னிப்பு கோரினார்.

மஹராஜ், உடனே அனைத்து பூஜாரிகளையும் அழைத்து அங்கு நடந்த நிகழ்வுகளைப் பற்றி விசாரணை நடத்தினார். பூஜாரிகள் அனைவரும் உண்மையை ஒப்புக் கொண்டார்கள். அப்பொழுது மஹராஜ் “அவர்களிடம் நீங்கள் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் தண்டனையை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்!” உடனே ஸ்ரீ தத்த மஹாபிரபுவிடம் மன்னிப்பு வேண்டி, தேங்காயை சமர்ப்பியுங்கள்! பூசாரிகள் அனைவரும் மன்னிப்பு வேண்டி, ஆளுக்கு ஒரு தேங்காயை சமர்ப்பித்தார்கள். ஒரு சில வினாடிகளில் மஹராஜ் அவர் களின் உடல் நிலை தேறியது, மஹராஜ் அவர்கள், தம் வாழ் நாளில் கடும் குளிரால் உறைந்து இருக்கும் இமயமலை பிரதேசத்தில் கூட குளிர்ந்த தண்ணீரில் மட்டுமே குளிப்பது பழக்கம்.

ஒரு தொழு நோயாளி கிட்டதட்ட, ஆறுவருடங்களாக, நோயினால் துன்புற்றுக் கொண்டிருந்தார் ஒரு நாள் அவர் மஹராஜை சந்தித்து, இந்த நோயிலிருந்து விடுபட நான், என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். ஸ்ரீ தத்தர் அத்தொழு நோயாளி கர்ம ‘வினையின் காரணமாக இத்தகைய துன்பங்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

களை அடைந்து இருக்கின்றான்! இப்போது அந்த நோய் அவனை விட்டுச் செல்லும் நேரம் வந்து விட்டது! ஆகையால் தான் அவன் உன்னிடம் வந்து இருக்கிறான்!

அவனை பூரண் போளி சமைத்து (வெல்லம், நெய், பருப்பு இவற்றை சேர்த்து செய்யப்படும் இனிப்பு வகை) ஒரு கழுதைக்கு உணவாக அளிக்க வேண்டும்! அந்த கழுதை அவன் அளித்த உணவை ஏற்க வேண்டும்! இதை இவ்வாறு தொடர்ந்து சில நாட்கள் நிச்சயம், அவனுடைய நோயிலிருந்து விடுபடுவான்! என்று வாக்களித்தார்.

கழுதைக்கு உணவளிப்பது, நமக்கு மிகப் பெரிய வெற்றியை தருவதாகும்! இது நம்மில் பலருக்கு தெரிய வாய்ப் பில்லை. காரணம் கழுதை யோகத்தின் அடையாளமாக கருதப்படுகிறது. கழுதையின் முகத்தை உற்று கவனிக்கும் போதே நமது கர்ம வினையின் பலன் நமக்கு கிடைக்கும் ஆற்றலை இறைவன் கழுதைகளுக்கு அளித்திருக்கிறான். யோகத்தின் அடையாளமாக கழுதை கருதப்படுகிறது. நம் தொழுநோயாளியும் மஹராஜ் அவர்களிடம் அவ்வாறே, செய்வதாகக் கூறினான். புறப்படும் போது மஹராஜ் அவனி டம் "நீ என்ன விலைக்கு இப்பணியை செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ, அந்த பணத்தை முதலில் ஸ்ரீ தத்தரின் முன்னால், சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தொகைக்கு பின்னர் பொருள்களை வாங்கி, பூரண் போளி செய்து கழுதைக்கு அளிக்கவேண்டும் என்று கூறினார். அத்தொழு நோயாளியும் ஒரு ரூபாயை ஸ்ரீதத்தருக்கு சமர்ப்பணம் செய்து விட்டு, பின்னர் அந்த ஒரு ரூபாய்காண பொருள்களை வாங்கிக் கொண்டு பூரணபோளி செய்தார். அருகில் இருந்த காட்டு பகுதியில் சில கழுதைகள் உலவிக் கொண்டு இருப்பதாக தகவல் வந்தது. அதை தேடிக் கொண்டு போய் உணவை கழுதைகளுக்கு அளித்துவிட்டு, அருகில் உள்ள கிருஷ்ணா நதியில் நீராடினார்.

அவர் அவ்வாறு நீராடும் பொழுது கிருஷ்ணா நதியின் அலைகள், ஒவ்வொரு முறையும் அவரைத் தீண்டும்பொழுதும் மஹராஜ் அவர்களின், கரம் தீண்டுவது போலவே, நினைத்து

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆனந்தம் கொண்டார். இவ்வாறு மூன்று முறை கிருஷ்ணா நதியில் மூழ்கி எழுந்தவுடன், என்ன ஆச்சரியம்! அவருடைய உடலில் உள்ள நோய் முற்றிலுமாக அவரைவிட்டு நீங்கி விட்டது. அவருடைய தோற்றம் புதுப் பொலிவோடு காணப் பட்டது. இதற்கு ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளே காரணம் என்பதை உணர்ந்து நன்றி தெரிவித்தார்.

ஒரு மிகப்பெரிய செல்வந்தர் தன்னுடைய மனைவியை தீய ஆவி ஒன்று பிடித்துக் கொண்டதால் மிகவும் துன்புற்றார். அவர் மஹராஜை காண்பதற்காக நரசோபவாடிக்கு வந்து இருந்தார். அங்கு மூன்று மாதங்கள் சேவைகள் செய்தார். ஆனால், அவர் மனைவியின் உடல் நிலையில் ஒரு முன்னேற்ற மும் தெரியவில்லை! அவர் மஹராஜ் அவர்களிடம் வந்து முறையிட்டார். மஹராஜ் அவர்களிடம், அடுத்தநாள் தம்மை வந்து சந்திக்கும்படி கூறினார்.

அப்போது அவர் அந்த செல்வந்தரை பார்த்து/ "உன்னி டம் பல வருடங்களுக்கு முன்னால் ஒரு அந்தணர் தன்னுடைய வாரிசுகளுக்கு தருமாறு 1200 ரூபாய்களை கொடுத்து வைத்து இருந்தார்! ஆனால் அந்த பணத்தை அவருடைய வாரிசுகளுக்கு நீ அளிக்கவில்லை! ஆகையால் அந்த பணம் அவர்களின் வாரிசுகளை சென்று சேராததால் அந்த அந்தணர் ஆவியாகி உன்னை துன்புறுத்திக் கொண்டு இருக்கிறார்!

"அவ்வாறு ஒரு தொகையை நீ அளிக்க வேண்டும் என்பது உண்மை தானே" என்று கேட்டார். மஹராஜ் அந்த செல்வந்தரும் அச்சம்பவம் உண்மையே! என்று ஒப்புக் கொண்டார். மஹராஜ் அவரிடம் ஸ்ரீ உடனடியாக, அந்த பணத்தை வைத்து அன்னதானம் செய்தால், அந்த தீய ஆவி உன் மனைவியை விட்டு விட்டு ஓடி விடும் என்று கூறினார் இதைக் கேட்ட செல்வந்தர், உடனே அப்பணத்தை எடுத்து மஹராஜ் முன்னால் வைத்தார்.

மஹராஜ் பூஜாரியை அழைத்து, அந்த பணம் தீர்ந்து போகும் வரை தொடர்ந்து அன்னதானம் நடத்தவும்" என்று கூறினார் மஹராஜ் அந்த பணத்தை கையாலும் தொடவில்லை. பூஜாரி, அன்னதான ஏற்பாடுகளை செய்தார். தினம் தினம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அன்னதானம் தொடர்ந்து நடந்துக் கொண்டே இருந்த பொழுது அவனை பிடித்து இருந்த ஆவி அவனை விட்டு சிறிது சிறிதாக நீங்கிவிட்டது.

தீக்ஷித்த் என்பவருடைய மகள், சீதாபாய் மிகவும் கருமை யான வண்ணத்தில் இருந்தாள்! அவருடைய கணவர் இதன் காரணமாகவே, அவளை ஒதுக்கி வைத்து இருந்தார். அவள் எப்போதெல்லாம் மஹராஜ் அவர்களைக் காண வருவாளோ. அப்போதெல்லாம் ஒரு சிறிய அட்டைப் பெட்டியில், மஹராஜ் அவர்களுடைய, பாதங்களின் கீழ் இருந்த, மண்ணை எடுத்து வருவாள்.

அந்த புழுதி கலந்த மண்ணை, அவள் தன்னுடைய வயலில், அறுவடைக்கு முன் தூவி வருவாள்! ஒரு நாள் அவ்வாறு செய்த பொழுது, விதை விதைக்கும் நேரமாக இருந்தது. அப்போது, மிக பலமான மழைபெய்தது. ஆனால் என்ன ஆச்சரியம்! அவருக்கு சொந்தமான நிலத்தில், பயிருக்கு ஒன்றுமே நேரவில்லை. அவளுடைய நிலத்தை சுற்றி இருந்த, அனைத்து வயல்களிலும் பயிர்கள், நாசம் அடைந்து விட்டன.

மஹராஜ் அவர்களின் பாதங்களின் பட்ட புழுதியை, அவளுடைய வயலில் தூவியதால், அவளுடைய வயல் தப்பித்துவிட்டது. மஹராஜ் அவர்களை, தன்னுடைய வீட்டிற் கும் யாசகம் பெற வருமாறு அன்போடு அழைத்தாள். இந்நிலையில், மஹராஜ் அவர்களின் கருணையால், அவளை விட்டுச் சென்ற கணவனும் அவளை ஏற்றுக் கொண்டான். இவை அனைத்திற்கும் காரணம் மஹராஜ் அவர்களின் அளவில்லாத கருணையே என்பதை உணர்ந்து நன்றி தெரிவித்தார்.

கிருஷ்ணா நதிக்கரையிலிருந்து, இரண்டு மைல் தொலை வில், ஆரண்யா என்ற காட்டு பகுதி இருந்தது. மக்கள் பௌர் ணமி தினத்தன்று வன போஜனம் என்ற சொல்லக்கூடிய விருந்தாக, காட்டில் அமர்ந்து, உணவை உண்டு மகிழ்வார் கள், ஒரு முறை மஹராஜ் அவர்களும், அங்கு சென்று இருந்தார். நிருசிங்க சரஸ்வதி மற்றும் சீடர்களும், மஹராஜ் உடன் சென்று இருந்தனர். பிரசித்திப் பெற்ற புராண கதைகளைச்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சொல்ல கூடிய, வக்ர துண்டபுவாவும், மஹராஜை காண அங்கு வந்திருந்தார். அனைவரும் காட்டுப் பகுதியில்.

“திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாதவல்லப திகம்பரா” என்ற நாமத்தை ஆனந்தமாக சொல்லத்துவங்கினார்கள். அவர்கள் அனைவரும் உணவு அருந்திய பின்னால் வக்ர, துண்டபுவா புராணங்களின் விளக்கங்களை கூறினார். தங்களின் முன்னால் ஒரு தத்த அவதாரி அமர்ந்து இருக்கிறார் என்பதை நாம், பெருமையாக கொள்ள வேண்டும் என்று கூறினார்.

அன்று மாலை சுமங்கலி பூஜை (சுவாசினி பூஜை) நடைபெற்று, மஹராஜ் அவர்களுக்கு ஆரத்தியும் நடைபெற்றது.

ஒரு பிரம்ம ராக்ஷஸன் என்ற பிசாசு, ஒரு பெண்ணை பிடித்துக் கொண்டுவிட்டது. அந்த பிசாசு, காற்றின் உருவத்தில் இருந்ததால், சில சமயங்களில், அந்த பெண்ணை வெகு துரத்திற்கு சென்று உருட்டி விடும். இதனால் பல சமயங்களில், அந்த பெண் நினைவை இழந்துவிடுவாள். நினைவு திரும்பியதும் தமது இல்லதிற்கு செல்வாள். அதனால் அந்த பிசாசை விரட்டுவதற்காக, தனது தாயாருடன் நரசோபா வாடிக்கு வந்தாள். நரசோபாவாடியிலும் இந்த பிசாசு அவளை விடவில்லை.

ஒருநாள் அப்பெண்ணை, ஏதோ ஒரு திசையில் கொண்டு போய் போட்டு விட்டது! அந்த பெண்ணுடைய தாயார் பயந்து போய் மஹராஜ் அவர்களிடம் ஓடி வந்தாள். “ஸ்வாமி என்னுடைய புதல்விக்கு என்ன ஆயிற்று? அவள் எங்கே இருக்கிறாள்? என்று கேட்டாள். மஹராஜ் அவர்கள், நடந்ததை அறிந்து கொண்டு, “கவலைப்பட வேண்டாம், மேற்கு திசையில் பத்திரமாக இருக்கிறாள். மாலையில் வந்து விடுவாள்! என்று கூறினார்.

அவர் கூறியவாறே, அன்று மாலையே வந்துவிட்டாள். மஹராஜ் அவர்கள், ஒரு இயந்திரத்தை கயிற்றில் வைத்து கட்டி, சில மந்திரங்களை ஜபித்து அந்த பெண்ணுடைய கழுத்தில் கட்டுமாறு பணித்தார். இறுதி வரை அந்த பிசாசு இயந்திரத்தை, அந்தப் பெண்ணின் கழுத்தில் கட்டுவதை தடுத்துக்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டு இருந்தது. இறுதியில் மஹராஜ் அவர்களின் கருணையால், அந்த கயிறு, அவளுடைய கழுத்தில் கட்டப் பட்டு விட்டது. அந்த பெண்ணை பிடித்து இருந்த பிரம்ம ராக்ஷஸன் அவளை விட்டு ஓடி விட்டான்.

ஒரு தந்தை தன் மகனை மனநிலை சரியில்லாதவன் என்று கருதி மஹராஜ் அவர்களிடம் அழைத்து வந்தார். அவர் ஸ்வாமிகளிடம், என் புதல்வன், ஐந்து ஆறு வயது வரை நன்றாக இருந்தான்! அதன் பிறகு என்ன ஆயிற்றோ தெரியவில்லை! அவன் மனநிலை சரியில்லாதவனாகிவிட் டான். மஹராஜ் அந்த சிறுவனை, சிறிது நேரம் உற்றுப்பார்த் தார். உடனே அவருடைய தந்தையை பார்த்து "இறுதிவரையில் இவன் இப்படிதான் இருப்பான்! ஆனால் இவனால் ஒருவருக் கும் ஒரு துன்பமும் நேராது! என்று நான் உறுதியளிக்கிறேன்! எல்லோருக்கும் நன்மைகளேயே செய்வான்! இவ்வாறு கூறியதும், அவனுடைய தந்தைக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை! அவனை அழைத்துக் கொண்டு, தனது ஊருக்கு புறப்பட்டார்.

அவர்கள் இருவரும் சென்றவுடன் மஹராஜ் அங்கு இருப்பவரைப் பார்த்து, "இச் சிறுவன் சென்ற ஜென்மத்தில் யோக பரம்பரா என்று சொல்ல கூடிய யோகியாக இருந்தார். அப்பொழுது அனைவரையும் விட்டு தனிமையில் இருப்ப தாக, மனநிலை சரியில்லாதவனாக, அனைவரின் முன்னி லையிலும் நடித்தார். அவன் ஒரு மிகபெரிய சித்த புருஷராக இருந்தான் இதுவே அவனது முன்ஜென்ம கணக்காகும் என்று கூறினார்.

மஹராஜ் சன்யாச தர்மத்தை, ஏற்றுக் கொண்டவுடன், மூன்று முறை நரசோபாவாடிக்கு வந்து இருக்கிறார். அப்போது ஒரு சுவாரஸ்யமான நிகழ்வு அங்கே நடைபெற்றது. நாம் அதை பற்றி காண்போம். வைஜ்ய நாத் என்ற இளைஞன் நரசோபா வாடியில் தங்கியிருந்தான். அவன் அதிகாலையி லிருந்து நண்பகல் 11 மணிவரை, கையில் ஒரு குவளையை எடுத்துக் கொண்டு சுற்றிக் கொண்டே இருப்பான். பிறகு இரண்டு மணி நேரம், பூமியிலிருந்து மண்ணைப் பூசிக்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டே இருப்பான்! அவன் நதியில் குளிக்கும் போது மண்ணை பூசிக் கொண்டு நீராடுவான்! அவன் அந்தண குலத்தில் பிறந்து இருந்தாலும், சந்தியா வந்தனமோ, பூஜை களோ எதுவுமே செய்ய மாட்டான். நரசோபாவாடியிலிருந்த தத்தருடைய பாதுகைகளை அவன் ஒரு முறைக் கூட சென்று தரிசித்தது இல்லை. அவனை சுற்றி இருக்கும் அனைவருமே அவனுக்கு அறிவுரை சொல்வார்கள்.

அவன் அனைவரிடமும் என்னை ஒரு பேய் பிடித்து இருப்பதால், நான் இது போன்ற பூஜைகளை செய்ய முடியாது என்று கூறினான். மக்கள் அவன் கூற்றை நம்பிவிட்டார்கள் அதனால் அவனுக்கு அவர்கள், எந்த மதிப்பும் தருவதில்லை! அவனுடைய செயல்களை பெரியதாக நினைக்கவும் இல்லை. ஆனால் அவன் இறைவனை அறிந்த யோகி ஆவான். மஹராஜ் அவர்கள், இந்த உண்மையை, அனைவருக்கும் கூறிய தால் அவனை பற்றி தவறாக எண்ணியதற்காக வருந்தினார் கள் ஒரே ஒரு சிறிய துணியை இடுப்பில் கட்டிக்கொண்டும், ஒரே ஒரு துணியை தோளில் போட்டுக் கொண்டும் இருந்தான். இவை தவிற அவனிடம் வேறு எதுவுமே இல்லை.

எவராவது உணவு உண்பதற்கு அழைத்தால் செல்வான். யாராவது தக்ஷிணை அளித்தால் இரண்டு பைசாவிற்கு மேல் வாங்க மாட்டான். கிட்ட தட்ட குழந்தையிலிருந்து 25 வருடங் கள், அவன் பெற்ற தட்சிணை வெறு எட்டு ரூபாய் மட்டுமே! அந்த எட்டு ரூபாய் தொகையை, அந்த ஊரிலிருந்த தபால் துறை அதிகாரியிடம் கொடுத்து வைத்திருந்தான்! அவன் உண்மையை மட்டுமே பேசுவான், ஒரு முறை ஒரு வழக்கில் சாட்சியாக அழைத்துக் கொண்டு போனபோது, தமக்கு என்ன அளித்தாலும், பொய் பேசமாட்டேன்! என்று கூறி வந்துவிட்டான்.

ஒரு முறை கந்தாபுவா அவனிடம், நீ சேர்ந்து வைத்திருக்கு எட்டு ரூபாய்க்கு மஹா பூஜை ஒன்றை நரசோபா வாடியில் நடத்து! என்றார் அவன் அதை முடியாது! என்று மறுத்து விட்டான்! காரணம், அந்த தொகை தன்னுடைய சகோதரனை சென்று காண்பதற்காக, சேர்த்து வைத்திருந்த தொகை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

என்றான். ஆனால் அவ்வூர் மக்கள் அனைவரும், அவன் கூற்றை நம்பவில்லை. காரணம், அவன் பல வருடங்களாக, தன்னுடைய சகோதரனை காண போவதாக, அனைவரிடமும் கூறிக்கொண்டு இருக்கிறான்.

ஆகையால் அக்கருத்தில் உண்மை எதுவும் இல்லை என்று நம்பினார்கள். அப்பொழுது மஹராஜ் அவர்கள், "நீங்கள் எவருமே அவனை புரிந்து கொள்ளவில்லை! என்றார். மேலும் அவர் "அவன் தன்னை ஒரு பேய் பிடித்து இருகிறது, என்று சொன்னானே அந்த பேய் அவனுடைய பக்தி உணர்வே ஆகும் அவன் சகோதரரை காணப் போகிறேன் என்று சொன்னதற்கான பொருள், இறைவனை காணப் போகிறேன் என்று அர்த்தமாகும்.

மஹராஜ் இவ்வாறு கூறியதும், அவ்வூர் மக்கள் "அவனுடைய சகோதரன் இறைவன் என்றால், அந்த எட்டு ரூபாயை சேர்த்துவைக்கக் காரணம் என்ன, என்று கேட்டார்கள். அதற்கு மஹராஜ் சொன்ன பதிலால், அனைவரும் அமைதி அடைந்தார்கள். மஹராஜ் அவர்களிடம், "அவன் ஒரு அனாதை என்பதால், அந்த எட்டு ரூபாயை தமக்கு ஈமக் கிரியை செய்வதற்காக சேர்த்து வைத்திருக்கிறான் இவ்வாறு அவனை பற்றி, மஹராஜ் கூறியதைக் கேட்டதும் இந்த வயதில் இப்படி ஒரு வைராக்கியமா! என்று வியந்தார்கள்.

மஹராஜ் அவர்கள் வைஜ்ய நாத்தைப்பார்த்து "நீ சேர்த்து வைத்திருக்கும் எட்டு ரூபாயிலிருந்து, ஒரு ரூபாய் மட்டும் எடுத்து வைத்து விட்டு, மீதம் உள்ள ஏழு ரூபாயில் மஹா பூஜை நடத்துவாய், என்று உத்தரவிட்டார். வைஜ்யநாத், மஹராஜ் கூறியதை ஒரு போதும் தட்ட மாட்டான்! சரி! என்று சம்மதித்து ஏழு ரூபாயை மஹராஜின் முன்னால் வைத்து விட்டான்.

மஹராஜ் மறுநாள், அந்த கிராமத்தில் உள்ள அனைவரையும், அன்னதானம் பெற்றுக் கொள்ள அழைத்தார். ஆனால் அவ்வூர் மக்களின் சந்தேகமோ வேறு விதமாக இருந்தது. வைஜ்யநாத் அளித்த ஏழு ரூபாயை, வைத்துக் கொண்டு, ஊர் மக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்குவதாக மஹராஜ்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கூறுகிறாரே, அது எவ்வாறு சாத்தியம்? என்று கவலை கொண்டனர்! அவர்களுக்கு மஹராஜ் அவர்களின் தெய்வீக ஆற்றலின் சக்தியை குறித்து தெரியாது. உணவு சமைக்கப் பட்டதும், மஹாபூஜை முடிந்து நைவேத்தியம் செய்யப்பட்டதும் கிராமத்தினர் ஒரு சிறிய பாயை விரித்துக் கொண்டு வரிசை யாக ப்ரஸாதம் உண்ண அமர்ந்து கொண்டார்கள் அவர்களோ! மஹராஜ் அவருடைய சீடர் மற்றும் பைஜ்யநாத் அவர்களும் ஒரு வட்டமாக அமர்ந்தார்கள்.

இப்போது அன்னதானம் துவங்கபட இருக்கிறது. மஹராஜ் தன்னுடைய மேல் அங்க வஸ்திரத்தை எடுத்து, பிரசாதங்களின் மேல் மூட சொன்னார். பிறகு அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது. என்ன அற்புதம்! ஏழு ரூபாய்க்கு உணவுப் பொருள்கள் வாங்கி சமைக்கப்பட்ட அந்த உணவை, ஆயிரம் பேர்கள் எப்படி உண்பார்கள் என்று யோசித்த வேளையில், அன்று சுமார் இரண்டாயிரம் பேர்கள் மன நிறை வோடு உணவை உட்க்கொண்டார்கள். இதற்குக் காரணம் மஹராஜ் அவர்களின் கருணையைதவிர வேறு என்னவாக இருக்க முடியும்! அன்னதானத்தை பெற்றுக் கொண்டவர்கள், அதோடு நிற்காமல் அவர்கள் கொண்டுவந்த பாத்திரத்தில் எடுத்து சென்று, தங்கள் ஊரில் உள்ள உறவினர்களுக்கும் அளித்தார்கள்.

இதைவிட அற்புதம் என்ன வென்றால், அனைவருக்கும் பரிமாறிய பிறகும் கூட, சமைத்த உணவு அப்படியே இருந்தது தான். ஸ்ரீ குரு சரித்திரத்தில் கானகாபூரில், ஸ்ரீ குரு நிருசிம்ம சரஸ்வதி அவர்களின் கருணையால் பாஸ்கரா என்ற அந்தணர் மூன்றுபேர் மட்டுமே உண்ண இயலும் அளவிற்கு சமைக்கும் பொருள்களை கொண்டு வந்தாலும் நாலாயிரம் பேர்களுக்கு அவர் சமைத்த அன்னம் போய் சேர்ந்தது.

அன்று சமைக்கப்பட்ட அந்த உணவு மிகவும் ருசியாக இருந்தது, என்று அனைவரும் பாராட்டினார்கள். அது மஹா குருவின் மஹா பிரசாதம் அல்லவா! அதனுடைய மகிமையை எவரால் எடுத்து கூற முடியும்! அங்கு உள்ள ஒருசிலர் இத்தகைய ஆரவாரத்தை கண்டு மஹராஜ் அவர்களிடம், பொறாமைக் கொண்டனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இறைவனுடைய அவதாரங்களின் மீது பொறாமை கொள்பவரின் நிலை என்ன என்பதைபற்றி இப்போது காண்போம்! அந்த பொறாமைக் கும்பல் மஹராஜ் அவர்களை பரீட்சை செய்வதற்காக ஒரு ஏற்பாட்டை செய்தது அவர்களில் தங்களில் ஒருவனை, ஒரு கையில் துணிகளைச் சுற்றி நிறையக் கட்டுகளை கட்டி இருந்தார்கள்.

அவ்வாறு செய்து விட்டு அவனை மஹராஜ் அவரிடம், அனுப்பி வைத்தார்கள். அவன் மஹராஜ் இருக்கும் இடம் சென்று, அவரிடம் கட்டு போட்ட அந்த கையில், வலி அதிகமாக இருப்பதாகவும். அதற்கு ஏதாவது ஒரு மருந்தைத் தருமாறும் கேட்டான்.

மஹராஜ் அவர்களும் பொறுமையாக அவனிடம் வேறு எதுவும் பேசாமல், ஒரு மருந்தை உபயோகப்படுத்துமாறு கூறினார். வந்தவன் யார்! அவனுடைய நோக்கம்! என்ன என்பதை தெளிவாக அறிந்திருந்தும் மஹராஜ் அவனை கோபிக்கவில்லை சபிக்கவில்லை. அவன் கேட்ட மருந்தை கூறி "ஸ்ரீ தத்தர் அவனைப் பார்த்துக் கொள்வார்" என்று அமைதி யாக இருந்தார். அங்கிருந்து. புறப்பட்ட அவன், தன்னுடைய நண்பர்களிடமும், ஊர் மக்கள் அனைவரிடமும், மஹராஜைப் பற்றி அவதூறு வார்த்தைகளை கூறினான் என்னுடைய கை நன்றாக இருந்த போதிலும், நான் வலி என்று சொன்ன காரணத்தால், அது உண்மையா பொய்யா என்று அறியாமல் அதற்குரிய சிகிச்சையை கூறும் இவர் எப்படி ஒரு மகானாக இருக்க முடியும்?" என்றார்.

இதைக் கேட்ட ஸ்ரீ தத்த மஹாபிரபு அவனுக்கு சரியான தண்டனையை வழங்கினார். மறுநாள் எந்த கையில் வலி என்று பொய் கூறினானோ! அந்த கை முழுவதுமாக மிக பெரிய அளவில் வீங்கி, சில நாட்களில் அந்த கையையே அறுவை சிகிச்சை செய்து மருத்துவர்கள் எடுத்துவிட்டார்கள் இப்போது அவன் மஹராஜ் அவர்களின் மகிமையை புரிந்துக் கொண்டான். அவரை தேடி ஓடி வந்தான், அவருடைய பாதங் களில் விழுந்து மன்னிக்குமாறு வேண்டினான். மஹராஜ் அவர்கள் "நீ செய்த தவறுக்கு, ஸ்ரீ தத்த மஹாபிரபுவிடம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மன்னிப்பு கேள்! என்று அனுப்பிவைத்தார். ஒரு கையிலிருந்த வலி, சில நாட்களில் உடல் முழுவதும் பரவியது. சில நாட்களில் அவன் இறந்து விட்டான். எப்போதும் மஹான்களை சோதித்துப் பார்க்கவேண்டும் என்ற எண்ணமே நமக்கு ஏற்படக்கூடாது. அவ்வாறு சோதித்தால், மஹான்கள் நம்மை மன்னித்துவிடுவார்கள்! ஆனால் இறைவன் நம்மை ஒரு போதும் மன்னிக்க மாட்டார்!

தினமும் மஹராஜ் யாசகம் பெறுவதற்காக செல்லும் போது, வழியில் அவரை எவராவது நமஸ்காரம் செய்து விட்டால், அன்று முழுவதும் பட்டினியாக இருந்து விடுவார். மஹராஜ் அவர்களுடன் எவராவது ஒருவர் செல்ல வேண்டியது அவசியமாக இருந்தது. காரணம், அவர் கூட செல்லும் பொழுது, எவராவது நமஸ்காரம் செய்ய முன்வந்தால், அவரை தடுப்பதற்கு ஒருவர் வேண்டும். அக்காரணத்தால் எவராவது ஒரு சீடர், மஹராஜ் அவர்களுடன் யாசகம் பெற செல்ல வேண்டியதும் அவசியமாக இருந்தது.

NOT FOR SALE

ஒரு முறை பேராசிரியர் ஒருவர் மஹராஜ் அவர்களிடம், ஸ்வராஜ்யம் என்று அழைக்கப்படும் சுதந்திரத்தை பற்றி சில கேள்விகளை கேட்டார். "இந்திய தேசம் சுதந்திரம் பெறுவதற்கு தகுதி உடையதா! என்று கேட்டார் அதற்கு மஹராஜ் அவரிடம், "சுதந்திரம் கிடைப்பதற்கு இன்னும் பல ஆண்டுகள் இருக்கும் போது, இப்போது ஏன் அதைப்பற்றி பேசவேண்டும்! என்று பதிலளித்தார். மஹராஜ் கூறிய வார்த்தைகள் சத்தியமான உண்மை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

நரசோபா வாடியில் சரஸ்வதி பாய், என்ற தாசி இருந்தாள் அவள் இறைவனுக்கு சேவை செய்யும் மிகப் பெரிய பக்தையாவாள. பஜனை பாடல்களை இனிமையாக பாடுவதில் வல்லவர். அவர் தன்னை மன்னிக்குமாறு ஸ்வாமிகளின் முன்னால், **கருணா த்ரிபாதி** என்ற பாடலை பாடிக் காண்பித்தாள் ஒரு முறை மஹராஜ் அவர்களும் அவளுடைய பாடலைக்கேட்க விரும்பினார்.

அவளுடைய பாடலைக்கேட்டு அவள் இறைவனின் மீது கொண்டிருந்த பக்தியை பாராட்டினார் அவருக்கு குருவைப்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பற்றி ஒரு ஸ்லோகத்தை இயற்றி அளித்தார். தியானம் செய்வது குறித்தும், அவளுக்கு போதனை செய்தார். மஹராஜ் தம்மிடத்தில் போதித்தவற்றை தம் வாழ்நாள் முழுவதும் அத்தாசி கடைப்பிடித்த அத்தாஸி, தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கும் மகான்களுக்கும் சேவை செய்தே வாழ்ந்து வந்தாள்.

ஸ்ரீதத்தர், மஹராஜ் அவர்களுக்கு காட்சி அளித்து நரசோபாவாடியிலிருந்து, புறப்படவேண்டிய நேரம் வந்து விட்டது என்றார். அவர் அப்போது அதைப்பற்றி எவரிடமும் உரைக்கவில்லை அன்று மத்யான நேரம் யாசகம் பெற்ற பிறகு, ஆலயத்திற்கு பிரார்த்தனை செய்வதற்காக சென்றார். இதைபார்த்த அங்குள்ள மக்கள், பொதுவாக மஹராஜ் யாசகம் பெற்ற பிறகு, ஆலயத்திற்கு செல்லமாட்டார் இன்று ஏதோ ஒரு விஷேகாரணத்தால்தான், ஆலயத்திற்கு சென்றிருக்க வேண்டும் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ஒரு சிலர் மஹராஜ் எதற்காக இப்போது ஆலயம் செல்லவேண்டும் என்று அதன் காரணத்தை அறிந்து கொள்ள, அவரை பின் தொடர்ந்தார்கள்.

NOT FOR SALE

ஆலயத்தில் பிரார்த்தனை முடிந்த பிறகு, மஹராஜ், அனைவரிடமும், "நரசோபாவாடியிலிருந்து புறப்பட்டு, நான் இராமேஸ்வரம் செல்வதற்கு ஸ்ரீ தத்தர் உத்தரவிட்டுள்ளார், என்று கூறினார். அங்குள்ள மக்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தார்கள். அந்த தகவல் காட்டு தீ போல அனைத்து இடங்களுக்கும் பரவிவிட்டது.

அவரை காண அனைத்து கிராமங்களிலிருந்தும் வந்த பக்தர்களைப் பார்த்து மஹராஜ், "நீங்கள் இறைவனை பிராத்தனை செய்யும் பொழுது உங்கள் மனம் ஒருமைப்பட வேண்டும்! அனைவரும் ஒற்றுமையாக இறைவழிப் பாட்டிலும்! ஆலயவிழாக்களிலும்! இடுபட வேண்டும். தினந்தோறும் அனைவரும் **"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத வல்லப திகம்பரா"** என்ற இந்த மந்திரத்தை, சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். இந்த நாமத்தினுடயை மகிமை அளவிட இயலாதது என்றார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அன்று மாலை குருந்துவாடியிலிருந்து புறப்பட்டு இரவு தத்தரை அலங்கரிப்பதற்காக வளர்க்கபடும், புஷ்பங்கள் நிறைந்த அந்த நந்தவனத்தில், தங்கி இருந்தார். மஹராஜ் தாம் செல்லும் வழியில் மிகப்பெரிய சாதுவான சிதம்பர் தீக்ஷித் என்பவர் அவதாரம் செய்த புண்ணிய தலத்திற்கு சென்றார்.

அந்த தெய்வீக குழந்தை பிறந்த போதே, ஆச்சரியமாக வில்வ இலை மற்றும் அட்சதை இவை இரண்டையும் அதன் காதுகளில் இருப்பதை ஊரார் அனைவரும் கண்டனர்! அவரை அனைவரும் சங்கர் பகவானின் அவதாரமாகவே கருதினார்கள். அங்கு தினமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அப்போது அங்கு நடக்கும் அற்புதம் என்ன வென்றால், அந்த அன்ன தானம் மற்றும் ஆலயவிழாகள், பூஜைகள் முதலிய செலவு களுக்கு பணம் தேவைப்படும்பொழுது, சிதம்பர தீக்ஷித் தம்மிடம் இருந்த ஒரு பானையிலிருந்து எடுத்துக் கொடுப்பா ராம்! ஒரு முறை அனைவரும் அந்த பானைக்குள் என்ன இருக்கிறது என்று பார்த்தபொழுது என்ன அற்புதம்! அந்தப் பானைக்குள் ஒன்றுமே இல்லை! ஒன்றுமே இல்லாத அந்த பானையிலிருந்து, இவ்வளவு பெரிய தொகை எப்படி வந்தது? அனைவரும் ஆச்சர்யப்பட்டார்கள். அவர் எப்போழுது அந்த பானையில், கையை நுழைத்தாலும் அவருக்கு அன்று தேவைப்படும் பணம் கையில் கிடைத்துவிடும்.

ஆனால் அவர் தமக்காகவோ, தம்முடைய குடும்பத்திற் காகவோ அந்த பானையைத் தொடமாட்டார். பேஷ்வாக் களின் ஆட்சிக்காலம் முடிவடையும் தருணம், பாஜிராவ் பேஷ்வா என்ற இறுதியாக அரசவையில் அலங்கரித்தவருக்கு தன்னுடைய கைகளால், ஆசீர்வதித்து பானையிலிருந்து தொகையை எடுத்துக் கொடுத்தார். மஹராஜ் அவர்கள் சிதம்பர ஸ்ரீ தீக்ஷித்தைப்பற்றி சமஸ்கிருதத்தில் சில ஸ்லோகங் களையும் எழுதியுள்ளார்.

ஒரு முறை இராமசந்திர காமத் என்பவர் மஹராஜ் அவர்களிடம், ஒருவருக்கு பக்தி நிலை என்பது எவ்வாறு ஏற்படும்? என்று கேட்டார். அதற்கு மஹராஜ் அளித்த பதில்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நம் அனைவருக்குமே பொருந்தும்! "சதா சர்வகாலமும், இறைவனுடைய நாமத்தை, நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். பஜனையின் மூலமாகவோ, அல்லது ஸ்லோகத்தின் மூலமாகவோ அல்லது மந்திர உச்சாடனங்களின் மூலமாகவோ எப்போதும் நம்முடைய சிந்தனை இறைவனைப் பற்றியதாகவே இருக்கவேண்டும்!" என்று கூறினார்.

கர்நாடகாவலிருந்து ஒரு அந்தணர் மஹராஜை தரிசிக்க வந்திருந்தார். அவரை ஒரு தீய ஆவி அடிக்கடி துன்புறுத்திக் கொண்டே இருந்தது. மஹராஜ் அவர்கள், அவருக்கு "மஹா ம்ருத்யுஞ் ஜெய" மந்திரத்தை, கற்றுக் கொடுத்தார். அவருடைய உடலிருந்த அந்த தீய ஆவி பயந்து போய் கூக்குரலிட்டது. அந்த தீய ஆவி அந்தணரைப் பார்த்து, இன்னும் சில காலத்தில் நீ மரணம் அடைய போகிறாய்! இப்போது உனக்கு ம்ருத்யுஜெய மந்திரத்தின் தேவை என்ன கேட்டது.

இதை கேட்ட அவருடைய குடும்பத்தினர் அனைவருமே பயந்தனர். அப்போது மஹராஜ் "அந்த பிசாசு கூறியது முற்றிலும் உண்மையே" இன்னும் சிறிது காலத்தில் இவர் மரணிக்கபோகிறார்! ஆனால் நான அவருக்கு அளித்த மஹா ம்ருத்ஜெய மந்திரம் மரணத்தையும்! வெல்லும் அற்புத ஆற்றலை உடைய மந்திரமாகும். அம்மந்திரத்தை, நம்பிக்கையோடு தொடர்ந்து, ஜபித்து வந்தால். அவருக்கு மரணம் ஏற்படாது, என்று நான் வாக்கு அளிக்கிறேன், என்றார் மஹராஜ் கூறிய ஆறுதலான வர்த்தையைக் கேட்டு, அந்த அந்தணரின் குடும்பம் அவருக்கு நன்றி தெரிவித்து மகிழ்வோடு வீடு திரும்பினார்கள்.

மஹராஜ் அவர்கள் பார்கவ க்ஷேத்திரத்தை அடைந்தார். அங்குதான் புகழ்பெற்ற பிரசிதிபெற்ற, **ஸ்ரீ சைல மல்லிகா அர்ஜுனரை** தரிசனம் செய்தார். தரிசனம் செய்து விட்டு வெங்கடேஷ்வரகிரியை அடைந்தார். அந்த ஆலயத்தில் மஹராஜ் தங்கி இருந்தார். அங்கு திருவுருவச்சிலையை தொட்டு வணங்குவதற்கு வெருக்குமே அனுமதி இல்லை. ஆனால் அன்று இரவு பூஜாரிகளின் கனவில், எவங்கடேஸ்வர பெருமாள் காட்சி அளித்து தன்னுடைய திருவுருவ சிலையை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தொடுவதற்கு ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளுக்கு சகல அதிகாரிகளும் இருக்கிறது! என்று சொன்னார். அதைக் கேட்ட அனைவரும் அதிசயித்தனர்.

மஹராஜ் அங்கிருந்து காளஹஸ்தி, சிவகாஞ்சி, விஷ்ணு காஞ்சி, பக்ஷிசி தீர்த்தம் இவற்றை எல்லாம் தரிசித்து பினாகினி நதிக்கரையை அடைந்தார். அங்கு ஒரு நாள் தங்கி இருந்தார். அன்று பௌர்ணமிதினம், மஹராஜ் அவர்கள் முகச்சவரம் செய்துக் கொள்ள வேண்டும் ஆனால், அதன் பிறகு நீராடுவதற்கு பினாக்கினி நதியில் நிர்வரத்து இல்லாத காரணத்தால் இறைவனை பிராத்தனை செய்தார்.

மஹராஜ் சவரம் செய்துக் கொண்ட பிறகு, நதிக்குச் சென்றவர், நீர்வரத்து அவருடைய மார்பு வரை உயர்ந்து இருப்பதைக் கண்டார். இதுவும் ஸ்ரீ தத்தரின் லீலை என்று உணர்ந்து அவரை வணங்கினார். அவர் நதியில் நீராடிவிட்டு பினாக்கினி நதியைப் பற்றி ஒரு ஸ்லோகம் எழுதி பாடினார். பொதுவாக மஹராஜ் என்று சவரம் செய்து கொள்கிறாறோ அன்று முழுவதும் பட்டினியாக இருப்பார்.

அங்கிருந்து சிதம்பரம் என்ற புண்ணியஸ்தலத்தை வந்து அடைந்தார். அங்கு சுந்தர சாஸ்திரி என்பவரை சந்தித்தார். சுந்தர சாஸ்திரி தன்னுடைய இல்லத்திற்கு ஸ்வாமியை அழைத்து வந்தார். அவர், தான் கற்று அறிந்த சமஸ்கிருத மொழியின் மீது மிகவும் கர்வம் கொண்டவர். சமஸ்கிருதம் அல்லாத மற்ற மொழியில் எழுதப்பட நூல்கள், சிறுவர்கள் அறிந்துக் கொள்வதற்கே உதவும் என்பார்.

இதை கேட்ட மஹராஜ், சுந்தர சாஸ்திரியிடம், பக்தி என்பது பெருமையிலும், கர்வத்திலும் வருவது அல்ல! அது மொழிகளை சார்ந்ததும் அல்ல! ஸ்ரீ தத்தரின் பரிபூரண கருணையை நீங்கள் பெற வேண்டும், என்றால் கர்வத்தை விட்டொழித்து, ஸ்ரீ குரு சரித்திரத்தை பாராயணம் செய்யுங்கள்! என்று எடுத்துரைத்தார். மேலும் மஹராஜ் அவரிடம் வீண் விவாதத்தால் இறைவன் தமக்கு அளித்த சமயத்தை, வீணாக்க வேண்டாம்! என்று கேட்டுக் கொண்டார். சிதம்பரத்தின் வழியாக மஹராஜ் இராமேஸ்வரம் நோக்கி சென்று

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டிருந்த போது, அங்கிருந்த சிலர் அவர் மீது கொண்ட பொறாமையால் மஹராஜ் தனது உயிரை நீத்துவிட்டார் என்று ஒரு வதந்தியை பரவவிட்டனர்.

அந்த தகவல் நரசோபாவாடியை சென்று அடைந்து விட்டது. அதை கேட்ட நரகசாபவாடி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். பெருபாலானாவர்கள் ஒரு பெரிய குழுவாக இணைந்து மஹராஜைத் தேடி புறப்பட்டு விட்டார்கள். அவர்கள் முதலில் இராமேஸ்வரம் சென்று விட்டார்கள்.

அங்கு அவர்கள் மஹராஜை காணாமல், அங்கிருந்து புறப்பட்டு தஞ்சாவூர் வந்தார்கள். மஹராஜை காணும் ஆர்வத்தில், பயணம் செய்து கொண்டிருந்த அம்மக்கள் உணவும் நீரும் இன்றி உடல்நிலையும் சீர்கேடு அடைந்து, எவராவது ஒருவர் மஹராஜ் உயிருடன் இருக்கிறார் என்ற தகவலை தருவாரா என்று ஏங்கித் தவித்துக் கொண்டு இருந்தனர். தனது பக்தர்களுடைய இந்நிலையை, தனது ஞான திருஷ்டியால் அறிந்து அவர்கள் இருக்கும் இடத்திற்கு அருகில் மாயவரம் என்ற பகுதிக்கு வந்து விட்டார்.

அவரை தேடி வந்த பக்தர்களும், மாயவரத்தில் அவரைக் கண்டு கொண்டார்கள், மஹராஜ் அவர்களை, உயிருடன் கண்ட பக்தர்கள், பல நாட்களாக பட்டினியோடு இருந்த கன்றுக் குட்டிகள், தனது தாயை நோக்கி ஓடுவது போல ஓடினார்கள். அவர்களை ஆசிர்வதித்த மஹராஜ், இனி மேலும் இது போன்ற வதந்திகளை நம்பவேண்டாம்! என்றும் நரசோபாவாடியில் சென்று கூறுகள்! நான் உடலைவிட்டு செல்லும் வேளையில், அது எங்கு நிகழும் எப்போது நிகழும்! என்பதை நான் முன்னரே அறிவிப்பேன்! அதனால் அதை பற்றி கவலைக் கொள்ள வேண்டாம் என்றார்.

மஹராஜ் அவர்களோடு காவேரி நதி கரையில் தங்கி இருந்தனர். பின் யாசகம் வாங்கி உணவு உண்டபின், அவர்கள் அனைவரையும் நரசோபாவாடிக்கு செல்லுமாறு அனுப்பி வைத்தார். பின்னர் மஹராஜ் அங்கிருந்த ஒரு ஏகாதசி புண்ணிய தினத்தில் தஞ்சாவூரை அடைந்தார். இரண்டு நாட்கள் தஞ்சை தங்கிவிட்டு பின் இராமேஸ்வரம் சென்றார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இராமேஸ்வரம் செல்லும் வழியில் சுவேதாரண்யம், கும்ப கோணம், மதுரை மீனாட்சி இந்த புண்ணிஸ்யங்களை தரிசனம் செய்துவிட்டு இராமேஸ்வரம் அடைந்தார் இராமேஸ்வரத்தில் ஒரு நாள் தங்கி இருந்தார்.

அச்சமயத்தில் தஞ்சாவூரிலிருந்து அவருடைய பக்தர்கள் இராமேஸ்வரம் வந்தார்கள். அவர்கள் ஸ்வாமிகளிடம் அவரது அடுத்த சாதுர்மாஸ்ய விரதத்தை தஞ்சாவூரிலிருந்து துவங்கு மாறு கேட்டு கொண்டனர். மஹராஜ் அக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். இராமேஸ்வரத்திலிருந்து பாத யாத்திரை யாகவே தஞ்சாவூரை வந்து அடைந்தார். அங்கு காவேரி நதிக்கரையில் "விமலாம்பா," என்ற தேவியிடம் மிக்க அன்பும் பத்தியும் கொண்டதால், அங்கிருந்த **"சந்த்யா மத்"** என்ற இடத்தில் மஹராஜ் தனது 17வது சாதுர் மாஸ்ய விரதத்தை துவங்கினார். காவேரி நதி அங்கு வேணு என்ற பெயரில் அழைக்கப்படுகிறது இவ்வாறு தனது 17வது சாதுர் மாசிய விரத்தை தஞ்சாவூரில் துவங்கி விட்டார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பதினேழாவது சாதுர்மாஸ்ய விரதம் சந்த்யா மண்டபம், தஞ்சாவூர் - 1907

NOT FOR SALE

ஸ்ரீ வாசுதேவ மஹராஜ் அவர்களின் 17வது சாதுர் மாஸ்ய விரதம் ஒரு பௌர்ணமி நாளில் இல் தஞ்சாவூரில் துவங்கியது. மக்கள் அவரை தெய்வமாகவே போற்றி வணங்கினர் இங்கு தான் (Churnika) **"சூர்ணிகா"** (Phose Precisi) என்று அழைக்கப்படும் **ஸ்ரீ குரு சரித்திரத்தின் சுருக்கத்தை** உரையா எழுதினார். இது ஸ்ரீதத்தரின் உத்தரவின் பெயரில் எழுதப்பட்டது.

தஞ்சாவூருக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் மஹராஜ் அவர்களின் பக்தர் ஒருவர் இருந்தார். அவருடைய சகோதரர் தீய நண்பர்களோடு சேர்ந்ததால், அவரும் தீயவராக மாறிவிட்டார். தனது இல்லத்தில், தந்தையாலும் சகோதரரா லும் சேர்த்து வைக்கப்பட்ட தொகை அனைத்தையுமே, நண்பருக்காக செலவிட்டுதொலைத்துவிட்டார்.

இதை பார்த்துக் கொண்டிருந்த அவருடைய மூத்த சகோத ரர், மனம் வருந்தி, ஸ்ரீ வாசுதேவ மஹராஜ் அவர்களிடத்தில், தமது வருத்தத்தை வெளியிட்டார். மஹராஜ் ஒரு இந்திரத்தை அவரிடம் அளித்து, தினமும் அதை பூஜை செய்து வரும்படி உத்தரவிட்டார்! என்ன அற்புதம்! சிறிது நாட்களிலேயே அவருடைய சகோதரர், தீய நண்பர்களை உதறிவிட்டு, தமது மூத்த சகோதரரிடம் மன்னிப்பு வேண்டினார்.

சிறிது நாட்களில் அவரும் நமது வாசுதேவ மஹராஜின் பக்தராக மாறிவிட்டார். ஒரு நாள் ஸ்வாமிகளை காண்பதற்கு அவதூத திகம்பரர் ஒருவர் வந்து இருந்தார். அன்று இரவு முழுவதும் அவர் ஸ்வாமிகளோடு உரையாற்றிக் கொண்டு

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இருந்தார். பொழுது புலர்ந்ததும் அவர் புறப்பட்டு சென்று விட்டார் அவர் எங்கிருந்து வந்தார்! எங்கு சென்றார் என்ற விவரம் ஒருவருக்கும் தெரியவில்லை.

ஒரு நாள் ஒரு அம்மையார் ஸ்ரீ வாசுதேவ மஹராஜை காண வந்திருந்தார். அவர் ஆஸ்துமா வியாதியால் பல வருடங்களாக துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார். மஹராஜ் அவர்களின், உத்திரவைக் கேட்டு அவருடன் இருந்த கந்தாபுவா, மஹராஜ் அவர்களின் பாதங்களை அபிஷேகம் செய்த சரணத்தீர்த்தத்தை, அவரிடம் வழங்கினார். அந்த தீர்த்தத்தை பருகிய, சில மணி நேரங்களிலேயே அவரின் உடலில் உள்ள நஞ்சு அவளைவிட்டு நீங்கியது. சில நாட்களிலேயே அவள் பூரணமாக குணமடைந்தாள்.

மஹராஜ் அவர்கள் யாசகம் பெறுவதற்காக, அவதூத ராவ் என்பவருடைய இல்லத்திற்கு செல்வது வழக்கம் அவருடைய சகோதரர் குப்புசாமி என்பவரும் மஹராஜ் அவர்களின் பக்தரே ஆவார். மஹராஜ், குப்புசாமி அவர்களின் சேவையில் மகிழ்ந்தார். அவர் குப்புசாமியிடம், அவருடைய வேண்டுதல் என்ன என்று கேட்டார். இவர் தமக்கு எதுவுமே தேவையில்லை என்றும் மஹராஜ் எப்போதுமே தன்னை மறவாமல் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார். இதைக் கேட்ட மஹராஜ் சிரித்துக் கொண்டே, எனக்கு ஒரு வேளை உணவை அளித்தவர்களையே நான் மறக்கமாட்டேன்! அப்படி இருக்க என்னை தினமும் யாசகம் பெற அழைத்துச் செல்பவரை எப்படி மறப்பேன்? என்று கேட்டார். அப்போழுது குப்புசாமி அவர்கள், நிறைய பேர் உங்களுக்கு உணவு அளித்திருக்கலாம்! நான் உங்களிடத்தில் கூடுதலான அன்பை எதிர்ப்பார்க்கிறேன் என்றார் மஹராஜ் உடனே "ததாஸ்து" (அவ்வாறே நடக்கட்டும் என்றார்) அன்றிலிருந்து ஸ்ரீ தத்தர் குப்புசாமியின் கனவில் தோன்றி, சில உத்தரவுகளை பிறப்பித்தார்.

குப்புசாமியின் புதல்வன் ராமு, தினமும் மஹராஜை தரிசிக்கச் செல்வார். அவர் ஒவ்வொறு முறையும் மஹராஜை தரிசித்த பின்னர், 'நாராயணா என்று கூறுவான். மஹராஜ் தினமும் ஒரு கற்கண்டு அவனிடம் அளித்தார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு நாள் கற்கண்டு இல்லாததால் காரணத்தால், ஒரு சிறிய உருண்டை வெல்லத்தை எடுத்து அவனுக்கு அளித்தார். ஏனோ என்ன காரணம் என்று தெரிய வில்லை! அந்த சிறுவன் வெல்லக்கட்டியை எடுத்து மஹராஜ் மேல் எறிந்து விட்டான்! அவனுடைய தந்தையும், மற்றவர்களும் பதறிய படி அருகில் ஓடிவந்தார்கள் அவருடைய தந்தை, அவனை அடிப்பதற்கு அருகில் சென்றார்.

உடனே மஹராஜ், "அவனை ஒன்றும் செய்ய வேண் டாம்! அவன் ஸ்ரீ ராமராக, என்னுடன் விளையாடினான்." அவனை எவரும் கோபித்துக் கொள்ள கூடாது! அவன் மீது அனைவரும் இரக்கம் காட்டுங்கள்! என்றார். அவனுடைய தந்தைக்கும், மற்றவருக்கும் இதற்கான காரணம் புரியவில்லை. அப்போது மஹராஜ் அவர்கள், அவன் இரக்கத்திற்கு உரியவன், காரணம் அவன் இந்த உலகில் இன்னும் நான்கு மாதங்களே உயிர் வாழப்போகிறான்! என்றார். மஹராஜ் கூறியபடியே நான்கு மாதங்களில் அவனுடைய உயிர் பிரிந்தது.

நரசோபாவாடியிலிருந்து மஹராஜீக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்த தகவல் என்ன வென்றால், நரசோபாவாடியில் திரும்பவும் ப்ளேக் நோய் ஆக்கிரமித்துவிட்டது. அதனால் மஹராஜ் இதை சரி செய்வதற் கான வழியை கூறவேண்டும். ப்ளேக் நோயால் மக்கள் இறந்துவிடாமல் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். என்பதே ஆகும். மஹராஜ் உடனே ஸ்ரீ தத்த மஹா பிரபுவை பிரார்த்தனை செய்தார் அப்போழுது அவருக்கு காட்சியளித்த ஸ்ரீ தத்தர், "நீ இரண்டு முறை, அந்த மக்களை திருத்துவதற்காக கங்கை நதி கரையில், பிரார்த்தனை செய்தாய்!

ஆனால் அந்த மக்களின் நடவடிக்கையில், ஒரு முன் னேற்றமும் இல்லை! அதற்கான தண்டனையை அவர்கள் இப்போது அனுபவிக்க போகிறார்கள்! ஆகையால் இனி இதில் நீ தலையிட வேண்டாம்! என்று சொல்லிவிட்டார் இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த மஹராஜ், அந்த மக்களுக் காக மனம் வருந்தி ஒரு கடிதத்தை எழுதினார். அந்த கடிதத்தில்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நீங்கள் அனைவரும் தத்தரின் கோபத்திற்கு ஆளாகி இருப்ப தால், இம்முறை நிறைய உயிர்கள் பலி கொடுக்கப்படும், ஆகையால், விரைவாக நரசோபாவாடியை விட்டு வெளி யேறவும்! ஏன் என்றால் நரசோபாவாடி மிக பெரிய அழிவை சந்திக்க இருக்கின்றது என்று எச்சரித்தார்! அதே சமயத்தில் நரசோபாவாடியில் மஹராஜ் அவர்கள் அறிவுறுத்தியது போன்று, அங்கு தகாத செயல்கள் நடந்து கொண்டு இருந்தன.

டோங்காவாலா என்று சொல்லப்படும் கை வண்டி இழுப்பவருக்கும், ஆலயத்தில் பூஜாரிகளுக்கும் தீவிரமான சண்டை தொடங்கி விட்டது. அங்கு உள்ள பூஜாரிகள், கை வண்டி இழுப்போரை தரக்குறைவாக பேசியதால் அதனால் கைவண்டி இழுப்போரின் சங்க தலைவர், பராசரம் ஜோவே தமது வாக்கு வாதத்தை தொடர்ந்தார். அந்த சண்டை தீவிர மாகி, இறுதியாக இறைவனுக்கு பணி செய்யும் பூஜாரிகளே கை கலப்பில் ஈடுபட்டனர்.

இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த கை வண்டி இழுப் போர் சங்கத்தினர், அந்த ஊரில் உள்ள வீடுகளுக்கு தீவைத்தனர். இதன் காரணமாக பெரும்பாலானோர் நரசோபாவாடியை விட்டு வெளியேறினர். இதில் ஒரு ஆச்சரியம் என்ன வென்றால், நரசோபாவாடியை விட்டு அனைவரையும் வெளியேறச் சொல்லிய மஹராஜ் எழுதிய கடிதம் அங்கு கிடைக்கப் பெற்றவுடன், முதன் முதலாக அந்த ஊரைவிட்டு வெளியேறியது மஹராஜை அவதூறாகப் பேசிய அந்த கூட்டமே ஆகும்.

தஞ்சாவூரில் **கிருஷ்ணலஹரி** என்ற நூலில் மஹராஜ் சில குறிப்புகளை, சமஸ்கிருதத்தில் எழுதி இருந்தார். அந்த குறிப் பேட்டில், மஹராஜ் காலராவால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணி அவளுடைய குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்ட தால், அவளை காப்பாற்றி அவள் இல்லத்திற்கு அனுப்பி வைத்தார், என்று பதிவு செய்திருந்தார்!

மஹராஜ் தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு, ஸ்ரீரங்கம் சென்றார். அங்கு காவேரி நதிக் கரையில், சிருங்கேரி சங்கராச் சாரியாரை சந்தித்தார். மஹராஜ் அவரை வணங்கினார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சங்கரா சாரியாரும் தாம் இத்தனை நாட்களாக, மஹராஜ் அவர்களை சந்திக்க காத்துக் கொண்டு இருந்ததாக கூறினார். மஹராஜை தமது மடத்திற்கு அழைத்துச் சென்ற ஆச்சாரியார் மடத்தில் உள்ள மாணவர்களைப் பார்த்து, "குழந்தைகளே இன்று இந்த மஹா யோகியை, நான் அறிமுகம் செய்து வைக்கிறேன்! இவர் ஸ்ரீ தத்தாத்ரேயின் அவதாரம் ஆவார்.

இவர் ஒரு சாதாரண மானுடராக, பிறந்ததால், இவருடைய பெற்றோரின் கர்ம வினை கழிந்தன. ஆதிசங்கரா ஆச்சாரி யார், எத்தகைய சாதனைகளை புரிந்தாரோ, அவற்றையே இவரும் செய்து கொண்டிருக்கிறார். இவர் வர்ணாசிரம கொள்கையில் மிகவும் கண்டிப்பாக வாழ்கின்றவர். மக் களுக்கு இவருடைய கொள்களை போதிப்பதற்காக, இமயம் முதல் இராமேஸ்வரம் வரை பாத யாத்திரையாகவே சென்று வந்திருக்கிறார் இவர் சென்ற இடங்களில் எல்லாம் அனைவருக் கும் கர்மாவை குறித்தும், உபாசனை செய்வதை குறித்தும் தியானம் செய்யும் முறையை குறித்தும், யோக சாஸ்திரமும் போதித்துக் கொண்டு வருகிறார்.

இவருக்கு நீண்ட ஆயுளை அளித்து, இவருடைய உடல் நலமும் பாதுகாக்கப்பட்டு அவருடைய சேவையைத் தொடர நான் இறைவனை பிரார்த்திக்கிறேன் என்றார். இதைக் கேட்ட அனைவரும் மஹராஜ் அவர்களை நமஸ்கரித்து, ஆசீர்வாதம் பெற்றனர். சங்கரா ஆச்சாரியர் மஹராஜிடம் தாம் ஆதி சங்கரர் அவதரித்த காலடி என்ற இடத்திற்கு செல்ல இருப்பதாகவும், அங்கு அவருடைய திரு உருவச்சிலையை, ஸ்தாபிக்க போவதா கவும் கூறினார். அப்போழுது மஹராஜ் சங்கராச்சாரியாயை வணங்கி, "அந்த தகுதியை நான் இன்னும் பெறவில்லை, என்றார் மேலும் "இந்த பீடம் சங்கராச் சாரியார் அவர்களால் மதிப்பு பெற்றது. அவர் நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணியதை இறைவன் நிச்சயமாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றி வைப்பான்" என்றார்.

ஸ்ரீ தத்தர், மஹராஜ் அவர்களிடம் காவேரி கரையின் அருகில் உள்ள இடங்களில் மட்டுமே வசிக்குமாறு கூறினார் காரணம் அப் பகுதிகளில் மட்டுமே ப்ளேக் நோய் பரவாமல்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

இருந்தது. மஹராஜ் அவர்கள் பவானி ஆறும் காவேரி ஆறும் சங்கமிக்கும் இடத்தில் 20 நாட்கள் தங்கி இருந்தார். அச்சமயத்தில் அமராவதி மாவட்டத்தில் இருந்து லஷ்மண சாஸ்திரி என்பவர் மஹராஜை தரிசிக்க வந்தார். அவர் மஹராஜிடம், தன்னுடைய புதல்வியின், மூச்சுக்குழாய் பகுதியில் புண்கள் இருப்பதால், மிகவும் துன்பப் படுவதாகவும், அவளைக் காப்பாற்றுமாறும் வேண்டினார்.

மஹராஜ் அவர்கள் ஒரு மூலிகையை அளித்து, அதை பயன்படுத்தும் முறையையும் கூறினார். மருத்துவர்களாலும் அறுவை சிகிச்சையாலும் குணமடையாத அந்த நோய் மஹராஜ் அவர்கள் அளித்த மூலிகையால் உடனடியாக நீங்கிவிட்டது.

மஹராஜ் அவர்கள் காவேரி நதியின் கரையிலிருந்து நெரூருக்கு சென்றார். அந்த புண்ணியதலமே, **ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்** அவர்கள் ஜீவ சமாதி அடைந்த இடம் ஆகும். ஸ்ரீ வாசுதேவ மஹராஜ், ஸ்ரீ சதாசிவ ஸ்வாமிகளின் ஜீவ சமாதியின் முன்னால் மண்டியிட்டு வணங்கி, பிரார்த்தனை செய்தார். அவரைக் குறித்து சில ஸ்லோகங்களை எழுதினார். அந்த இடத்தில் மஹராஜ் இரண்டு நாட்கள் தங்கினார் பின்னர் அங்கிருந்து மீண்டும் தஞ்சாவூர் திரும்பினார்.

தஞ்சாவூரில் ஸ்ரீ தத்த ஜெயந்தியை அவதூத்ராவ் இல்லத்தில் நடத்தி வைத்தார். பின் அங்கிருந்து ஆந்திராவில் என்ற இடத்திற்கும் அமராவதி சென்றார். அங்கிருந்த கிராமவாசிகள் அவருக்கு உதவி செய்யாமல் அவரை பற்றி சந்தேகம், கொண்டு பலகேள்விகளைக் கேட்டார்கள். அவருடைய வீட்டு விலாசத்தை முதற்கொண்டு அனைத்து விவரங்களையும் கேட்டு அறிந்தார்கள். அவரோடு ஒத்துழைக்கவும் மறுத்துவிட்டார்கள்.

இந்த நிலையில் மஹராஜ் மனம் வருந்தி கிருஷ்ணா நதியை நோக்கி "என்னுடைய அன்னையே! நான் உன் மேல் மிகவும் அன்பும் மதிப்பும் வைத்து இருக்கிறேன்! ஆனால் உனக்கு என்னுடைய உடலின் மேல் இரக்கம் ஏற்படவில்லை! நாளை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

என்னுடைய தலையை சவரம் செய்ய வேண்டும்! நான் சவரம் செய்த அன்று, உண்ணா நோம்பு மேற் கொள்வேன், என்பது உனக்கு தெரியும்! ஒரு வேளை நாளை, இதற்கு உண்டான ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்றால், என் ஆயுள் முழுவதும் நான் சவரம் செய்ய போவதில்லை! என்னுடைய புனித தண்டத்தையும் ஆற்றில்விடப்போகிறேன்! இவ்வாறு கோபத்தோடு கூறிவிட்டு நதியின் கரையிலேயே உறங்கி விட்டார்.

அன்று இரவு கிருஷ்ணா நதி அவருக்கு காட்சி அளித்தது. மஹராஜ் அவர்களுடைய பக்தியை தான் விரும்புவதாகவும், நாளை அதிகாலையே இதற்கு உண்டான ஏற்பாடுகள் தயாராக வைக்கப்படும் என்று கூறிவிட்டுச் சென்றது. மஹராஜ் கிருஷ்ணாநதியை வணங்கி நன்றியை தெரிவித்தார்.

அதே இரவு, கிருஷ்ணா நதி, அந்த கிராமத்தினுடைய அதிகாரிகளின் கனவில் காட்சி அளித்து, கோபாவேசமாக இந்த சாதுவை "நீங்கள் துன்புறுத்திய காரணத்தால், இந்த கிராமம் முழுவதும் என்னால் அழிக்கப்படும்! உங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றால் இந்த சாதுவிடம் மன்னிப்பு வேண்டி அவருக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யுங்கள்! என்றார். மறுநாள் அதிகாலையில் கிராமத்து அதிகாரிகள், தாங்கள் ஒவ்வொருவரும் கண்ட கனவை குறித்து கலந்து ஆலோசனை நடத்தினார்கள்.

இறுதியாக அந்த சாது நம்மை மன்னிக்காவிட்டால் நாம் அனைவரும் அழிந்து போவது உறுதியாகும். ஆகையால் உடனடியாகச் சென்று அவரிடம் மன்னிப்பு வேண்டுவோம்! என்று, ஸ்வாமிக்கு உரிய வரவேற்புகளை அளித்து, அவருக்கு, தேவைப்படும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்வோம்! என்று ஒருமனதாக அனைவரும் தீர்மானித்தார்கள். உடனே அனைவரும் ஸ்ரீ வாசுதேவ மஹராஜை தரிசிக்க சென்றார்கள்.

அவர் முன்னால் மண்டியிட்டு, செய்ததவறுக்காக அவர் களை மன்னிக்கும் படி வேண்டினார்கள். மஹராஜ் அவர் களும் அவர்களை கருணையோடு மன்னித்து ஆசிர்வாதம் அளித்தார். பின்னர் அந்த கிராமத்தில் நுழைந்த அவர், அந்த

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மக்கள் தமக்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வைத்திருப்பதை கண்டார் அவரை அங்கேயே சிலகாலம் தங்கி இருந்தார். மஹராஜ் அவ்விடத்தில் பதினைந்து நாட்கள் தங்கி இருந்தார். பின்னர் அங்கிருந்து முக்தீஸ்வரத்திற்கு சென்றார், மூக்திஸ்வரபுரம் அக்காலத்தில் சென்னை மகாணத்தோடு இணைக்கப்பட்டு இருந்தது.

அது கிருஷ்ணா நதியின் கரையில் அமைத்திருந்த பகுதி யாகும். ஸ்ரீ தத்தரின் உத்தரவை ஏற்று முக்தியாலயா என்று அழைக்கப்படும் முக்தி தேஸ்வரபுரத்தில் இல் தனது 18வது சாதுர் மாஸ்ய விரதத்தை துவங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## பதினெட்டாவது சாதுர்மாஸ்ய விரதம் முக்தியாலா (முக்தேஷ்வர்) – 1908

NOT FOR SALE

முக்தியாலா என்ற இடம் மஹராஜ் அவர்கள், மிகவும் விரும்பிய இடமாக அமைந்தது. காரணம் அங்கு வாழ்கின்ற அந்தணர்கள், அமைதியானவர்களாகவும், இறைச்சிந்தனை மிகுந்தவர்களாகவும், பூஜை வழிபாடு முறைகளை முறையாக கடை பிடிப்பவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் பலரும் சமஸ்கிருதமும் நன்றாக தெரிந்து இருந்த காரணத்தால் ஸ்வாமிகள் அங்கு நிறைய நூல்களை இயற்றினார்! மஹராஜ் தனது 18வது சாதுர் மாஸய விரதத்தில் தான் மூன்று முக்கியமான நூல்கள் ஆன

(i) *யுவ சிக்ஷா* (Yuvashiksha)

(ii) *வ்ருத்த சிக்ஷா* (Viridha shiksha)

(iii) *ஸ்த்ரி சிக்ஷா* (Sthai Shiksha)

என்ற மூன்றையும் இயற்றினார். அவர் அங்கிருந்து ஒரு தீபாவளி அம்மாவாசை தினத்தன்று, ஹன்சாலா தேவியின் ஆலயத்திற்க்கு சென்றார். இங்கு தான் கிருஷ்ணா நதி கடலோடு கலக்குமிடம், இப்பகுதிக்கு கிருஷ்ணா சாகர் என்று பெயர். மஹராஜ் அங்கு நீராடி அங்கிருந்து 20 மைல் தொலைவில் சென்றார்.

அந்த வழியாக சென்று கொண்டு இருக்கும் போதே, இனியும் இவ்வழியே தொடர்ந்து செல்ல வேண்டாம் என்று ஒரு குரல் கேட்டது. ஸ்ரீ தத்தரே ஸ்வாமிகளிடம், சப்த கோதவரியை நோக்கி செல்ல வேண்டாம் என்றார். ஸ்ரீ தத்தரின் உத்தரவை ஏற்று மஹராஜ் அங்கிருந்து திரும்பி

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

நாகேஷ் என்ற இடத்திற்கு வந்தார் அங்கு ஒரு நாள் தங்கி இருந்தார் பின்னர் அங்கிருந்து பெடகல்லபல்லி சென்று அங்கு இரண்டு நாள் தங்கி இருந்தார். பின்னர் தத்தரின் உத்தரவை பெற்று சப்த கோதவரி நதியின் கரைக்கு சென்றார். அந்த நதியில் நீராடினார் அங்கு அவருக்கு மிகுந்த வரவேற்பு அளிக்கப்பட்டது கோதாவரியின் ஏழு கிளைப்பகுதிகள் கடலோடு கலக்கும் இடமாகும். அந்த ஏழு நதிகளாவன

(1) கோட்டி லிங்கஸ்தான் (ராஜ முந்திரிக்கு அருகில் அமைந்தது)
(2) கௌஷிகா
(3) கௌதமி
(4) புராண கௌதமி
(5) பாரத் வாஜா
(6) ஆத்ரேயா
(7) துர்யா

இந்த ஏழு நதிகளும் கோதவரியின் கிளை நதிகளாகும் அச்சமயத்தில் ஸ்ரீ தத்தர், மஹராஜ் அவர்களிடம் காஷ் மீரத்துக்கு செல்லுமாறு கூறினார் ஆனால் இம்முறை மஹராஜ் முதன் முதலாக, ஸ்ரீ தத்தரின் உத்தரவை ஏற்க மறுத்துவிட்டார். தத்தர், அதற்கான காரணத்தைக் கேட்டார். மஹராஜ் ஸ்ரீ தத்தரிடம், “அங்கு குலவழக்கங்கள் முறையாக அனுசரிக்கப்படவில்லை”! என்றார். கோதாவரி நதிக்கரை யிலேயே தம்முடைய பயணத்தை நடத்திக் கொண்டு இருந்தார், அப்போது ஸ்ரீ தத்த ஜெயந்தியை பிதவப் பள்ளி என்ற இடத்தில் அனுசரித்தார். அந்த பகுதி ராஜமுந்திரியின் அருகில் இருந்தது.

அங்கு பரமானந்த ஸ்வாமி என்ற சன்யாசி மஹராஜை யாசகம் செய்ய அழைத்தார். மஹராஜ் அவரை சந்தித்துவிட்டு திரும்ப வந்து விட்டார். பிரமானந்த ஸ்வாமி மனம் மகிழ்ந்து, மஹராஜ் அவர்களிடம், “நீண்டகாலமாக உங்களை தரிசிக்க காத்துக் கொண்டு இருந்தேன்! இன்று அந்த என்னம் ஈடேறியது என்றார். தத்தாத்ரேயரின் முதல் அவதாரமான ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அவதரித்த இடமான, பிதாபுரத்திற்குச் சென்றார். இந்த புண்ணிய ஸ்தலத்தை, அனைவருக்கும் முதன்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

முதலாக அடையாளம் காட்டியவாரே மஹராஜ் அவர்கள் தான். மஹராஜ் அவ்விடத்தில் ஸ்ரீதத்தரின் பாதுகைகளை பிரதிஷ்டை செய்தார். அங்குள்ள அந்தணர்களின் பூர்வீகப் பெயர் (Surname) ஸ்ரீ பாதா என்றே அமைந்து இருக்கும்.

மஹராஜ் ஷீக்கா பூரிலிருந்து புறப்பட்டு காக்கிநாடா சென்றார். ஆச்சரியமாக காக்கி நாடாவில், நரசோ பவாடியி லிருந்து வந்த ஒரு குழுவினர் "திகம்பர திகம்ப்பரா ஸ்ரீ பாத வல்லப திகம்பரா என்று பாடிக் கொண்டே சென்றவர்கள், மஹராஜ் அவர்களை தேடிக் கண்டு கொண்டார்கள்! அங்கு ஸ்வாமிகளைக் கண்டவுடன், அவர்கள் அடைந்த ஆனந்தத் திற்கு அளவே இல்லை. அங்கு இருந்த ஒரு மரத்தடியிலிருந்து கொண்டு "நாராயணா நாராயணா" என்று கூறினார்.

இவர் நம்முடைய வாசுதேவ ஸ்வாமிகளே ஆவார் என்று மகிழ்ச்சியோடு அவர்களோடு ஒரு நாள் தங்கி இருந்தார்கள். அங்கு தங்கி இருந்தபோது, ஸ்வாமிகள் திடீர் என்று சமாதி நிலையை அடைந்தார். சமாதி நிலையில் இருந்து ஸ்ரீ தத்தர் உத்திரவுபடி அவர் பேச ஆரம்பித்தார். ஸ்ரீ தத்தர் நரசோபா வாடியில் இருந்த வந்த பூஜாரிகளைப் பார்த்து, நான் இதற்கு முன்பே பலமுறை உங்களுடைய நடவடிக்கை குறித்து எச்சரித்து உள்ளேன் ஆனால் நீங்கள் உங்களை திருத்திக் கொள்ளவில்லை.

ஆகையால் நான் மஹராஜை அவர்களை காஷ்மிரத்துக்கு அனுப்புகிறேன் என்று கூறிய உடன் பூஜாரிகள் அனைவரும் மண்டியிட்டு அழுதபடி பிரார்த்தனை செய்தார்கள். ஸ்வாமி நாங்கள் உங்கள் குழந்தைகள் ஆவோம். ஆகையால் கருணை யோடு தங்களை மன்னித்து, தங்களுடைய சேவையை ஏற்றுக் கொள்ளுங்கள்! நாங்கள் உங்கள் உத்திரவுக்கு கீழ் படிகிறோம். இவ்வாறு அந்த பூஜாரிகள் வாக்கு அளித்த உடன் மஹராஜ் அவர்களுக்கு நினைவு திரும்பியது. நினைவு திரும்பியஉடன் அவர் அந்த மக்களுக்கு அறிவுரை கூறி நரசோபவாடிக்கு அனுப்பி வைத்தார்.

சிருங்கேரி மடத்தின் ஸ்ரீ சங்கராச்சாரியார், ஸ்ரீ வாசுதேவ சரஸ்வதி ஸ்வாமிகளை கௌரவித்தார் அவர் மஹராஜ் அவர்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

களிடம் மந்திர **கர்பரக்க்ஷாஸ்தோத்திரம்** என்ற நூலைக் கேட்டுப் பெற்றார். மஹராஜ் அவருக்கு ஸ்ரீ தத்த மஹாத்மியமும், ஸ்ரீ குரு சரித்திரமும் வழங்கினார். மஹராஜ் பிரம்மானந்த சரஸ் வதிக்கு வாக்களித்தவாரே, தத்தரின் உருவச் சிலையையும், தத்தரின் பாதுகைகளையும் பிரதிஷ்டை செய்தார். மஹராஜ் கோகூரில் இருந்த போது, குரு நாராயண ஸ்வாமி மஹா சாமாதி அடைந்தார் என்ற தகவலை அறிந்தார். முறையான வைதீக சடங்குகளுக்கு ஏற்பாடு செய்தார். பிரம்மான சரஸ்வதி இறுதியாக மஹராஜ் அவர்களை கருடேஷ்வர் என்ற இடத்தில் சந்தித்தார்.

மஹராஜ் அங்கிருந்து வென்கங்கா என்ற நதியின் கரையில் பதனா என்ற இடத்தை அடைந்தார் அங்கு விட்டல் ஆலயத்தில் தங்கி இருந்தார் ஸ்ரீ தத்தரின் உத்திரவின் படி தனது 19 வது சாதுர் மாஸ்ய விரதத்தை துவங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# பத்தொன்பதாவது சாதுர்மாஸ்ய விரதம், பவானி – 1909

NOT FOR SALE

மகராஜ் தனது 19வது சாதுர்மாஸ்ய விரதத்தை பவானியில் துவங்கிய போது, ஆரம்ப காலத்தில், அக்கிராமவாசிகள் அவரைப் பற்றிய விவரங்கள் அறியாத காரணத்தாலும், அவருடைய மகிமையை உணராத காரணத்தாலும், அவரை தரக்குறைவான வார்த்தைகளால் தூற்றினார்கள். அவர் யாசகம் ஏற்று உண்பதற்கு பல தடைகளை விதித்தனர். மகராஜ் இவை யாவற்றையும் பொருட்படுத்தவில்லை.

அமைதியுடன் தமக்கு கிடைத்த உணவை மட்டும் வைஸ்வதேவம் என்று சொல்லப்படும் அனைத்து ஜீவராசிகளுக்கும், அக்னி தேவருக்கும் அளித்துவிட்டு உண்டார். அக்கிராமவாசிகளின் துன்பத்தால் , சில நாட்கள், பட்டினி கிடக்க வேண்டிய, சூழ்நிலை ஏற்பட்டபோதும் அவர் தன்னிலையில் இருந்து, ஒருபோதும் வெளியேவரவில்லை. அக்காலத்தில் பவானி என்ற கிராமம் பத்மாவதிபுரி என்று அழைக்கப்பட்டது. அங்கு பிரசித்தி பெற்ற “வெண்கங்கா” என்ற நதி ஓடிக் கொண்டிருக்கிறது. மகராஜ் வெண்கங்காவைக் குறித்து பல ஸ்லோகங்களை எழுதினார்.

மகராஜ் முதல்நாள் யாசகம் பெறுவதற்காக ஒரு இல்லத்திற்கு சென்றார். ஆனால் அவர்களுடைய பழக்கவழக்கங்களால் மனம் வருந்தி யாசகம் பெறாமலேயே திரும்பிவிட்டார். அன்று முழுவதும் பட்டினியாக கிடந்தார். இரண்டாவது நாளும் அவர் சென்ற இல்லத்தில், நேர்மையற்றவர்களாக இருந்ததால், இரண்டாவது நாளும் பட்டினி கிடந்தார். மகராஜ் அவர்களின் வாழ்நாளில் இவ்வாறு பல மாதங்கள் பட்டினி கிடந்தாலும்,ஒருமுறை கூட தனது கடமைகளைச் செய்ய தவறிய

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தில்லை ஒருமுறை கூட சோர்ந்து உட்காரவில்லை! ஒருநாள் கூட ஞான நூல்களின் விளக்க உரைகளை, எழுதாமல் இருந்தது இல்லை.! என்ன வயிற்றில், ஒருவேளை உணவு இல்லாதபொழுதே, நாம் நடைப்பிணமாக ஆகிவிடுகின்றோம்.! இது மகராஜ் அவர்களுக்கு மட்டும் எவ்வாறு சாத்தியமானது? இக்கேள்விக்கு ஒரு பக்தர் கேட்டபொழுது அவர் கூறிய விடை, சரீர பலத்தைக் காட்டிலும் ஆன்மபலம் பல மடங்கு கூடுதலாக சக்தியைக் கொண்டது. அத்தகைய ஆன்ம பலத்தை, ஸ்ரீ தத்தர் தமக்கு அருளியதே ஆகும் என்றார்.

மூன்றாவது நாள், மகராஜ் யாசகம் பெறச் சென்றபோது அந்த இல்லத்தை சேர்த்தவர்கள் , பல்வேறு கேட்டார்கள். மகராஜ் அவர்களிடம், “அதிதி” என்று சொல்லப்படும் விருந்தினர் ஒருவர், இல்லத்திற்கு வருகை தந்தால், அவர்களின் பசியை போக்குவதே, அந்த இல்லத்தின் உரிமையாளருடைய கடமையாகும்.

அதைவிடுத்து , அதிதிகளிடம் விசாரணை நடத்தக்கூடாது என்றார். அதைக் கேட்ட இல்லத்தைச் சார்ந்தவர்கள் ஆத்திரம் கொண்டனர். அப்பொழுது எவரும் எதிர்பாராத நேரத்தில், அந்த இல்லத்திலிருந்து ஒரு பெண் வெளியே வந்தார். அவர் மகராஜ் அவர்களைக் கண்டதும் மகிழ்ச்சியோடு, வரவேற்று அனைவருக்கும் அம்மாகானின் மகிமைகளை எடுத்துரைத்தார். அப்பெண் ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை , முதன்முதலாக ப்ரம்மவிரத்தில், தரிசனம் செய்ததால் அவரது தெய்வீக ஆற்றலை, நன்றாக அறிவாள். ஆகையால் அனைவரிடமும் “இம்மகான் ஸ்ரீதத்த அவதாரி, இவருக்கு நாம் பிக்ஷை அளிப்பதால், நம் தலைமுறையும் முக்தி அடையும்! என்று கூறினார்.

அன்றிலிருந்து அப்பெண் மகராஜ் தங்கி இருக்கும் இடம் தேடிச் சென்று, அவ்விடத்தை சுத்தம் செய்து, நீர் தெளித்து விளக்கேற்றி வைக்கும் வேளையை செய்து வந்தாள். பாவனி கிராமத்தினர், தங்கள் பகுதியைச் சார்ந்த ஒரு பெண், மகராஜ் அவர்களைப் பற்றி குறிப்பிட்டதையும், அவருக்கு இரவும் பகலும் சேவை செய்வதையும், அவரை நமஸ்காரம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செய்வதையும் பார்த்து, அவர்களும் ஸ்வாமிகளுக்கு மிகுந்த மரியாதை அளித்தனர்.

ஒரு முறை நானா சாஸ்திரியின் புதல்வர் பாலசாஸ்திரி கீர்த்தனைகளை பாடிக் கொண்டிருந்தார். அவர் இனிமையாக பாடுவதில் வல்லவர். ஆலயத்தில் அவருடைய கீர்த்தனைகளை கேட்க, மக்கள் ஆர்வத்துடன், வருவதுண்டு. ஒருநாள் மகராஜ் பாலசாஸ்திரியை அழைத்து, கீர்த்தனைகளை பாடும்போது ஶ்ருதிவாகியம் (Shrutiwakya), என்று சொல்லப்படும் வேத மந்திரம் உச்சரிக்கக்கூடாது! என்று உத்தரவிட்டார்.

மகராஜ் ஏற்கனவே பலமுறை வேத மந்திரங்களை, பொது இடங்களில் உச்சரிக்கக்கூடாது! என்று அனைவருக்கும் வலியுறுத்தி உள்ளார், வேத மந்திரங்கள் மிகவும் புனிதமானவை அவற்றை பொது இடங்களில் உச்சரிக்கும் போது, அவற்றின் புனித தன்மைக்கு எவ்வித குறையும் வந்துவிடக்கூடாது, என்ற கருத்தை போதித்து வந்தார். ஒருநாள் பாலசாஸ்திரி, ஆலயத்தில் கீர்த்தனைகளை பாடிக் கொண்டிருந்தார். பாடும்பொழுதே தன்னை மறந்து, அவர் சில மந்திரங்களை உச்சரித்து விட்டார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த மகராஜ், அவர்கள் அமைதியாக அந்த இடத்தை விட்டு வெளியேறினார்.

NOT FOR SALE

தனது தவறை உணர்ந்து கொண்ட பால சாஸ்திரி, விரைந்து வந்து மகராஜ் அவர்களின் பாதங்களில் விழுந்து, வணங்கி, கன்னங்களில் தாமே அறைந்து கொண்டு தம்மை மன்னிக்குமாறு வேண்டினார். மகராஜ் அவர்களும் அவருடைய மன்னிப்பை ஏற்றுக்கொண்டு, இனியும் இத்தவறு நீடிக்ககூடாது என்று உத்தரவிட்டார்.

ஒருநாள் பார்வையற்ற ஒருவர், ஒரு பெண்ணுடன் மகராஜ் அவர்களைக் காண வந்தார். அவர் அப்பெண்ணிடம், தகாத உறவு கொண்டிருந்தார். அத்தகைய காரணங்களால் ஆலயத்தின் அருகில் வந்ததும், அப்பெண்ணை அங்கேயே நிற்கச் சொல்லி விட்டு, அவர் தான் மட்டும் மகராஜ் அவர்களைக் காண சென்றார். அவர் "ஸ்வாமி அடியேனுக்கு பார்வை கிடைக்க, ஏதாவது வழி செய்யுங்கள்! நான் தங்களின் பக்தனாவேன்! என்றார்.

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மகராஜ் அவரிடம் “முதலில் ஒரு கருத்தை உறுதி செய்வாயாக! நீ என்னுடைய பக்தனா! அல்லது தெருவில் நின்று கொண்டிருக்கும், அந்தப் பெண்ணின் பக்தனா! என்பதை தீர்மானித்துக்கொள்! என்னுடைய பக்தனாக இருந்தால் அவளை விட்டுவிடு! என்றார் . இதைக்கேட்டு வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டார்.

அவருக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை! உடனடியாக அங்கிருந்து புறப்பட்டு விட்டார். மகராஜ் அவர்கள் இறைச்சிந்தனை உள்ளவர்கள், தனிமனித ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும்.! அந்த ஒழுக்கம் இல்லையென்றால் இறைவனுடைய அருளை என்றுமே பெற இயலாது.! என்பதை தொடர்ந்து வலியுறுத்தினார்.

ஒருநாள் ஒரு பக்தர் மகராஜ் அவர்களிடம், “ஸ்வாமி இவ்வுலக வாழ்க்கை என்றும் சமுத்திரத்தில் இருந்து என்னை காப்பாற்றுங்கள்”! என்றான் அப்போது மகராஜ் நீராடுவதற்காக நதிக்கரைக்கு சென்று கொண்டிருந்தார். அவர் அந்த பக்தரையும், தம்முடன் நதிக்கரைக்கு வருமாறு அழைத்தார். அவரும் ஸ்வாமிகளுடன் சென்றார்.

நதிக்கரைக்கு வந்ததும் ஸ்வாமி நதியில் நீராடுவதற்காக , இறங்கியவர் தன்னுடன் வந்தவனைப் பார்த்து, “நீயும் என் பின்னாலேயே தொடர்ந்து வா! பயப்படத் தேவையில்லை! என்று சொல்லிவிட்டு, விரைந்து நதியின் நடுப்பகுதியை அதாவது ஆழமான பகுதியை நோக்கிச் சென்றார். முதலில் சிறிது தூரம் ஸ்வாமிகளின் பின்னால் சென்ற, அந்த பக்தன் ஸ்வாமி நதியின் அந்தப்பகுதியில் செல்வதைப் பார்த்தவுடன் பயந்து விட்டான். ஒருவேளை இந்த அலைகள், என்னை எங்காவது இழுத்துச் சென்றுவிட்டால், எனது உயிர் பிரிந்து விடும்! என்று நினைத்து, தன்னுடன் வரச் சொன்ன ஸ்வாமிகளின் மீதும் நம்பிக்கையின்றி, கரைக்கு திரும்பி விட்டான்.

மகராஜ் நீராடிவிட்டு கரைக்கு வந்தவுடன், அந்த பக்தனைப்பார்த்து சிரித்துக் கொண்டே, “என்னை நம்பி இந்த நதியின் ஆழத்தைக் கூட காண இயலாத உன்னால், எவ்வாறு பிறவிக் கடலை நீந்த இயலும்? இறைவன் மீது நம்பிக்கையும்,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அசைக்க இயலாத பக்தியும் மட்டுமே இவ்விரண்டையும் கடப்பதற்கு தேவை! என்றார். உண்மையை புரிந்து கொண்ட அந்த பக்தன், ஸ்வாமிகளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு சென்றான்.

மகராஜ் அவர்கள் தனது பக்தர்களிடையே, ஒருபோதும் பாரபட்சம் பார்ப்பதில்லை, அவர் முன்னிலையில் அனைவரும் சமம் என்று கூறுவார் அக்கருத்தை கந்தாபுவாவிற்கு அவர் எவ்வாறு எடுத்துரைத்தார், என்ற அற்புதத்தைக் காண்போம்.! ஒரு நாள் கந்தாபுவா, மகராஜ் அவர்களின் பாதங்களில், சந்தனக் குழம்பை பூசி பாத பூஜை செய்தார்.

தாட்டே என்ற பக்தரும், கந்தாபுவா செய்ததைப் போன்றே தாமும் பாதபூஜை செய்யவிருப்பம் கொண்டார். ஆகையால் அவரும் மகராஜ் அவர்களின் பாதத்தை சந்தனம் பூசி அலங் கரித்தார். இதைப் பார்த்து, பொறாமை கொண்ட கந்தாபுவா, மகராஜ் அவர்களுக்கு சேவை செய்யும் உரிமை, தமக்கு மட்டுமே உள்ளது என்று நினைத்துக் கொண்டு தாட்டே அவர் களை, அனைவரின் முன்னிலையில் கோபித்துக் கொண்டார். இதைக் கவனித்த மகராஜ் அமைதியாக அங்கிருந்து சென்று விட்டார்.

அன்று இரவு கந்தாபுவாவின் கனவில் காட்சியளித்த மகராஜ், அவருடைய கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தார். ஆலயத்திற்குள் எவ்வித பாகுபாடு கூடாது என்றும், இனியும் இத்தவறு நிகழக்கூடாது என்றும், எச்சரித்தார்! என்ன ஆச்சரியம்! மறுநாள் பொழுது விடிந்ததும் கந்தாபுவா தாம் உறக்கத்தில் கண்டது, வெறும் கனவே என்று நினைத்துக் கொண்டிருந்தார் கந்தாபுவாக் ஆனால், கண்ட அனைவரும், அவரிடம் "ஏன் உங்கள் கன்னங்கள், இவ்வாறு சிவந்து, வீங்கியிருக்கின்றது? யார் உங்களை இவ்வாறு காயப்படுத்தி யது? என்று கேட்டபொழுதே கங்காபுவாவிற்கு, நடந்தவை அனைத்தும் உண்மையே! நாம் செய்த தவறுக்கு கிடைத்த தண்டனையே இந்த அடி, என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு, மகராஜ் அவர்களை சந்தித்து மன்னிப்பு வேண்டி னார். மகராஜ் கருணையோடு கந்தாபுவாவை மன்னித்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கந்தாபுவா மன்னிப்பு வேண்டியவுடன், அவரது கன்னங்களின் வீக்கம் குறைந்து விட்டது. அதன் பிறகு எவர் சேவை செய்தாலும், கந்தாபுவா தடுக்கவில்லை. மறுபடியும் ஸ்வாமியிடம் அடிவாங்குவதற்கு அவர் தயாராக இல்லை என்பது தான் உண்மையாகும்.

ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள், சகல கலைகளிலும் முதன்மை யானவராகத் திகழ்ந்தார். அவரிடம் மந்திரங்களும் தந்திரங் களும், இயந்திரங்களும் கட்டுப்பட்டு அவருடைய உத்திரவை நிறைவேற்றின. ஆனால் அவற்றை போதும் சுயநலத்திற்காக அவர் ப்ரயோகித்ததில்லை ஒருமுறை நர்மதா நதிக்கரையில் அமைந்த "மண்டல மகாகர்" என்ற பகுதியில் இருந்து "பைரவ ப்ரசாத்" என்பவர் மகராஜை காண்பதற்காக வந்திருந்தார்.

அவர் மகராஜ் அவர்களிடம் "ஸ்வாமி என்னுடைய முதல் நான்கு புத்திரர்களும் பிறந்த உடனேயே இறந்து விட்டார்கள்! ஐந்தாவது புத்திரனாவது, எங்கள் வம்சத்தை தழைக்கச் செய்வான் என்று ஏங்கிக் கொண்டிருந்தோம்! ஆனால் நாங்கள் முன்ஜென்மத்தில் செய்த பாவத்தால். அக்குழந்தையும் இறந்துவிட்டது. அக்குழந்தையின் சடலத்தைக் கூட எங்களால் காண இயலவில்லை.

திடீரென்று ஒரு ஜடைமுடியோடு ஒருவர் என் இல்லத்திற் குள் நுழைந்து, இறந்த குழந்தையின் சடலத்தை, தனது கைகளில் எடுத்துக் கொண்டு, மாயமாக மறைந்து விட்டார். ஏன் இவ்வாறு நடக்கின்றன? காரணம் என்ன என்று தெரியாமல் தவிக்கின்றோம். தயைகூர்ந்து, எங்களுக்கு ஒரு குழந்தை பாக்கியத்தை அருளுமாறு வேண்டுகிறேன்! என்று கண்ணீர் சீந்தி வேண்டினார்.

அவருடைய வேதனையைக் கண்டு மனம் இரங்கிய மகராஜ் கருணையோடு, "கவலைப்படாதே! உன்னுடைய முன்னோர்களில் ஒருவரின் ஆத்மா இன்னும் சாந்தியடைய வில்லை! அவர் இன்றளவும் ஆவியாக அலைந்து கொண்டிருக் கிறார்.! நமது முன்னோர்களின் ஆத்மா சாந்தியடையாமல் இருந்தால், நமது குழந்தைகள் உயிரோடு இருக்காது. அவ்வாறு உயிரோடு இருந்தாலும், பல்வேறு வ்யாதிகளால் துன்பப்படு

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

வார்கள்! நாராயணநாகபலி என்று சொல்லக்கூடிய, பித்ருக் களாகிய, முன்னனோர்களுக்காக ஏதாவது ஒரு புண்ணிய ஸ்தலத்தில், காரியம் செய்து விட்டுவா! தினமும் காலையிலும் மாலையிலும் ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ர நாமத்தை தொடர்ந்து பாராயணம் செய்து கொண்டு இரு! விஷ்ணு சஹஸ்ராமத்தை பாராயணம் செய்தாலும், ஸ்ரீ மகாவிஷ்ணுவின் ஆயிரம் நாமங்களை காதுகளால் கேட்டு கொண்டே இருந்தாலும், நமது முன்னோர்களின் ஆத்மா சாந்தியடைந்து விடும்! அவ்வாறு அடைந்துவிட்டால், அவர்கள் மனதார தமது சந்ததியினரை ஆசீர்வதிப்பார்கள்! முன்னோர்கள், குலதெய் வம் இவர்களுடைய ஆசிர்வதம் நமக்கு இல்லையென்றால், எந்த தெய்வத்தின் அருளும் நமக்கு கிடைக்காது! ஆகையால் அனைவரும் முன்னோர்களுக்கு செய்ய வேண்டிய காரியங் களை, முறையாக செய்து விடவேண்டும்! அதுவே நம் சந்ததியை காப்பாற்ற வல்லது என்றார்! அவருக்கு ஒரு இயந்திரத்தையும் வழங்கி, தொடர்ந்து பூஜை செய்து வரச் சொன்னார். சில நாட்களிலேயே, பைரவ ப்ராஸாத்திற்கு நிறைய குழந்தைகள் பிறந்து, அவை அனைத்தும் ஆரோக்கிய மாக இருந்தன.

பைரவப்ரஸாத் மகராஜ் அவர்களிடம் “ஸ்வாமி என்னடைய வேதனை ஒருபுறமிருக்க, அதற்கான காரணமும் தெரியாமல் பார்வையற்றவனைப் போல வாழ்ந்து வந்தேன்! தாங்கள் தக்க சமயத்தில் எனது அகக்கண்களை திறந்தீர்கள்! முன்னோர்களின் திதியை நான் முறையாக செய்துமுடிக்க வில்லை! குலதெய்வ வழிபாடுகளையும் புறக்கணித்தேன்! ஆனால் அவற்றை எனக்கு நினைவூட்டி என் வம்சத்தை தழைக் கச் செய்தீர்கள்! தங்களுடைய பாதங்களுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள் காணிக்கையாக வைக்கின்றேன்! என்று நமஸ்காரம் செய்துவிட்டு மகிழ்ச்சியோடு இல்லம் திரும்பி னார்.

பைரவ ப்ரஸாத் மட்டுமல்ல, நம்மில் பலரும், பலவித சோதனைகளை இவ்வுலக வாழ்க்கையில் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்! அதற்கான காரணங்களையும் அறியாமல், சில சமயங்களில் தகுதியற்ற, போலி சாமியார் களிடம் பரிகாரம்,

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

முதலியவற்றை கேட்டு, ஆயிரக்கணக்கில், பணத்தை தொலைத்து விட்டு மீண்டும் மீண்டும் கஷ்டங்களையே அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.! ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகள் வருங்காலத்தில், மக்கள் அனைவருக்கும் இதே நிலை ஏற்படும் , என்பதை கருத்தி கொண்டு, முன்னோர்களுடைய, திதியை முறையாக செய்யவும், தினமும் இல்லத்தில் ஸ்ரீ விஷ்ணு சஹஸ்கரநாமத்தை பாராயணம் செய்யவும், மிக எளிமையாக முறையில் அனைவருக்குமே அறிவுறுத்தினார்.

நாம் சில சமயங்களில் மகான்களுடைய உத்தரவை மீறுகின்றோம். அவ்வாறு மீறும்போது அதன் விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டும். ஒரு சமயம் கோலாபூரில் இருந்து சங்கர சாஸ்திரி குலாவாணி, என்ற பண்டிதர், மகராஜ் அவர்களை தரிசிக்க வேண்டும் என்று அனுமதி கேட்டு கடிதம் எழுதியிருந்தார்.

மகராஜ், சங்கரசாஸ்திரியின் கோரிக்கை நிச்சயமாக நிறைவேறும்.! ஆனால் அவர் இப்போது இங்கு வரவேண்டாம்! என்று சமயம் வரும்போது தாம் கூறுவதாகவும், பதில் கடிதத்தின் மூலம் தகவல் தெரிவித்தார். ஆனால் சங்கர சாஸ்திரி, மகராஜ் அவர்களின் உத்தரவை மீறிவிட்டார். உடனடியாக ஸ்வாமிகளை தரிசிக்கும் ஆர்வம் கொண்டார். ஆகையால் அவர் விரைந்து, பவானி வந்து விட்டார்.

வரும் வழியிலேயே , அவருக்கு விஷக்காய்ச்சல் தொற்றிக் கொண்டு விட்டது. வழியில் அவரை பரிசோதித்த ஒரு மருத்துவர், இக்காய்ச்சல் அவர் உடல் நிலையை மிகவும் பாதிக்கும் என்பதாகவும், ஆகையால், அவர் காய்ச்சல் இறங்கும்வரை குறைந்தபட்சமாக ஒரு மாதகாலம் ஓய்வெடுக்க வேண்டும் என்றார். அப்போது தான் சங்கர சாஸ்திரிக்கு, மகராஜ் அளித்த உத்தரவு நினைவிற்கு வந்தது.

உடனடியாக ஆலயத்திற்கு சென்று, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளின் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்து தம்மை மன்னிக்குமாறு வேண்டினார். மகராஜ் கருணையோடு அவரை ஆசிர்வதித்து தீர்த்தமும், உதியும், வழங்கினார். ஸ்வாமிகள் தாம் வழங்கிய உதியை அவர் உடலில் பூசிக்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொள்ளுமாறும் உத்தரவிட்டார். சங்கர சாஸ்திரி உதியை உடலில் புசிக் கொண்டதும் என்ன அற்புதம்! விஷக்காய்ச்சல் குறைந்த பட்சம் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் என்ற மருத்துவர் களின் கணிப்பு பொய்யாகிப் போனது, உடனடியாக அவருடைய உடலில் இருந்து காய்ச்சல் வெளியேறி புத் துணர்ச்சி அடைந்தார். மகான்களிடம் பரிபூரண நம்பிக்கை கொண்டவர் வேறு எதைப்பற்றியும் அச்சம் கொள்ள தேவையில்லை.!

ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் பொதுவாக, தமது பக்தர்கள் எவரையுமே தம்மை தீண்டவிடமாட்டார். சிறிது தொலைவி லேயே அமர்ந்து கொண்டு உரையாட வேண்டும் பெண்கள் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார். தம்மிடம் வருபவர்கள் எவராவது, பெண்பித்தர்கள் இருந்தால் அவர் களின் தவறை எட்டிக்காட்டி, திருத்திக் கொள்ளச் சொல்வார். இல்லையென்றால் தம்மைக் காண வரவேண்டாம் என்று தீர்மானமாக கூறிவிடுவார். ஒரு முறை அமராவதியைச் சேர்ந்த குல்பராவ் மகராஜ் என்பவர், ஆன்மீகத்தில் பலருக்கு வழி காட்டியாகவும் குருவாகவும் இருந்தார். அவர் மகராஜ் அவர்களை தாம் சந்திக்க விரும்புவதாகக்கூறி அனுமதி வேண்டி கடிதம் எழுதினார்.

ஆனால் மகராஜ் அவர்கள் தமது பதில் கடிதத்தில், தாம் ஒருவரை ஒருவர் உள்ளத்தில் உணர்ந்து கொண்டிருப்பதால், நேரிடையாக சந்திக்க வேண்டும் என்று அவசியமில்லை என்று எழுதி அனுப்பிவிட்டார். அதற்கான காரணத்தை அப்போது அவருடைய சீடர்கள் அறியவில்லை பின்னரே தான் அவர்களுக்கு தெரியவந்தது. குல்பராவ் மகராஜ், பெண்களின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இத்தகைய காரணத்தால் மகராஜ் அவரை சந்திப்பதை விரும்பவில்லை.

ஒருமுறை மகராஜ், கோதாவரி நதிக் கரையில் நீராடுவதற் காக சென்றார். அவர் நதியில் சிறிது தூரம் நடந்து சென்றார். அவ்வூர் மக்களும் அவரை மின் தொடர்ந்து சென்றனர். சிறிது தூரம் சென்றதும் மகராஜ் அவர்களிடம் தம்மை பின்தொடர்ந்து எவரும் வரவேண்டாம் என்றும் தாம் நதியின் ஆழத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வருவதாகவும் கூறினார். இதைக் கேட்ட

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மக்கள் மகராஜ் திரும்ப கரைக்கு வருவாரா என்ற அச்சத்தில், தாமும் அவரைத் தொடர்ந்து சென்றார்கள். தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக கோதாவரி நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. மகராஜ் பலமுறை எச்சரித்தும் கூட பக்தர்கள் அவரை பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர்.

அவ்வாறு நதியின் மையத்தை நோக்கி சென்று கொண்டிருந்த பக்தர்களில் ஒருவர், திடீரென்று நீரின் சுழற்றியால் நதியில் அடித்துச் செல்லப்பட்டார். மற்றவர்கள் விரைந்து சென்று அவரைப்பற்றி தூக்கி கொண்டு வந்து விட்டனர். ஆனால் அவன் உயிரோடு இல்லை.

கந்தாபுவா அனைவரிடமும் மகராஜ் கூறியதை கேட்காமல் அவரது உத்தரவை மீறியதால் கிடைத்த பலன் இதுவென்று கூறினார். அனைவரும் தங்களின் தவறை ஒப்புக் கொண்டனர். ஆனால் இறந்து கிடந்தவனை, எவ்வாறு திரும்பக் கொண்டுவர முடியும்? கருணையே உருவான ஸ்ரீதத்தரின் அவதாரியான, அற்புத ஆற்றல் பெற்ற ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள், அவனுடைய உயிரை மீட்டு, அந்த அற்புதத்தை நிகழ்த்தினார். அவர் தன்னை பின் தொடர்ந்த காரணத்தால், உயிரை ஒரு அவன் விடுவதை விரும்பவில்லை. ஆகையால் தனது கமண்டலத்திலிருந்து சிறிதளவு நீரை எடுத்து, இறந்து கிடந்த அவனது சடலத்தின்மீது தெளித்தார்.

என்ன அற்புதம்! அவன் ஏதோ உறக்கத்தில் இருந்து எழுந்து வந்ததைப் போல், மிகவும் சுறுசுறுப்பாக எடுத்து ஓட ஆரம்பித்துவிட்டான். இதைப் பார்த்த அவருடைய பக்தர்கள் "ஜெய் குருதேவ் தத்த" என்று மகிழ்ச்சியோடு மகராஜ் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தனர். தமது குழந்தைகள் தவறு செய்தாலும், தாயார் தண்டனை வழங்குவதற்கு பதிலாக அத்தவரை திருத்தவே முயற்சிப்பான். அத்தகைய கருணையே உருவான தாயைப் போன்றவர், ஸ்ரீவாசுதேவானந்த சரஸ்வதி மகராஜ் ஆவார்.

ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் ஸ்ரீ அக்கல்கோட் மகராஜ் ஸ்வாமி சமர்த்தர் ஸ்வாமி ஸ்ரீ தத்தார் அவர்களைப் பற்றி

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

குறிப்பிடும்போது, அவர் ஸ்ரீ தத்தாத்தேவரின் முழுமையான அவதாரம் ஆவார் அவரால் இயலாத காரியம் எதுவுமே இல்லை. அவருடைய பக்தர்கள் அவருடைய அனுமதியின்றி எக்காரியத்தை செய்தாலும், அது நிறைவேறாது.

அவருடைய ஆசீர்வாதம் கிடைத்துவிட்டால் நடக்கவே இயலாத காரியங்களையும், நடத்திக் காட்டுவதில் வல்லவர். இவ்வாறெல்லாம் ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் அக்கல்கோட் மகராஜ் அவர்களின் பெருமைகளை அனைவருக்கும் கூறுவது வழக்கம் ஒரு நாள் தத்த சாஸ்திரி என்பவர் மகராஜ் தம்மை தரிசிக்க வரும் அனைவருக்கும், தீர்த்தமும், உதியும் அளித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, இதனால் எவருக்கு என்ன பயன்? என்று கேலியாகப் பேசினார்.

ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் அவரிடம் இறைவனுடைய தீர்த்தத்தையும், உதியையும் கேலி செய்யும் அளவிற்கு நீங்கள் உயர்ந்தவர் அல்லர் என்பதை விரைவில் தெரிந்து கொள்வீர்கள்! என்றார். அன்று இரவே தத்த சாஸ்திரி என்று அழைக்கப் படும் பவடேகர், கடுமையான வயிற்றுவலியால் அவஸ்தைப் பட்டார் எத்தகைய மருந்துகளை உட்கொண்டாலும் வலியின் வீரியம் குறையவில்லை. அவர் அப்பொழுதுதான் தமது வேதனைக்கான காரணத்தை உணர்ந்து கொண்டார்.

மறுநாள் பொழுது விடிந்ததும், விரைவாக சென்று ஸ்ரீ மகராஜ் அவர்களை நமஸ்காரம் செய்து, தனது தவறை மன்னிக்க வேண்டினார். கருணையோடு அவரை மன்னித்த மகராஜ், தமது கமண்டல தீர்த்ததையும், உதியையும் வழங்கினார். முந்தைய நாள் பவடேகர், மகராஜ் அளிக்கும் தீர்த்தமும், உதியும் என்ன பலனை தந்துவிடப் போகிறது, என்று இகழ்ந்தவர் இன்று அதே தீர்த்தமும், உதியுமே தன்னை காப்பாற்றியதை உணர்ந்து கொண்டார்.

கோலாபூர் மாவட்டத்தில், மகராஷ்டிராவின் பிரசித்தி பெற்ற சாதுவான, ஸ்ரீ ஏக்நாத் மகராஜ் அவர்களின் எட்டாவது தலைமுறையினரான நரஹரி என்பவர், மகராஜ் அவர்களிடம், யோககலையை பழகுவதற்காக வந்தார். அப்போது மகராஜ் அவர்கள் மிகப்பெரிய சாதுவான ஸ்ரீ ஏக்நாத் மகராஜ்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர்களின் தலைமுறையைச் சேர்ந்தவர் என்று காரணத்தால், யோகக் கலையை "ஸ்ரீ ஏக்நாத் மகராஜ்" அவதரித்த "பைத் தான்" (Pythan) என்ற கிராமத்திற்கு சென்று அங்கு பழகுமாறு உத்தரவிட்டார்.

அவ்வாறு அங்கு சென்று பயிற்சிகள் செய்யும் பொழுது, ஸ்ரீ ஏக்நாத் மகராஜ் நிச்சயமாக உதவிகள் செய்து, அவரது எண்ணத்தை ஈடேற்றுவார் என்று கூறினார். மகராஜ் கூறிய வாறே, நரஹரி தனது முன்னோரான ஸ்ரீ ஏக்நாத் மகராஜ் அவர்களின், அவதரித்த ஸ்தலத்தில் யோகக் கலையை முறை யாகக் கற்றுக் கொண்டு, ஸ்ரீ தத்த மஹாத்மியம் மற்றும் தத்த புராணத்தையும், இடைவிடாது பராயணம் செய்தார் ஸ்ரீ ஏக்நாத் மகராஜ் தனது வம்சத்தினரை ஆசீர்வதித்த காரணத்தால், நரஹரி அனைவராலும் "ஸ்ரீ தத்த மகராஜ்" "என்றே போற்றப் பட்டார்.

ஒருமுறை மகராஜ், ப்ரம்மானந்தரின் மடத்தில், முதல் தளத்தில் அமர்ந்து கொண்டு இருந்தார். ஸ்ரீ தத்த பாதுகையின் முன்னால் நறுமணமிக்க ஊதுபத்தி, தெய்வீக உணர்வை அளித்துக் கொண்டு இருந்தது. திடீரென்று மகராஜ் அவர் களின், கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அதைப் பார்த்த அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் மகராஜ் அவர்களிடம் "ஸ்வாமி நாங்கள் ஏதாவது தவறு செய்திருந்தால் எங்களை மன்னித்து விடுங்கள்"! என்றனர்.

அப்போது மகராஜ் அவர்களிடம், தனது பக்தர்களின் குறையைத் தீர்க்க, ஸ்ரீதத்தர் நரசோபாவாடியில், திறந்த வெளியில் அமர்ந்து கொண்டிருப்பதை எனது அகக்காட்சி யில் ஸ்ரீதத்தர் உணர்த்தினார். தமது பக்தர்களுக்காக தான் எல்லா துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு, இரவும் பகலும் பக்தர்களின் நலனையே கருத்தில் கொண்டு, இருக்கும் ஸ்ரீதத்தரின் கருணைக்கு நிகராக, வேறு எதைக் கூற இயலும்? தனது பக்தர்கள் தன்னைத் தேடி கிர்நார் மலைக் குகைக்கோ அல்லது மாஹூர் என்று சொல்லப்படும் சக்தி பீடத்திற்கோ செல்ல வேண்டாம்.! நரசோபாவாடியில் தாம் பக்தர்களுக்கு அருள் செய்வதற்காக, காத்து கொண்டு இருப்பதை எனக்கு

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உணர்த்துகிறார்! என்பதை தமது பக்தர்களுக்கு எடுத்துரைத் தார். எல்லோரையும் காத்து இரட்சிக்கும், ஸ்ரீதத்த அவதாரி யான மகராஜ் இவ்வாறு கண்ணீர் சிந்துவதை கண்ட, பக்தர் கள் ஏதோ ஒன்று நிகழப்போவதை உணர்ந்து கொண்டு, வேதனையுடன் ஸ்ரீ தத்தரை ப்ரார்த்தனை செய்தனர்.

மகராஜ் அனைவரிடத்தும், ஸ்ரீ ருத்ராபிஷேகம் செய்வதை எல்லா துன்பங்களுக்கும் பரிகாரமாக கூறினார். நாம் வசிக்கும் இடத்தைச் சுற்றி செய்யப்படும் ருத்ராபிஷேகத்தின் அதிர்வலை கள், தீயவற்றை அழித்து நமக்கு பல வித நன்மைகளை அளிக்க வல்லது இயற்கை அழிவுகளால், அல்லது பல்வேறு வ்யாதி களாலும், நிறைவேறாத காரியங்கள் இருந்து வந்தாலும், ருத்ராபிஷேகம் செய்யும் பொழுது, அது மிகச்சிறந்த பலன் களை நமக்கு அளிக்கவல்லது என்பதை தமது பக்தர்களுக்கு, பலமுறை அறிவுறுத்தியுள்ளார்.

மகராஜ் அவர்களுக்கு, அங்கிருந்து புறப்பட வேண்டு மென்ற, ஸ்ரீதத்தரின் உத்தரவு கிடைத்து விட்டது. ஆனால் அவர் எவரிடமும் இதைப்பற்றி கூறவில்லை. மறுநாள் யாசகம் பெற்றபிறகு, மகராஜ் தனது புனித துணி, கமண்டலம் புத்தகங் கள் அனைத்தையும் கந்தாபுவாவிடம் அளித்துவிட்டு ஆலயத்திற்கு சென்று வடக்குப்புறமாக இருந்த பகுதியில் இறைவனை ப்ரார்த்தனை செய்துவிட்டு, பஞ்சகங்கா நதியைக் கடந்து சென்றுவிட்டார்.

அவருடைய சீடர்களும், பக்தர்களும் மிகுந்த வேதனையு டன், மகராஜ் அவர்கள் தம்மைப் பிரிந்து செல்வதை ஏற்றுக் கொள்ளாமல், அவர்களும் அவர் இருக்கும் இடத்தை தேடினார்கள், ஏக்சம்மா என்ற இடத்தில், அவர் இருப்பதாக தகவல் கிடைத்தது. அனைவரும் அவ்விடத்திற்கு விரைந்து சென்று விட்டனர். மகராஜ் அவர்களை கண்டவுடன், ஸ்ரீ தத்தரை பக்தியோடும், நேர்மையாடும், தூய உள்ளத்தோடும் ப்ரார்த்தனை செய்யுங்கள்! நான் ஸ்ரீ தத்தரின் உத்தரவை மீற இயலாது! ஆகையால் புறப்படும் சமயம் வந்துவிட்டது, நான் எஙகு இருந்தாலும் உங்களின் தூய ப்ராத்தனைக்கு கட்டுப் படுவேன்!" என்று கூறினார். அனைவரையும் திரும்பிச்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

சென்று விடுமாறு கட்டளையிட்டார். அவருடைய உத்தரவை ஏற்று, அவரிடம் ஆசீர்வாதம் பெற்று, மக்கள் தங்களுடைய கிராமத்திற்கு திரும்பி விட்டனர். நரசோபாவாடியில் இருந்து பக்தர்கள், அவரைத் தரிசிப்பதற்காக வந்தனர்.

மகராஜ் அவர்களிடம் "பூத ப்ரேத பிசாசாதய" என்று தொடங்கும், ஸ்ரீ தத்தரின் ஸ்லோகத்தை அளித்து காலை, மாலை, மதியம் மூன்று வேளையும் இதைத் தொடர்ந்து கூறிவந்தால் யூத பிசாசு தோஷங்கள் உங்களை விட்டு விலகிவிடும்!" என்றார். அப்போது நரசோபாவாடியில் இருந்து, தம்மைக் காண வந்த டுண்டிராஜ் புவா என்பவரை மகராஜ், தனது அருகில் அழைத்து, அவருடைய நீண்டகால கோரிக்கையை அன்று நிறைவேற்றினார். டுண்டிராஜ் புவா நீண்டகாலமாக மகராஜ் அவர்களுக்கு தனது கைகளால் சமைத்து, உணவு பரிமாற வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்.

தனது மனதில் இருப்பதை, அவ்வாறே கூறிய மகராஜ் அவர்களை, மகிழ்ச்சியோடு நமஸ்காரம் செய்தார். மகராஜ் அவர்கள் டுண்டிராஜ் புவாவின் கைகளால் உணவு உண்ட பின் அவரை ஆசிர்வதித்து விட்டு, தினமும் மக்களுக்கு புராணங்களை கதைகளாக கூறுவாயாக! என்று உத்தர விட்டார். அவருக்கு ஒரு தேங்காயை ப்ரஸாதமாக அளித்தார். பின்னர் அங்கிருந்து "துங்கபத்ரா நதிக்க கரையில் அமைந் துள்ள "**ஹவநூர்**" என்ற இடத்திற்கு சென்று தமது **20வது சாதுர் மாஸ்ய விரதத்தை** துவங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## இருபதாவது சாதுர்மாஸ்ய விரதம் (ஹவானூர் 1910)

NOT FOR SALE

மஹராஜ் அவர்கள் துங்கபத்ரா நதிக்கரையில், அமைந்த ஹவானூர் என்ற இடத்தில், தமது 20தாவது சாதுர்மாஸ்ய விரதத்தை துவங்கினார். அங்கு இருந்த திரிபுரகந்தேஷ்வரர் ஆலயத்தில் தங்கி இருந்தார். அங்கு அவர் வியாச பூஜை நடத்தியதை பார்த்த அவ்வூர் மக்கள், அவரை ஒரு மஹரிஷி யாகவே கருதி, மதித்து போற்றினார்கள். வாமன் ராவ்குலா வனி மஹராஜை தரிசிப்பதற்காக வந்தார். மஹராஜ் அவரிடம் தாம் ஹவானுரில் இருப்பதை, ஒருவருக்கும் கூறவேண்டாம் என்று உத்தரவு இட்டார்.

அப்பொழுது கோபால் பூவா என்பவர், இரவும் பகலும் பஜனை நிகழ்ச்சி நடத்திக் கொண்டு இருந்தார். அந்த ஊர் மக்கள் அனைவரும், அவருடைய பத்தியைக் கண்டு மகிழ்ந்து அவர் கூறியவாறே ஸ்ரீகுரு சரித்திரத்தை சப்தாகமமாக (ஏழு நாட்களில்) பராயணம் செய்தார்கள். பாராயணம் முடிவடைந் தது, அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. கிட்ட தட்ட 500பேர்களுக்குமேல், அந்த அன்னதானத்தில் கலந்துக் கொண்டார்கள். அப்போழுது மஹராஜ் அவர்கள், ஓர் அற்புதத்தை நிகழ்த்தினார் எல்லோரும் உணவு அருந்த துவங்குமுன்னர், இறைவனின் நாமத்தை கூறிவிட்டு, உணவு அருந்துமாறு கோபால் பூவா கூறினார். மஹராஜ் அவர்கள், அங்கு உண்பதற்காக அமர்ந்திருந்த ஒரு சிறுவனை அழைத்தார்.

அவனிடம், “எல்லோரும் பகவானின் நாமத்தை கூறு கிறார்கள் , அதைப்போலவே நீயும் கூறுவாயாக!” என்றார். அந்த சிறுவன் மிகவும் கம்பீரமாக, அவர் கூறிய மந்திரத்தை

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உச்சரித்தான். இதை பார்த்த அங்கிருந்த அனைவரும் ஆச்சர்ய மடைந்தார்கள். காரணம், அச்சிறுவன் பிறந்ததிலிருந்து, இத்தனை வருடங்களாக வாயைதிறந்து, ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை பிறவி ஊமையான அந்த சிறுவனை, பேசவைத்த அற்புதம் அந்த ஊர் மட்டுமல்லாமல், அக்கம் பக்கத்து ஊர் களிலும் காட்டுத்தீயைப் போல பரவியது. ஒரு நாள் இரவு பஜனை நடந்து கொண்டு இருந்த போது, தீவிர வைஷ்ணவ ரான சேஷாத்திரி என்பவர், தமது சகோதரியுடன் அங்கு வந்து இருந்தார்.

அவர் மஹராஜ் அவர்களிடம், ஸ்வாமி என் சகோதரிக்கு தற்பொழுதுதான் திருமணமாகி இருக்கிறது! தீடிர் என்று அவருடைய இரண்டு கால்களும், செயலிழந்து விட்டன! அவர் பழையபடி தன்னுடைய கால்களில் சக்தியைப் பெற்று, தமது கணவருடன் இல்லறவாழ்க்கை, துவங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். மஹராஜ் உடனே தமது கமண்டலத்தி லிருந்த நீரை எடுத்து, அவளின் கால்களில் தெளித்தார்! அவருடைய தீர்த்தம் அவளின் உடல்மீதுபட்டதும். ஓர் அலறல் சத்தம் கேட்டது அதுவரை அவளை பிடித்து இருந்த தீய ஆவியானது "போகிறேன்! போகிறேன்!" என்று சொல்லி விட்டு உடனடியாக அவளை விட்டு பிரிந்துச் சென்றது என்ன அற்புதம்! அந்த பெண் சுறுசுறுப்பாக எழுந்து ஓட, ஆரம்பித்து விட்டாள். அதை பார்த்துக் கொண்டு இருந்த பக்தர்கள் அதிசயித்தார்கள்.

மஹராஜ் அவர்கள், வனவாசி என்ற கிராமத்தில் இருந்த போது, அக்கிராம வாசி ஒருவர் சுவாமிகளிடம், "எனக்கு ஒரு வீடு கட்டும் பாக்கியமே இல்லை!" என்று புலம்பினார். நான் ஒவ்வொரு முறையும், வீட்டைக் கட்டி முடிக்கும் பொழுதும் ஏதாவது ஒரு குறை ஏற்பட்டு, அதை இடிக்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறேன்! இதுவரை பத்து வீடுகளை இடித்து இருக்கிறேன். ஆகையால் கருணையோடு அருள் செய்யுங்கள்! என்று நமஸ்காரம் செய்தார்.

மஹராஜ் அவர்கள், "இதற்கு காரணம் நீ சென்ற ஜென்மத் தில் செய்த தவறே ஆகும்! சென்ற ஜென்மத்தில் நீ ஒருவரை மிகவும் துன்புறுத்தி உள்ளாய்! அவர் மனம் சாந்தி அடை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

யாமலே இறந்துவிட்ட காரணத்தால், இன்னும் எத்தனை முறை நீ வீட்டைக் கட்ட முயற்சித்தாலும் அது நடக்காது.! ஆகையால் அவருடைய ஆத்மா சாந்தி அடைய, நீ ஒரு சாந்தி ஹோமம் செய்யவேண்டும்! என்று கூறினார். அவரும் மஹராஜ் கூறியதைப் போல, சாந்தி ஹோமம் நிகழ்த்தினார் அந்தணர் களுக்கு அன்னதானம் வழங்கினார். உடனடியாக அந்த தீய ஆவி, அவருடைய இடத்தை விட்டு சென்றுவிட்டது. இந்த நிகழ்ச்சிக்கு பிறகு வீடு கட்டும் பணியை தொடர்ந்த அவர் எந்த தடங்கலும் நேராமல், வீட்டை கட்டிமுடித்து க்ரஹப் பிரவேசமும் செய்தார்.

NOT FOR SALE

ஒரு நாள் மஹராஜ் அவ்வூர் காட்டுப் பகுதியில் நடந்துக் கொண்டு இருக்கும் பொழுது, எங்கிருந்தோ யானைகள், கூட்டமாக அவரை நோக்கி வந்தன. அதைப்பார்த்த மக்கள், அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். மஹராஜ் எங்குமே செல்லாமல், அதே இடத்தில் நின்று கொண்டார் என்ன அற்புதம்! அடுத்த வினாடி அந்த காட்டு யானைகள், மஹராஜ் அவர்களை வலம்வந்து சுற்றி சென்று விட்டன.

மஹராஜ் ஒருமுறை கிருஷ்ணநதி சங்கமம் ஆகும் இடத் திற்கு சென்றார். இங்கு இருந்த மலைப்பகுதியில் முன் ஒரு காலத்தில் மஹரிஷி விஸ்வாமித்திரர் தவம் செய்து இருக்கிறார் அங்கிருந்து அவர் புறப்பட்ட உடன், அவருடைய த்யானத்தில், தமக்கு ஏதோ ஒரு துன்பம் வரப்போவதை உணர்ந்தார். தொடர்ந்து, ப்ரயாணம் செய்ததாலும், பாதங்களில் அநேக விஷ முட்கள் ஏறியதாலும் சில நாட்கள் சரியான உணவு கிடைக் காததாலும், அவருடைய உடல்நிலை கடுமையாக பாதிக்கப் பட்டது. விஷக் காய்ச்சல் அவரை முழுமையாக ஆக்கிரமித்து, அந்நிலையாலும்.

அங்குள்ள சிலர் ஸ்வாமிக்கு ஒரு குவளை மோர்க்கூட தர மறுத்தார்கள். அவரை பற்றியும் அவதூராக பேசினார்கள். மஹராஜ் மௌனமாக அங்கிருந்து வெளியேறினார். இறுதி யாக குரு கட்டி (Kurugaddi) என்ற என்ற இடத்திற்கு வந்தார். இந்த புண்ணியஸ்தலம், ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் ஏராளமான அற்புதங்கள் நிகழ்ந்த இடம். அங்கிருந்த மக்கள் வசிக்கும்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஊருக்குள் செல்ல வேண்டுமென்றால், குறைந்த பட்சம் 20 மைல் நடந்து செல்லவேண்டும் அங்கு ஒரு அமைதியான குகை உள்ளது. கிருஷ்ணா ஆற்றின் மறுகரையிலிருந்து படகுகள் மூலமாக, அந்த பகுதியை அடைய முடியும்.

மஹராஜ் அங்கு சென்றவுடன், ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபர் அவருக்கு காட்சியளித்தார் அவர் அடுத்த சாதுர்மாஸ்ய விரதத்தை அங்கேயே கழிக்குமாறு உத்தரவிட்டார். அதே சமயத்தில் அங்கிருந்த ஆலயத்தில் பூஜை செய்யும் பீமன்னா என்பவரின் கனவில், ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபர் காட்சி அளித்து, என்னுடைய வாசுதேவர், ஒரு மாத காலம் இங்கே தங்கியிருந்து தியானம் செய்யப் போகிறார்!

அவருக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியது உன்னுடைய கடமை, அவர் உணவு இன்றி ஒரு வேளை தவித்தால் நீ துன்பப்படுவாய்! இது என்னுடைய கட்டளை! இந்த ஒரு மாதமும் அவரைவிட்டு, நீ எங்கேயும் தொலைதூரம் செல்லகூடாது! என்று உத்தவிட்டார் குருக்கட்டியில் மஹராஜ் அவர்கள் தனது 21வது சாதுர்மாஸ்ய விரதத்தை துவங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## இருபத்தியோராவது சாதுர்மாஸ்ய விரதம்
## குருகட்டி, குருவாப்பூர் – 1911

ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள், தமது 21வது சாதுர் மாஸ்ய விரதத்தை, குருகட்டி என்ற கிருஷ்ணாநதி சூழ்ந்து உள்ள. தீவைப்போன்ற ஒர் அழகிய சிற்றூரில் துவங்கி னார். இந்த இடம் குருவாபூர் என்றும் அழைக்கப்படுகிறது ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப சுவாமிகள், இங்கே தவம் செய்து ஏராளமான அற்புதங்களை செய்து இருக்கிறார். அவர் தம்மை ஸ்ரீ தத்தாரேயருடைய அவதாரமாக அனைவருக்கும் வெளிப் படுத்திய இடமே, குருவாபூர். ஸ்ரீ குரு சரித்திரத்தில் கூறப் பட்டுள்ளவாறு, ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் இங்குதான், தன்னுடைய அவதாரத்தை முடித்துக் கொண்டு, கிருஷ்ணாநதியில் மாயமாக மறைந்து விட்டார்.

இங்கு உள்ள மக்கள், சமஸ்கிருதம், கன்னடம் மற்றும் தெலுங்கு ஆகிய மூன்று பாஷைகளையும் அறிந்தவர்கள் இங்கு உள்ள ஸ்ரீதத்தரின் ஆலயத்தில், ஸ்ரீதத்தரின் பாதுகை பிர திஷ்டை செய்யப்பட்டுள்ளது குருகட்டி என்று அழைக்கப் படும். தீவின் , எல்லை பகுதியில், ஸ்ரீ கிருஷ்ணாநதி பாயும் இடத்தில், காணப்பட்ட பல பாறைகளில், ஸ்ரீ பாத ஸ்ரீவல்ல பரின் பாதசுவடுகளின் தடையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அப்பாறைகளின் பகுதியில், ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபருடைய உடல் பதிந்துள்ளதை இன்றளவும் காண இயலும்.

மஹராஜ் அங்கு வந்து சேர்ந்தபோழுது, அப்பகுதியில் இரண்டு அந்தண குடும்பங்களே இருந்தன ஸ்ரீ தத்தரின் ஆலயத்தில், மஹராஜ் அவர்கள், பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்யும்பணியை ஏற்றுக் கொண்டார். முதன் முதலில்

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மஹராஜ் யாசகம் பெறுவதற்கு செல்லும் பொழுது பூசாரிகளின் இல்லத்தில், அவர்களுடைய நடைமுறை செயல் பாடுகளை கண்டு மனம் வருந்தி, யாசகம் பெறாமலே வந்து விட்டார். அப்போது ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரே, அவருக்கு காட்சி அளித்தார்.

அவர், ஸ்வாமிகளிடம் "இந்த தீவு துணிகளை துவைக்கும் தூய்மையான ஒரு வண்ணால் எனக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த இடத்தில் வசிக்கும், அனைவருமே என்னால் ஆசிர்வதிக் கப்பட்டவர்கள். ஆகையால் இந்த இடத்தில், நீ யாசகம் பெறுவதற்கு ஒரு தடையுமில்லை இங்குள்ள அனைத்துப் பொருள்களும், என்னால் புனிதமாகப்பட்டவை எனவே இங்கு தீர்த்தம் தெளிப்பதற்கோ, மந்திரங்களின் மூலம் புனிதமாக்க படுவதற்கோ எந்த அவசியமும் இல்லை, என்று கூறிவிட்டார் தெய்வமே தமக்கு உத்திரவளித்த பிறகு மன நிறைவோடு யாசகம் பெற்று வந்தார்.

அப்பொழுது குருகட்டியில், கோடைக்காலத்தின் தாக்கம் கடுமையாக இருந்தது போதுமான அளவு மழையின்றி, அந்த கிராம வாசிகள், தவித்துக் கொண்டு இருந்தார்கள் மஹராஜ் அவர்கள் "ரிஷ்ய சிருங்கர்" மந்திரத்தைக் கூறி அவ்வூர் மக்களை தொடர்ந்து ஜெபிக்க செய்தார். அதன் பயனாக அப் பகுதி முழுவதுமாக நல்ல மழை பொழிந்தது. உணவு சமைக்கப் பட்டவுடன் மஹராஜ் அவர்கள் ஆசீர்வதித்த பின்னரே அப்பிரசாதம் மற்றவர்க்கு வழங்கப்படும்.

ஒரு முறை மஹராஜ் உணவு உண்பதற்கு அமர்ந்தபின்னர், அச்சமயத்தில் அவருடைய கையை ஒரு தேள் தீண்டிவிட்டது. மஹராஜ் அதையும் பொருட்படுத்தாமல் , பசியோடு இருக்கும் அனைவரையும் உண்ணுமாறு உத்திரவிட்டார். ஆனால் அவருடைய கையை தேள் தீண்டி விட்டதால், அதனுடைய விஷம், மஹராஜ் உடலில் ஏறி விடுமோ, என்று அஞ்சி அனைவரும் உண்ண மறுத்தனர். அதை பார்த்த மஹராஜ், உடனடியாக ஒரு ஸ்லோகத்தை கூறினார். அதே ஸ்லோகத்தை அனைவரையும் கூறசொன்னார் அப்பொழுது அந்த நஞ்சு மஹராஜ்ஜை விட்டு நீங்கி விட்டது.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு நாள் மஹராஜ் சமாதி நிலையில் இருந்த பொழுது. அவருடைய தியானத்தில், ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபர் காட்சி அளித்தார். அப்போது அவருடைய கைகளில், எதிர்பாராத விதமாக, இறந்து பல மணி நேரங்கள் ஆன, அழுகிய உடலை உடைய பறவை ஒன்றை விழச்செய்தார். மஹராஜ் அதை தூக்கி எறிந்தார். அதன் பிறகு அந்த பறவையுடைய, முட்டைகள் மஹராஜ் அவர்களுடைய கைகளில் விழுந்தன. மஹராஜ் அவற்றையும் தூக்கி எறிந்துவிட்டார்.

அப்பொழுது, மஹராஜ் அவர்களிடம் ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபர், பரிசுத்தமில்லாத இரண்டு பொருட்கள், உன் கைகளில் விழுவதையே, உன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! ஆனால் என்னுடைய திரு உருவத்தின் மேல் பலரும் ஏராளனமான குப்பைகளைக் கொட்டுகின்றார்கள். முதலில் அவற்றை சரி செய்வாயாக! என்று கூறியவுடன் மகராஜ் உடனடியாக ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் திருவுருவ சிலைக்கு அருகில் வந்து பார்த்தவுடன், என்ன ஆச்சர்யம்! ஸ்ரீ தத்தரின் அங்கே ஒரு அற்புதம் நிகழ்ந்துக் கொண்டு இருந்தது. அத்திருவுவச் சிலையின் மேல் தனது கழிவுகளை இட்ட ஒரு பறவையை, ஒரு வௌவால் கொன்றுவிட்டது. உடனடியாக அந்த இடம் சுத்தம் செய்யப்பட்டது. மஹராஜ் உடனடியாக அந்த ஆலயத்திற்கு கதவுகளை பொருத்தினார்.

NOT FOR SALE

ஒரு நாள் கிருஷ்ணாநதி, மஹராஜ் அவர்களுக்கு காட்சி அளித்து, தமக்கு ஒரு பழம் வேண்டும் என்று கேட்டது. அப்பொழுது மஹராஜ், கிருஷ்ணாநதியை வணங்கி ஒரு பழத்தை சமர்ப்பித்தார். குருகட்டியில் அவர் தியானம் செய்த அந்த குகையில், ஒரு பெரிய ராஜ நாகம் ஒன்று நுழைந்து படுத்துகொண்டு இருந்தது. அதை பார்த்த மக்கள் அனைவரும் பயந்து விட்டார்கள்.

மஹராஜ் அவர்கள் அந்த நாகத்திடம் அமைதியாக திரும்பிச் செல்லும் படி உத்தரவிட்டார் அதுவும் உடனடியாக சென்றுவிட்டது. ஆனால் என்ன ஆச்சரியம்! அந்த ராஜநாகம் தினமும் ஒரு முறை அந்த குகைக்கு வந்து , மஹராஜ் அவர்களை தரிசித்துவிட்டு போகும்.! ஸ்வாமிகளும் அந்த நாகத்திடம், உன்னால் ஒருவருக்கும் தீங்கு நேரக்கூடாது. ! என்றார். தினமும்

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அந்த ராஜநாகம் குகைக்கு வந்து செல்வதை மக்கள் அறிந்துக் கொண்டனர் மஹராஜ் கூறியவாறே அது எவருக்குமே தீங்கு விளைவிக்கவில்லை.

ஒரு முறை சேஷோ மஹராஜ் என்பவர் இவ்வுலக வாழ்வின் துன்ங்களிலிருந்தும், எதிர்பாராத நேரும் விபத்துகளில் இருந்தும் முக்கியமாக பெண்கன் தங்களுக்கு எவ்வித ஆபத்து நேர்ந்தாலும் அவற்றிலிருந்து விடுபடவும், அனைவரையும் ஒரு கவசம் போல ரட்சித்து காப்பாற்றவும் , ஒரு ஸ்லோகத்தை இயற்றித் தருமாறு ஸ்ரீ வாசுதேவநந்த சரஸ்வதி சுவாமிகளை அன்போடு வேண்டிக் கொண்டார்.

அதை கூறியதைக் கேட்ட மஹராஜ் மக்கள் அனைவரையும் குறிப்பாக பெண்களையும் பாதுகாத்து ரட்சிக்க, ஸ்ரீ தத்தரின் கருணையால் ஒரு ஸ்லோகத்தை தருகிறேன்! இந்த ஸ்லோகம் அகோராத் கஷ்த்டோத்திரம் என்று அழைக்கக்கூடிய ஆபத்து தாரக ஸ்தோதிரம் என்ற இந்த ஸ்லோகத்தை நேர்மையுடன் பக்தியுடன் ஆத்மார்த்தமாக உச்சாடனம் செய்பவரை ஒரு ஆபத்தும் அண்டாது என்று கூறிவிட்டு மஹராஜ் பிரசித்திப் பெற்ற ஸ்லோகத்தை நம் அனைவருக்கும் வழங்கினார்.

நாம் இப்பொழுது அந்த ஆற்றல் வாய்ந்த ஆபத்து தாரக ஸ்லோகத்தை கற்று, தினமும் தொடர்ந்து சொல்லி வருவதன் மூலம் நம்மை எதிர்நோக்கிவரும் ஆபத்திலிருந்து விடுபடுவோமாக!

## ஆபத்து தாரக ஸ்ஸோதிரம்.

ஸ்ரீ வாஸுதேவானந்த சரஸ்வதி இயற்றிய
**ஸ்ரீ தத்தாத்ரேய ஆபத்துத்தாரஹ ஸ்தோத்திரம்**
காலை மாலை பக்தியுடன் பாராயணம் செய்தால்
அனைத்துக் கஷ்டங்களும் விலகும்.

ஸ்ரீ பாத வல்லபத்வம் ஸதைவ
ஸ்ரீ தத்தாஸ்மான் பாஹி தேவாதிதேவ
பாவக்ராஹ்ய க்லேச ஹாரின் ஸுகீர்த்தே
கோராத்கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே 1

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

த்வம் நோ மாதா த்வம் பிதாப் தோதிபஸ்த்வம்
த்ராதா யோக க்ஷேமக்ருத் ஸத்குருஸ்த்வம்
த்வம் ஸர்வஸ்வம் நோ ப்ரபோ விஸ்வமூர்த்தே
**கோராத்கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே** 2

பாபம் தாபம் வ்யாதிமாதிஞ்ச தைன்யம்
பீதிம் க்லேசம் த்வம் ஹரா ஷுத்வதன்யம்
த்ராதாரம் நோ வீக்ஷ ஈஷாஸ்த ஜூர்தே
**கோராத்கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே** 3

நான்யஸ் த்ராதா நாபி தாதா நபர்த்தா
த்வத்தோ தேவத்வம் சரண்யோக ஹர்தா
குர்வாத்ரேயா அநுக்ரஹம் பூர்ணராதே
**கோராத்கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே** 4

தர்மே ப்ரீதிம் ஸந்மதிம் தேவ பக்திம்
ஸத்சங்காப்திம் தேஹி புக்திஞ்ச முக்திம்
பாவா சக்திஞ்சாகிலானந்த மூர்த்தே
**கோராத்கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே** 5

ஸ்லோக பஞ்சகமேதத்யோ லோகமங்கள வர்த்தனம்
பிரபடேத் நியதோ பக்த்யாச ஸ்ரீதத்த ப்ரியோ பவேத்.

*ஓ! ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா! ஸ்ரீ தத்தாத்ரேயா! என்னை எப்போதும் காப்பாற்றுமாறு உன்னை வேண்டுகிறேன்! தயை கூர்ந்து எனது ப்ராத்தனையை ஏற்றுக் கொண்டு என்னை எதிர் நோக்கிவரும் துன்பங்களை, அழித்து என்னுடைய ஆத்மாவை விடுதலை அடையச் செய்வாயாக!*

*நீரே எமது தாயும், தந்தையும், மிக நெருங்கிய உறவும் பசியறிந்து, உணவூட்டுபவரும், பாதுகாப்பவரும், வழிகாட்டுபவரும் ஆவீர்கள்!*

*நீரே என்னுடைய சர்வமும் ஆவீர், என்னுடைய பாவங்கள், கஷ்டங்கள், வ்யாதிகள், பயம், வறுமை மற்றும் உடல் சார்ந்து கோளாறுகள் என்னை விட்டு உடனடியாக நீங்குவதற்கு அருள் செய்வாயாக! எங்கும் நிறைந்த பரம்பொருளே! என்னை பாதுகாப்பவர் எனது தந்தையோ, கணவரோ,*

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

உறவினரோ வேறு எவருமே இல்லை, உன்னையன்றி எனக்கு வேறு எந்தத்துனையும் இல்லை. ஆதலால் நான் உன்னை சரணடைகின்றேன்! இப்பிரபஞ்சத்தை காப்பவரே, எனக்கு உயர்ந்த ஞானத்தையும், சிறந்த பக்தியையும், உறுதியான நம்பிக்கையும் நல்ல நண்பர்களும், அளித்து பின்னர் முக்தியும் வழங்க வேண்டுகிறேன்.

மஹராஜை தரிசனம் செய்வதற்கு குருகட்டி செல்ல வேண்டும் என்றால் கிருஷ்ணாநதியை படகில் கடக்க வேண்டும். மஹராஜ் அங்கு தங்கி இருந்ததை கேள்விப்பட்டு , ஏராளமான மக்கள் அவரை தரிசிக்க, ஆற்றை கடந்து வந்துக் கொண்டி இருந்தார்கள். அவ்வாறு ஆற்றை கடந்து வருபவர் களிடம் ஆற்றில் படகை செலுத்துபவர்கள் பேராசையால், மிகுந்த தொகையை வசூலித்துக் கொண்டு இருந்தனர். ஒரு நாள் மஹராஜ் படகோட்டிகளை அழைத்து, ஒருவருக்கு ஒரு ரூபாய்க்கு மேல் வசூலிக்க கூடாது! தனியாக பயணம் செய்ய விரும்பினால் அவர்களிடம் 8ரூபாய் வசூலித்துக் கொள்ளுங் கள் என்ற இந்த உத்திரவை மீறினால் இந்த கிருஷ்ணா நதியில், நீ முழுகி விடுவாய்! என்று எச்சரித்தார்.

ஒரு முறை, ஒரு அரசு அதிகாரி தன்னுடைய குடும்பத்து டன் தனி படகு ஒன்றில் புறப்பட்டு, மகராஜை தரிசிக்க வந்துக் கொண்டு இருந்தார். வரும் வழியில் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக, கிருஷ்ணா நதி வெள்ள பெருக்கெடுத்து ஓடியதால் அந்த படகு முழுகிவிடும் அபாயத்திலிருந்தது. அப்போழுது அந்த அரசு அதிகாரி மஹராஜ் அவர்களிடம், நான் என் குடும்பத்தாரோடு தங்களை தரிசித்துவிட்டு, பாதுகாப்பாக கரை திரும்ப வேண்டும்! அவ்வாறு திரும்பி னால், மஹா பூஜை ஒன்று செய்து, மஹராஜ் அவர்களின் பெயரில் அன்னதானம் வழங்குவேன்! என்று வேண்டிக் கொண்டார்.

என்ன ஆச்சரியம் அவர்கள் பிராயாணம் செய்து கொண் டிருந்த படகு முழுவதுமாக, தண்ணீரால் சூழப்பட்டு முழ்கி விடும் நிலையிலிருந்தபோது போழுது திடீர் ஏதோஒரு சக்தி அந்த ஒன்று படகை திசை திருப்பி, சரியான திசையில்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அழைத்து சென்றது. அதுமட்டும் மல்லாமல், அந்த படகில் நிரம்பிய நீர் முழுவதும் சில வினாடிகளில் தாமாகவே வெளியேறிவிட்டது. அந்த அரசு அதிகாரி தம்மையும் தம் குடும்பத்தினரையும் காப்பாற்றிய தற்கு நன்றி தெரிவித்து அவர் வாக்களித்த படியே அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்தார்.

பெரும் வணிகக் குடும்பத்தை சேர்ந்த, துல்ஜா ராம் ரெய்ச்சூரிலிருந்து தனது குடும்பத்தினரோடு, மஹராஜ் அவர்களின் சாதுர் மாஸ்ய விரதத்திற்காக தேவைப்படும் சகலவிதமான மளிகைப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு குருகட்டி வந்தார். அவர் மஹராஜை தரிசித்து முடிக்கும் வரையில், அமைதியாக இருந்தார்.

பின்னர் விடைப்பெற்று செல்லும் பொழுது மஹராஜ் அவர்களிடம் ஸ்வாமி நீண்ட காலமாக என்னுடைய மனைவியை, ஒரு பிசாசு பிடித்துக்கொண்டு இருந்தது.! தற்பொழுது புதிதாக திருமணம் ஆகி வந்த எனது மருமகளையும் அந்த பிசாசு விட்டுவைக்க வில்லை! என்னுடைய வம்சத்தினர் இனியும் துன்புறுவதை நான் விரும்பவில்லை! தாங்கள் தான் இந்த துன்பதிலிருந்து என் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும்! என்றார். இதை கேட்டுக் கொண்டு இருந்த மஹராஜ், பதில் எதுவும் அளிக்காமல் மௌனமாகவே இருந்தார்.

அச்சமயத்தில் அவர் புறப்படுதருவாயில் இருந்ததால் ஸ்வாமிகளின் மௌனம் அவரை வேதனையுறச் செய்தது. கந்தாபூவா ஒரு சாக்கு துணியை அவரிடம் அளித்தார். அவர் துல்ஜா ராமிடம், "மஹராஜ் தினமும் இந்த சாக்குதுணியில் படுத்து உறங்குவார். இதை சாதாரணமாக எண்ணிவிடதே! உன் வீட்டின் பூஜை அறையில், இந்த சாக்கு துணியை பக்திரமாக வைத்துக் கொள்! தினமும் பூஜை செய்யும் பொழுது இந்த சாக்கு துணியின், ஒரு சிறு பகுதியை, ஒரு குவளை நீரில் நனைத்து, அந்த நீரை உன் மனைவியையும், மருமகளையும் பருகச் சொல்! என்று கூறி துல்ஜாராம் குடும்பத்தினரை மன நிறைவோடு அனுப்பி வைத்தார். தனது இல்லத்திற்கு சென்ற துல்ஜாராம், கந்தாபூவா கூறியவாறே, செய்து முடித்து அப்பிரசாதத்தை பருகவைத்தார் நீண்டகாலமாக அவர்களை

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

பிடித்துவந்த பிசாசு, பிரசாதநீரை பருகியவுடன், எட்டே நாட்களில் அவரை விட்டு ஓடிவிட்டது. துலஜாராம், மஹராஜ் அவர்களின் சரீரத்தை ஸ்பரிசித்த அந்த சாக்கு துணி மகிமையைப் பற்றி அனைவருக்கு எடுத்துரைத்தார்.

ஒரு நாள் காகம் ஒன்று, மஹராஜ் அவர்களை தன்னுடைய அலகால் மூன்று முறை தீண்டியது அதை கவனித்துக் கொண்டு இருந்த அனைவரையும் பார்த்து, மஹராஜ் அவர்கள் உங்களுக்கு இப்போது நான் ஒரு உண்மையைக் கூறவிரும்பு கிறேன்.! காக்கைகள் தம்முடைய அலகினால், மூன்று முறை நம்மை தீண்டினால் ஆறு மாதத்திற்குள் நமது முடிவு தீர்மானிக்கப்பட்டு விடும் நம்முடைய உடலின் மீதும் நமக்கு ஒரு அதிகாரமும் இல்லை. இதைக் கேட்டவுடன் அவருடைய பக்தர்கள் அனைவரும் இதனால், நம் ஸ்வாமிக்கு என்ன தீங்கு நேருமோ! என்று அஞ்சினார்கள். அவர்களுடைய உணர்வை நன்றாக புரிந்துக் கொண்ட ஸ்வாமி, “மானுடராக பிறந்த எவருக்குமே, தம்முடைய உடல் அழியாமல் இருக்கச்செய்ய எந்த அதிகாரமும் இல்லை! என்றார்.

மஹராஜை காண ஒரு சந்நியாசி வந்து இருந்தார். அவர் தமக்கு யோக்கலையின் சூக்ஷமங்களை தெரியபடுத்துமாறு வேண்டினார். மஹராஜ் அவருடைய உடல்நிலையை பரி சோதித்து விட்டு, அதற்கு அவர் உடலால் தகுதியானவர் அல்ல என்று கூறிவிட்டார் உடனே அந்த சந்நியாசிக்கு கோபம் வந்து விட்டது! அவர், எனக்கு தகுதி இருக்கிறதா, இல்லையா யென்பதை தீர்மானம் செய்யும் அதிகாரம், இவருக்கு யார் வழங்கினார்கள்! என்று அனைவரின் முன்னிலையிலும், கூறிவிட்டு மிக விரைவாக சென்று படகில் ஏறி அமர்ந்தார்.

கரையை நெருங்கும் வேளையில் அந்த படகு ஒரு பாறையில் மோதிவிட்டது. அந்த சன்யாசிக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. அது மட்டும் அல்லாமல், அவருடைய கையில் வைத்துக் கொண்டு இருந்த தண்டமும். கமண்டலமும் விழுந்து நொறுங்கி விட்டன. அதை பார்த்துக் கொண்டு இருந்த ஸ்வாமியின் பக்தர்கள், நமது ஸ்வாமியுடன் இவர் இவ்வாறு தகாத முறையில் நடந்துக் கொண்டதால், இறைவனே இத்தண்டனையை இவருக்கு வழங்கிவிட்டார் என்றனர்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஒரு சமயம் லஷ்மணன் ராவ் வைதீயா என்பவர், தமக்கு பிறந்த குழந்தைகள் ஒருவர்பின் ஒருவராக இறந்துவிட்டதால் மனமுடைந்து மஹராஜ் அவர்களைக் காண வந்திருந்தார். அவருடைய அன்னையாரையும், மனைவியையும் அழைத்துக் கொண்டு ரெய்ச்சூரிலிருந்து வந்தார். மஹராஜ் அவரிருடைய அன்னையாரிடம், உங்கள் குல வழக்கப்படி நாகதேவதை வழிபாட்டை புறக்கணித்து விட்டீர்கள்! நீங்கள் தொடர்ந்து, நாகதேவதையை பூஜை செய்து, ஐந்து பஞ்சமி திதியை கடந்து, பூஜை முடித்த பின்னால் தங்கத்தால் ஆன சிறிய நாகத்தின் உருவத்தை ஷ்ராவன் என்று சொல்லப்படும் மழைக்காலத்தில் எவருக்காவது தானமாகத் தரவேண்டும் என்று மஹராஜ் கூறியது போலவே லஷ்மண் ராவின் குடும்பத்தினர் முறையாக நாகபூஜை செய்து வந்தார் ஐந்தாவது பஞ்சமி தினத்தில் அவர்களுக்கு முன்னால் ஒரு பெரிய நாகம் வந்து நின்றது அதை பார்த்து பயந்த குடும்பத்தினர் ஓட ஆரம்பித்தனர்.

ஆனால் அவருடையக் காட்சியில், ஸ்வாமி தோன்றி இத்தனை நாட்கள் அவர்கள் பக்தியோடு செய்த பூஜையை, ஆசிர்வதிக்கவே நாகதேவதை வந்து இருப்பதாகவும், அதை கண்டு அஞ்ச தேவை இல்லை! என்றும் கூறினார் அவர்கள் அந்த நாகத்தின் முன்னால் பக்தியோடு, ஒரு குவளையில் பால்வைத்தனர். அதை ஏற்றுக் கொண்டு நாகதேவதை அங்கிருந்து மறைந்து விட்டார்.

அன்று இரவே அவர்கள் கனவில், அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறக்க போவதாகவும் அவன் உயர்ந்த ஞானத்தையும், நீண்ட ஆயுளையும் கொண்டு அபார சக்தியையும் கொண்டவானாக இருப்பான்! என்று ஆசிர்வத்தார். மஹராஜ் அவர்களின் வாக்கு, எவ்வாறு பொய்யாகும். அடுத்த வருடமே அவர்களுக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. மஹராஜ் அவர்களின் கருணையால் பிறந்த குழந்தை ஆதலால் அதற்கு வாசுதேவ் என்ற பெயரிட்டனர்.

ஒரு நாள், தமிழ்நாட்டிலிருந்து வழுவூர் என்ற இடத்திலிருந்து தாமோதர ஸ்வாமி, வருகை தந்திருந்தார். அங்கிருந்து புறப்படுவதற்கு முன், அவர் மஹராஜ் அவரிடம், "தாங்கள்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விரைவில் வழுவூருக்கு வந்து அங்கு தரிசனம் அளிக்க வேண்டும்," என்று வேண்டிக்கொண்டார் என்ன ஆச்சரியம்! தாமோதர சுவாமி பல நாட்களுக்கு பிறகு வழுவூரை அடைந்ததும், மஹராஜ் அவர்கள் தாம் இருந்த இடத்தில் இருந்துக் கொண்டே, அதே சமயத்தில், வழுவூரில் காட்சி அளித்தார். மறுநாள் வழுவூரின் மக்களில் சிலர் தமக்கும் அந்த காட்சி கிடைத்தாக கூறினார்கள்.

ஒரு நாள் மஹராஜ் பூரணாநதிக்கரையில், அமைந்த ப்ராமினி என்ற இடத்தில் ஹனுமான் ஜெயந்தியை கொண்டாடினார். அங்கிருந்து காத்ரி என்ற கிராமத்திற்கு சென்றார். அங்கு ஒரு அற்புதத்தை நிகழ்த்தினாரார். அந்த கிராமத்தில் ஒரு மிகபெரிய நிலத்தின் ஒரு பகுதி விவசாயம் செய்ய படாமலேயே இருந்து வந்தது ஒரு சில ர் முயற்றி செய்து அங்கு விவசாயத்தில் ஈடுபட்டனர்.

அவ்வாறு விவசாயத்தில் ஈடுபட்டவர்கள், அன்று இரவே இறந்துவிட்டார்கள். அந்த நிலத்திற்கு சொந்தகாரர் காலாராம் சௌத்ரி, மஹராஜ் அவர்களை வேண்டிக் கொண்டார் ! மஹராஜ் தனது ஞானதிருஷ்டியில், நடந்தவற்றை அறிந்துக் கொண்டார். அவர் காலாராமிடம் "ஒரு இஸ்லாமிய பக்கிரி. உன் நிலத்தில் அகால மரணமடைந்து விட்டார்.

அதனால் அவர் அங்கு ஆவியாக அலைந்துக் கொண்டு இருப்பதால், அந்த நிலத்தை பயிரிடுவதற்கு எவர் முன் வந்தாலும், அந்த ஆவி அவரைக் கொன்றுவிடுகிறது! அதற்கு ஒரே ஒரு உபாயம் தான் உள்ளது.! அந்த நிலத்தில் நமாஸ் என்று சொல்லப்படும் தொழுகையை நடத்த வேண்டும் அங்கு தொழுகையை செய்யவரும் இஸ்லாமிய பக்கிரிகள் அனைவருக்கும், தராளமாக உணவு வழங்கப்படவேண்டும்! இந்த முறையை வருடத்திற்கு ஒரு முறை, கடைபிடிக்க வேண்டும் என்றார்.

மஹராஜ் அவர்கள், அஷ்டமா சித்திகளையும் தன்னகத்தே கொண்டவர், தேவையான சூழ்நிலையில் மட்டுமே அவர்கள் அற்புதங்களை செய்து காட்டுவார், அவ்வாறு ஒரு முறை, இறந்த ஒரு குழந்தையை அவர் உயிரோடு எழுப்பிய

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அற்புதம் நிகழ்த்தினார். நாம் அந்த அற்புதத்தை இப்போது காண்போம். ஸ்வாமிகள் கோதாவரி நதிக்கரையில், அமைந் துள்ள கோண்டு என்ற இடத்திற்கு சென்றார் அங்கு ஸ்ரீ ரேணுகாம்பாள் தேவியை தரிசனம் செய்தார், அந்த கிராமத் தில் அம்பாதாஸ் என்பவர் மஹா ருத்ரா யாகம் ஒன்றை நடத்த விரும்பினார் மஹராஜ் அவர்கள் அதற்கு அனுமதி அளித்து விட்டார்கள்.

ஸ்ரீ சௌத்ரி என்பவர் அந்த யாகத்திற்கான முழுமையான ஏற்பாடுகளை செய்வதாய் , பொறுப்பேற்றுக் கொண்டார் யாகம் நல்லபடியாக நிறைவடைந்த அன்று, பூரணாகுதி அளிக்க வேண்டிய தினமாகும். திடீர் என்று சௌதிரியின் இரண்டு வயது பெண் குழந்தை இறந்து விட்டது. இந்த சமயத்தில் யாகத்தில் அனைவருக்கும் அளிக்க வேண்டிய, தக்ஷிணை முழுவதுமாக, சௌத்ரியின் கையில் இருந்தது. அவருக்கு இப்போது என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. ஆகையால் அவர் அன்று யாக பூஜைக்கு சொல்லவில்லை.

இச்செய்கையை தனது திருஷ்டியால் அறிந்துக் கொண்ட மஹராஜ், நேராக அவரில் வீட்டிற்குச் சென்று கமலண்டத்தி லிருந்து, சிறிது அளவு நீரை எடுத்து தனது கைகளால் அந்த குழந்தையின் மேல் தெளித்தார். என்ன அற்புதம்! இறந்து பல மணி நேரம் ஆகிய, அந்த குழந்தை சுறுசுறுப்பாக எழுந்து உட்கார்ந்து கொண்டது. அதை பார்த்த அனைவருமே, மஹாராஜைப் போற்றி வணங்கினார்கள்.ம்சௌத்திரி அவர் களும் மகிழ்வோடும் மனநிறைவோடும் தமக்கு அளிக்கப் பட்ட பொறுப்பை நிறைவேற்ற்றினார்.

மஹராஜ் உக்கட்காவு என்ற இடத்திற்கு சென்றார் அங்கு பஞ்சாலேஸ்வர் ஆலயத்தில் தரிசனம் செய்தார் அங்கிருந்து புகழ்பெற்ற பைத்தான் என்ற கிராமத்தை அடைந்தார். பைத் தான் என்ற கிராமம், மஹாஞானியாகிய ஸ்ரீ ஏக்நாத் மஹராஜ் அவர்களால் உலகப்புகழ் பெற்று விளங்குகிறது. அவர்களின் மடத்திற்கு சென்று யாசகம் பெற்றுக் கொண்டார். ஏக்நாத் மஹராஜ் பைதானில் ஒரு ஆலயத்தை எழுப்பி, அங்கு ஒரு

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விக்ரஹகத்தையும் பிரதிஷ்டை செய்தார். ஆனால் ஏதே ஒரு காரணத்தால், அந்த விக்ரஹம் அங்கிருந்து அகற்றப்பட்டு, மீண்டும் பிரதிஷ்டை செய்யப்படாமல் இருந்தது அவ்வாறு சுமார் பனிரெண்டு ஓடிவிட்டது மஹராஜ் அந்த இடத்தை பார்வையிட்டு, அவ்வூர் மக்களிடம், "அந்த விக்ரஹம் முதல் முதலாக இருந்த இடத்திலேயே, மீண்டும் ஸ்தாபிக்கப்பட வேண்டும்! என்றார். மஹராஜ் அவர்களின் உத்திரவின்படி, ஏக்நாத் மஹராஜின் திருவுருவச் சிலை ஸ்தாபிக்கப்பட்டது, மஹராஜ் அனைவரிடமும் ஸ்ரீ ஏக்நாத் மஹராஜின் ஆத்மா, தனித்துவம் வாய்ந்தது! அவருடைய ஆத்மா மிகவும் உயர்ந்த குணத்தை கொண்டு இருப்பதால் இன்றளவும் ஏக்நாத் மஹராஜ் சூக்ஷுமசரிரத்தில் பைத்தானில் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறார்.! என்றார்.

பின்னர் சிக்கல்தானாவை வந்து அடைந்தார், அவர் அன்று இரவு 11 மணி வரை பக்தர்கள் கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளித்தார் அதன் பிறகு மக்கள் அனைவரும், ஆலயத்தில் மகராஜ் அவர்கள் ஓய்வெடுப்பதால் ஆலயத்தை பூட்டி விட்டு தங்களுடைய இல்லங்களுக்குச் சென்று விட்டார்கள். மஹராஜ் அவர்கள் அப்போது, அன்று இரவு முழுவதும், தனியாக இருந்தார்.

மறு நாள் அதிகாலை பூஜைக்காக, ஆலயத்தை திறந்தவர் கள் அதிர்ச்சி அடைந்தார்கள்! காரணம், மஹராஜ் அங்கு இல்லை, ஆலயத்தின் அர்ச்சகர்கள் அப்பொழுதுதான் அங்கு வந்து கதவுகளில் பெரிய பூட்டுகளை திறந்தார்கள். அப்படி யிருக்க மஹராஜ் எப்படி வெளியே சென்று இருக்க முடியும் என்று அதிசயத்தார்கள்.

பின் பல மணி நேரங்கள் கழித்தே நடந்த உண்மையை உணர்ந்துக் கொண்டார்கள் அவர்கள் ஆலயக் கதவுகளை திறக்கும் பொழுதே மஹாராஜ் அந்த இடத்திலிருந்து, ஐம்பது மைல் தொலைவில் உள்ள சிக்கல்தாவை அடைந்துவிட்டார். இது எவ்வாறு நடந்திருக்கும் என்று அனைவரும் ஆச்சரியப் பட்டார்கள்! மஹராஜ் தனது ११வது சாதுர்மாசிய விரதத்தை சிக்கல்தாவில் துவங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

# இருபத்திரெண்டாவது சாதுர்மாஸ்ய விரதம் சிக்கல்தா – 1912

இந்தூர் மாநிலத்தில் புனித நர்மதா நதிகரையில், சிக்கல்தா என்ற இடம் அமைந்துள்ளது. அந்த இடத்தை ஆண்ட தாகூர் என்ற அரசர், மஹராஜ் அவர்களுடைய தீவிரபக்தர் ஆவார். மஹராஜ் அந்த இடத்தில், தனது சாதுர் மாஸ்ய விரதத்தை தொடங்கி இருக்கிறார் என்ற செய்தியைக் கேட்ட உடன் மக்கள் கூட்டம் வெள்ளமாக அந்த இடத்தை சூழ்ந்துக் கொண்டார்கள் சாதுர்மாஸ்ய விரதத்தை துவங்கும் முன்னர் மஹரிஷியான வியாசருக்கு பூஜை நடத்தப்பட்டது எதிர்பாராத விதமாக அந்த இடம் காலரா நோயால் சூழப்பட்டது.

ஒரு நாள் ஒரு பக்தர் மஹராஜ் அவர்களிடம் பக்தியின் நிலைப்பாடுகளை கூறித்து சில கேள்விகளைக் கேட்டார். அதற்கு மஹராஜ் அவர்கள், ஸ்ரீ ஞானேஷ்வர் எழுதிய ஞானேஷ்வரி, ஸ்ரீமத் பாகவதம், பக்தவிஜயா இவற்றை தொடர்ந்து படித்துக் கொண்டு இருந்தால், ஆத்மா தூய்மை அடைந்து விடும் என்று கூறினார் அதற்கு சாதாரணமாக நடந்த ஒரு நிகழ்ச்சியை, அனைவருக்கும் தெரிவித்தார் மாணவர் ஒருவர் மஹராஜை சந்திப்பதற்காக, ஒரு முறை வந்தார் அந்த மாணவர் மஹராஜ் அவர்களிடம், தாம் எழுதப் போகும் தேர்வுகள், எல்லாவற்றிலும் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற வேண்டும் என்று வேண்டினார். முதல் இரண்டு தேர்வுகளில் அவர் அதிகமான மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைந்தார். அதன் பிறகு அந்த மாணவர் ஆதிசங்கரர், மாத்வாச்சாரியர், இராமானுஜர், பகவத்கீதா இவற்றை முறை யாக பயின்றார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மஹராஜ் அவர்கள் அந்த பக்தரிடம் "அனேக நூல்களைப் பயின்று இருக்கிறாய்.! இவற்றில் உண்மையான தத்துக் கொள்கை எது என்று கூற முடியுமா! என்றுக் கேட்டார். அந்த பக்தரால் பதில் எதுவும் கூற இயலவில்லை.! மஹராஜ் அவர்கள் ஒரு கதையில் மூலம் இந்த உண்மையை புரியவைத்தார்.

இரண்டு மாணவர்கள், ஒரு குருவிடம் பயின்று வந்தார்கள். ஒரு நாள் குரு அவ்ர்களிடம், "தத்வமசி என்பதன் அர்த்தத்தைக் கேட்டார். அவர்களின் ஒருவன் தத் +த்வம் + அசி இவற்றின் பொருள் நீயே பிரம்மம் என்பதாகும், என்றான் மற்றொருவன் தஸ்யா + தத்வம் + அசி, இதன் பொருள் நீ இறைவனின் பக்தன் ஆவாய்! என்றான் இவர்கள் இருவரில் இரு விதமான அர்த்தங்களைக் கேட்டு குரு மிகவும் ஆச்சரியப் பட்டார். தூய்மை இல்லாத ஆத்மா, கர்ம யோகத்தின் மூலமாக துய்மைப்படுத்தபடும். அதுவே மெய் ஞானத்தை அறியக் கூடிய வழியாகும் ஒரு முறையை அந்த ஊர் மன்னன் மஹராஜ் அவர்களை தரிசிக்க வந்து இருந்தார் அப்பொழுது மஹராஜ் மாணவர்களுக்கு, வேதாந்தத்தைப் போதித்துக் கொண்டு இருந்தார்.

அரசன் உடனே மஹராஜை தரிசிக்க வேண்டும் என்று தனது உதவியாளரை அனுப்பிவைத்தார் ஆனால் மஹராஜ், அவர்கள் வகுப்புகள் முடியும்வரை தரிசனத்திற்கு அனுமதி யில்லை என்று கூறினார் அவ்வாறு கூறிய மஹராஜ் தன்னுடைய (நிக்ஷ்ருக்தா) தீர்மானத்தை விட்டு விலகுதல் என்பதாகும் (Absence of desire) இப்பொருளைப் பற்றி தன்னுடைய மாணவர்களுக்கு விளக்கினார் ஒரு தன்னுடைய வாழ்நாளில் தாம், மேற்க்கொண்ட தீர்மானத்தை ஒருபோழுதும் தவிர்க்கக்கூடாது.!

அதிலிருந்து பின் வாங்கவும் கூடாது எவருக்காகவும் அந்த தீர்மானத்தை விட்டுக் கொடுக்கவும் கூடாது. ஒரு முறை ஆலயத்தின் தானிய கிடங்கிலிருந்து ஒரு காய்ந்த மிளகாய் தாழ்வாரத்தில் வந்து விழுந்தது மஹராஜ் விரைந்து வந்து அந்த மிளகாயை எடுத்துக் கொண்டார். அக்கிடங்கின் காப்பாளரைப் பார்த்து "இறைவனுக்கு சொந்தமான பொருள்களி

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

லிருந்து ஒன்றைக்கூட அலட்சியம் செய்ய கூடாது.! ஒவ்வொறு வினாடியும் ஞானம் என்ற செல்வத்தை பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டே இருக்கவேண்டும்.! மஹராஜ் அவர் கள், அங்கு கிட்டதட்ட ஆறு மாதங்கள் தங்கி இருந்தார்.

பின்னர் அங்கிருந்து கத்தார்கேடா என்ற இடத்திற்கு சென்றார் அங்கு அக்னி ஹோத்திரி என்பவரைப் பார்த்து, "காயத்திரி மந்திரத்தை முறையாக ஜபிக்கிறாயா? என்றுக் கேட்டார் அக்னிஹோத்திரி இல்லை என்று ஒப்புக் கொண் டார் அவர் தமககு வருமானம் எதுவுமில்லை என்று கூறியதும் மகராஜ் தக்க சமயம் வாய்க்கும் போது, அவருக்கு வருமானம் கிடைக்கும் என்று ஆசிர்வதித்தார், பின்னர் அவரிடம் "இது வரை நீ தொடர்ந்து செய்து கொண்டிருந்த அக்னிதேவனின் ஆரத்தியை தொடர்ந்து செய் என்று கூறினார்" மஹராஜ் சிக்கலதாவிலிருந்து புறப்பட்டு, கருடேஷ்வரை நோக்கி சென்றார் அவர் சென்ற வழி முழுவதுமே காட்டுப்பகுதியாக இருந்தது. அந்த காட்டுப்பகுதியில் அஷ்வத்தாமனை சந்தித்தார் அங்கிருந்த, ஒரு தேவதை மஹராஜ் அவர்களை திக்குதெரியாத காட்டுப்பகுதியிலிருந்து அழைத்துச் சொன்று கருடேஷ்வர் என்ற இடத்தை காண்பித்தாள் உடனே அந்த தேவதை மறைந்து விட்டாள். மஹராஜ் தமது இருபத்தி மூன்றாவதும் இறுதியான தும் சாதுர் மாஸ்ய விரதத்தை, கருடேஷ்வரர் என்ற புண்ணிய ஸ்தலத்தில் துவங்கினார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

## இருபத்திமூன்றாவது சாதுர்மாஸ்ய விரதம் – 1913 – 1914

**கருடேஷ்வர், பரோடா**

புனித நர்மதா நதிக்கரையில் அமைந்த அழகிய, தெய்வீக ஸ்தலமாகிய, ஸ்ரீ கருடேஷ்வர் என்ற சர்வேஸ்வரருடைய திருத்தலத்தில், ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள், தமது 23வதும், இறுதியானதும் ஆன, சாதுர்மாஸ்ய விரதத்தை துவங்கினார்.

இத்திருத்தலத்தில் கருடதேவர், ஸ்ரீ மகாதேவரைக் குறித்து கடுமையான தவம் செய்து பல வரங்கள் பெற்றதால், இத்திருத்தலம் கருடேஷ்வர் என்று அழைக்கப்படுகின்றது.

மகராஜ் அவர்கள் சாதுர்மாஸ்ய விரதத்தை, கருடேஷ் வரில் துவங்கி உள்ளார் என்ற செய்தியைக் கேட்டு, பல சிற்றுர்களில் இருந்தும், ஏராளமான மக்கள் இத்திருத்தலத்திற்கு வரத் துவங்கினார்கள். மகராஜ் அவர்கள் சாதுர்மாஸ்ய விரதத்தை மேற்கொண்ட அனைத்து திருத்தலங்களும், இன்று பிரசித்திபெற்றதாக விளங்குகின்றன. அத்திருத்தலங்கள்.

அனைவருடைய கோரிக்கைகளும் நிறைவேற்றக்கூடிய தாக அமைந்ததால், அத்திருத்தலங்கள் யாவும் மிகப் பெரிய புகழ் மிக்கநகரங்களாக, இன்று பிரபலமாகிவிட்டன. இத் தகைய திருத்தலங்கள் ஏராளமான மக்களுக்கு தொழில் வசதி களையும், வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக் கின்றது. இந்த முறையில், தமது 23வது சாதுர்மாஸ்ய விரதத்தை, கருடேஷ்வர் என்ற சிற்றூரில் துவங்கியதால், இன்றளவும் பாவங்களைப் போக்கும் புண்ணிய திருத்தலமாக கருடேஷ்வர் விளங்குகின்றது.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அச்சமயம் மிகுந்த கோடை காலமாக இருந்ததால், மகராஜ் தங்குவதற்கான ஒரு குடிசையை, பக்தர்கள் உருவாக்கி அளித்தனர். கருடேஷ்வர் ஆலயத்தில், ஒரு சித்தர், அங்கிருந்த மரத்தடியில் வாழ்ந்து வந்தார். அவர் ஸ்ரீவாசுதேவ மகராஜ் மகா சமாதி அடையும் வரை உயிருடன் இருந்தார்.

மகராஜ் தமது போதனைகளை, சாஸ்திர விதிமுறைகளை, உபநிஷத்துகளின் விளக்கங்களை, அனைவருக்கும் போதித்தார். கருடேஷ்வருக்கு அருகில் பரோடா (Baroda) என்ற பெரிய நகரம் அமைந்திருந்தால், அங்கிருந்த மக்கள் திரண்டுவந்து, மகராஜ் அவர்களை தரிசித்தனர். நீண்ட தொலைவில் இருந்து வரும் பக்தர்களுக்காக, தங்கும் வசதி கூட அப்பகுதியில் அதுவரை இல்லை, மகராஜ் அவர்களுடைய பக்தர்களுக்கு துன்பம் நேரக்கூடாது என்பதற்காக, புதிதாக தங்கும் விடுதிகள் விரைந்து கட்டப்பட்டன.

பக்தர்கள் அளிக்கும் காணிக்கையை வைத்து இத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உணவுப் பொருட்களும், மளிகைப் பொருட்களும், ஏராளமான பழ வகைகளும், பக்தர்களால் காணிக்கையாக குவித்து வைக்கப்பட்டன. மகராஜ் அவர்கள் அவற்றை, ஆசீர்வதித்து பக்தர்களுக்கு வழங்க உத்தரவிடுவார். மளிகைப் பொருட்களைக் கொண்டு, சமைத்து அனைவருக்கும் உணவளிக்கச் சொல்வார். அவர் தனது வயிற்றுப் பசியை போக்க ஒரு குவளை நீர் மோரும், சிறிதளவு காய்கறியும், ஒரு கைப்பிடி அரிசிச் சாதமும் மட்டுமே உண்பார். சந்யாச தர்மத்தை ஏற்றுக் கொண்டவர்கள், உணவை ருசித்து சாப்பிடக்கூடாது! உணவில் காரம் மற்றும் சுவையை அதிகமாக சேர்க்காமல் உண்ண வேண்டும்! அப்போது தான் புலன்களை அடக்கி தியானம் செய்ய முடியும்! என்று கூறுவார்.

மகராஜ் கருடேஷ்வருக்கு, முதன் முதலாக வருகை தந்தபோது அங்கு தினமும் ஐந்து அல்லது பத்து பேர்கள் மட்டுமே, அங்குள்ள மகாதேவரின் ஆலயத்தை தரிசிக்க வந்து கொண்டிருந்தனர். மகராஜ் அவர்களின் வருகைக்குப்பின்னர் தினமும் சுமார் (400) நானூறு பேர்களுக்கும் அதிகமான

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மக்கள், பல ஊர்களில் இருந்தும் கருடேஷ்வரருக்கு இன்றளவும் வந்து கொண்டிருக்கின்றனர்.

மகான்களின் அன்புக்கு பஞ்ச பூதங்களும் கட்டுப்படும் என்பதை மகராஜ், ஒரு அற்புதத்தின் மூலம் அனைவருக்கும் உணரவைத்தார். ஒருமுறை தொடர்ந்து பலத்த மழை பெய்து கொண்டே இருந்ததால் நர்மதா நதிக்கரையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் கரையில் இருக்கும் அனைத்து குடிசைகளும் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுவிட்டது. அப்பகுதியில் வசிக்கும் மக்கள், அனைவரும் அஞ்சி, நடுங்கி தம்மைக் காப்பாற்றுமாறு ஸ்ரீ வாசுதேவ மகராஜ் அவர்களிடம் வேண்டிக் கொண்டனர்.

மகராஜ் அமைதியாக நர்மதா நதிக்கரைக்கு சென்றார். அங்கே ஆரவாரித்து ஆக்ரோஷமாக பொங்கி வரும் அலைகளைப் பார்த்தார். அவர் புனித நர்மதா நதியிடம் "ஓ தாயே! நர்மதா! இங்குள்ள அனைவருக்கும் வாழ்வதாரம் நீயே ஆவாய்! இன்று இவர்கள் உன்னால் துன்பம் நேர்ந்து விட்டது என்று குறை கூறுவதை நான் விரும்பவில்லை! ஆகையால் நீர்மட்டம் மேலும் உயராமல், பொங்கிவிடும் அலைகளை கட்டுக்குள் வைத்து, நீ சாந்தமடைய வேண்டுகிறேன்!

இவ்வாறு கூறிவிட்டு தனது புனித தண்டத்தை எடுத்து நர்மதா நதியில் நனைத்து, அத்தண்டத்தை வெளியே எடுத்தவுடன் என்ன அற்புதம்! பொங்கிய அலைகள் அமைதியாக, மகராஜ் அவர்களின் புனித தண்டத்திற்கு மதிப்பளித்து, தனது இயல்பான வடிவத்திற்கு மாறியது. புனித நர்மதா நதியை பல்வேறு பல்வேறு ஞானிகளும், சித்தபுருஷர்களும் மகான்களும், யோகீஸ்வரர்களும் போற்றி வருகின்றனர். இரண்டு மாநிலங்களைக் கடந்து, அனைவருக்கும் வாழ்வாதாரமாக இருக்கும் நர்மதா தேவியின் உயர்ந்த குணங்களை, வருணிக்க வார்த்தைகளே இல்லை.!

மகான்களுக்கு எல்லா மதங்களும் ஒன்றேயாகும், ஒருநாள் சில இஸ்லாமியர்கள், ஸ்ரீ வாசுதேவ மகராஜ் அவர்களை நாடி வந்தார்கள். அவர்கள் தங்கள் சமூகத்தினர், தங்களைக் குறித்து என்ன கூறினாலும் தாம் கவலை கொள்ளப் போவதில்லை!

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

என்று தீர்மானமாக கூறிவிட்டு, மகராஜ் அவர்களை தரிசிக்க வந்தனர். மகராஜ் அவர்களுக்கு தீர்த்தமும் வழங்கவில்லை.! ஸ்லோகங்களும் சொல்லித்தரவில்லை என்ன அற்புதம்! அவர்களுடைய வேதநூலான திருகுர்ரான் என்ற புனித நூலில் இருந்து, சில மந்திரங்களை கூறி அதற்குரிய பெருமை களையும் கூறி அதற்குரிய பொருளையும் கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

மகராஜ் அவர்களின் சீடர்கள் நம் ஸ்வாமிகள் திருகுர்ரான் எப்போது கற்றார்? அரபி பாஷையை ஸ்வாமிகள் இதுவரை கற்கவே இல்லையே? என்று வியந்தனர். ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் ஒரு தெய்வீக அவதாரம், இறைவனின் திருத்தூதர்களுக்கும், தேவதைகளுக்கும் அனைத்தையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் உண்டுஎன்பதை ஸ்ரீ தேம்பே மகராஜ் நிரூபித்துக் காட்டினார்.

அந்தண குலத்தில் அவதரித்து, குல வழக்கங்கள், ஆச்சார அனுஷ்டானங்கள் இவற்றில் மிகவும் கட்டுப்பாட்டை கடை பிடித்த நம் ஸ்வாமிகள், திருகுரானில் இருந்து வாசகங்களையும், அதனுடைய விளக்கத்தையும் இஸ்லாமியர்களுக்கு அருளினார் என்பதைக் கண்டு இஸ்லாமியர்களும் வியந்து இவரே நம்மைக் காக்க வந்த "அவுலியா" (முகமதியர்கள் இறைத்தூதர் களை இவ்வாறு அழைப்பது வழக்கம்) என்று ஸ்வாமிகளை வணங்கிவிட்டு சென்றார்கள்.

மகராஜ் தம்மை தரிசிக்க விரும்பிய பலர், நேரிடையாக வர இயலாவிட்டாலும், அவர்களின் இருப்பிடம் தேடிச் சென்று தரிசனத்தை வழங்கி, அவர்களையும் அனுக்கிரஹம் செய்திருக்கின்றார். ஒரு முறை ப்ரோச் இரயில் நிலையத்தில், இருந்து மகராஜ் அவர்களின் சிறந்த பக்தர், அவர் இதுவரை மகராஜ் அவர்களின் திருவுருவை, படத்தில் கூட பார்த்தது கிடையாது. அவரைப்பற்றி தமது உறவினர் ஒருவர், மிக உயர்வாக குறிப்பிட்டதால், தம் வாழ்நாளில் இம்மகானை ஒரு முறையாவது சென்று தரிசிக்க வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருந்தார். ஆனால் தனியாக எங்கும் பயணம் செய்த அநுபவம் இல்லை. மிகவும் பயந்த சுபாவம் கொண்டவர்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவர் தன்னுடைய நெருங்கிய நண்பரை சாந்தோம் என்ற இடத்திலிருந்து புறப்பட்டு வருமாறு அழைத்திருந்தார். அவரும் "குருபூர்ணிமா" தினத்தன்று, ஸ்வாமிகளை தரிசனம் செய்வோம், என்று வாக்களித்திருந்தார். ஆனால் எதிர்பாரதவிதமாக அருடைய நண்பர் இரயிலை தவறவிட்டுவிட்டதால் அவதால் ப்ரோச் இரயில் நிலையத்திற்கு வரஇயலவில்லை. அத்தகைய காரணத்தால் மற்றொரு முறை மகராஜ் அவர்களை தரிசிக்கலாம், என்று தெரிவித்தார்.

இதைக் கேட்டு மனம் உடைந்து போன ஸ்வாமிகளின் பக்தர். இந்த ஜென்மத்தில், எனக்கு மகராஜ் அவர்களின் தரிசனம் கிடைக்கப்போவதில்லை என்று மனம் வேதனையுற்று, மன அமைதிக்காக நதிக்கரைக்குச் சென்றார். என்ன அற்புதம்! நதிக்கரையில் மகராஜ் அவர்கள், அவருக்கு சாட்சி அளித்து, அவருடைய பூஜையை தாம் ஏற்றுக் கொண்டதாகவும், ப்ரஸாதத்தை பெற்றுக் கொள்ளுமாறு, ஒரு தேங்காய்த் துண்டையும், அவர் கையில் அளித்து விட்டு மறைந்து விட்டார்.

பக்தருக்கு மிகவும் குழப்பமான மனநிலை இருந்தது. காரணம்! அவர்தான், தாம் தரிசிப்பதற்காக ஏங்கிக் கொண்டிருக்கும், ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் என்று அவருக்குத் தெரியவில்லை ஏனெனில் இதுவரை அவர் மகராஜ் அவர்களின் திருவுருவத்தை படத்தில் கூட பார்த்தது இல்லை. ப்ரஸாதத்தைப் பெற்றுக் கொண்டு, வீடு திரும்பியவர் தமது உறவினர்; தமக்கு மகராஜ் அவர்களின் திருஉருவப் படத்தை தமக்கு அனுப்பியிருப்பதைக் கண்டார். அப்படத்திதன் மேலிருந்த உறையை திறந்து, படத்தை பார்த்த அவர் சிலையாக நின்று விட்டார். "ஒ மகராஜ் எனக்கு நதிக்கரையில் காட்சியளித்தவர், தாமே என்பதை எனக்கு புரியவைத்துவிட்டீர்கள்! நான் மிகவும் பாக்யம் செய்தவன்! இதற்கு என்ன கைமாறு செய்யப்பேகிறேன்!" என்று உற்சாகமாக அணைவரிடமும் சென்று, நடந்த அற்புதத்தைக் கூறி மகிழ்ந்தார்.

தூய்மையான அன்பு கொண்டவர்கள், தாம் இருக்கும் இடத்திலேயே மகான்களை தரிசிக்க இயலும் என்ற உண்மையை மகராஜ் அந்த பக்தருக்கு மட்டுமல்ல, நம் அனைவருக்கும் உணர்த்துகிறார்.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மகான் கணபதிபுவா, பரோடாவில் சித்தநாத ஸ்வாமி ஆலயத்தில் இருந்து மகராஜ் அவர்களை தரிசிக்க மற்றும் சில பக்தர்களோடு வருகை தந்தார், அவர் மகராஜ் அவர்களை தரிசிக்க வருவதற்கு ஒரு காரணம் இருந்தது. தாம் கண்ட ஒரு மிகப்பெரிய காட்சியை, மகராஜ் அவர்களோடு பகிர்ந்து கொண்டு, அதற்குண்டான காரணங்களையும் அறிந்து கொள்ள விரும்பினார்.

தமது ஆலயத்திலிருந்து புறப்பட்ட மகான் கணபதிபுவா, ஸ்ரீ வாசுதேவ ஸ்வாமிகளை தரிசித்தார். அப்போது அந்த அதிசயம் அங்கே நடந்தது.! மகான் கணபதி புவா தாம் கண்ட காட்சியைப் பற்றி விளக்குவதற்காக அனுமதி வேண்டினார். மகராஜ் சிரித்துக் கொண்டே, "மகாபாரரத்தில் ஆச்சாரிய துரோணரின் செல்வ புதல்வன் அஸ்வத்தாமனை, நேரில் கண்டு, அவரோடு உரையாடக் கூடிய வாய்ப்பைப் பெற்றீர் கள்! சரிதானே! என்றார். கணபதி புவா இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். தாம் கண்ட காட்சியைக்கூட இந்த யோகீஸ்வரர் மிகத் துல்லியமாக கூறுகிறாரே! இவரே ஸ்ரீ தத்தரின் அவதாரம் ஆவார்! என்று அவரை வணங்கிவிட்டு சென்றார்.

ஒருமுறை ஒரு அம்மையார், மகராஜ் அவர்களை தரிசிக்க ஒரு தேங்காயை எடுத்துக் கொண்டு வந்தார். அத்தேங்காயை வைக்க கீழே குனிந்தவர், தனது வைர மூக்குத்தி, கீழே விழுந்துவிட்டதை கவனிக்கவில்லை. அவர் தனது இல்லத்திற்கு திரும்பிவிட்டார். மறுநாள் காலை நீராடச் செல்லும் பொழுது தான் தனது மூக்குத்தி தொலைந்து போனதை ப் பற்றி தெரிந்து கொண்டார், அவர் மனம் மிகவும் வேதனையுற்றது. இதனால் தனது கணவருக்கு ஏதாவது ஆபத்து வருமே என்று அஞ்சி னாள். அதன் காரணம், வட இந்தியாவில் திருமணமான பெண் கள் அணியக்கூடிய மிக முக்கிய மங்கல பொருட்களில் "நத்" என்று அழைக்கப்படும் மூக்குத்தியும் ஒன்றாகும்.

அவருடைய மூக்குத்தி எவர் கைகளிலும் கிடைக்கவில்லை அது எங்கு சென்றது என்பதை எவரும் அறியவில்லை. மகராஜ்ஜை தரிசிக்க வந்த அம்மையார், தமது மனக்குறையை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மகராஜ் அவர்களிடம் முறையிட்டார். மகராஜை தரிசிக்க வந்த அம்மையார் தமது மனக்குறையை மகராஜ் அவர்களிடம் முறையிட்டார். மகராஜ் அவர்கள் நேற்று நீ எனக்காக கொண்டு வந்த தேங்காய் எங்கே!" என்று கேட்டார். அந்த அம்மையாரும் அத் தேங்காயை தான் வைத்திருந்த தட்டை அடையாளம் கண்டு, மகராஜ் அவர்களிடம் காண்பித்தார். மகராஜ் உடனே தனது சீடரை அழைத்து, அத்தேங்காயை அனைவரின் முன்னிலையிலும் உடைக்குமாறு உத்தர விட்டார்.

அவர் உத்தரவின் படி அத் தேங்காய் உடைக்கப்பட்டது. என்ன ஆச்சர்யம்! இரண்டாக உடைக்கப்பட்ட அத்தேங்காய்க் குள் மூக்குத்தி இருந்ததைக் கண்டு அனைவரும் "ஜெய் குருதேவ தத்தா" என்று ஆரவாரித்து கோஷம் எழுப்பினார். புதிதாக உடைக்கப்பட்ட தேங்காயின் உள்ளிருந்து, தொலைந்து போன தனது மூக்குத்தியைக் கண்ட அந்த அம்மையார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஸ்ரீ தத்தரின் அவதாரமாகிய ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகளை வணங்கி நன்றி தெரிவித்துவிட்டு சென்றார்.

ஒரு முறை பக்தர்களுக்கு வழங்கப்படும் பிரசாதம், ஒரு சிறிய பானையில் வைக்கப்பட்டு இருந்தது ஆனால், அன்று சுமார் நானூறு பக்தர்கள் வருகை தந்தனர். சிறிய பானையில் சமைக்கப்பட்ட உணவு, சுமார் நூறு பேர்கள் மட்டுமே உணவு உண்ணமுடியும். அப்போது பிரசாதம் விநியோகம் செய்யும் பொறுப்பில் இருந்த சபனிஷ், குழப்பம் அடைந்தார். அவர் மஹராஜ் அவர்களை பிரார்த்தனை செய்து கொண் டார்.

அப்பொழுது மஹராஜ் அவர்கள், அந்த பானையை தனது அருகில் கொண்டு வந்து வைக்குமாறு ஆணையிட் டார்! மஹராஜ், அதன்மேல் மூடியிருந்த உறையை நீக்கச் செய்தார். அன்னதானம், முதியோர்களுக்கும் குழந்தைகளுக் கும் ஆண்களுக்கும் அளிக்கப்பட்டுவிட்டது. தற்பொழுது பெண்கள் அனைவரும் பிரசாதம் பெற்றுக் கொள்ள வேண்டும். பிரசாதத்தை விநியோகம் செய்து கொண்டு இருந்த சபனிஷ் பெண்கள் அனைவருக்கும் அன்னதானம்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

செய்த பிறகு, அப்பிரசாதம் சமைத்து வைக்கப்பட்டிருந்த பானையை நோக்கிய போது, மிகுந்த ஆச்சர்யம் அடைந்தார்.

காரணம், நூறு பேருக்கு சமைக்கப்பட்ட உணவு நானூருக்கும் மேற்பட்டவர்கள் உண்ட பின்னரும் கூட, பிர சாதம் சமைத்து வைக்கப்பட்டபோது எப்படி இருந்ததோ அப்படியே இருந்தது. இதை பார்த்த ஊர் மக்கள், அனைவரும் "ஜெய் குரு தேவ தத்தர்" என்று கோஷமிட்டனர். இந்த அற்புதம் தஞ்சாவூரில் இன்றளவும் ஒவ்வொரு வருடமும், ஸ்ரீ வாசுதேவ மஹராஜ் அவர்களின் ஆராதனையின் போது, நடைப்பெற்று கொண்டிருக்கின்றது.

பிரசாதம் நைவேத்தியம் செய்த பிறகு, அதன் மீது மஹராஜ் அவர்களின் திருவுருப் படத்தின் மீது, வைக்கப்பட்டு இருந்த வஸ்திரத்தை, பிரசாதத்தின் மேல் மூடி விடுவார்கள் அன்று சமைக்கப்பட்டு இருந்த அந்த உணவு அவர்கள் எதிர்பார்த்ததைவிட இரண்டு மடங்கு அதிகமான பக்தர் களுக்கு வழங்கப்படும்.

கிருஷ்ண ஜெயந்தி விழா தொடங்க இருப்பதால், மடத்தை சுத்தம் செய்து அலங்கரிப்பதற்காக ஏற்பாடு செய்து கொண் டிருந்தார்கள் அன்று பஜனை முடிவடைந்ததும், கீர்த்தனை களைப் பாடத்தொடங்கினார்கள், அச்சமயத்தில் பலத்த மழைப் பெய்ய ஆரம்பித்துவிட்டது. தொடர்ந்து பெய்த மழையால் நர்மதா நதியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. பஜனை செய்வதற்காக வந்திருந்த பக்தர்கள் அனைவருமே ஆங்காங்கே கூரையின் கீழ் அமர்ந்து கொண்டார்கள். உடனே மஹராஜ், அவர்கள் ஆகாயத்தை பார்த்தபிறகு சில விநாடிகளில் அவ்வூர் மக்களிடம், "இனி மழையை குறித்து கவலைப்படவேண்டாம்.! நான் சிறிது நேரம் உங்களுக்காக, மழையை தடுத்து நிறுத்தி வுள்ளேன்! மீண்டும் பஜனையை துவங்குகள்! என்றார் மக்கள் மகிழ்ச்சியோடு ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தியை கொண்டாடினர் அவ்விழா முடிவடைந்து , அனைவரும் தமது இல்லம் திரும்பிய உடன் பொய்யர்துவங்கிய மழை அன்று இரவு முழுவதும் பெய்தது, இதுவும் மஹராஜ் அவர்களின் கருணையே ஆகும்.

மஹராஜ் அவர்களை தரிசிக்க வந்த ஒருவர், கடுமையான காய்ச்சலால் மிகவும் பலவீனமாக இருந்தார் அவர் தரிசித்து

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

விட்டு புறப்படுவதற்கு முன்னர், மஹராஜ் அவரிடம், “பிரசாதம் விநியோக செய்பவரான சபனிஷ் என்பவரிடம் சிறிதளவு, ஜவ்வரி (சாபுதானா)(Sabudana) கூழை, பெற்று செல்லுமாறு கூறினார் இந்த தகவல் சபனீஷ் அவர்களை குழப்பத்தில் ஆழ்த்தியது. அதற்கு காரணம் அன்று பிரசாதம் முழுவதும் தீர்ந்துவிட்டது.

ஆனால் அப்பொழுது மும்பையிலிருந்து மஹராஜை தரிசிக்க வந்த ஒரு பக்தர் , அவருக்கு சமர்ப்பணம் செய்வதற்காக ஜவ்வரிசி கூழைக் கொண்டு வந்திருந்தார். இத்தகவலை கேட்ட சபனீவுஷ் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றுவிட்டார். ஞானிகள் மற்றும் மகான்கள் விருப்பங்களை இறைவனே நின்று நிறைவேற்றுகிறார்.

ஒரு நாள் ஒரு பெண் தன்னுடைய கணவரோடு , மஹராஜை தரிசிக்க வந்திருந்தாள் அந்த பெண் மஹராஜ் அவர்களிடம், “சுவாமி என்னை தங்கள் சிஷ்யையாக ஏற்றுக்கொள்ளுங்கள், என்று வேண்டினாள். அவர் மேலும் ஸ்வாமி தங்கள் என்னிடம் அளிக்கும், அந்த மந்திரத்தை நான் எப்போழுதும் உச்சரிக்கலாமா! என்று கேட்டார் அதற்குள் அவளுடைய கணவர், மஹராஜ் அவர்களிடம் “ஸ்வாமி என் மனைவி எப்போழுதுமே, மந்திரங்களை ஜெபித்துக் கொண்டு இருக்கிறாள்.!

நான் அவளுடன் தனிமையில் இருக்க விரும்பினாலும்! அவள் மந்திரங்களை உச்சரிப்பதில் மட்டுமே ஆர்வம் காட்டுகிறாள். என்று இதைக் கேட்ட மஹராஜ், அந்த பெண்ணிடம், கணவருக்கு செய்யும் சேவையே முதன்மையானது! உன்னுடைய கடமையை புறக்கணிப்பதாக இருந்தால், நீ, மந்திரங்களை உச்சரிக்கத் தேவையில்லை! என்று கூறிவிட்டார்.

மஹராஜ் அவர்களுக்கு பக்தர்கள் அளிக்கும் தக்ஷினை முழுவதுமே உண்டியல் வைக்கப்பட்டு அதில் நிரப்பப்பட்டது. மளிகை சாமான்களுக்கு தேவையான பொருள் தொகையை அந்த உண்டியலிருந்து எடுத்துக் கொள்வது வழக்கம்.! மஹராஜ் அந்த உண்டியலைக் கையாலும் ஒரு பொழுதும் தொடமாட்டார்! ஒருநாள் அன்னதானம் செய்வதற்

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

காக, சபனீஷ் அந்த உண்டியலை, திறந்த போது, அதில் வெறும் மூன்று ரூபாய் மட்டுமே இருந்தது. தினமும் குறைந்த பட்சம், அங்கு மூன்னூறு பக்தர்களுக்கு, அங்கு அன்னதானம் அளிக்கப்பட்டது மளிகைக் கடைக்கடைக்காரரிடம் மளிகைப் பொருள்கள் வாங்கி அன்னதானமும் செய்தாகிவிட்டது.

மறுநாள் மாளிகைக் கடைக்காரர் தாம் அளித்த பொருள் களுக்கான, தொகையைப் பெற்றுக் கொள்ள வந்தான். சபனீஷ், மஹராஜ் அவர்களிடம் சென்று இத்தகவலை தெரிவித்து, இப்பொழுது என்ன செய்வது என்று கேட்டார். மஹராஜ் அவர்கள் பொறுமையாக அந்த மளிகை கடைக் காரரை அழைத்தார் பின்னர் சபனீஷ்யிடம் உண்டியலை திறக்கச் சொன்னார்! அந்த உண்டியலை திறந்த சபனீஷ் அதீர்ச்சியில் சிலையாக நின்று விட்டார் அதற்கு காரணம் அந்த உண்டியல் பொற்காசுகளால் நிரப்பப்பட்டு இருந்தது.

குருதுவாதசி நிறைவடைந்தவுடன், மஹராஜ் அனைவரிட மும், நான் இதுவரை சென்ற இடங்களில் எல்லாம் செய்த உப தேசங்களையும், எழுதிய பல்வேறு நூல்களையும் அவற்றின் முக்கிய கருத்துகளையும் இன்று உங்களிடம் சொல்ல போகிறேன்.

ஒருவர் இந்த உலகில் பிறந்ததன், முக்கியமான நோக்கம் என்ன வென்றால், ஆத்ம விடுதலையைப் பெற்று உள்ளம், ஒரே நிலையில் ஒரு முகப்படவேண்டும், வெவ்வொறு வரும் தங்களுடைய குல வழக்கத்தை அனுசரிக்கவேண்டும்! தங் களின் முன்னோர்களையும் குலதேவதைகளையும் முறையாக வழிபாடு செய்ய வேண்டும்.! வருணாசிரமம் (Varunashram) என்ற தர்மத்தை அனுசரித்து இவ்வுலக வாழ்க்கையின் , ஒவ்வொறு நிலைமையும் கடக்க வேண்டும். வேதங்களின் விளக்கவுரைகளைக் கற்றும்.

கேட்டும் உள்வாங்கிக் கொண்டும், பின்னர் அவற்றை நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைபடுத்தவும் வேண்டும். சிரவணம் என்று சொல்லகூடிய தம்முடைய காதுகளால் வேதங்களை கேட்பதால் மட்டுமே நம் உள்ளம் தூய்மை அடைகிறது. மனம் வேறு திசைகளில் செல்லாமல் கட்டுப்படு

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கிறது. ஒருவர் தாம் உண்ணும் முறையிலும் ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும் சாத்வீக உணவு வகைகளை உண்பதால் உள்ளம் சாந்தம் அடைகிறது. ஒருவன் தான் செய்யும் காரியங்களில், நேர்மையை கடைபிடிக்கவேண்டும்.! அனைவருக்குமே தனி மனித ஒழுக்கம் என்பது அவசியமான ஒன்றாகும்.!

தினசரி செய்யும் பூஜைகளை முறையாக செய்ய வேண்டும்! தினமும் உணவை சமைத்தவுடன், வைஸ்வதேவம் என்று சொல்லக்கூடிய இறைவனுக்கும் அக்னி தேவருக்கும், பஞ்சபூதங்களுக்கும் காக்கைகளுக்கும் பசு, நாய் முதலிய வனவிலங்குகளுக்கும் நம் இல்லம் தேடி வரும் அதிதிகளுக்கும் அளித்தபிறகே நாம் உண்ண வேண்டும்.! மதியான வேளையில் எவர் நம்மிடம் உணவை வேண்டினாலும் உடனடியாக அளித்து விட வேண்டும்! பசுகளை பாதுகாக்க வேண்டும்.! உபன்யாசங்களையும் கீர்த்தனைகளையும் ஆலயத்திற்கு சென்று முறையாய் கேட்க வேண்டும்.

தம்முடைய பெற்றோரை நேசிப்பது போல தம் கண வருடைய பெற்றோரிடமும் உறவினரிடமும் அன்பை பெழிய வேண்டும்! அன்பு செலுத்துவதில் பாரபட்சம் செய்ய கூடாது, இறைவனுடைய நாமத்தை பஜனை பாடல்கள் மூலமாக பாடியும், கேட்டும், அவற்றை உள்வாங்கியும் தாம் பெற்ற இறை அருளை பிறருக்கு எடுத்து உரைக்கவும் வேண்டும்.!

புராணங்களையும், இதிகாசங்களையும் இகழ்ந்து பேசக் கூடாது! எப்போது நாவில் இனிமையான சொற்களையே உச்சரிக்க வேண்டும்.! நல்லவர்களோடு மட்டுமே நட்பு உறவுக் கொள்ள வேண்டும் பெற்றோருக்கு செய்யும் சேவை பரம்பொருளுக்கு செய்யும் சேவையாகும்! ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய கணவருக்கு செய்யும் சேவையைப் புறக்கணிக்க கூடாது.!

குருவின் சொல்லை ஒரு பொழுதும் தட்டக்கூடாது.! செய்யும் தொழில் எதுவாக இருந்தால் அதில் நேர்மையை கடைபிடிக்க வேண்டும்! நமது உள்ளம் அமைதியை அடைய வேண்டுமென்றால் நமக்கு இறைவனின் மீது முழுமையான பக்தி இருக்க வேண்டும்! இறைவன் ஒரு பொழுதும் நம்மை

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கைவிட மாட்டார் என்றநம்பிக்கை வேண்டும்.! அவ்வாறு நம்பிக்கையும் , முழுமையான பக்தியும் ஒருவரிடம் அமைந்து விட்டாள் அவர் தவறான திசைகளில் செல்லமாட்டான் அப்போது அவருக்கு தன்னிலை அறிதல் என்ற நிலை ஏற்படும் அதுவே அவருடைய முக்திக்கும் வழிவகுக்கும்.

மஹராஜ் அவர்கள் ஸ்ரீ தத்த ஜெயந்தி விழா முடிவடைந் தவுடன், ஸ்ரீ தத்தரிடம் தாம் வைத்திருக்கும் ஸ்ரீதத்த விக்ரகம் எங்கு ஸ்தாபிக்கபட வேண்டும் என்று கேட்டார். ஸ்ரீதத்தர் தாம் கருடேஸ்வரில் இருக்கவிரும்புவதாகவும் ஆகையளால் அத்திருவுருவத்தை, இங்கேயே ஸ்தாபிக்க வேண்டும்! உத்திரவு இட்டார் இறைவனுடைய கட்டளையை நிறைவேற்றியவுடன், மஹராஜ் அவர்களின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டது.

நாளுக்கு நாள் அவருடைய உடல் பலவீனம் அடைந்துக் கொண்டே வந்தது மஹராஜ் அவர்கள் படுக்கையை விட்டு எழுந்திருக்க வில்லை. இத்தகவலை அறிந்த நரசோபாவாடி யின் பூசாரிகள் மஹராஜ் அவர்களக்கு உடல்நிலை தேற வேண்டுமென்று விஷேச அபிஷேகங்களும், ஆராதனை களும் செய்ய துடங்கினார்கள் இத்தகவலை அறிந்த மஹராஜ் தயவு செய்து இறைவனை தொந்தரவு செய்யாதீர்கள்! என்னுடைய இந்த சரீரம் விரைவில் இந்த பூமியில் புதைய விருக்கின்றது" என்றார்.

மஹராஜ் அவர்களுடைய உடல்நிலை மிகவும் கவலைகிட மாக ஆனதால், அவருடைய சீடர்கள் அனைவரும் அவரை சூழ்ந்து அமர்ந்து இருந்தார்கள் இராமசாஸ்திரி பிரகாஷ்கர், சோண்டுபஹ்த் கோபர்கர், பிரமானந்தசுவாமி இவர்கள் அனைவரும் மஹராஜூடன் இருந்தார்கள் மஹராஜ் அவர் களின் உடல்நிலை எக்காரியத்தையும் ஆற்றகூடிய நிலையில் இல்லை அவ்வாறு இருந்தும் அவரின் கைவிரல்கள் நடுங்கியபோதும் தொடர்ந்து எழுதிக்கொண்டே இருந்தார்.

ஒரு நாளைக்கு ஐந்து வரிகளுக்கு மேல் பேச மாட்டார் இதற்கு இடையில் பிரமானந்த சுவாமி மஹராஜ் அவர்கள் முன்பு அவருடைய கொள்கையை அனைத்து இடங்களுக்கும் எடுத்துச் செல்வதற்காக ஒரு குழுவை தொடங்கினார். அக்குழுவின் தலைவராக ஸ்ரீ நிருசிங்கசரஸ்வதியும், உப

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

தலைவராக இராமசந்திரவிட்டல் அதிகாரியும் காரியதரிசியாக பரசுராம் பட் என்பவரும் இந்த குழுவின் செயல் வீரர்களாக சபனீஷ், இலஷ்மி சங்கர், பிரத்தியும் அவர்களும் நியமிக்கப் பட்டார்கள் மஹராஜ் உடல்நிலை பற்றிய தகவலைக் கேட்டு நரசோபவாடியிலிருந்தும், அவர் அவதரித்த இடமான சாவத்வாடியிலிருந்தும், மற்றும் பாரத தேசத்தில் உள்ள அனைத்து பிரதேசங்களிலிருந்தும், ஏராளமான மக்கள் கூட்டமாக கருடேஷ்வரை நோக்கி வரத்துவங்கினார்கள்.

அவரிடம் மிகுந்த அன்பு கொண்ட பக்தர்கள், தலைசிறந்த மருத்துவர்களை அழைத்து வந்து, மருந்து மாத்திரை உட் கொள்ளுமாறு அன்புடன் வேண்டினார்கள். ஆனால் மஹராஜ் அவர்கள் "இந்த உடல் கூடிய விரைவில் அழியப் போகின்றது, ஆகையால் மருந்து மாத்திரைகளுக்கு அவசிய மில்லை பாரத தேசமுழுதும் பாதயாத்திரை சென்று, சாஸ்திர சம்பரதாயங்களை நிலைநாட்டிய, ஸ்ரீ ஆதிசங்கரதர் முப்பதி ரெண்டு வருடங்களே உயிர் வாழ்ந்தார்.

அதை ஒப்பிடும் போழுது நான் நீண்ட காலம் உயிர் வாழ்ந்து இருக்கிறேன் என்றார். இதுவரை நான் வாழ்ந்த வாழ்க்கையில் இந்த சரீரத்தை இரண்டு முறை, இராஜ நாகம் தீண்டி இருக்கிறது! மூன்று முறை காலரா வியாதி வாட்டி இருக்கிறது! ஒரு முறை ப்ளேக் நோய் தாக்கி இருக்கிறது! ஒரு முறை கடுமையான விஷ ஜீரம் ஆட்டி படைத்து இரண்டு முறை மஹா வியாதியால் அவஸ்தைப் பட்டேன்! இரண்டு முறை குஷ்ட நோயால் அவஸ்தைப் பட்டேன். கடுமையான வயிற்றுப் போக்கால் இத்தனை ஆண்டுகளாக இன்று வரை துன்பத்தை ஏற்றுக்கொண்டு இருக்கிறேன்! இதற்கெல்லாம் எவர் மருந்துக்கொடுத்தார்கள்? எந்த மருத்துவர், என்னுடைய குழந்தை பருவத்திலிருந்தே, இன்று வரை என்னைக் காப்பாற்றினாரோ, அந்த மருத்துவரே என்னை தொடர்ந்து காப்பாற்றுவார்.!

நான் அந்த மருத்துவரையே நம்பியுள்ளேன் அவரே ஸ்ரீ தத்தாத்ரேயர் ஆவார் என்று கூறிய பிறகு, மஹராஜ் பீஷ்மா சாரியர் தான் மரணத்தை நெருங்கும் வேளையில், எந்த மந்திரத்தை கூறினாரோ, மஹராஜ் அவர்களும் அதே

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

மந்திரத்தை ஜெபித்தார். ஆனால் அவர் தன்னுடைய உயிரைவிட நினைத்த அந்த நாள், புண்ணிய நாள் அல்ல என்ற காரணத்தால், அன்று சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேல் சமாதி நிலையில் அமர்ந்தார்.!

அவருடைய உடல் மிகவும் கொதிக்க ஆரம்பித்தவுடன், அவருடைய படுகையின் மேல் நிறையநீர் தெளித்து, அவரை கிடத்தினார்கள்.! அவருடைய சொல், செயல், வாக்கு அனைத்துமே தத்தா தத்தா தத்தா என்றே ஒலித்து கொண்டிருந்தது. அவர் அனைவரையும் அழைத்து தத்த மந்திரத்தை, தொடர்ந்து கூற சொன்னார். மஹராஜ் அனைவருக்கும் அன்னதானம் வழங்கச் சொன்னார்.

அந்த நிலையிலும் மஹராஜ் அவர்கள், "பக்தர்கள் அளித்த காணிக்கைத் தொகை குரு துவாதசி தினத்தன்றும், ஸ்ரீதத்த ஜெயந்தி தினத்தன்றும், குரு ப்ரதி பாத தினத்தன்றும், அந்தணர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் அன்னதானம் வழங்குவதற்கு போதுமான அளவு இருப்பு உள்ளது! என்று கூறினார். அச்செயல் அவருடைய நேர்மையான உள்ளத்தை அனைவருக்கும் எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. மஹராஜ் அவர்கள் அளித்து இருந்த புனித கையிற்றை தண்டோபந்த்க்கு அளித்தார். தண்டோபந்த் அவரை நமஸ்கரித்து, அதை பிரசாதமாக பெற்றுக்கொண்டார்.

அடுத்த நாள் முன்னோர்கள், தங்கள் வாரிசுகளுக்காக காத்துக் கொண்டு இருக்கும் நாளான அம்மாவாசை தினம், வந்தது மஹராஜ் நீண்ட காலமாக, தம் உள்ளத்தில் இருந்த சில கருத்துகளை, அனைவருடன் பகிர்ந்துக் கொண்டார். அன்று அப்பா சாஸ்திரியும், நரசோபவாடியிலிருந்து பூசாரிகளும், வந்தனர் அப்போழுது மஹராஜ் அவர்களைப் பார்த்து, "நான் "சன்யாச தர்மத்தை ஏற்றுக் கொள்ளும் முன்னர், என் மீது பொறாமைக்கொண்ட ஒருவன் எனக்கு ஒரு மந்திர ஏவலை செய்து விட்டான்! நான் அதை தடுப்பதற்கோ! அழிப்பதற்கோ! அதற்காக அவனை பழிவாங்குவதற்கோ! நிச்சயமாக துணியவில்லை! அப்போழுதும் கூட என்னுடைய தினசரி பூஜையைக் கைவிடவில்லை! உணவு உண்பதற்கு முன்னால் நைவேத்தியம் செய்வதற்காக கையில் சிறிது நீரை வாங்கி

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

கொண்டவர், அந்த நீர் தன்னுடைய உள்ளங்கையில் நீங்காமல் ஓடிவிட்டதைக் கண்டார்.! அவர் அப்போழுதிருந்து எவரிடமும் உரையாடவில்லை! அமாவாசை தினம் முடிவடைய வேண்டும் என்று காத்திருந்தார்.

அச்சமயம் மஹராஜ் அவர்கள் சித்தாசன தோற்றத்தில் அமர்ந்துக் கொண்டார். தமது தத்தர் இருந்த திசையை நோக்கி, அமர்ந்துக் கொண்டார் ஆத்மபலத்தால் அவருடைய மூச்சுக் காற்றை ஆழமாக உள்ள வாங்கி பிரணவ மந்திரத்தை உச்சரித்தார். அந்த வினாடியே அவருடைய ஆத்மா சரீரத்தை விட்டு நீங்கி ஸ்ரீ தத்தரோடு ஜக்கியமானது, இந்த நிகழ்வு **1914**இல் ஒரு செவ்வாய்கிழமை அன்று பகல் பொழுது **11.00** மணியளவில் நடைபெற்றது.

இந்த தகவல் அனைவருக்கு தெரிவிக்கப்பட்ட உடன் கருடேஷ்வர் கிராமம் முழுவதுமே பல்லாயிரக் கணக்கான மக்களால் சூழப்பட்டது. சாஸ்திர சம்பிரதாயங்களின் படி, மறுநாள் காலை, அவருடைய சரீரத்திற்கு அபிஷேகம் செய்து, மந்திர உச்சாடனங்களை அனைத்து பண்டிதர்களும் ஜெபிதார்கள், அவருடைய உடலுக்கு ஸ்ரீ ருத்ரா அபிஷேகம் செய்யப்பட்டது. அனைத்து ஆலயங்களிலிருந்தும் வருகை தந்த பூசாரிகள், சோடஷ உபச்சார பூஜா என்று சொல்ல கூடிய பதினாறுவகையான பூஜைகளையும் முறையாக செய்தனர்.

அவருடைய சரீரத்தில் கழுத்து முதல் பாதம் வரை வில்வ மாலைகளாலும், துளசி மாலைகளாலும் சுற்றினார்கள் அவருடைய புனித உடல் அலங்காரம் செய்யப்பட்ட. ஒரு புஷ்பப் பல்லக்கில் அமர்த்தப்பட்டது பின்னர் அங்கிருந்த புனித உடலை வேத கோஷங்களோடு, மேளதாளங்களோடும், ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்த ஊர்வலம் திரும்பும் முன் முறையான பூஜை நடத்தப்பட்டு, மஹராஜ் அவர்களுக்கு நைவேதியம் செய்யப்பட்ட பிரசாதம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. மஹராஜ் அவர்களின் பெயரில் பண்டிதர் அனைவருக்கும் தட்சிணை வழங்கப்பட்டது. அதற்கு எவ்வளவு தொகை செலவிடப் பட வேண்டும் என்பதை மகராஜ் ஏற்கனவே எழுதி வைதிருந்தார். அவர் கையில் இருந்த புனித தண்டம், மூன்று துண்டுகளாக உடைக்கப்பட்டு, அது அவருடைய தொடைபகுதியில் வைத்துக் கட்டப்பட்டது.

NOT FOR SALE
நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

அவருடைய கமண்டலத்தில் ஒரு பெரிய துளையிட்டு அதை அவருடைய இடுப்போடு சேர்த்துக் கட்டிவிட்டார்கள். அவருடைய உடல் ஒரு பெரிய கயிற்றில் கட்டப்பட்டு அந்த கயிறின் உடைய மற்றொரு நுனியில் பெரிய பாராங்கல்லை கட்டியிருந்தார்கள் அதற்கு காரணம் மஹராஜ் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அவரது உடல் நர்மதை ஆற்றில் சமர்ப்பிக்க வேண்டும் மேலும் அவ்வாறு ஆற்றின் நடுவில் சமர்ப்பிக்கப்பட்ட உடனே மீண்டும் கரையில் வந்து சேர கூடாது என்பதற்காக ஒரு பெரிய பாறாங்கள்ளை கட்டியிருந் தார்கள்.

அனைவரும் நதிக்கரையில் நின்றுக் கொண்டு அவரை பிரிய மனமின்றி சத்குருவின் புகழைப் பாடிக்கொண்டு இருந்தனர் நதிக்கரையில் நின்றுக் கொண்டிருந்த அனைவரும் அவரை வணங்கி, ஜெய் குரு தேவ தத்தா என்று உரத்த குரலில் கூறிவிட்டு அனைவரும் இல்லம் திரும்பினார்கள்.

மஹராஜ் அவர்களின் பக்தர்கள், ஸ்வாமிகள் மஹாசமாதி அடைந்ததை தாங்கிக் கொள்ள இயலாமல், இனியும் எங்களை யார் காப்பாற்றுவார்கள்? எங்களுடைய வேதனைகளை எவரிடம் சொல்லி தீர்வு கேட்போம்? என்று அச்சத்தோடும், வேதனையோடும் இருந்தார்கள், ஆனால் பலருடைய காட்சியில், மஹராஜ் அவர்கள் தோன்றி, ஸ்ரீ தத்தருடைய பக்தர் களை, நான் ஒருபோதும் மறக்கமாட்டேன் என்றார்.

அதற்கு ஏற்றவாறு நடந்த பல அற்புதங்கள் அவருடைய கூற்றையே நிருபித்துவிட்டன. அவர் மஹா சமாதி அடைந்த பின்னரும் , தமது பக்தர்களை சூட்சம சரீரத்தால் காத்து ரட்சித்துக் கொண்டு இருக்கிறார்.அதை நிருபிக்கும் வண்ணம் ஒர் அற்புதம், ஸ்ரீ கருடேஷ்வரில் நடைபெற்றது. சுவாமிகள் மஹா சமாதி அடைந்த பிறகு, கருடேஷ்வர் ஆலயத்தின் கட்டுமான பணிகளை மேற்கொண்டிருந்த ஒருவர், தமது பாதங்கள் முழுவதும், வெப்பத்தை தாங்க இயலாமல், புண்களாக வெடித்து காணப்பட்டதால், அவர் பணியை விட்டு விட்டு இல்லம் திரும்பினார் மஹராஜ் அவர்களின் ஆலய பணியை தாம், பெறுப்பேற்றுக் கொண்டு சீரிய முறையில் செய்து முடிக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல

ஆனால் தற்போதைய சூழ்நிலையில், அவரால் பாதங்களை ஊன்றி எழுந்து நிற்க கூட முடியவில்லை, ஒரு நாள் அதிகாலையில், ஒரு சன்னியாசி அவருக்கு காட்சி அளித்தார். அவர் ஒரு மூலிகை செடியை தன் கைகளால் சுட்டி காண்பித்து, அதை பறித்து பிழிந்து பாதங்களில் தடவுமாறு கூறினார். இவ்வாறு கூறிவிட்டு அந்த சன்னியாசி மறைந்துவிட்டார்.

ஆலய பணி செய்பவரும் இந்த சன்னியாசி கூறியதை மனதில் கொண்டு அந்த மூலிகை செடியை தேடி சென்றார் என்ன ஆச்சரியம்! அது அவருடைய அவருடைய கண் எதிரிலேயே இருந்தது. மகிழ்ச்சியோடு அந்த இலைகளை பறித்து அதன் சாற்றை, பாதங்களில் தடவினார். இரண்டு தினங்களில் இரணங்கள் முற்றிலுமாக குணமடைந்து விட்டது.

அவருக்கு அன்று வரை மூலிகையைப் பற்றி எந்த ஞாணமும் இல்லாதவராக இருந்தார். மஹராஜ் அவருடைய கருணையால் அவர் விரைவில் பணிக்கு திரும்பினார். அன்று வரை அவர் மஹராஜ் அவர்களை நேரில் கண்டதில்லை. அவர் பணிக்கு திரும்பிய பின், அங்கு வந்த ஒரு பக்தரிடம் மஹராஜ் அவர்களின் திருவுருவ படம் இருந்தது அதை தன்னுடைய கைகளில் வாங்கி பார்த்த அவர், அதிர்ச்சி அடைந்தார் அவர் உடனே மகிழ்ச்சியோடு, ஆரவாரமாக அனைவரையும் அழைத்து என்னுடைய பாதங்களில் ஏற்பட்ட இரணத்தை குணப்படுத்திய சன்னியாசி இவரே என்றார்.

அதிகாலையில் தான் கண்ட மஹராஜ் அவர்களின் திவ்ய ரூபத்தையும் அனைவருக்கும் அறிவித்தார். இதுபோன்று பல அற்புதங்கள் மஹராஜ் அவர்கள் மஹாசமாதி அடைந்த பின்னரும் இன்றுஅளவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு உள்ளது. மஹராஜ் அவர்களின் பாதம் பணிந்து அவருடைய ஆசிர்வாதங்களை இத்திவ்ய சரித்திரத்தை பாராயணம் செய்யும் அனைவருக்கும் அருளுமாறு பிரார்த்தனை செய்வோம்.

“பரமஹம்ச பரிவிரஜாகாச்சார்ய
ஸ்ரீ வாசுதேவானந்த (தேம்பே) சரஸ்வதி ஸ்வாமிக்கு ஜெய்”

NOT FOR SALE

நூல் இலவசம் விற்பனைக்கு அல்ல